# *ஏசாயா தீர்க்கதரிசி*
# *வாழ்க்கையும் தீர்க்கதரிசனங்களும்*

## THE PROPHET ISAIAH

## His life and His prophecies




*பொருளுரை, இறையியல் மற்றும் நடைமுறை விளக்கவுரை*

*-பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன நூல்களுக்கான சுருக்கமான அறிமுகத்துடன்-*

*ஆசிரியர்: ரோலன்ட் கிளகர்*
*குருஸ்லின்ஜன், வைகாசி 2022*

**by**

## Roland Kleger

**Kreuzlingen, May 2022**

பதிப்புரிமை ரோலன்ட் கிளகர், இறையியல் கலாநிதி
CH-8280 குரூஸ்லின்ஜன் (சுவிற்சர்லாந்து)
**Copyright © Roland Kleger, Doctor of Theology, CH-8280 Kreuzlingen (Switzerland)**

# I. தீர்க்கதரிசிகளைப் படிப்பதற்கான அறிமுகம்

## A. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்ட சொற்கள்

*பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளைக் குறிப்பதற்கு குறைந்த பட்சம் ஆறு வெவ்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன; இவற்றில் மூன்று நேரடியாக ஏசாயாவைக் குறித்துப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன:*

***“நபி”[1]: = தீர்க்கதரிசி என்ற பொருளுடைய இச்சொல்லே பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது.*** *பழைய ஏற்பாட்டில் 300-க்கு அதிகமான முறை பயன்படுத்தப்பட்டிருக்கும் இச்சொல்- ன் முக்கியத்துவம் யாத். 7:1-2-ல் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது: “ஒருவரின் சார்ப்பில் பேசுகிறவர்”.*

*பு,ஏ.-ல் இதற்கு இணையாக “கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள்” என்ற சொல்லாடல் 2 கொரி. 5:20-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***“ரோ ஏ”[2]: =*** *பார்க்கிறவர் (12 முறை)! சிறப்பாக ஆரம்ப கால தீர்க்கதரிசிகள் “பார்க்கிறவர்கள்” (பவர் தமிழ் மொழிபெயர்ப்பில் “ஞான திருஷ்டிக்காரன்” என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது; “திருஷ்டி” என்ற வடமொழிச் சொல்லுக்கு “பார்வை” என்று பொருள்; குறிப்பாக இந்தச் சொல் 1 சாமு. 9:9-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது). இறுதியாக இச்சொல் ஏசாயா 30:10-ல் பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த ஒரு இடத்தில்தான் ஏசாயாவின் நூ- ல் இச்சொல் இடம்பெறுகிறது.*

***“கோஷே”[3]: = தரிசனக்காரன் அல்லது பார்க்கிறவர்.*** *“நபி” என்ற சொல் முதன்மையாக கடவுளின் வாக்கை மக்களுக்கு அறிவிக்கிறதைக் குறிக்கும்படியாகவே பயன்படுத்தப்பட்டிருக்கிறது, ஆனால் “ரோ ஏ” மற்றும் “கோஷே” ஆகிய சொற்கள் தெய்வீக காட்சியை அல்லது செய்தியைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

*1 நாளாகமம் 29:29-ல் இந்த மூன்று சொற்களும் இடம்பெற்றிருக்கின்றன:*

***நபி*** *நாத்தானைக் குறிக்க*
***ரோ ஏ*** *சாமுவேலைக் குறிக்க*
***கோஷே*** *காத்தைக் குறிக்க*

*இத்துடன் கீழ்க்காணும் மூன்று சொல்லாடல்களும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது:*

---

[1] *எபிரெய மொழியில் נבא என்ற மூலத்தி- ருந்து வரும் “ஐபின்” என்ற சொல் அதன் “நிஃபால்” மற்றும் “ஹித்பேயேல்” வடிவங்களில் “தீர்க்கதரிசனம் உரைத்தல்” அல்லது “அகத்தூண்டுத- ன் தாக்கத்திற்கு உட்பட்டு பேசுதல்” என்ற பொருளைத் தருகிறது. அரமெய மொழியிலும் இதே மூலத்தி- ருந்துதான் இச்சொல் பெறப்படுகிறது, ஆனால் “ஹித்பேயேல்” வடிவத்தில் ஒருமையாக வரும்.*

[2] *எபிரெய மொழியில் “ஹார்” என்ற வினைச் சொல் மூலத்தி- ருந்து, “ஹர” மற்றும் “ரோ” ஆகிய சொற்கள் பெறப்படுகின்றன. அவற்றிற்கு “பார்ப்பது”, “தரிசனங்களைப் பெறுவது”, “நோக்கிப் பார்ப்பது”, “கவனித்துப் பார்ப்பது” மற்றும் “சென்று சந்திப்பது”, “பெயரிடுவது” போன்ற பொருள்கள் உண்டு.*

[3] *எபிரெய மொழியில்: “கோஷ்” என்ற வினைச் சொல்* மூலத்திலிருந்து வரும் *“கோஷே”* (in kal comparable with the Aramaic חזא)*, என்பதற்கு “பார்ப்பது”, “நோக்கிப் பார்ப்பது”, “தரிசனங்களைப் பெறுவது” மற்றும்* “தீர்க்கதரிசனமுரைப்பது” *போன்ற பொருள்கள் உண்டு*

***தேவ மனிதன்:*** *இந்தச் சொல் 76 முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது (*எலிசாவைக் *குறிக்க 36 முறை)*

***கர்த்தருடைய தாசன்[4]:*** *கடவுளே தம்முடைய தீர்க்கதரிசிகளை இந்தப் பெயரைக் கொண்டு அழைக்கிறார்: 2இராஜா. 9:7.*

***கர்த்தருடைய தூதன்:*** *ஆகாய் இந்தப் பெயரினால் அழைக்கப்படுகிறார் (ஆகாய் 1:13).[5] கர்த்தருடைய தூதர்கள் என்ற பன்மை வடிவமும் தீர்க்கதரிசிகளைக் குறிக்கும்படி பயன்படுத்தப்படுகிறது.*

***காவலாளன்[6]:*** *தீர்க்கதரிசி தன்னுடைய மக்களுக்கு எச்சரிப்பளிக்கும் அவருடைய பணியைக் குறிக்கும்படி இந்தச் சொல் எசேக்கியேல் 3 மற்றும் 33 ஆகிய அதிகாரங்களில் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகிறது (எசே. 3:17-21 மற்றும் 33:1-9). ஏசாயா 21:11-ல் ஏசாயா இதே பொருளுடைய இன்னொரு சொல்லைப் பயன்படுத்துகிறார்.[7]*

*ஏழாவதாக இந்தச் சொல்லும் பயன்படுத்தப்படுகிறது எனலாம்:*
***மானிட மகன் (மனுப்புத்திரன்)[8]:*** *எசேக்கியேல் இந்தச் சொல்லாடலால்தான் முதன்மையாக அழைக்கப்படுகிறார்: எசே. 2:1 மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசன* நூலில் *உள்ள பல பகுதிகளில் இவ்வாறு அவர் அழைக்கப்படுகிறார்.*

*அதிகம் பயன்படுத்தப்படும் சொல் (நபி) ஒரு தீர்க்கதரிசி எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்த மக்களின் புரிதலைத் தெரியப்படுத்துகிறது: "நபி" என்பவர் "கடவுளுக்காப் பேசுகிறவராக" அல்லது "கடவுளுடைய வாயாக" செயல்படுகிறவராக இருக்கிறார்.[9] உபா. 18:15-18 – உடன் ஒப்பிடுக: இந்தத் தீர்க்கதரிசனம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நிறைவேறியது (அப். 3:22-23).*

# B. *தீர்க்கதரிசிகளின் வரலாறு*

*ஏனோக்கு (யூதா 14), நோவா (எபி. 11:7; 2பேதுரு 2:5) மற்றும் முற்பிதாக்கள் ஏற்கனவே தீர்க்கதரிசிகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். ஆபிரகாம்தான் முதல் முறையாக வெளிப்படையாகத் தீர்க்கதரிசி என்று அழைக்கப்படுகிறார் (**நபி:** ஆதி. 20:7). ஆயினும் எபிரெயர்களின் முதல் மாபெரும் தீர்க்கதரிசி மோசேதான். எதிர்காலத்தைக் குறித்த முன்னறிவிப்புகளைவிட போதனைகளை வழங்குவதே மோசேயின் தீர்க்கதரிசனப் பணியில் முக்கிய பங்காக இருந்தது (மோசேக்குப் பிறகு வந்த மற்ற பல தீர்க்கதரிசிகளையும் குறித்து இதே உண்மையை நாம் கவனிக்க வேண்டும்). மோசேயின் சகோதரியாகிய மிரியாம் (யாத். 15:20[10]) மற்றும் நியாயாதிபதியாகி தெபோராள் (நியா. 4:4[11]) ஆகியோரும் தீர்க்கதரிசிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். மோசே முதல் சாமுவேல் வரையான காலத்தில்,*

---

[4] I.e. of Yahweh. Or *"servant of God" (Elohim),* see e.g. Neh 10:29(30); Dan 9:11 (for Moses).
[5] This is the only passage in the Bible that uses the term *"messenger of the LORD"* (malak yahweh ) for a human person. This Hebrew word can mean *"messenger"* or also *"angel"*. Apart from the passage in Hag 1:13, the term *"Angel of the Lord"* always refers to the pre-existing Son of God when he appeared to people: i.e. in Christophanies. In this context, see the chapter about the *"Angel of the Lord"* in our brochure ***Angelology.***
[6] In Hebrew, the participle צֹפֶה ( tsophæ) of the verb צָפָה ( tsāphāh).
[7] The synonymous participle שֹׁמֵר ( shomer) of the verb שָׁמַר ( shomer) is used in Isa 21:11 for the position of watchman .
[8] In Hebrew: ***Bèn Adam***. ***Adam:*** the same root word for the first human. This name is especially used for Jesus Christ, the Son of God, in the New Testament**.** Jesus often called himself the ***"Son of Man":*** *huios tou anthrōpou*.
[9] See definition in Exo 7:1-2: Aaron was *nabi* (spokesperson, speaker) for Moses.
[10] In Hebrew, the feminine form of *nabi: n^ebiah*. In Isa 8:3, the wife of Isaiah is also described with this term, thus the *prophetess.*
[11] *எழுத்தின்படி எபிரெயத்தில்: "தீர்க்கதரிசிப் பெண்ணாகிய தெபோராள்".*

*தீர்க்கதரிசனப் பணி என்பது மிகவும் அரிதாகவே எதிர்காலத்தை முன்னறிவிப்பதாக இருந்தது.*

***தீர்க்கதரிசிகளின் உண்மையான காலம் குறிப்பிடத்தக்க வகையில்*** சாமுவேலில் ***இருந்துதான் ஆரம்பமாகிறது (அப். 3:24).*** *ஆசாரியத்துவத்தின் வீழ்ச்சியும் (1 சாமு. 2-ல்* எலியாவின் *பிள்ளைகளின் உதாரணத்தைக் கவனிக்கவும்), 1சாமு.8:5-8-ன்படி கர்த்தர் அவர்களுடைய அரசனாக இருந்தாலும் இவ்வுலகிற்குரிய அரசன் தங்களுக்கு வேண்டும் என்ற இஸ்ரவேலரின் கோரிக்கையும் கடவுளின் பேச்சாளராக ஒருவர் இன்றியமையாத நிலையில் தேவைப்படுகிறார் என்பதை வெளிப்படுத்தியது. அரசர்கள் ("கடவுளின் இருதயத்திற்கு ஏற்றவன்" என்று அழைக்கப்பட்ட தாவீது கூட) கடவுளிடமிருந்து நேரடியாக வார்த்தையைப் பெற்றுக்கொள்ளவில்லை. இறை வார்த்தை எப்போதும் தீர்க்கதரிசிகள் மூலமாகவே அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இந்த வகையில் பார்க்கும்போது அரசர்களுடைய காலமும் தீர்க்கதரிசிகளின் காலமாகவே இருக்கிறது. சாமுவேலது காலத்தில் (கி. மு. 11-ம் நூற்றாண்டு), "தீர்க்கதரிசிகளின் கூட்டம்" என்ற சொல்லாடல் முதல் முறையாகப் பயன்படுத்தப்படுகிறது (1சாமு.10:5). ஆகிலும், இந்த தீர்க்கதரிசிகளின் பள்ளி அல்லது கூட்டம் என்பது எப்போது தோன்றியது என்பதை அறிய முடியவில்லை. அதைப் பற்றிய கூடுதல் விவரங்கள் எதுவும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. ஆமோஸ் 2:11-12, எரே. 35:6-10 மற்றும் எண். 6 ஆகிய பகுதிகளைப் பார்க்கும்போது இந்தத் தீர்க்கதரிசிகளுடைய கூட்டத்திற்கும் ரேகாபியர் மற்றும் நசரேயர்கள் ஆகியவர்களுக்கும் இடையில் பல ஒற்றுமைகள் இருந்தன என்பதை அறிந்துகொள்கிறோம். 1சாமு. 19:20 சாமுவேல் தீர்க்கதரிசிகளின் தலைவன் என்று சொல்கிறது.* எலியா *மற்றும்* எலிசாவின் *காலத்தில் தீர்க்கதரிசிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது (2இராஜா. 4:38). அவர்களுடைய பணியைப் பொறுத்தவரை அவர்கள் ஒன்றாக வாழ்ந்தார்கள் (2இராஜா. 6:1-2) மற்றும் செய்தியாளர்களாகப் பணியாற்றினார்கள் (2இராஜா. 9:1). தீர்க்கதரிசிகளில் முந்தைய தீர்க்கதரிசிகள் என்றும் பிந்தைய தீர்க்கதரிசிகள் என்றும் அழைக்கப்படுகிறவர்கள் இடையில் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. முந்தைய தீர்க்கதரிசிகள் கடவுளுடைய செய்தியை வாய்வழியாக அறிவிக்கும் பணியை மட்டும் செய்தார்கள், பிந்தைய தீர்க்கதரிசிகள் தங்கள் வழியாக கடவுள் சொல்லும் செய்தியை எழுதி வைத்தார்கள். பழைய ஏற்பாட்டு நூல்களில் 16 தீர்க்கதரிசிகளுடைய எழுத்துக்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆசாரியர்கள் மற்றும் லேவியர்கள் தங்கள் பணியை பிறப்பின் அடிப்படையில் சந்ததி சந்ததியாகப் பெற்றுக்கொள்கிறார்கள், ஆனால் தீர்க்கதரிசிகள் தனிப்பட்ட முறையில் கடவுளால் அந்தப் பணிக்கு அழைக்கப்படுகிறார்கள் (உதா. ஆமோஸ் 7:14; ஏசாயா 6:1; எரே. 1).*

## C. *தீர்க்கதரிசிகளின் ஊழியங்கள்*

*ஒரு தீர்க்கதரிசியின் பணி மிகவும் தனிச்சிறப்பானது.* ***ஆசாரியர்களும் லேவியர்களும் நீதிச்சட்டத்தைப் போதிக்கிறவர்களாகவும் சமயக் கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் கடவுளுக்கு முன்பாக மக்களின் பிரதிநிதிகளாக இருந்தார்கள், ஆனால் தீர்க்கதரிசிகளோ கடவுளின் மக்களுக்கு (அல்லது மற்ற மக்களுக்கு) முன்பாக கடவுளுடைய*** **பேச்சாளராக** ***(பிரதிநிதிகளாக) இருந்தார்கள்.*** *கடவுளுடைய மக்கள் கடவுள் கொடுத்த நீதிச் சட்டத்தின் உண்மையான பொருளை அறிந்துகொள்ளாமல் அதன் எழுத்தின் மீது நம்பிக்கை கொண்டு சட்டவாதிகளாக மாறும்போது கடவுள் தம்முடைய தீர்க்கதரிசிகளை அனுப்பி, அவர்களை எச்சரித்து, புத்தெழுச்சி அடையச் செய்தார். தீர்க்கதரிசிகள் புத்தெழுச்சியாளர்களாகவும் அருளுரையாளர்களாகவும் இருந்தார்கள். ஆயினும் அவர்கள் நீதிச் சட்டத்தில் இருந்து பிரசங்கம் செய்யாமல் அதை சரியாக விளக்கிப் பிரசங்கித்து, அதை எதிர்காலத்தில் இறுதியாக நிறைவேற்றப்போகிற கிறிஸ்துவை அறிந்தவர்களாக இருந்தார்கள் (1பேதுரு 1:11).*

***தீர்க்கதரிசன ஊழியத்திற்கான தகுதிகள்:***

- *அவர்கள் இஸ்ரவேல் மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட உண்மையான இறை பக்தியைப் பிரசங்கித்தார்கள்.*

- அவர்கள் இஸ்ரவேல் இனம் மற்றும் அதைச் சுற்றியிருந்த இனங்களின் எதிர்காலத்தை முன்னறிவித்தார்கள். அதோடு மேசியாவின் காலத்தையும் நித்தியத்தைக் குறித்தும் முன்னறிவித்தார்கள்.
- இஸ்ரவேல் மக்கள் கடவுளுக்குக் கீழ்ப்படியத் தவறினால் அவர்கள் விசுவாச துரோகத்தையும் கடவுளின் நியாயமான தண்டனையையும் அனுபவிப்பார்கள் என்று முன்னுரைத்தார்கள்.

## D. *தீர்க்கதரிசிகளின் செய்தி*

*தீர்க்கதரிசிகள் தங்கள் சமகால மக்களுக்கும் எதிர்கால சந்ததிகளுக்கும் செய்திகளை வழங்கினார்கள். அதனால் அவர்கள் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகளையும் எதிர்கால நிகழ்வுகளையும் குறித்து அதிக ஆர்வம் காட்டினார்கள். தீர்க்கதரிசிகளின் பேச்சுக்களையும் விளக்கங்களையும் நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது இதை நாம் முக்கியமாக கவனிக்க வேண்டும். தீர்க்கதரிசன நூல்களின் பொருளடக்கத்தை நாம் கீழ்வருமாறு* பட்டியலிடலாம்:

1. *தற்காலம்*
2. *வரவிருக்கிற நாடு கடத்தப்படுதல்*
3. *மேசியாவின் முதல் வருகை: இவ்வுலக ஊழியமும் பாடுகளும்*
4. *மேசியாவின் இரண்டாம் வருகையும் அவருடைய அரசும்*
5. *புதிய வானம் புதிய பூமி*

*தீர்க்கதரிசிகளுடைய பல்வேறு அறிவித்தல்களுக்கு இரண்டு அல்லது மூன்று நிறைவேறுதல்கள் இருந்திருக்கின்றன அல்லது இருக்கின்றன, அவ்வாறு தீர்க்கதரிசிகள் தங்கள் சமீப எதிர்காலத்தையும் நீண்ட எதிர்காலத்தையும் முன்னறிவித்தார்கள். உதாரணமாக: 2 சாமு. 7:12-16 –ல் கடவுள் தாவீதோடு உடன்படிக்கை செய்வதைப் பற்றி வாசிக்கிறோம். இது ஆரம்பத்தில் சாலமோனைக் குறித்த உடன்படிக்கையாக இருக்கிறது, ஆனால் இறுதியாக இது கிறிஸ்துவைக் குறிக்கிறது, ஏனெனில் கிறிஸ்துவில்தான் இந்தத் தீர்க்கதரிசனம் இறுதியாக நிறைவேறுகிறது. பல தருணங்களில் தீர்க்கதரிசிகளுக்கு தாங்கள் எந்தக் காலத்தைக் குறித்துப் பேசுகிறார்கள் என்பது தெரியாமல் இருந்தது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும் (1பேதுரு 1:10–12). இருப்பினும் கிறிஸ்துதான் அனைத்துத் தீர்க்கதரிசனங்களின் இதயமாக இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தீர்க்கதரிசனங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்:*

- *நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்*
- *இனிமேல் நிறைவேற இருக்கிற தீர்க்கதரிசனங்கள்*

*ஏற்கனவே நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் (உதாரணமாக கிறிஸ்துவின் முதல் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: ஏசாயா 7:14; 53:1–12) நிறைவேற இருக்கின்ற தீர்க்கதரிசனங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துகின்றன (உதாரணமாக கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: தானி. 7:13; சகரியா 14:3).*

## E. *உண்மையான தீர்க்கதரிசிகள் மற்றும் உண்மையான தீர்க்கதரிசனங்களின் தன்மைகள்*

- *அவர்கள் யாவே இறைவனின் திருப்பெயரால் மட்டுமே பேசுவார்கள் (உபா. 13:1–5; 18:20).*
- *அவர்கள் வான சாஸ்திரம், குறிசொல்லுதல் மற்றும் மந்திர வித்தைகள் ஆகியவற்றைவிட்டு விலகியிருப்பார்கள் (உபா. 18:9–14).*

- கள்ளத் தீர்கதரிசிகளுக்கு முரண்பட்ட வகையில் (எரே. 23:14), தங்கள் தூய்மையான வாழ்க்கை மூலமாக கடவுளை மகிமைப்படுத்துவார்கள்.
- அவர்களுடைய செய்திகள் அடிக்கடி அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதி செய்யப்படும் (எலியா மற்றும் எலிசா).
- அவர்களுடைய செய்திகள் முந்தைய வெளிப்பாடுகளுடன் முரண்படுவதில்லை (உபா. 13:6ff).
- முன்னறிவித்தல்கள் நிறைவேறின அல்லது நிறைவேறும் (உபா. 18:21-22).

## F. *தீர்க்கதரிசிகளின் அகத்தூண்டுதல்*

*2பேதுரு 1:20-21 தீர்க்கதரிசிகள் கடவுளுடைய வார்த்தையை மற்றவர்களுக்குக் கொடுத்தார்கள் என்று சொல்கிறது. அவர்கள் கடவுளால் அகத்தூண்டுதலைப் பெற்று பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்பட்டார்கள் என்பதை அறிந்திருந்தார்கள்: "கர்த்தருடைய வார்த்தை சொல்கிறதாவது!" என்பதற்கு அவர்கள் அதிக அழுத்தம் கொடுத்தார்கள். 1நாளா. 17:1-4 –ல் கொடுக்கப்பட்டுள்ள விவரம் தீர்க்கதரிசிகள் குறைவுள்ளவர்களாக இருந்தார்கள் என்பதைத் தெளிவாகக் காண்பிக்கிறது. ஆயினும், தீர்க்கதரிசிகள் "எவ்வாறு" (எதன் மூலமாக) இந்த அகத்தூண்டுதலைப் பெற்றார்கள் என்று நமக்குத் தெரியவில்லை. "கர்த்தருடைய வார்த்தை எனக்கு வந்தது..." என்று மட்டும்தான் அவர்கள் சொல்கிறார்கள் (உதா. எசே. 22:1.17; 23:1).*

*கடவுள் தனிப்பட்ட தீர்க்கதரிசிகளுடைய ஆள்த்தன்மைகளையும் குணாதிசயங்களையும் பயன்படுத்தினார். அவர்களுடைய தோற்றம், பயிற்சி, குணாதிசயங்கள், திறமைகள், அவர்கள் செய்த தொழில் ஆகியவை அவர்களுடைய வார்த்தைகளில் தாக்கத்தைச் செலுத்தின. கடவுள் தம்முடைய வேலைக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளுக்கு அகத்தூண்டுதலைக் கொடுத்து, அவர்களுடைய தனிப்பட்ட ஆள்தன்மைக்கு ஏற்றவாறு அவர்களைப் பயன்படுத்தினார்.*

***<u>உதாரணங்கள்:</u>***

*எசேக்கியேல்:ஒரு ஆசாரியனாக இருந்தார்.*
*ஏசாயா: அரச குடும்பத்தி- ருந்து வந்த ஒரு வரலாற்று ஆசிரியர்.*
*ஆமோஸ்: ஒரு விவசாயி.*

## G. *தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல்*

*உபா. 18:22 மற்றும் ஏசாயா 41:21-24, ஆகிய வசனங்களின்படி தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலே அதன் உண்மைத் தன்மையையும், தெய்வீகத் தன்மையையும் உறுதிப்படுத்துகிறது. ஒரு தீர்க்கதரிசனம் நிறைவேறினால் அது கடவுளிடம் இருந்து வந்த தீர்க்கதரிசனம் என்பதைத் தவிர அதற்கு வேறு விளக்கம் தர முடியாது. கள்ளத் தீர்க்கதரிசிகள் (அன்று அதிகமானவர்கள் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது) கடவுளின் மக்கள் தங்கள் விசுவாசத்திற்கு துரோகம் செய்யும்படியாகவும் போலியான தெய்வங்களை வழிபடும்படியாகவும் அவர்களைத் தூண்டினார்கள். கள்ளத் தீர்க்கதரிசிகள் அற்புதங்கள் செய்தாலும் அவர்களை யாரும் பின்பற்றக்கூடாது. உண்மையில் அப்படிப்பட்ட தீர்க்கதரிசிகளுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட வேண்டும் (உபா. 13:1-6). ஒரு தீர்க்கதரிசியின் முன்னுரைத்தல் நிறைவேறாதபோது அவர் கள்ளத் தீர்க்கதரிசியாக அடையாளம் காணப்படுவார் (எரே. 29:9).*

## H. தீர்க்கதரிசன நூல்களுக்கும் மற்ற பழைய ஏற்பாட்டு நூல்களுக்கும், புதிய ஏற்பாட்டு நூல்களுக்கும் இடையில் உள்ள உறவு

தீர்க்கதரிசன நூல்களின் தாக்கம் புதிய ஏற்பாடுவரை நீளுகிறது. சில தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களோடு சேர்ந்து இனி வரும் எதிர்காலத்தைக் குறிக்கிறது.[12] ஆகவே, தீர்க்கதரிசன நூல்கள் பழைய ஏற்பாட்டி- ருந்து புதிய ஏற்பாட்டிற்கு ஒரு தர்க்கரீதியான முறையில் மாற்றம் பெறுகிறது.

## I. பழைய ஏற்பாட்டு எழுத்துத் தீர்க்கதரிசிகளின் கால அட்டவணை

| | தீர்க்கதரிசி | ஊழியத்தின் ஆரம்பம் | காலம் | அக்காலத்து அரசன் | செய்தியைக் கேட்டவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | ஒபதியா | 845 ca? | | யோராம் | ஏதோமியர் |
| 2. | யோவேல் | 835? | | யோவாஸ் | யூதா |
| 3. | யோனா | 782 | | அமசியா | நினிவே |
| 4. | ஓசியா | 760 | | உசியா | இஸ்ரவேல் |
| 5. | ஆமோஸ் | 760 | அசீரியர் | உசியா | இஸ்ரவேல் |
| 6. | ஏசாயா | 739 | | உசியா, யோதாம் ஆகாஸ், எசேக்கியா | யூதா |
| 7. | மீகா | 735 | | யோதாம், ஆகாஸ் எசேக்கியா | யூதாவும் இஸ்ரவேலும் |
| 8. | நாகூம் | 650 | | மனாசே | நினிவே |
| 9. | செப்பனியா | 640 | | யோசியா | யூதா |
| 10. | எரேமியா | 627 | பாபிலோனியர் | யோசியா, யோயாகிம் சிதேக்கியா | யூதா |
| 11. | ஆபகூக் | 609 | | யோசியா | யூதா |
| 12. | தானியேல் | 605 | | யோயாகிம் | பாபிலோனில் |
| 13. | எசேக்கியேல் | 593 | சிறையிருப்பு | சிதேக்கியா | சிறையிருப்பில் இருந்த யூதா தேசத்தார் |
| 14. | ஆகாய் | 520 | | செருபாபேல் | யூதா |
| 15. | சகரியா | 520 | சிறையிருப்புக்குபின் | செருபாபேல் | யூதா |
| 16. | மல்கியா | 433 | | | யூதா |

யோவேல் மற்றும் ஒபதியா ஆகிய நூல்களின் ஆசிரியர்களைக் குறித்தும் எழுதப்பட்ட காலத்தைக் குறித்தும் அறிஞர்கள் நடுவில் வலுவான முரண்பாடுகள் காணப்படுகின்றன. அதற்கான காரணம் என்னவெனில் அந்த இரண்டு நூல்களிலும் அரசர்களைப் பற்றியோ எழுதப்பட்ட காலத்தைப் பற்றியோ எந்தக் குறிப்பும் இல்லை.

<u>ஒபதியா எழுதப்பட்ட காலமாக கீழ்க்காணும் கணிப்புகள் முன்வைக்கப்படுகின்றன:</u>

1. கி. மு. 845 என்ற காலப்பகுதியை ஆதரிக்கும் பகுதிகளும் வாதங்களும்: கி. மு. 448 முதல் 441 வரை யோராம் யூதாவின் மீது ஆட்சி செய்தார். இந்தக் காலத்தில்

[12] பு. ஏ. தீர்க்கதரிசனப் பகுதிகளுக்குப் பார்க்கவும். : மத். 24; ரோமர் 11:25ff; 1கொரி. 15:22ff; 1தெச. 4:14-17; 2தீமோ. 2; 2பேதுரு 3; வெளி. 4 to 22 முதலியன.

பெலிஸ்தியர்களும் அரேபியர்களும் யூதாவை ஊடுருவி, எருசலேமைக் கொள்ளையிட்டனர் (2நாளா. 21:16-17; யோவேல் 3:3-6; ஆமோஸ் 1:6,11-12). இந்தக் காலத்தில் ஏதோமியர்கள் யூதாவுக்குக் கொடிய எதிரிகளாகத் திகழ்ந்தார்கள் (cf. 2இராஜா. 8:20-22; 2நாளா. 21:8-10).

2. கி. மு. 586 என்ற காலப்பகுதியை ஆதரிக்கும் பகுதிகளும் வாதங்களும்: இந்தத் தேதியை ஆதரிப்பவர்கள் கி. மு. 596-ல் எருசலேமுடைய வீழ்ச்சிக்கு பின்பான காலம்வரை ஒபதியா தீர்க்கதரிசனம் உரைத்தார் என்று நம்புகிறார்கள். யூதா சிறைப்பிடிக்கப்பட்டு, எருசலேம் அழிக்கப்பட்டதை குரூரமாக ஏதோமியர்கள் கொண்டாடியதை தங்கள் ஆதாரமாக இவர்கள் கொள்கிறார்கள்: புல. 4:21-22; எசே. 25:12-14; 35:1-9; 36:5.

<u>*யோவேல் எழுதப்பட்டிருக்கக்கூடிய காலம்:*</u>

யோவேல் இஸ்ரவேலரின் ஆரம்பகால எதிரிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (பெலிஸ்தியர்கள், பினீசியர்கள், ஏதோமியர்கள் மற்றும் எகிப்தியர்கள்: பார்க்க 3:4,19), ஆனால் ஆமோஸ் ஏற்கனவே குறிப்பிட்டிருந்த சிரியர்களைப் பற்றியோ, பாபிலோனியர்களையும் அசீரியர்களையும் பற்றியோ அவர் குறிப்பிடவில்லை. யோவேல் இந்த நூலை எழுதிய காலத்தில் இந்த இனங்கள் இஸ்ரவேல் மக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கியிருந்தால் அவர்களை நிச்சயமாக குறிப்பிட்டிருப்பார். இதிலிருந்து கி. மு. 835-ல் யோகாஸின் காலத்தில் தீர்க்கதரிசனமுரைத்த ஆமோஸின் காலத்திற்கு முன்பாகவே யோவேல் தீர்க்கதரிசனமுரைத்திருக்க வேண்டும் என்று முடிவு செய்யலாம். இஸ்ரவேல் அல்லது யூதா அரசர்களைப் பற்றி யோவேல் குறிப்பிடாமல் ஆசாரியர்களைப் பற்றி பல முறை குறிப்பிடுகிறார் என்பதும் (1:9,13; 2:17) மூப்பர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார் என்பதும் (1:14; 2:16) முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் ஆசாரியர்கள் இஸ்ரவே- ன் தலைமைத்துவத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்த காலம் இது. மேலும், இது கடவுளுக்குப் பயந்து யோவாஸ் அரசனைப் பாதுகாத்த ஆசாரியனாகிய யோய்தாவின் காலத்தில் யோவேல் இந்நூலை எழுதினார் என்ற வாதத்திற்கும் வலுச் சேர்க்கிறது (2நாளா. 22:10–24:16). அத்துடன், எபிரெய வேதாகமத்திலுள்ள நூல்களின் வரிசையில் ஆமோஸுக்கும் ஓசியாவுக்கும் நடுவில் இடம் பெற்றிருப்பதும் இந்த முந்தைய தேதியைக் குறித்த வாதத்திற்கு ஆதரவாக காணப்படுகிறது. ஆகிலும் இந்த வாதங்கள் இறுதியானவை என்று கூறிவிட முடியாது. வேறு சில அறிஞர்கள் கி. மு. 597 –க்கும் 586-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகக் கருதுகிறார்கள். அப்படியானால் அந்தக் காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு எதிரிகளாக இருந்தவர்கள் பாபிலோனியர்கள் (நெபுகாத்நேச்சர்).[13] அப்போது யோவேல் தீர்க்கதரிசன நூ- ல் வரும் "கர்த்தருடைய நாள்" என்பது புல. 1:12; 2:1,21-22; எசே. 7:19; 13:5 மற்றும் செப். 2:2-3 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்படும் "கர்த்தருடைய நாளோடு" ஒத்துப்போகும். மேலும் இது 3:6-ல் குறிப்பிடப்படும் யாவான் (கிரேக்கம்) என்பதை விளக்குவதாக அமையும் (எசே. 27:13, இந்தப் பகுதியும் பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் எழுதப்பட்ட பகுதிதான்). ஆகிலும், யோவேல் 2:18-19 இந்தக் கருத்தோடு முரண்படுவதாகத் தோன்றுகிறது, ஏனெனில் இந்தப் பகுதி யூதாவின் மனந்திரும்புதலைக் குறித்துப் பேசுகிறது, ஆனால் நெபுகாத்நேச்சரின் காலத்தில் யூதா மக்கள் மனந்திரும்பவில்லை. வேறு சில அறிஞர்கள் சிறையிருப்பின் காலத்திற்குப் பிறகுதான் இந்நூல் எழுதப்பட்டது என்று கூறுகிறார்கள்; அதன்படி கி. மு. 516 மற்றும் தேவாலயம் திரும்பக் கட்டப்படுதல் ஆகியவற்றிற்குப் பிறகுதான் எழுதப்பட்டிருக்க வேண்டும் (தீர்க்கதரிசிகளாகிய ஆகாய் மற்றும் சகரியாவின் காலம்). 1:2 மற்றும் 2:16 ஆகிய பகுதிகளில் அரசனைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக மூப்பர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் சிறையிருப்புக்குப் பிந்தைய காலத்தில் இஸ்ரவேல் மக்களுக்கு அரசர்கள் இருக்கவில்லை. 3:6-ல் அடிமை வியாபாரத்தைப் பற்றிப் பேசியிருப்பதால் அது கி. மு. 800-களுக்கோ அல்லது 500-களுக்கோ பொருந்தாமல், 600-க்குத்தான் பொருத்தமாக இருக்கிறது. வேறு சில வேதாகம விமர்சன அறிஞர்கள் கி. மு. 2-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவும் கருதுகிறார்கள். கி. மு. 600 அல்லது 800 பொருத்தமற்றதாகத் தோன்றுகிறது; கி. மு. 500-

[13] தேவாலயம் கி. மு. 586-ல்தான் இடிக்கப்பட்டது என்று இதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படக்கூடும். இருப்பினும் யோவேல் 1:9,13; 2:17, ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிற காரியங்கள் முந்தைய தேதியில் எழுதப்பட்டிருப்பதைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

*க்குப் பிறகு திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கருதுவதும் பொருத்தமற்றவதாகவே தோன்றுகிறது.*[14]

[14] See also Robert B. Chisholm, Jr., 'Joel' *in The Bible Knowledge Commentary, Old Testament: An Exposition of the Scriptures by Dallas Seminary Faculty, Old Testament,* edited by John F. Walvoord and Roy B. Zuck (Wheaton, Ill.: Victor Books, 1985), pp. 1409-1412 and the discussion about Joel by Gleason L. Archer in *A Survey of Old Testament Introduction Revised and Expanded* (Chicago: Moody Press, 1994), pp. 338-341.

# II. ஏசாயா தீர்க்கதரிசிக்கான அறிமுகம்

முதலில், திருத்தப்பட்ட புதிய வேத விளக்கவுரையில் (New Bible Commentary Revised) உள்ள டெரிக் கிட்னர் (Derek Kidner)அவர்கள் ஏசாயா தீர்க்கதரிசிக்கு கொடுத்திருக்கும் சுருக்கமான அறிமுகத்தை பரிந்துரைக்கிறோம்.[15]

## A. ஏசாயாவும் அவருடைய காலமும்

### 1. அவருடைய பெயர்

அவருடைய சரியான பெயர் "யேசாயாவ்". அதன் பொருள் "யாவே இரட்சகர்" அல்லது "யாவே இரட்சிக்கிறார்" அல்லது "யாவேதான் இரட்சிக்கிறவர்".

### 2. அவரது தோற்றம்

- அவரது தந்தையின் பெயர் ஆமோஸ் (1:1).
- யூதர்களுடைய பாரம்பரியத்தின்படி ஏசாயாவின் தந்தையாகிய ஆமோஸ் அரசானாகிய அமத்சியாவின் ஒரு சகோதரன் ஆவார் (அமத்சியா உசியா அரசனின் தந்தை ஆவார்). இதனால், ஏசாயா அரச வம்சத்தைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார்.
- யூதாவின் பல்வேறு அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஏசாயா தம்முடைய தீர்க்கதரிசனப் பணியைச் செய்திருக்கிறார் (ஏசாயா 1:1).

### 3. அவருடைய காலம்

- அவர் கி. மு. 740 முதல் 685 வரை ஆட்சி செய்த நான்கு அரசர்களுடைய காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார், அதாவது மொத்தம் 55 ஆண்டுகள்! அவருடைய அருட்பணி உசியா மன்னன் மரணமடைந்த கி. மு. 740-ல் ஆரம்பித்து (ஏசாயா 6:1), குறைந்தபட்சம் அசீரிய அரசனாகிய சனகெரிப்பின் காலமாகிய 702 வரை நீடித்த (ஏசாயா அதிகாரங்கள் 36–39; 2இராஜா. 18–19), 39 வருடகால அருட்பணியாகும்.
- 2நாளா. 26:22 ஏசாயா வரலாற்று ஆசிரியர் என்பதைத் தெரியப்படுத்துகிறது. சில வியாக்யானிகள் 2இராஜா. 20:7 (ஏசாயா 38:21) ஏசாயா ஒரு மருத்துவர் என்று குறிப்பிடுவதாகக் கருதுகிறார்கள். ஆகிலும் இது வெறும் யூகமாகத்தான் தோன்றுகிறது, ஏனெனில் மற்ற கடவுளுடைய பணியாளர்களும் மருத்துவராக இல்லாமல் இவ்விதமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள்: யாக். 5:14.

### 4. அவருடைய குடும்பம்

- அவர் திருமணமானவர் (8:3).

---

[15] Derek Kidner, ***"Isaiah"*** *in* The New Bible Commentary Revised, edited by Donald Guthrie and J. Alec Motyer, 3rd edition (London: Inter-Varsity Press, 1970), pp. 588-591.

- அவருக்கு இரண்டு மகன்கள் இருந்தார்கள்: **ஷீயார்-ஜசூப் என்பது ஒருவருடைய பெயர், அதற்கு,** “மீதியானவர்கள் திரும்ப வருவார்கள்” என்று பொருள் (7:3), **மாகேர்-சாலால்-அஷ்-பாஸ் என்பது மற்றவருடைய பெயர், அதற்கு,** “கொள்ளையிட ஓடு, விரைந்து சூறையாடு” (8:2-3) என்று பொருளாகும்.
- ஏசாயாவின் ஊழியமும் அவருடைய மகன்களின் ஊழியமும் ஒன்றாக இஸ்ரவேல் மக்களுக்கு அடையாளமாக விளங்கியது (8:18).

## 5. ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்த மற்ற தீர்க்கதரிசிகள்

- மீகா: கி. மு. 735 முதல் 715 வரை (இஸ்ரவேலுக்கும் யூதாவுக்கும்).
- ஓசியா: கி. மு. 760 முதல் 715 வரை (வட அரசாகிய இஸ்ரவேலுக்கு).

## 6. அவருடைய மரணம்

- வேதாகமம் அவருடைய மரணத்தைப் பற்றி எதுவும் சொல்வதில்லை.
- யூதர்களுடைய பாரம்பரியத்தின்படி அரசனாகிய மனாசே ஏசாயாவுக்கு மரண தண்டனை விதித்த காரணத்தினால் அவர் அரசனுக்குத் தப்பி ஓடிச் சென்றார். ஏசாயா உண்மையைச் சொன்ன காரணத்தினால் மனாசே கோபங்கொண்டு அவரைக் கொலைசெய்ய ஆணை பிறப்பித்தார். மனாசேயின் சேவகர்கள் ஏசாயாவைத் துரத்திச் சென்றபோது அவர் ஒரு மரத்தின் தண்டுக்குள் மறைந்து கொண்டார் என்று சொல்லப்படுகிறது, மனாசே ஏசாயாவை உள்ளே வைத்து மரத்தை வெட்டும்படி ஆணையிட்டார். இந்த நிகழ்ச்சியை எபி. 11:37 ஒருவேளை குறிப்பிடுவதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## 7. வெளிப்படையாக அவருடைய பெயர் வரும் இடங்கள்

- 2இராஜா. 19:20: 13 x
- 2நாளா. 26 மற்றும் 32: 3 x
- ஏசாயாவின் புத்தகம்: 16 x
- நற்செய்தி நூல்கள்: 13 x
- அப்போஸ்தலர் நடபடிகள்: 3 x
- ரோமர் கடிதம்: 4 x

இவ்வாறு பல இடங்களில் வெளிப்படையாக ஏசாயாவின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, ஏசாயாவின் பெயரை வெளிப்படையாகக் குறிப்பிடாமல் புதிய ஏற்பாட்டில் ஏசாயாவின் நூல் பல்வேறு இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏசாயா தீர்க்கதரிசன நூல் மறைமுகமாக பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது (சிறப்பாக வெளிப்படுத்தல் நூலில்). சங்கீதப் புத்தகத்திற்கு அடுத்தபடியாக மிகவும் அதிகமாக புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிற நூல் ஏசாயாதான்!

## 8. வரலாற்றுச் சூழமைவு

### a. ஏசாயாவின் காலத்தில் இஸ்ரவே- ன் மீது அதிக தாக்கம் செலுத்திய உலக சக்திகள்

(1) **அசீரியா**

- மன்னர்கள்: திக்லாத்-பிலேசர் III (745-727); சல்மனேசர் V (727-722); சார்கான் II (722-705) மற்றும் சனகெரிப் (கி. மு. 705-681).
- இந்த அரசர்கள் தங்கள் குரூரத் தன்மைக்குப் பேர் போனவர்களாகவும் தங்கள் இராணுவத்தினால் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்றவர்களாகவும் இருந்தார்கள்.
- முன்பு வட அரசாகிய இஸ்ரவேலும் சீரியாவும் (தமஸ்கு) சேர்ந்து யூதாவுக்கு எதிராக கூட்டணியமைத்த காரணத்தால், யூதா இந்தக் கூட்டணிக்கு எதிராக அசீரியாவுடன் கூட்டணி சேர்ந்தது.
- சனகரிப்பின் தலைமையின் கீழ் யூதா முழுமையும் கைப்பற்றப்பட்டது (46 நகரங்கள்). எருசேலேம் மட்டும் விதிவிலக்காக இருந்தது (ஏசாயா 37:26). எசேக்கியா அரசனுடைய ஆட்சிக் காலத்தில் கடவுள் அற்புதமான முறையில் இடைப்பட்டு, 1,85,000 அசீரிய போர்வீரர்களைக் கொன்றார் (ஏசாயா 37:36). கொள்ளை நோயினால் அந்தப் போர்வீரர்கள் இறந்திருக்க வேண்டும்.
- ஆரம்பத்தில் எசேக்கியா அசீரியாவிற்குக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார்: 2இராஜா. 18:13-16.
- கி. மு. 612 மட்டில் பாபிலோனியர்கள் அசீரிய தலைநகரமாகிய நினிவேயை அழித்துப்போட்டார்கள்.

### (2) *எகிப்து*

- பார்வோனின் மகளை சாலமோன் மணமுடித்திருந்த காரணத்தினால், அவருடைய காலத்தில் இருந்து இஸ்ரவேலுக்கும் எகிப்திற்கும் இடையில் உறவு இருந்து வந்தது (1இராஜா. 9:16).
- யூதா ஏசாயாவின் காலத்தில் எகிப்தின் உதவியை நாடியது (ஏசாயா 30–31: குறிப்பாக. 30:2).
- கி. மு. 605 கார்கெமிஸ் யுத்தத்தில் பாபிலோனியர்கள் எகிப்தைத் தோற்கடித்தார்கள்.

## b. *ஏசாயா மூன்று சகாப்தங்களில் நான்கு அரசர்களின் ஆட்சிக் காலத்தில் தம்முடைய தீர்க்கதரிசனப் பணியைச் செய்தார்*

### (1) *உசியா மற்றும் யோதாம்: கி. மு. 792-*736

*கி. மு. 750-- ருந்து யோதாம் அரசாண்டார் (அவருடைய தந்தையாகிய உசியாவைக் கடவுள் குஷ்டரோகத்தினால் தண்டித்தார்). உசியா கி. மு. 739-ல் மரணமடைந்தார். இந்தக் காலத்தில் யூதா செல்வச் செழிப்பும் பலமும் வாய்ந்த அரசாகத் திகழ்ந்தது. ஏதோமியர்களையும் பெ- ஸ்தியர்களையும் யூதா கீழ்ப்படுத்தியிருந்தது, ஆனால் ஆவிக்குரிய நிலையில் அது மிகவும் மோசமாகக் காணப்பட்டது (ஏசாயா 1 மற்றும் 5)!*

### (2) *ஆகாஸின் ஆட்சி: கி. மு. 735–716*

- ஆகாஸ் கடவுளுக்குப் பயப்படாமல் சிலைவழிபாடு செய்த ஒரு அரசன்.
- வட அரசாகிய இஸ்ரவேலும் சீரியாவும் யூதாவை அழிக்க முயற்சித்தன.
- ஆகாஸ் அசீரியாவின் உதவியைச் சார்ந்திருந்தார் (அதி. 7).

### (3) *எசேக்கியா: கி. மு. 716–687*

- எசேக்கியா ஒரு கடவுள் பக்தியுள்ள அரசன்.
- அவருடைய ஆட்சியின் கீழ் யாவே வழிபாடு மீண்டும் நிலைபெற்றது.

- யூதா அசீரியர்களால் பிடிக்கப்பட்ட போது கடவுள் அற்புதமான முறையில் இடைப்பட்டு எருசலேமைக் காப்பாற்றினார் (ஏசாயா 36–37 மற்றும் 2இராஜா. 18–19).

### c. *அக்காலத்தின் அரசியல் சூழ்நிலை குறித்த ஆன்மீகப் பகுப்பாய்வு*

*இஸ்ரவேல் மூன்று வல்லரசுகளினால் சூழப்பட்டிருந்தது: எகிப்து, அசீரியா மற்றும் பாபிலோன் (பிற்காலத்தில் 7-ம் நூற்றாண்டில் நெபுகாத்நேச்சரின் ஆட்சியின்போது). இந்த மூன்று வல்லரசுகளினால் முற்றுகையிடப்படும் நிலையில் இருந்த யூதா அவர்களை விட்டு விலகி கடவுளுடைய உதவியை மட்டும் சார்ந்திருந்தால் மட்டுமே தன்னுடைய சுயாதீனத்தைக் காத்துக்கொள்ள முடியும். ஆயினும், அப்படிக் கடவுள் மீது முழுமையாக நம்பிக்கை கொள்வதற்கு வட அரசில் ஒரு மன்னர்களும் இருக்கவில்லை, தென்னரசாகிய யூதாவிலும் பெரும்பான்மை அரசர்களுக்கு அப்படிப்பட்ட இறை நம்பிக்கை இருக்கவில்லை. தற்போது குறிப்பிட்டபடி ஆகாஸ் என்னும் மன்னனுடைய வாழ்க்கை இந்த உண்மையை சரியாக விளக்குகிறது. அரசியலைப் பொறுத்தவரையில் யூதாவின் அரசர்கள் ஒன்றில் எகிப்து அல்லது அசீரியா என்று தங்கள் அயலகத்தாரின் பலத்தையே நம்பிருந்தார்கள். அரசர்களின் இப்படிப்பட்ட நிலையின் காரணமாக, அவ்வப்போது இந்த அயல்நாட்டுச் சக்திகள் இஸ்ரவேலையும் யூதாவையும் ஊடுருவின. அதனால் அவர்கள் தொடர்ச்சியான யுத்தங்களைச் சந்தித்தார்கள். இறுதியில் கல்தேயர்களுக்கு சிறைப்பட்டுப் போனார்கள் (புதிய பாபிலோனிய அரசு). ஏசாயா எப்போதும் தேவாலயத்தோடும் அரசவையோடும் தொடர்பில் இருந்த காரணத்தினால் அந்தக் காலத்தில் நடைபெற்ற அனுதின நிகழ்வுகளைக் குறித்து நன்கு அறிந்திருந்தார். அரசாங்கத்தில் ஒரு முக்கியமான பொறுப்பில் இருந்த காரணத்தினாலும், ஒரு உண்மையான தீர்க்கதரிசியாக இருந்த காரணத்தினாலும் ஏசாயா மக்களுடைய நிலையையும் அவர்களுடைய எதிர்கால முடிவையும் நன்கு அறிந்திருந்தார்.*

## B. *ஏசாயா நூலின் மெய்த்தன்மை*

*சுமார் 200 வருடங்களுக்கு முன்புவரை ஏசாயாதான் இந்த நூலை எழுதினார் என்பது எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், வேதாகம விமர்சன அறிஞர் இந்த நூலின் சில பகுதிகளின் மெய்த்தன்மை குறித்து கேள்வி எழுப்பத் தொடங்கினார்கள். ஏசாயா நூலின் மெய்த்தன்மைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட முதல் தாக்குதல் 40-66 வரையுள்ள அதிகாரங்கள் ஏசாயாவின் காலத்திற்கு 150 முதல் 200 ஆண்டுகள் கழித்து பெயர் அறியப்படாத ஒரு நபரால் எழுதப்பட்டது என்று அறிஞர்கள் கூறியதாகும்.[16] இந்த விமர்சன அறிஞர்கள் பெயர் அறியப்படாத எழுத்தாளருக்கு “இணை-ஏசாயா” (“Deutero-Isaiah” )[17] என்று பெயரிட்டார்கள். இன்னும் சிறிது காலத்திற்கு உள்ளாக “மூன்றாவது-ஏசாயா” (“Trito-Isaiah”)[18] –வைப் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து இன்னும் மற்ற எழுத்தாளர்களும் ஏசாயா நூலை எழுதினார்கள் என்று சொல்லப்பட்டது. நவீன வேதாகம விமர்சன அறிஞர்களுடைய கருத்துப்படி பின்வரும் பகுதிகள் மட்டும்தான் ஏசாயா எழுதியது: 1:1-26; 2:1.6-21; 3:1-25; 4:1; 5:1-6.13; 7:1-13.18-25; 8:1-22; 9:7 முதல் 10:4; 28:1-22 (புத்தகத்தில் ஐந்தில் ஒரு பகுதிகூட இல்லை). ஆட்டோ கெய்சர் (*Otto Kaiser*) என்ற நம்பிக்கை முற்றிலும் இல்லாத ஒரு அறிஞர் ஏசாயா நூலுக்கான ஒரு அறிமுகத்தை தன்னுடைய விளக்கவுரையில் எழுதியிருக்கிறார்.[19] அவர் இன்னும் குறைவான பகுதியையே 8-ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும் ஏசாயா எழுதினார் என்று கூறுகிறார். இந்த அறிஞர்கள் ஏசாயாவின் வெளிப்பாடு என்று அறியப்படுகிற பகுதியை மட்டும் (அதி. 24-27)*

---

[16] Early criticism by Ioannes Christophorus Doederlein, *ESAIAS ex recensione Textus Hebraei ad Fidem Codicum Manuscriptorum et Versionum Antiquarum latine vertit notasque varii argumenti,* Editio Tertium Recognita (Norimbergae et Altdorfi: G. P. Monath., [1]1775] 1789) and subsequently more explicitly by Johann Gottfried Eichhorn, *Einleitung in das Alte Testament,* Vol. 4, 4th original edition (Göttingen: Carl Eduard Rosenbusch, 1824).

[17] I.e. “the second Isaiah”.

[18] I.e. “the third Isaiah”. Chapter 40–55 are allegedly the work of Deutero-Isaiah, chapters 56–66 of Trito-Isaiah.

[19] Otto Kaiser, *Der Prophet Jesaja: Kapitel 13−39, in* Das Alte Testament Deutsch. Neues Göttinger Bibelwerk, ed. Otto Kaiser and Lothar Perlitt. Volume 18, 3rd revised edition (Göttingen: Vandenhoeck & Ruprecht, 1983) and in his *Einleitung in das Alte Testament: Eine Einführung in ihre Ergebnisse und Probleme,* 5th revised edition (Gütersloh: Gütersloher Verlagshaus Gerd Mohn, 1984).

*10-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் (மத போதகர்கள்) எழுதியிருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.*[20]

*வேதாகம விமர்சன அறிஞர்கள் தங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் ஒத்துப் போகிறதில்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவர்களுடைய கருதுகோள்கள் அடிப்படையில் ஒன்றுடன் ஒன்று முரண்படுகிறவைகளாக இருக்கின்றன.*[21] *ஆனால், எத்தனையோ பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் ஆசிரியர்கள் அறியப்படாமல் இருக்கும்போது ஏன் ஏசாயாவின் புத்தகத்திற்கு மட்டும் ஆசிரியரைப் பற்றிய இத்தனை முரண்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன?*[22] *ஏனெனில் பு. ஏ. ஏசாயா நூலின் மூன்று பகுதிகளும் ஏசாயாவினால்தான் எழுதப்பட்டது என்று வெளிப்படையாகக் கூறுகிறது. ஏசாயா நூலின் இரண்டாம், மூன்றாம் பகுதிகளில் (அதாவது அதிகாரங்கள் 40–55 மற்றும் 56–66) உள்ள பல்வேறு மேற்கோள்கள் பு.ஏ.-ல் காண்பிக்கப்பட்டு அவை ஏசாயாவினால் எழுதப்பட்டது என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக: மத். 3:3; 8:17; 12:18-21; லூக். 3:4; யோவான் 1:23; 12:38; ரோமர் 10:16.20-21. ஆகவே, இந்த இடத்தில் இயேசு மற்றும் அப்போஸ்தலர்களுடைய உண்மைத் தன்மை (அதனால் புதிய ஏற்பாட்டின் உண்மைத் தன்மை) கேள்விக்குள்ளாக்கப்படுகிறது.*

### *1. விமர்சகர்களின் எதிர்ப்புகளும் நம்முடைய பதில்களும்*

#### a. *ஏசாயா 40-66-ல் உள்ள உள்ளடக்கம் 1-39-ல் உள்ள உள்ளடக்கத்தில் இருந்து வேறுபடுகிறது*

***நம்முடைய பதில்:*** *ஒரு ஆசிரியர் ஒரு புத்தகத்தில் இரண்டு வேறு பாடப் பொருள்களை ஏன் எடுத்துக் கையாளக்கூடாது? வரலாற்று ரீதியாக இரண்டு பகுதிகள் பிரிந்திருப்பது (அதிகாரங்கள் 36–37 = அசீரியாவைக் குறித்து வரலாற்று ரீதியாகப் பேசுகிறது. அதிகாரங்கள் 38–39 பாபிலோனைக் குறித்து தீர்க்கதரிசனமாகப் பேசுகிறது) இரண்டு வேறு பாடப் பொருளைக் குறித்த அடையாளமாக இருக்கிறதல்லவா? மேலும் இந்த இரண்டு பகுதிகளிலும் மற்றைய பகுதியின் தலைப்போடு தொடர்புடைய கூற்றுகள் இடம் பெற்றிருக்கின்றன: உதாரணமாக ஒப்பிடுக:* ***"கிருபையும் இஸ்ரவேலருடைய மீட்பும்"*** *என்ற தலைப்பை அதிகாரங்கள் 11-12-ல் வாசிக்கிறோம். அதே தலைப்பைப் பற்றி இரண்டாவது பகுதியின் 46-47 ஆகிய அதிகாரங்களிலும் மூன்றாம் பாகத்தின் 63-ம் அதிகாரத்தில் அதே தலைப்பைப் பற்றி வாசிக்கிறோம்.* ***"நியாயத்தீர்ப்பு" என்பதைப் பற்றி*** *(1–39 வரையுள்ள அதிகாரங்களில் இது முக்கியமான பாடப்பொருளாக இருக்கின்றது) இரண்டாம் பாகத்திலும் (இணை ஏசாயா என்று அழைக்கப்படுகிற பகுதி) மூன்றாம் பாகத்திலும் (மூன்றாம் ஏசாயா என்று அழைக்கப்படுகிற பகுதி) இடம் பெறுகிறது: முதல் பகுதியில் உள்ள நியாயத்தீர்ப்பைக் குறித்த பகுதிகள்: அதிகாரங்கள்: 1; 3; 5–10; 13–23; 28–31; 34. இரண்டாம் பகுதியில் மனந்திரும்புதலுக்கான அழைப்பு: உதாரணமாக அதிகாரங்கள் 48, 51–52 மற்றும் கர்த்தருடைய தாசனால் (அதாவது மேசியா) நிறைவேற்றப்படவிருக்கும் நியாயப்படுத்தப்பட்ட நியாயத்தீர்ப்பு: அதிகாரம் 53. மூன்றாவது பகுதியில் உள்ள நியாயத்தீர்ப்பு: அதிகாரங்கள் 57–59 மற்றும் 63–64. ஏசாயா 66:15-24 முன்வைக்கப்படும் முடிவுரையைக் கவனியுங்கள்: அது நியாயத்தீர்ப்பு மற்றும் மீட்பு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. இந்த இரண்டையும் சுருக்கி நாம் இவ்வாறு சொல்லலாம்:* ***நியாயத்தீர்ப்பின் மூலமாக மீட்பு.*** *இவைதான் 1–39 வரையுள்ள அதிகாரங்களில் முக்கியமான பாடப்பொருளாக இருக்கின்றன.*

---

[20] E.g. Otto Ludwig, *Die Stadt in der Jesaja-Apokalypse: Zur Datierung von Jes. 24-27* Inaugural dissertation to receive the honour of a doctorate in theology at the evang.-theol. faculty of the Rhenish Friedrich-Wilhelms University Bonn. Cologne: Walter Kleikamp, 1961.

[21] The hypotheses are reminiscent of the various so-called source analysis hypotheses on the Pentateuch.

[22] Examples: The books Samuel, Kings, Chronicles, Ruth, Judges and Esther...

### b. அதிகாரங்கள் 40–66 வரையுள்ள பகுதியின் எழுத்து நடை 1–39 வரையுள்ள எழுத்து நடையி- ருந்து வேறுபடுகிறது

***நம்முடைய பதில்:*** *ஒரு பாடப் பொருளைப் பொறுத்துதான் ஒரு பகுதியின் எழுத்து நடையும் அமையும் என்பதை நாம் மறந்துபோகக் கூடாது. விமர்சக அறிஞர்களே நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒத்துக்கொள்ளும் காரியம் என்னவென்றால் இந்த இரண்டு பகுதிகளுக்கும் (உண்மையில் மூன்று பகுதிகளுக்கும்) எழுத்து நடையிலும் சொற்களின் தெரிவிலும்* பல ஒற்றுமைகளைக் *காணக்கூடியதாக இருக்கின்றது. இணையான சொல்லாடலுக்கான உதாரணம் பின்வருமாறு:* ***"இஸ்ரவேலின் பரிசுத்தர்" என்ற கடவுளின் பெயர் ஏசாயாவின் புத்தகத்திற்கு வெளியில் அரிதாகவே காணப்படுகிறது****. இதை ஏசாயா கடவுளுக்குக் கொடுத்த பெயர் என்று கூட கருதப்பட வாய்ப்பிருக்கிறது. இது 39 முறை ஏசாயாவின் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கிறது; இந்தச் சொல்லாடல் பாதி அளவுக்கு மேல் இரண்டாம் மூன்றாம் பகுதிகளில்தான் இடம் பெற்றிருக்கிறது (அதாவது அதிகாரங்கள் 40–55 மற்றும் 56–66).*

### c. அதிகாரங்கள் 40–66 பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் அல்லது சிறையிருப்பிற்குப் பிந்திய காலத்தில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்

***நம்முடைய பதில்:*** *வேதாகம விமர்சகர்களின் கருத்துப்படி, நூலின் இரண்டாவது பகுதி ஏசாயாவின் காலத்திற்கு சுமார் 150 வருடங்களுக்குப் பிறகும் மூன்றாவது பகுதி இன்னும் சில காலங்கள் சென்ற பிறகும்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் இந்தப் பகுதிகளில் எருசலேம் ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டது என்றும், நாடு சூறையாடப்பட்டு விட்டது எனவும் கடவுளுடைய மக்கள் சிதறிவிட்டார்கள என்றும் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவே- ன் சூழ்நிலை குறித்த அவர்களுடைய கருத்து (சிறப்பாக எருசலேமைக் குறித்த கருத்து) சரியானதாக இருந்த போதிலும், ஏசாயா 40–66 வரையுள்ள பகுதி 1–39 வரையுள்ள பகுதிக்கு பிறகு நீண்ட காலம் சென்று எழுதப்பட்டது என்ற விமர்சக வியாக்யானிகளின் கருத்தை அது நிரூபிப்பதில்லை. விமர்சர்களுடைய நம்பிக்கையின் தாராளவாத அமைப்பு முறையின்படி அவர்கள் கடவுளால் கொடுக்கப்படும் தீர்க்கதரிசனம் (முன்னுரைத்தல்) என்று ஒன்று இருப்பதாக ஏற்றுக்கொள்வதில்லை (இந்தத் தீர்க்கதரிசனமுரைத்தல் பரிசுத்த ஆவியானவரால் ஏற்படுத்தப்படுகிறது: 2பேதுரு 1:21). இன்னும் சில தீர்க்கதரிசனப் பகுதிகள் எதிர்கால நிகழ்வுகளைப் பற்றி நிகழ்கால மற்றும் இறந்தகால வாக்கியங்களில் பேசுகின்றன (உதாரணமாக உபா. 32; ஓசியா 13; ஒப்பிடுக ஏசாய 14:2; யோவேல் 1; 2:15). சில பகுதிகள் (உதா. 5:13-15 மற்றும் 9:1-23) இப்படித்தான் பேசுகின்றன என்று ஏற்றுக்கொள்ளும் விமர்சகர்களும் இருக்கிறார்கள் (உதாரணமாக ஸ்கின்னர் மற்றும் டிரைவர்* [Skinner and Driver]). *எதிர்காலத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் முழுமைபெற்ற இறந்த காலத்தில் பேசுவது, புதிய ஏற்பாட்டிலும் இடம் பெற்றிருக்கிறது, சிறப்பாக வெளிப்படுத்தல் நூ- ல் காணலாம். எதிர்கால நிகழ்வுகள் நிகழ்கால தொடர் சுட்டு வினையில் பேசப்பட்டிருக்கின்றன (உதா. வெளி. 19:1; 20:1; 21:1). மிகவும் முக்கியமான உதாரணமாக, வெளி. 21:6-ல் புதிய படைப்பைக் குறித்த கடவுளுடைய வாக்குறுதியை அறிவிக்கும்போது யோவான்: "ஆயிற்று!"[23] என்று சொல்கிறார்.*

### d. பெர்சிய அரசனாகிய கோரேஸின் பெயர் மற்றும் செயல்கள் ஆகியவற்றை ஏசாயா அறிந்திருக்க முடியாது

*உண்மையில் ஏசாயா தன்னுடைய ஊழியத்தைச் சிறப்பாகச் செய்துகொண்டிருந்த காலம் கி. மு. 700, ஆனால் கோரேஸ் பாபிலோனியர்களைத் தோற்கடித்தது கி. மு. 539-ல் நடைபெற்றது (ஏசாயாவின் காலத்திற்கு 160 வருடங்களுக்குப் பிறகு); ஏசாயாவின் புத்தகம் கோரேசின் வெற்றியை 44:28 மற்றும் 45:1 ஆகிய பகுதிகளில் மறைமுகமாகக் குறிப்பிடுகிறது.*

---

[23] In Greek *"gegonan"* (γεγοναν): It is *Perfect II* of the verb *ginomai = to become.* God reveals to John the (coming) creation of a New Heaven, a New Earth and a New Jerusalem and states: *"It is done."* (Actually a plural: *"They are done."*). Of course, all these three "things" do not yet exist today. God is absolutely certain of their future existence and therefore lets his prophet announce these events in the perfect tense; a tense used in Greek for absolute certainty and fixed results. We therefore refer to this tense as the "prophetic perfect".

***<u>எங்களுடைய பதில்:</u>*** *பரிசுத்த ஆவியானவருடைய தாக்கத்திற்கு உட்படாமல் (அகத்தூண்டுதல் பெறமல்) நிச்சயமாக ஏசாயாவினால் இந்தக் காரியத்தை முன்னுரைத்திருக்க முடியாது, கடவுள் பரிசுத்த ஆவியானரால் இதை ஏசாயாவுக்கு வெளிப்படுத்தினார். இந்தக் காரியத்தில் தாராளவாத (விமர்சன) இறையியல் தன்னுடைய உண்மையான தன்மையை வெளிப்படுத்துகிறது: அது பகுத்தறிவுவாதத்தின் அடிப்படையில் இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் புறக்கணிக்கிறது. ஆயினும் உண்மையான தீர்க்கதரிசனத்தின் தன்மையே இதுதான்: அது கடவுளிடத்தில் இருந்து தோன்றுகிறது.[24] எண்ணற்ற ப.ஏ. தீர்க்கதரிசினங்கள், குறிப்பாக கிறிஸ்துவின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள், ஒவ்வொன்றும் அதன் கடைசி விவரம்வரை துல்- யமாக நிறைவேறியிருக்கிறது; மற்ற தீர்க்கதரிசனங்களும் நிறைவேறியிருக்கின்றன. ஒரு உதாரணத்தை இங்கே பாருங்கள்: யோசியா அரசனுடைய பிறப்பிற்கு சுமார் 300 வருடங்களுக்கு முன்பாகவே அந்த அரசனுடைய பெயரைக் குறித்தும் ஆட்சியைக் குறித்தும் முன்னுரைக்கப்பட்டது (1இராஜா. 13:1-2). இதை தாராளவாத இறையியலாளர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும் அதனால் இராஜாக்களின் புத்தகம் யோசியாவின் காலத்திற்குப் பிறகு எழுதப்பட்டது என்றும் கூறுவார்கள் என்றும் நாம் அறிவோம்.[25]*

## *2. ஏசாயாவின் புத்தகத்தின் மெய்த்தன்மைக்கான புறச்சான்றுகள்*

### **a.** *ஏசாயா புத்தகத்தின் மெய்த்தன்மைக்கான வெளி ஆதாரங்கள்*

#### (1) ***ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகம் முழுவதையும் எழுதியது ஏசாயாதான் என்று செப்துவஜிந்து கூறுகிறது***

*செப்துவஜிந்து (*The LXX*)[26] இணை-ஏசாயாவைப் பற்றியோ அல்லது மூன்றாவது ஏசாயாவைப் பற்றியோ பேசுவதில்லை.*

#### (2) ***கோரேஸ் தன்னைக் குறித்த தீர்க்கதரிசனத்தைப் பற்றி அறிந்திருந்தார் என்று யோசீபஸ் என்ற யூத வரலாற்றாசிரியர் கூறுகிறார்***

*இதற்குரிய ஒரே விளக்கம் ஏசாயா கோரேஸைக் குறித்து தீர்க்கதரிசனமுரைத்தார் என்ற வேதாகமத்தின் கூற்றை ஏற்றுக்கொள்வதுதான்.*

#### (3) ***கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஏசாயாவின் சுருள்கள் விமர்சக அறிஞர்களின் வாதங்களை ஏற்பதில்லை***

*கும்ரான் குகைகளில் மற்ற நூல்களுடன் சேர்த்துக் கண்டுபிடிக்கப்பட்ட ஏசாயாவின் புத்தகம் முழுமையான புத்தமாகத்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை கி. மு. 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கணிக்கப்படுகின்றன. இந்தப் புத்தகச் சுருள்கள் இணை-ஏசாயா அல்லது மூன்றாம் ஏசாயா போன்ற கருதுகோள்களை ஆதரிப்பதாக தெரியவில்லை. இந்தச் சுருள்களில் ஒன்று ஏசாயா முழு நூலையும் எபிரெய மொழியில் எழுப்பட்டதாக காணப்படுகிறது. ஒன்றாக இணைத்துத் தைக்கப்பட்ட 17 மிருகங்களுடைய தோல்களில் இந்த நூல் ஏழுதப்பட்டிருக்கிறது. அந்த 17 தோல்களில் ஒன்றில் 38:8 முதல் 40:2 வரையுள்ள பகுதி*

---

[24] And God insists on this truth in the Book of Isaiah: cf. 41:20; 42:9; 44:6-7; 45:6-11; 48:3.

[25] This is referred to as a ***"vaticinium post eventum"*** (i.e. a "prophecy" pronounced ***after*** the announced event or ***"vaticinium ex eventu"*** (i.e. a "prophecy" pronounced at the same time as the announced event). Yet, it is exactly this rationalistic claim by Bible critics (i.e. their apriori) that we cannot accept because it excludes divine inspiration and reduces the Bible to mere "human words" (instead of God's words) just like any other religious book.

[26] *செப்துவஜிந்து என்பது (*LXX*) கி. மு. 250 அளவில் செய்யப்பட்ட பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பாகும் (எகிப்து நாட்டின் அலெக்சான்ரியா என்ற நகரத்தில் அது மொழிபெயர்க்கப்பட்டது).*

*எழுதப்பட்டிருக்கிறது! அதிகாரங்கள் 40–66 (அல்லது 40–55 மற்றும் 56–66) வேறு ஆசிரியரால் எழுதப்பட்டிருந்தால், ஒரு பகுதி 39:8-ல் முடிவடைந்து அடுத்த பகுதி 40:1-ல் ஆரம்பித்திருக்க வேண்டும்.*

(4) ***தள்ளுபடி ஆகமங்களில் ஒன்றாகிய இயேசு என்பவர் எழுதிய சீராக் ஆகமமும் ஏசாயா முழுவதும் ஏசாயாவினால் எழுதப்பட்டது என்பதை உறுதி செய்கிறது.***

*அந்த நூலின் 48:24-ல் ("ஆவியின் ஏவுதலால் இறுதியில் நிகழவிருப்பதைக் கண்டார்; சீயோனில் புலம்பி அழுதவர்களைத் தேற்றினார்") ஏசாயா 40-66 அதிகாரங்களை மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். மேலும் இந்த வார்த்தைகள் (சீராக் 48:20-24-ல் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தைகள்) ஏசாயாவினால் சொல்லப்பட்டது என்றும் கூறுகிறார்.*[27]

## b. *ஏசாயா நூலின் மெய்த்தன்மைக்குரிய அகச்சான்றுகள்*

(1) ***பு.ஏ. ஒன்பது மேற்கோள்கள் ஏசாயாவின் இரண்டாம் மூன்றாம் பாகத்திலிருந்து (40-66) காண்பிக்கப்படுகிறது, அவற்றில் ஏசாயாவின் பெயர் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது***

*அவற்றின் பட்டியல்:*

- *ஏசாயா 40:3: மத். 3:3; மாற்கு 1:2–3; யோவான் 1:23*
- *ஏசாயா 40:3–5: லூக்கா 3:4–6*
- *ஏசாயா 42:1–4: மத். 12:17–21*
- *ஏசாயா 53:1: ரோமர் 10:16*
- *ஏசாயா 53:4: மத். 8:17*
- *ஏசாயா 53:7–8: அப். 8:32–33*
- *ஏசாயா 65:1: அப். 10:20*

*நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல மேற்குறிப்பிட்ட பகுதிகளில் ஒரு பகுதி நம்முடைய சிறப்புக் கவனத்திற்கு உரியது:* ***யோவான் 12:38–41.*** *இந்த வசனங்கள் வலுவான வாதங்களை முன்வைக்கின்றன:*

- *வசனம் 38 ஏசாயா 53:1 –– ருந்து மேற்கோள் காட்டுகிறது.*
- *வசனம் 40 ஏசாயா 6:9-10*[28] *-- ருந்து மேற்கோள் காட்டுகிறது.*

*இயேசுவானர் இந்த இரண்டு பகுதிகளில் இருந்தும் மேற்கோள் காண்பித்து இரண்டும் ஏசாயாவினால் சொல்லப்பட்டது என்று கூறுகிறார். இறைமகன் இயேசு தவறாச் சொல்- விட்டார் என்று நாம் கூற முடியுமா? அல்லது அவர் அந்தத் தவறை அறிந்திருந்தும் அதைச் சொல்லாமல் மறைத்தாரா? எங்களுடைய கருத்துப்படி நினைத்துப் பார்க்க முடியாதது ஏனெனில் கர்த்தருடைய வார்த்தைகள் தூய்மையானவை மட்டுமல்ல எந்த தவறும் இல்லாதவை.*

---

[27] Compare note in *Traduction Œcuménique de la Bible TOB,* édition intégrale, Ancien Testament (Paris: Les Editions du Cerf et Les Bergers et les Mages, 1977), p. 2207: "Allusion to Isa 40–66, which Ben Sirach believed to be from the same author as the rest of the book." (Original text: "Allusion à Es 40–66 qui pour Ben Sir est du même auteur que le reste du livre.")

[28] Compare also John A. Martin, 'Isaiah' in *The Bible Knowledge Commentary: An Exposition of the Scripture by Dallas Seminary Faculty, Old Testament,* edited by John F. Walvoord and Roy B. Zuck (Wheaton, Ill.: Victor Books, 1985), p. 1030.

### (2) இணை ஏசாயாவுக்கும் மூன்றாவது ஏசாயாவுக்கும் இடையில் இருப்பதாக விமர்சகர்கள் சொல்லும் வேறுபாட்டுக்கு அவர்கள் சரியான காரணம் கொடுப்பதில்லை.

*வேதாகம விமர்சகர்களுடைய கருத்து சரியாக இருந்தால், ப.ஏ.-ன் மிக முக்கியமான தீர்க்கதரிசி (விமர்சகர்களுடைய கருத்துப்படி இணை-ஏசாயா) தன்னுடைய எழுத்துக்களை ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் குறைந்த ஏசாயாவின் (விமர்சகர்களுடைய கருத்துப்படி முதல்-ஏசாயா) எழுத்துக்களோடு சேர்த்திருக்கிறார். அதிகாரங்கள் 1-39 வரையுள்ள தீர்க்கதரிசனங்களைவிட அதிகாரங்கள் 40-66 நமக்கு மிகவும் "முக்கியமானது"[29]! ஏற்கனவே குறிப்பிட்டபடி விமர்சகர்கள் இந்த "அமைதி" –க்கான காரணத்தை விளக்கவில்லை.*

### (3) ஏசாயா நூலின்அமைப்பு முறையும் அதன் பொருலொற்றுமையும் அதன் மெய்த்தன்மைக்கு சான்று பகர்கின்றன

*ஏசாயாவின் புத்தகம் ஒரு இறையியல் நூலாகும்; அது ஆரம்பத்தி- ருந்து கடைசிவரை ஒரு குறிப்பிட்ட வரைவுத் திட்டத்தோடு எழுதப்பட்டுள்ளது:*

***முதல் பகுதி அதி. 1–39:*** *தாவீதின் வம்சத்தைச் சேர்ந்த அரசர் ஒருவர் இன்னும் எருசலேமில் ஆட்சி செய்துகொண்டிருக்கிறார். ஆயினும் தாவீதின் சந்ததியினரும் மக்களும் யாவே இறைவனை விட்டு விலகிய காரணத்தினால் அவர்கள் மேல் வரவிருந்த தண்டனையை யாரும் தடுக்க முடியாது (அவ்விதமாகவே அவர்களுடைய சகோதரர்களாகிய இஸ்ரவேல் என்னும் வட அரசும் தண்டிக்கப்பட்டது). உடனடியாக நடைபெறவிருக்கிற சிறையிருப்பைக் குறித்து அறிவிக்கும்படி தீர்க்கதரிசியாகிய ஏசாயாவுக்கு கட்டளையிடப்படுகிறது: ஏசாயா 5:13; 6:11-13; 39:5-7. எருசலேமின் கடைசி அரசனாக இருந்தவர் சிதேக்கியா என்பவராவார். அவருடைய கண்களைப் பிடுங்கும்படி நெபுகாத்நேச்சர் கட்டளையிட்டார் (அவருடைய கலகத்தின் நிமித்தமாக) அரச பதிவியிருந்து இறக்கப்பட்ட யோயாகீம் என்பவரை நெபுகாத்நேச்சார் மன்னித்து தன்னோடு சிறைப்பிடித்துக் கொண்டு போனார் (2இராஜா. 25; 2* நாளா. *36). ஆயினும் அவர் எருசலேமுக்குத் திரும்பி வரவில்லை. ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர எருசலேமின் சிங்காசனத்தில் வீற்றிருக்க இன்னொரு அரசன் வரப்போவதில்லை. ஆகிலும் அவர் தமது சொந்த ஜனங்களால நிராகரிக்கப்பட்டார் (யோவான் 1:11; 18:36; லூக்கா 19:14.27). ஏசாயா 1–39 -ல் கலகக்காரர்களாகிய தாவீதின் குடும்பத்தாரை மீண்டும் மீண்டும் மேசியாவாகிய அரசனோடு ஒப்படுகிறார்.[30] அவர் புதிய தாவீதாக இஸ்ரவேலைத் திரும்ப எடுப்பித்து, எருசலேமிலுள்ள சீயோனில் இருந்து அரசாளுவார். அதிகாரங்கள் 1–39-ல் இந்த இரண்டு இணையான காரியங்களைக் கவனிக்கிறோம்: அந்தக் காலத்தில் இருந்த தாவீதின் வீட்டாரின் மீதான கவனம் மேலும் மேலும் குறைக்கப்பட்டு (ஏசாயா 39:7), அவர்களுக்குப் பதிலாக வரப்போகிற புதிய தாவீது அவர்கள் இடத்தைப் பெற்றுக்கொள்கிறார் (ஏசாயா 9:5; 11:1.10; 22:22; 2சாமு. 7:12-16; எரே. 23:5; எசே. 34:23-24; 37:24-27; லூக்கா 1:27-33, முத- யன.).[31]*

---

[29] *உதாரணமாக அதி. 53 கிறிஸ்தியலுக்கும் மீட்பியலுக்கும் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது.*

[30] *அவருடைய முதல் வருகையும், அவருடைய தன்மைகளும், அவருடைய அருட்பணியும் ஆங்காங்கே ஒளிச் சிதறல்களாகக் கொடுக்கப்படுகின்றன: ஒரு கன்னிகை அவரைப் பெற்றெடுப்பார் (ஏசாயா 7:14; மத். 1:23; ஆதி. 3:15). செபுலோனும் நப்தலியும் ஒளியைக் காண்பதினால் அவருக்கு நன்றி கூறுவார்கள் (அதாவது க- லேயா: ஏசாயா 8:23 முதல் 9:1; மத். 4:13-16). ஆண் குழந்தை தெய்வீகமானதாக இருக்கும், அவர் "அற்புதமானவர், ஆலோசனைக் கர்த்தர், நித்திய பிதா, சமாதானப் பிரபு"என்று அழைக்கப்படுவார், அவர் தாவீதின் சிங்காசனத்தி- ருந்து அரசாளுவார் (ஏசாயா 9:5-6, 2சாமு. 7:12-17; லூக்கா 1:27-35) ஏனெனில் அவர் தாவீதின் குடும்பத்திலிருந்து வருகிறார் (ஏசாயா 11:1.10; 22:22; ரோமர் 1:3; 15:12). அதிகாரங்கள் 7–11-ல் அவர் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு ஆயத்தமாயிருந்த தீய அரசானாகிய ஆகாபோடு ஒப்பிடப்படுகிறார். அதிகாரங்கள் 13-23-ல் அவர் வரப்போகிற நியாயாதிபதியாக காண்பிக்கப்படுகிறார். ஏசாயாவின் வெளிப்பாட்டுப் பகுதி என்று அழைப்படும் பகுதியில் (ஏசாயா 24–27), தீர்க்கதரிசி அவரை எருசலேமில் இருந்து ஆட்சி செய்கிறவராகக் காண்கிறார் (ஏசாயா 24:23; 27:13).*

[31] *முதல் பகுதியினுடைய (அதி. 1-39) நோக்கம் புதிய தாவீதுக்கும் யூதாவின் தீய அரசர்களுக்கும் இடையில் உள்ள வேற்றுமையைக் காண்பித்து, இறுதி மீட்பு புதிய தாவீதின் மூலமாக மட்டுமே கிடைக்கும் என்பதைக் காண்பிப்பது. இதுதான் ஏசாயாவின் உண்மையான நோக்கம் என்பதை இரண்டு காரியங்கள் உறுதிப்படுத்துகின்றன: 1. இனங்கள் மீதான நியாயத்தீர்ப்பை எடுத்தறிவிக்கும் அதிகாரங்கள் 13-23-ல் தாவீதின் சிங்காசனத்திற்குரிய வாரிசைக் குறித்த அறிவிப்பு அதிகாரம் 22-ல் இடம்பெறுகிறது, அது யூதாவின் வீட்டைப் பற்றிப் பேசுகிறது (ஏசாயா 22:22 மற்றும் வெளி. 3:7). 2. புத்தகத்தின் முதல்பகுதி (அதிகாரம் 1–39) முடியும் இடத்தில் (39:6-7) மக்கள் சிறையிருப்புக்குச் செல்வார்கள் என்பதைப் பற்றியும் அரச வம்சத்து ஆண்பிள்ளைகளைப் பற்றியும் அறிவிக்கப்படுகிறது.*

***இரண்டாவது பகுதி அதி. 40–55:*** இஸ்ரவேல் மக்கள் நாடுகடத்தப்படுவார்கள் என்பதை தீர்க்கதரிசி எதிர்பார்க்கிறார்.[32] அதன் பிறகு எருசலேமில் தீர்க்கதரிசிகளும் இருக்கமாட்டார்கள் தேவாலயமும் இருக்காது. தாவீதின் குடும்பத்தைப் பற்றி அதற்குப் பிறகு பேசப்படுவதில்லை; புதிய உடன்படிக்கையைப் பற்றி மட்டும்தான பேசப்படுகிறது, அதாவது, "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" (ஏசாயா 55:3; 37:35) இந்த அதிகாரத்தில் பாடப்பொருளில் மாற்றம் ஏற்படுகிறது. தீர்க்கதரிசியின் கண்ணோட்டத்தில் இந்த அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் இனிமேல் நடைபெற இருப்பவை ஆகும். இங்கே இஸ்ரவேல் "யாக்கோபின் தாசன்", அல்லது எளிமையாக "தாசன்" என்று அழைக்கப்படுகிறது. அதிகாரங்கள் 1–39 வரப்போகிற அரசனை எருசலேமின் (யூதாவின்) அரசலிருந்து வேறுபடுத்திக் காண்பிக்கிறது, அதிகாரங்கள் 40–55 இஸ்ரவேல் மக்களை சிறையிருப்பில் உள்ள தாசன் என்று கூறுகிறது – பாவத்தின் நிமித்தமாக – "கர்த்தருடைய தாசன்", அதாவது மேசியா என்னும் இன்னொரு தாசன் இவர்களுக்கு மாற்றாக முன்வைக்கப்படுகிறார், இவரோ நாம் அறிந்திருக்கிறபடி பாவமற்றவராக இருக்கிறார் (ஏசாயா 53:9; 2கொரி. 5:21).[33] இந்தப் பகுதியில் இடம் பெற்றிருக்கிற தாசன் என்பது எப்போதும் இஸ்ரவேலைக் குறிக்கிறது என்று கருதுவது தவறானது.

இரண்டாவது பாகத்தில், தெரிந்துகொள்ளப்பட்ட மீட்பனாகிய கோரேஸ் மட்டும் முக்கியப்படுத்திப் பேசப்படவில்லை, யாவேயின் தாசனும் இந்தப் பகுதியில் மீட்பராகவே அடையாளம் காணப்படுகிறார். ஏசாயா 42:1-17 – இந்தப் பகுதியை நாம் விவரமாகக் கவனிப்போம்: யாவேயின் ஆவியானவர் அவர் மேல் இருக்கிறார்; அவர் இனங்களுக்கு நீதியைக் கொண்டுவந்து மக்களுக்க ஒளியாக விளங்குவார். சந்தேகத்திற்கு இடமற்ற முறையில் இந்தப் பகுதி இஸ்ரவேல் மக்களைக் குறிக்காமல் கிறிஸ்துவின் முதலாவது வருகையை மறைமுகமாகக் குறிப்பிடுகிறது (ஏசாயா 42:1-4 –வை மத். 12:18-21 – உடன் ஒப்பிடுக). யாவேயின் தாசன் இஸ்ரவேலை யாவேயினிடத்தில் திரும்பக் கொண்டுவர வேண்டியவராக இருப்பதால் அவர் இஸ்ரவேலாக இருக்க முடியாது (ஏசாயா 49:5-6)![34] இஸ்ரவேல் எப்படியும் புதிய உடன்படிக்கைக்கு நடுவராக வர முடியாது (ஏசாயா 42:6; 49:8). இதற்கு மாறாக அது மனுவுருவான இறைமகனைக் குறிக்கிறது (புதிய ஏற்பாடு: 1தீமோ. 2:5; எபி. 9:15; 12:24; மேலும் பார்க்க: மத். 26:28; லூக். 22:20). அவர் இனங்களுக்கு வெளிச்சத்தைக் கொடுப்பார் (ஏசாயா 42:6). யாவேயின் தாசனாகிய மேசியா பாவமற்றவராக இருந்தார்; பாவமற்றவராக இருக்கிறார் (ஏசாயா 53:9-12; யோவான் 8:46; 2கொரி. 5:21; எபி. 4:15; 7:26; 1பேதுரு 1:19; 2:22-25; 3:18), அவர் நம்முடைய பாவங்களுக்காக நாம் அனுபவிக்க வேண்டிய மரணத்தை அவர் ஏற்றுக்கொண்டார் (ஏசாயா 53:11: "அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்").[35] இதை ஏசாயா 26:21 -

---

[32] அவரே சிறைப்பிடிக்கப்பட்டு சென்றுவிடுவார் என்பது இதற்குப் பொருள் அல்ல. சிலைவழிபாட்டைக் கண்டிக்கும் பகுதிகள் (ஏசாயா 57:3-12; 65:3-7.11; 66:3.17) பாபிலோனிய சிறையிருப்பி- ருந்து திரும்பி வந்த பிறகுள்ள சமூகவியல் சூழமைவில் பேசப்படுகிறது, இந்தக் காலத்திற்குப் பிறகு (பாபிலோனிய சிறையிருப்பு), யூதர்கள் வெளிப்படையாக சிலைவழிபாடு என்னும் பாவத்திற்காகக் கண்டிக்கப்படவில்லை. மேலும் ஏசாயா 57:16-ல் தீர்க்கதரிசி கடவுளின் "குற்றச்சாட்டுகளையும்", "கோபத்தையும்" பற்றிப் பேசுவதில் பொருள் இருக்காது, ஏனெனில் இந்தப் பிரச்சனை மக்கள் மனந்திரும்பிய பிறகுதான் தீர்க்கப்படும். இந்தக் கால கட்டத்தில் மனந்திரும்பும்படிதான் மக்கள் இன்னும் அழைக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் (ஏசாயா 56:1; 58:1, 59:2).

[33] ஏசாயா புத்தகத்தின் ஒன்று, இரண்டு மற்றும் மூன்றாம் பாகங்களுக்கு இடையில் காணப்படும் கருத்தொற்றுமை ஆச்சரியமளிப்பதாக இருக்கிறது. அதிகாரம் 42-ல் 49-55 வரையுள்ள அதிகாரங்களுக்கான பாலமாகச் செயல்படுகிறது. ஏசாயா 42:7 ஏசாயா 35:5-ஐ உறுதிப்படுத்தி ஏசாயா 61:1-ஐ எதிர்நோக்கிக் காண்பிக்கிறது. தாசன் என்பவர் ஏசாயா 35:4-5 மற்றும் 61:1 ஆகிய பகுதிகளில் குறிப்பிட்டப்பட்டிருக்கும் அதே நபர்தான் (ஏசாயா 42:7; 49:9), தம்முடைய மக்களின் பாவங்களில் இருந்து அவர்களை விடுவிக்கும் மேசியா அவரே. ஏசாயா 53:2 -ஐ 11:1-2.10 உடன் ஒப்பிடுக: இந்தப் பகுதியில் மேசியா வேராகவும் இளந்தளிர் கிளையாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறார்.

[34] See likewise Walter C. Kaiser, Jr. *Towards an Old Testament Theology* (Grand Rapids: Zondervan Publishing House, 1978), pp. 215-217.

[35] இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய பாவங்களுக்காக சிறைப்பட்டுப் போகிறவர்களாக இருக்கும்போது, அவர்கள் எப்படி இனங்களுக்கு வெளிச்சமாகவும், அநீதியான மனிதர்களுக்காக மரணமடையும் நீதியுள்ளவர்களாவும் இருக்க முடியும்? (ஏசாயா 5:13; 6:7-12; 27:7-9, முத- ய.). யாவேயின் தாசன் தான் பாவமற்றவராக இருக்கிற காரணத்தினால் தம்முடைய மக்களுக்காக பதிலாளாக மரணமடைய முடியும் (ஏசாயா 53:9-12; ஏசாயா 59:16; 63:5). இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய பாவத்தின் காரணமாக மரணத்திற்குப் பாத்திரவான்களாக இருக்கிறார்கள், ஆனால் இவரோ பாவம் செய்யாதவராக மரணத்திற்கு பாத்திரமற்றவராக இருக்கிறார். இந்த வகையில் கடவுளால் அழைக்கப்பட்ட தீர்க்கதரிசிகூட பாவமுள்ளவராகத்தான் இருக்கிறார் (ஏசாயா 6:5-7)!

*உடனும் (பூமியின் குடிகளுடைய பாவங்களின் காரணமான தண்டனையும் துயரமும்) மற்றும் ஏசாயா 27:9 - உடனும் (யாககோபின் பாவம்), மற்றும் ஏசாயா 64:9 - உடனும் (யாவே தம்முடைய மக்களின் பாவங்களை ஒருபோதும் நினைக்க மாட்டார்) ஒப்பிடுக. யாவேயின் தாசன் தம்முடைய பதிலாள் மரணத்தின் மூலமாக இந்தப் பாவத்தைக் கழுவுகிறார். பாவத் தண்டனையின் பாரம் பூமியை அழுத்தி அழிக்கும் அளவுக்குக் கொடுமையானதாக இருக்கின்றது (ஏசாயா 24:20). பாவம் செய்கிறவர்கள் நிச்சயமாக மரணமடைந்தே தீர வேண்டும் (ஏசாயா 1:2.28; 50:1; 66:24). ஆனால் யாவேயின் தாசன் அவர்களுடைய பாவங்களைக் கழுவுவதற்காக வருகிறார் (ஏசாயா 43:1.25; 44:22). அந்தப் பாவங்களுக்கான தண்டனையை தாமே ஏற்றுக்கொண்டதன் மூலமாக அப்படிச் செய்தார் (ஏசாயா 53:5.8.12).[36] "கர்த்தருடைய தாசனாகிய" மேசியா தம்மைத் துன்புறுத்துகிறவர்களுக்கு தாமாக முன்வந்து முதுகைக் காண்பிக்கிறார் (ஏசாயா 50:4-6). ஆனால் இஸ்ரவேல் மக்களோ தங்கள் பாவத்தின் காரணமாக நாடு கடத்தப்பட்டபோது தங்களைத் துன்புறுத்துகிறவர்களால் முதுகு கிழிய அடிவாங்கினார்கள் (ஏசாயா 51:22-23).*

***<u>மூன்றாவது பாகம்: அதி. 56–66:</u>*** *மனந்திரும்புகிறவர்கள் அனைவரும்[37] சீயோன் மலையில் நடைபெறும் விருந்தில் பங்கு பெறுவார்கள். யாவேயையும் அவருடைய மக்களையும் பல்வேறு இனங்களில் இருந்து யாவேயிடம் திரும்பியவர்களையும் சீயோன் மலையில் நிற்கக் காண்கிறார் தீர்க்கதரிசி. புத்தகத்தின் மூன்றாம் பகுதியில் கர்த்தர் யாருடன் ஒப்பிடப்படுகிறார்? ஏன் மலாக் என்ற எபிரெய பதம் (மலாக் = அரசன், அரசனாக இருத்தல், ஆளுகை செய்தல்) இந்தப் பகுதியில் யாவேயைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படவில்லை (இனங்களின் அரசர்களைக் குறிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது!)? தாவீதின் பெயர் ஏன் இங்கு குறிப்பிடப்படவில்லை? ஏன் இந்தப் பகுதியில் ஈசாயின் இளங்தளிர், வேர், இம்மானுவேல், யாக்கோபின் தாசன் போன்ற பதங்கள் பயன்படுததப்படவில்லை?[38] "தாசன்" என்ற பதம் மத்தியஸ்தரைப் பற்றிப் பேசும்போது பயன்படுத்தப்படுவதில்லை (ஏசாயா 59:15-17; 63:5-7).* ***இங்கு யாவே என்று மட்டும் அவர் அழைக்கப்படுகிறார். ஏன்? ஏனெனில் புத்தகத்தின் முதல் இரண்டு பகுதியில் செய்ததுபோல இனிமேல் யாவே பதிலாளாக செயல்பட வேண்டிய மனிதர்களுடனோ (1–39 வரையுள்ள அதிகாரங்களில் யூதா அல்லது இஸ்ரவேல் நாட்டின் அரசர்களுடன்), பதிலீடு செய்ய வேண்டிய மனிதர்களுடனோ (அதிகாரங்கள் 40–55-ல் உள்ளபடி யாக்கோபின் தாசனுக்காக யாவேயின் தாசன்) கர்த்தரை முரண்பாட்டு நிலையில் ஒப்பிட வேண்டிய தேவை இனியில்லை.*** *இந்தப் பகுதியில் இஸ்ரவேல் அல்லது யூதாவின் அரசனைப் பற்றிய குறிப்பு இல்லை. புத்தகத்தின் மூன்றாம் பகுதியில் கர்த்தரேகூட "அரசன்" என்று அழைக்கப்படுவதில்லை.* ***இறைவனுடைய அரசுதான் இறுதியில் நிலைத்திருக்கப் போகிறது என்ற காரணத்தினால் அரசன் தன்னுடைய ஆட்சியை ஆரம்பித்துவிட்டார் என்று குறிப்பிட வேண்டிய தேவை இனியில்லை.***

---

[36] *இயேசு கிறிஸ்துவே ஏசாயா 53-ம் அதிகாரத்தின் நிறைவேறுதல் என்பதைக் குறிப்பிடும் புதிய ஏற்பாட்டுப் பகுதிகள் அனைத்தையும் பட்டியலிடுவது இந்தப் பாடத்தின் திட்டவரைவுக்கு அப்பாற்றபட்டதாகும்.* லூக். *22:37 மற்றும் மாற்கு 10:45 ஆகிய வசனங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.. ஏசாயா 53-ம் அதிகாரத்தைப் பற்றிய விரிவான விவாதத்திற்கும் கிறிஸ்தியல் சார்ந்த விளக்கத்திற்கும் கீழ்க்காணும் நூல்களைப் பார்க்கவும்:* I recommend Hans Walter Wolff, *Jesaja 53 im Urchristentum,* 4th edition (reprint of the 3rd revised edition of the Evangelische Verlags-Anstalt, Berlin, 1952), Giessen: Brunnen-Verlag, 1984. Concerning Isa 53, see also Oswalt T. Allis, *The Unity of Isaiah: A Study in Prophecy* (Philadelphia: The Presbyterian and Reformed Publishing Company, 1950), pp. 87ff.

[37] *மக்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள்; கடவுள் பக்தியற்ற மக்களுடைய கால்களின் கீழ் எருசலேம் தேவாலயம் மிதியுண்டு போயிற்று (ஏசாயா 63:18), எருசலேம் நகரம் பாழாக்கப்பட்டது (ஏசாயா 64:9-10). விமர்சக அறிஞர்கள் வலியுறுத்துவதைப் போல புத்தகத்தின் இந்தப் பகுதி சிறையிருப்புக்குப் பிந்திய எழுத்தாளரால் (மூன்றாம் ஏசாயா என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்) எழுதப்பட்டிருக்க முடியாது என்பதற்கு இந்த நிகழ்ச்சிகள் மேலதிக ஆதாரமாக விளங்குகின்றன. இரண்டாவது தேவாலயம் (சிறையிருப்பிற்கு பிந்திய தேவாலயம் என்று இது அறியப்படுகிறது) அந்தியோகஸ் எபிபானஸ் என்பவரால் அசுத்தமாக்கப்பட்டது என்று நாம் அறிவோம் (கி. மு. 164), ஆனால் அவர் அதைத் தீயிட்டுக்கொழுத்தவில்லை. ரோமர்கள்தான் நீண்ட காலம் சென்று கி. பி. 70-ல் தேவாலயத்தைத் தீயிட்டுக் கொழுத்தினார்கள். ஏசாயா 5:13; 6:11-12; 40–48 ஆகிய பகுதிகள் எழுதப்பட்ட காலத்தில்தான் இதுவும் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று நாங்கள் முடிவு செய்வதற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும்: மக்களுடைய கடவுள் பக்தியற்ற வாழ்க்கைக்கும் சிலைவழிபாட்டிற்கும் தண்டனையாக யாவே அவர்களுக்குப் பாபிலோனிய சிறையிருப்பைக் கொடுப்பார் என்று தீர்க்கதரிசி முன்னறிவித்தார் (ஏசாயா 65:2-7.11).*

[38] *புத்தகத்தின் இந்தப் பகுதியில் ஒருமையில் வரும் "தாசன்" என்ற சொல்லை நாம் காண்பதில்லை; யாரெல்லம் யாவேக்கு உண்மையுள்ளவர்களாக இருந்தார்களோ அவர்களைக் குறிக்கும்படி பன்மையில் இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 65:8-15 – இந்தப் பகுதியின் எபிரெய மூலத்தில் 7 முறை இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது).*

யாவே ஒரே வேளையில் அரசனாகவும் முதன்மைக் குருவாகவும் (பிரதான ஆசாரியன்) இருக்கிறார். அவருடைய வீடு ஜெப வீடு, அதாவது ஆசாரியர்கள் தங்கள் அருட்பணியைச் செய்யும்படி உருவாக்கப்பட்ட ஆலயம். ஏசாயா 40-48 - ல் (இந்தப் பகுதிய மேசியாவின் அரசைத்தான் குறிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை), தலைமைக் குருவைக் குறித்துப் பேசப்படவில்லை. சிலுவையில் அறையப்பட்டு உயிரோடு எழும்பும் கிறிஸ்து இந்த ஆலயத்தில் தலைமைக் குருவாகவும் அரசனாகவும் இருப்பார். **தீர்க்கதரிசி** – சட்டமும் நீதியும் அவரிடத்தில் இருந்து வரும் (ஏசாயா 2:3-4; மீகா 4:2). **தலைமைக் குரு** – தம்முடைய பலியின் மூலமாக தம்முடைய மக்களுக்கான விலையைச் செலுத்துவார் (ஏசாயா 53), அவர் திரும்ப வரும்போது (ஏசாயா 59:20-21; சகரியா 14:3-5), அவர்களால் குத்தப்பட்டவராக திரும்ப வருவார் (ஏசாயா 53:5; சகரியா 12:10; வெளி. 1:7). அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது மக்கள் அவரை நோக்கிப்பார்த்த தருணத்தில் அவர் தாசனாக காட்சியளித்தார் (யோவான் 19:37). அவர் திரும்ப வரும்போது அவரைத் குத்தினவர்கள் அவரை நோக்கிப் பார்ப்பார்கள் (வெளி. 1:7). அப்போது அவர் இராஜாதி இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் (வெளி. 19:16). வேறு வார்த்தைகளில் சொன்னால், அவர் தம்முடைய மகிமையை விட்டு (ஏசாயா 9:5; யோவான் 17:5), பூமிக்கு வந்து மரணம் வரை கீழ்ப்படிந்தார் (ஏசாயா 53:5-12; பி- . 2:6ff; 2கொரி. 8:9), பிதாவோ அவரை எல்லாவற்றுக்கும் மேலாக உயர்த்தினார் (ஏசாயா 52:13; பி- . 2:9). இறைமகன் மேசியாகவும் ஆண்டவராகவும் இருக்கிறார் (அப். 2:34-36). இறுதியாக அவர் வந்து தம்முடைய நிலையான இடத்தை எடுத்துக்கொள்வார், இம்மானுவேல், கடவுள் நம்மோடு.

**ஏசாயாவின் புத்தகத்தின் மூன்று பகுதிகளிலும் இரண்டு இணையான காரியங்கள் வளர்ச்சியடைவதை நாம் கவனிக்கலாம்: மகிமையும் உயர்வுமான நிலையில் இருந்து தாழ்ந்து போகுதல், அதன் பிறகு மீண்டும் உயிர்ததப்படுதல்!** மக்களுடைய வளர்ச்சி நிலையும் அந்த மக்களின் கடவுளுடைய வளர்ச்சி நிலையும் இணையானதாக இருக்கிறது, ஆனால் அதில் ஒரே ஒரு முக்கிய வித்தியாசம் காணப்படுகிறது:

இஸ்ரவேலும் அதன் அரசனும் (அவர்களோடு சேர்ந்து இறுதியில் அனைத்து மனுக்குலமும்: ஆதி. 3:1-6; 11:1; ரோமர் 5:12; ஏசாயா 24:5-6 20) கடவுளுக்கு எதிராக கலகம் செய்தார்கள். தங்கள் உடன்படிக்கையின் கடவுளாகிய யாவேயைக் கைவிட்டுவிட்டு தங்களைத் தாங்களே உயர்த்திக்கொண்டார்கள். இதன் காரணமாகத்தான் கடவுள் அவர்களைத் தாழ்த்தி எளிமைப்படுத்தி சிறையிருப்புக்கு அனுப்புகிறார். அவர்கள் அங்கே உணர்வடைந்து, மனந்திரும்பி, தங்களைத் தாழ்த்தும்போது யாவே அவர்களை ஏற்றுக்கொண்டு மீண்டும் பழைய நிலைக்கு அவர்களைக் கொண்டுவருகிறார்.

**ஏசாயாவின் புத்தகத்தில் உள்ள மனிதர்களின் வளர்ச்சிநிலை:**

**தங்களைத் தாங்களே உயர்த்துதல் (1–39)** **யாவேயினால் உயர்த்தப்படுதல் (56–66)**

**தாழ்த்தப்படுதல் (40–55)**

ஏசாயா தீர்க்கதரிசியின் செய்தியின் அடிப்படையில் இவ்வாறு மக்கள் தாழ்த்தப்படுவதைத் தொடர்ந்து அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதும் உயர்த்தப்படுவதும் நித்தியத்திலிருந்து இந்த உலகத்திற்குள் ஒரு அரச குழந்தையாக (ஏசாயா 7:14; 9:5; 11:2.10) வந்து தாசனாக வாழும் ஆண்டவருடைய செயலினால் மட்டுமே சாத்தியமாகிறது (ஏசாயா 9:5; மீகா 5:1 மற்றும் பு.ஏ.: யோவான் 1:1; 17:5.24; எபி. 7:1-3). மக்கள் தங்கள் பாவத்தின் காரணமாக நாடு கடத்தப்பட்டு தங்கள் முதுகில் அடி வாங்கினார்கள் (ஏசாயா 51:23). யாவேயின் தாசனோ மக்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதற்காக தன்னுடைய முதுகில் அடிகளை தானாக முன்வந்து ஏற்றுக்கொள்கிறார் (ஏசாயா 50:6). யாவேயின் தாசன் பாவத்தின் அடிமைத்தனத்தில் சிக்கியிருக்கும் மனிதர்களை மீட்க வேண்டும் என்பதற்காக, தான் பாவமில்லாதவராக இருந்தும் மக்களுடைய பாவங்களை ஏற்றுக்கொண்டு அவர்களுக்காக மரணத்தை ஏற்றுக்கொண்டார். அதற்குப் பிறகும் அவர் உயிரோடு இருந்து தம்முடைய சந்ததிகளையும் தம்முடைய ஆட்சியையும் காண்கிறார் (ஏசதயத 52:13-15 –ல் உள்ள "அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாய் இருப்பார்" என்பதை ஏசாயா 57:15-ல் உள்ள "நித்திய வாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய உயரமும் உன்னதமுமானவர் சொல்கிறார்" என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்). புத்தகத்தின்

*வடிவமைப்பு இவ்வாறு காணப்படுகிறது: புத்தகத்தின் முதல் பாகம் (அதிகாரங்கள் 1–39) தம்முடைய வாக்கின் கோலால் (ஏசாயா 11:4) தீயவர்களை நியாயந்தீர்க்க மேசியா வருவார் என்பதைச் சொல்கிறது. இரண்டாவது பாகத்தில் (அதிகாரங்கள் 40–55), யாவேயின் தாசன் எவ்வாறு தம்மைத் தாழ்த்திக் கீழ்ப்படுத்துவார் என்றும் மற்றவர்களுடைய பாவங்களைத் தீர்க்கும் பதிலாளாக (ஏசாயா 53:5) அடிகளைப் பெற்றுக்கொள்ளும்படி தம்முடைய முதுகைக் காண்பிப்பார் என்றும் தீர்க்கதரிசி சித்தரிக்கிறார் (ஏசாயா 53:5).*

***ஏசாயாவின் நூ- ல் இறைமகன் மேசியாவின் வளர்ச்சி நிலை:***

***உயர்த்தப்படுதல் (1–39)*** ***அதைத்தொடர்ந்து மீண்டும் உயர்த்தப்படுதல் (56–66)***

***தம்மைத் தாமே தாழ்த்துதல் (40–55)***

*பிலிப்பியர் இரண்டாம் அதிகாரத்தில் பவுல் கொடுக்கும் அறிவுரையும் இவ்வாறுதான் புரிந்துகொள்ளப்படுகிறது. தம்முடைய பிதாவினால் தாம் மீண்டும் உயர்த்தப்படும்படியாக பிதாவினுடைய பிரசன்னத்தில் தனக்கிருந்த அனைத்து சலுகைகளையும் மகிமைகளையும் இயேசு எப்படி விட்டுக்கொடுத்தாரோ அப்படியே நாமும் நம்மைத் தாழ்த்தும்படியாக அழைக்கப்படுகிறோம். கடவுள் எல்லாவற்றையும்விட பெருமையைத்தான் அதிகம் எதிர்க்கிறார் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது:*

*யாக். 4:6* **அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது..**

*1பேதுரு 5:5-6* **அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**

*ஒப்பீட்டு முரண் வடிவில் ஏசாயாவின் புத்தகம் முழுவதும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதோ சில உதாரணங்கள்: (1) உண்மையற்ற இஸ்ரவேல் மக்களுக்குப் பதிலாக (39:7) பக்தியுள்ள ஒரு அரசன் முன்வைக்கப்படுகிறான் (9:5-6; 11:1*ff*). (2) உண்மையற்ற தாசனாகிய யாக்கோபு (இஸ்ரவேல்) தன்னுடைய பாவத்திற்குரிய தண்டனையை சிறையிருப்பில் பெற்றுக்கொள்ள வேண்டும் (43:14*ff*; 44:1*ff*; 48:1*ff*) ஆனால் யாவேயின் உண்மையான தாசனோ (மேசியா: ஏசாயா 42 மற்றும் 49) தம்முடைய மக்களுக்கான தண்டனையைத் தான் ஏற்றுக்கொள்கிறார் (ஏசாயா 50:4*ff*; 53:*1ff*). (3) பாபிலோன் வீழ்ச்சியடைகிறது (21:9) எருசலேம் மீண்டும் கட்டப்பட்டு உயர்த்தப்படுகிறது (26:1; 27:13). (4) கடவுளுடைய மக்களின் எதிரிகளான முட்களும் நெரிஞ்சில்களும் தீயிட்டுக்கொழுத்தப்படுகின்றன (27:4) கடவுளுடைய மக்கள் கனிகொடுக்கிறவர்களாக மாறுகிறார்கள் (27:6), முத- யன.*

### (4) ***புத்தகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஒரே வகையான சொல்லாடல்களும் கருத்துருவங்களும் இந்தப் புத்தகத்தின் மெய்த் தன்மைக்குச் சான்றழிக்கின்றன***

*இதோ சில உதாரணங்கள்:*

- *வெளிச்சம் என்ற உருவகம் மீண்டும் மீண்டும் வருகிறது.*
- *கற்ப வேதனை மற்றும் பிள்ளை பெறுதல் என்ற உருவகம்: 13:8; 21:3; 23:4-5; 26:17-18; 33:11; 42:14; 49:21; 54:1; 55:10; 59:4; 66:7-9.*[39]
- *"ஓய்வு", "விதை", அதாவது சந்ததி போன்ற கருத்துகள் மீண்டும் மீண்டும் இடம் பெறுகின்றன (கிளை, கருப்பை அல்லது வேர் போன்ற உருவாங்களை ஒப்பிடவும்: 1:4;*

[39] For a list of examples that deal with pregnancy and giving birth, see Marvin A. Sweeney, 'Textual Citations in Isaiah 24-27: Toward an Understanding of the Redactional Function of chapters 24-27 in the Book of Isaiah', *Journal of Biblical Literature*, 107/1 (1988), p. 48.

4:2; 6:13; 11:1; 14:19-20; 17:6; 22:24; 24:6.13; 27:6.10; 41:8; 45:19; 49:6; 53:10; 57:3-4; 60:21; 61:9; 65:9.23.

- சீயான் மலை மற்றும் எருசலேமிற்கு இனங்கள் புனிதப் பயணம் செல்லுதல் மற்றும் இஸ்ரவேல் தங்கள் நாட்டுக்குத் திரும்புதல்: 2:2-5; 11:10; 14:1-2; 18:7; 25:6-8; 27:13; 35:10; 45:14; 49:22; 60:2ff; 66:18ff.
- திராட்சைத் தோட்டம், திராட்சைச் செடி மற்றும் திராட்சைப் பழங்கள் ஆகிய உருவகங்கள்: 1:8; 5:1-7; 16:10; 27:2-6; 36:17; 37:30; 61:5; 65:21. திராட்சைச் செடியின் முரண்: 24:7-12 (அவிசுவாசிகள்) மற்றும் 25:6 (விசுவாசிகள்).
- விடுதலைப் பயணம் மற்றும் வெள்ளம் ஆகிய கருத்துக்கள்: 4:5; 7:18; 10:24-26; 11:11-16; 12:1-6 (யாத். 15); 24:5-6.18.23 (மூப்பர்); 26:20; 27:12-13; 43:16-21; 51:9-10; 52:4; 54:9 (நோவா); 63:11-14 (மோசே). இஸ்ரவேல் மக்கள் எகிப்தி- ருந்து புறப்பட்டு வந்தபோது மோவாபும் ஏதோமும் அவர்களை எதிர்த்ததால் இஸ்ரவேலை எதிர்க்கும் அனைத்து எதிரிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது: 25:10 (மோவாப்); 34:5-6 மற்றும் 63:1 (ஏதோம்).
- "கர்த்தருடைய வாய் இதைச் சொல்- ற்று" என்ற சொற்றொடர் புத்தகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு முறை இடம் பெறுகிறது:1:20; 40:5 மற்றும் 58:14. இவை தவிர மீகா 4:4 –ல் இடம் பெறுகிறது, ஆனால் அந்த இடத்தில் யாவே என்று மட்டும் வராமல் "யாவே சாபோத்" என்று வருகிறது. இது புத்தகத்தின் ஒற்றுமைக்கான ஒரு வலுவான சான்றாகும்.
- "நித்திய உடன்படிக்கை" என்ற சொல்லாடலும் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு முறை இடம்பெறுகிறது: 24:5, 55:3 மற்றும் 61:8. இந்த மூன்று பகுதிகளும் அனைத்து இனங்களுக்கும் அல்லது முழு உலகத்திற்கும் செய்தி சொல்வதாக அமைந்துள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

## C. ஏசாயா நூலின் செய்தி

கடவுள் இஸ்ரவே- ன் பரிசுத்தராயிருக்கிறார்; அவருடைய மக்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும் (ஏசாயா 6; 1பேதுரு 1:15-16). கர்த்தருடைய எச்சரிப்புகளுக்கு மக்கள் செவிகொடுக்காவிட்டால் அவர்கள் நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள். ஆகிலும் மேசியாவின் மக்களுக்கான பாடுகள் மற்றும் பதிலாள் மரணத்தின் மூலமாக ஒரு மீதியான மனந்திரும்பிய கூட்டம் ஒன்று கடவுளின் நியாயத்தீர்ப்புக்குப் பிறகு பாதுகாத்து வைக்கப்படும் (ஏசாயா 53). மேசியாவின் அரசில் மீட்பு இறுதி வடிவத்தை அடையும் (ஏசாயா 2; 11; 35; 54; 60–61; 65:18ff). அந்தக் காலத்தில், ஆண்டவர் மீட்டுக்கொண்டவர்களின் மூலமாக அவருடைய மகிமை வெளிப்படும். இறுதியாக கடவுள் மீட்டுக்கொண்ட மக்கள் புதிய வானமும் புதிய பூமியும் படைக்கப்படுவதைக் கண்டு பெருமகிழ்ச்சி கொள்வார்கள் (ஏசாயா 65:17; 66:22), அப்போது தீயவர்களும் அவிசுவாசிகளும் தண்டிக்கப்படுவார்கள் (ஏசாயா 66:24).

# III. ஏசாயாவின் புத்தகத்திற்கான விளக்கவுரை

## A. தங்களைத் தாங்களே உயர்த்துதல்: நியாயத்தீர்ப்பை (சிறையிருப்பு) குறித்த அறிவிப்பு: அதி. 1–39

*ஏசாயா நூலின் முதல் பாகம் (அதி. 1–39) இஸ்ரவேல் மற்றும் யூதாவுக்கும் அவர்களுடைய எல்லையோரங்களில் இருந்த இனங்களுக்கும் (அதி. 13–21) எதிராக வரவிருக்கும் கடவுளுடைய நியாயத்தீர்ப்பை முதன்மையாக அறிவிக்கும் பகுதியாக உள்ளதோடு இறுதியில் முழு உலகத்தின் மீது வரவிருக்கும் நியாயத்தீர்ப்பையும் அறிவிக்கிறது (அதி. 24). நூலின் இரண்டாம் பாகம் (அதி. 40–55) இந்த நியாயத்தீர்ப்பு எப்படி சிறையிருப்பின் மூலமாக நிறைவேறும் என்பதைப் பற்றிப் பேசுகிறது. மற்றும் மூன்றாம் பாகம் (அதி. 56–66) இஸ்ரவேல் மீண்டும் புதுப்பிக்கப்படுவதையும் மீட்பையும் குறித்து அறிவிக்கிறது. இந்த மூன்று பகுதிகளின் முக்கிய செய்திகள் மற்ற பகுதிகளிலும் எடுத்தாளப்படுகின்றன. இதன் பொருள் வருமாறு:*

- *அதிகாரங்கள் **1–39:** முதன்மையான நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசினாலும் மீட்பைப் பற்றியும் பேசுகிறது. நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசும் பகுதிகளுக்கான உதாரணங்கள்: 1:24-31; 2:6-22. மீட்பைப் பற்றிப் பேசும் பகுதிகளுக்கான உதாரணங்கள்: 2:2-5; 12:1-6.*

- *அதிகாரங்கள் **40–55:** நியாயத்தீர்ப்பும் மீட்பும். நியாயத்தீர்ப்புக்கான உதாரணங்கள்: 47:1-15; 53. மீட்புக்காக உதாரணங்கள்: 43:1*ff*; 51:1*ff*; 52:1*ff.

- *அதிகாரங்கள் **56–66:** மீட்பைப் பற்றிப் பேசும் பகுதிகள்: அதி. 60–62; 65:17*ff. *நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசும் பகுதிகள்: 57:1-13; 59; 63; 65:11-15.*

### 1. இஸ்ரவேலையும் யூதாவையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 1–12

*முதல் ஆறு அதிகாரங்களின் செய்தியை கீழ்வரும் படம் சித்தரிக்கிறது:*




*அதிகாரம் 3-க்கும் (நியாயத்தீர்ப்பு) அதிகாரம் 4-க்கும் (மீட்பு) இதே காரியம் பொருந்தும்.*

*ஏசாயா தன்னுடைய காலத்தில் இருந்த பாவத்தை இடித்துரைக்கிறார். நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசும்போது சமீப எதிர்காலத்தையும் தூரத்திலுள்ள எதிர்காலத்தையும் பற்றிப் பேசுகிறார், அதாவது, நியாயத்தீர்ப்பைத் தொடர்ந்து வரவிருக்கும் மகா உபத்திரவம் மற்றும் மேசியாவின் ஆட்சி (ஆயிர வருட ஆட்சி). உதாரணங்கள்:*

- *சமீபத்தில் வரப்போகும் நியாயத்தீர்ப்பு: 8:1-8 அசீரியாவின் மூலமாக.*

- *தூரத்தில் வரப்போகும் நியாத்தீர்ப்பு (அ) 2:12-22: மகா உபத்திரவம் (வெளி. 6:16) மற்றும் (ஆ) 4:2-6: சுத்திகரிப்பும் மேசியாவின் அரசின் ஆட்சியும் (ரோமர் 11:26).*

## *பாவத்தைக் கண்டித்தலும், நியாயத்தீர்ப்பையும் இஸ்ரவே- ன் மீட்டுருவாக்கத்தையும் அறிவித்தலும்: அதி. 1–6*

### (1) *புத்தகத்திற்கான அறிமுகம்: ஏசாயாவின் காலத்தி- ருந்த மக்களின் சூழ்நிலை: அதி. 1*

*முதல் அதிகாரம் நூல் முழுவதற்குமான முன்னுரையாக இருக்கின்றது. இது தீர்க்கதரிசியின் காலத்தில் மக்கள் செய்துகொண்டிருந்த பாவங்களை விவரிக்கிறது; பாவம் செய்கிற மக்களை கடவுள் நிச்சயமாகத் தண்டிப்பார். ஆனால் அந்த நியாயத்தீர்ப்பின் நோக்கம் மக்களைச் சுத்திகரிப்பதுதான். கடவுள் தம்முடைய மக்களை மீட்டு விடுதலை செய்வதற்கு ஆயத்தப்படுத்தும்படி நியாயத்தீர்ப்புச் செய்கிறார்.*

*(a). இஸ்ரவே- ன் பாவம்*

***வ. 1:*** *எருசலேமையும் யூதாவையும் குறித்த தீர்க்கதரிசனம். அக்காலத்து அரசர்களைக் குறித்த விளக்கத்திற்கு முன்னுரையைப் பார்க்கவும்.*

*(1) பாவத்தைக் குறிக்கும் உருவகங்கள்*

***வ. 2:*** *கலகம் செய்யும் பிள்ளைகள்.*

***வ. 3:*** *மிருகங்களைவிட குறைவான புரிதல் உள்ள மக்கள்.*

***வ. 4:*** *தீமை செய்கிற வகை மக்கள், வழிவிலகிப் போன, கெட்டுப்போன மக்கள்.*

***வ. 5-6:*** *நோய்வாய்ப்பட்ட உடல்: உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரை முக்கிய உறுப்புகள் அனைத்தும் சுகமற்றுப் போயிருக்கிறது; அனைத்தும் நோய்ப்பட்ட நிலை, சுகமாக்குதலோ சரியாக்குதலோ நடைபெறவில்லை!*

***வ. 7-9:*** *நாடு பாழாய்ப் போயிருக்கிறது.*

***வ. 10:*** *அவர்கள் சோதோம் மற்றும் கொமோராவிற்கு ஒப்பிடப்படுகிறார்கள் (சோதோம் கொமோரா மக்கள் தங்கள் பாவத்தின் காரணமாக முற்றிலும் அழிக்கப்பட்டார்கள்: ஆதி. 19; 2பேதுரு 2:6; யூதா 7).*

***வ. 21:*** *விபச்சாரியாக மாறிப்போன ஒரு நகரம்.*

***வ. 22a:*** *வெள்ளி களிம்பாகிப் போனது.*

***வ. 22b:*** *திராட்சை இரசம் கலங்கிய தண்ணீர்போல் ஆனது.*

*(2) பல்வேறு பாவங்கள்*

***வ. 21:*** *படுகொலை.*

***வ. 23a:*** *ஊழல்வாதியான தலைவர்கள், கலகக்காரர்கள், திருடர்கள்.*

***வ. 23b:*** *அநாதைகளையும் விதவைகளையும் கவனிப்பார் யாருமில்லை.*

***வ. 29:*** *சிலைவழிபாடு.*

***வ. 11-15:*** *மாய்மாலம்: அவர்கள் காணிக்கைகளைச் செலுத்தினாலும் கடவுளைவிட்டு தூரமானவர்களாக (கீழ்ப்படியாதவர்களாக) இருக்கிறார்கள், அதாவது போலியான, நடிப்பான ஆராதனை முறை. ஒப்பிடு: ஆமோஸ் 5:21-27; ஓசியா 5:6 மற்றும் மீகா 6:6-8.*

*(3) இதன் விளைவான நியாயத்தீர்ப்பு*

***வ. 7:*** *நாடு அந்நிய இராணுவத்தால் பாழாக்கப்பட்டிருக்கிறது.*

***வ. 8-9:*** *ஆண்டவருடைய கிருபையினால் ஒரு சிறிய கூட்டம் மீதியாக வைக்கப்பட்டிருக்கும்.*

(b). *மாற்றுத் தீர்வுகள்*

- ***வ. 16-19:*** *மனந்திரும்புதல்: அவர்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பினால் கடவுள் அவர்களை மன்னிப்பார். சிறப்பாக 18-ம் வசனத்தைப் பார்க்கவும். இந்த உண்மையை நாம் அறிவிக்க வேண்டும்: எல்லா பாவங்களையும் விட கொடிய பாவமாகிய படுகொலைகூட மன்னிக்கப்படும். ஆனால் மனந்திரும்புதல் இல்லை என்றால் பாவ மன்னிப்புக் கிடையாது: நீதி. 28:13; அப். 2:37-39. இதைக் கேட்கும்போது பயங்கரமாக இருக்கிறது, ஆனால் ஒரு பாவிக்கு (நாம் அனைவருக்கும் பாவிகள் என்ற பெயர் பொருத்தமானதாக இருக்கிறது) அவர் மனந்திரும்ப விருப்பமுள்ளவராக இருந்தால் இந்த செய்தி நன்றி சொல்ல வேண்டியதும் மகிழ்வைக் கொடுக்கிறதுமான செய்தியாக இருக்கிறது (ஏசாயா 59:2; சங். 51:7; ரோமர் 3:10 23; 1யோவான் 1:8).*
- ***வ. 20:*** *பாவத்தில் நிலைத்திருக்கிறவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.*

(c). *மக்களுக்கான கடவுளுடைய மீட்பின் திட்டம்*

***வ. 24-25:*** *அவர் நியாயத்தீர்ப்பின் மூலம் மக்களைச் சுத்திகரிக்கிறார்: ஒரு உலோகத்தில் இருக்கும் களிம்பு நீங்கும்படி அது உருக்கப்படும் உருவகம் முன்வைக்கப்படுகிறது.*

***வ. 26-27:*** *கடவுள் நீதியுள்ள நீதிபதிகளையும் நியாயம் வழங்கும் மன்றங்களையும் உருவாக்குவார். இந்த இரண்டு வசனங்களும் 2:1-5 –ல் பேசப்பட்டிருக்கிற மேசியாவின் அரசைக் குறித்து பேசுகிறது.*

***வ. 28:*** *பாவத்தில் நிலைத்திருப்பவர்கள் தண்டனையில் இருந்து தப்பிக்க முடியாது.*

### (2) ***நியாயத்தீர்ப்பையும் சமாதானத்தின் அரசையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 2—4***

*கீழ்க்கண்ட காரணங்களுக்காகத்தான் ஏசாயா தீர்க்கதரிசி நீண்டகால எதிர்காலத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம்:*

- *இறுதியியலுக்குரிய கலைச்சொற்களை ஏசாயா பயன்படுத்துகிறார்: "கடைசி நாட்களில்" (2:2), "அந்த நாளில்" (2:9.11.17.20; 3:7.18 முத- ய வசனங்கள்.). இந்தப் பகுதியில் 10-முறை இந்தச் சொல்லாடல் பயன்படுத்தப்பட்டுள்ளது. "கர்த்தருடைய (யாவேயுடைய) நாள்" என்ற சொற்றொடர் முழு வேதாகமத்திலும் 23 முறை இடம் பெறுகிறது (*cf *2:12); "அந்த நாளில்" என்ற சொல்லாடலும் "இறுதி நாட்களில்" என்னும் சொற்றொடரும் ப.ஏ.-ல் மொத்தம் 75 முறை இடம்பெறுகிறது. இந்த வேத பகுதிகளை அவற்றின் சூழமைவில் படித்துப் பார்க்கும்போது "கர்த்தருடைய நாள்" என்பது நியாயத்தீர்ப்பையும் மகாஉபத்திரவத்தையும் அதைத் தொடர்ந்து வரும் மேசியாவின் அரசையும் உள்ளடக்குகிற சொல்லாடலாக இருக்கிறது என்று முடிவுக்கு எங்களை நடத்துகிறது.*
- *இந்தப் பகுதியில் வரும் கூற்றுகள் இறுதியியலைப் பற்றிப் பேசும் பகுதிகளோடு ஒத்துப்போகிறதாயிருக்கின்றன: உதா. ஏசாயா 2:19 ; வெளி. 6:16 யோவேல் 3.*
- *ஒரு தீர்க்கதரிசனம் இதுவரை நிறைவேறவில்லை என்றால், அது எதிர்காலத்தில்தான் நிறைவேறும்.*

(a) சமாதானத்தின் அரசினுடைய மகிமை: அதி. 2:1-5

**வ. 2a:** "வரும் நாட்களில்": இது மேசியாவின் அரசைக் குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம்.

**வ. 2b:** அப்போது எருசலேம் பூமியின் மையமாக விளங்கும்.

**வ. 3:** இனங்கள் எருசலேமிடத்திற்கு வரும்: ஏசாயா 66:23; சகரியா 14:16.

**வ. 4a:** ஆண்டவரே (யாவே) இனங்களை நியாயந்தீர்ப்பார் (வெளி. 19:11–21: கிறிஸ்து வரும்போது).

**வ. 4b:** அப்போது உலகளாவிய சமாதானம் காணப்படும் (ஏசாயா 11; மீகா 4:1ச்ச்).

**வ. 5:** அதனால்தான் மேசியாவின் அரசிற்குள் நுழையும்படி ஆண்டவருடைய ஒளியில் நடவுங்கள் என்று அறிவுறுத்தப்படுகிறது.

(b) தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்த பாவம்: அதி. 2:6-8

தீர்க்கதரிசி தன்னுடைய காலத்தில் இருந்த மக்களைப் பார்த்து அவர்கள் பாவத்திற்கு விடை கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்:

**வ. 6:** சமரசங்கள் மற்ற இனங்களோடு ஒத்துப் போய் விடுகிறது (தவறான கூட்டணிகள்: ஏசாயா 30:1ff).

**வ. 7:** பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை மற்றும் இராணுவத்தை நம்பிய வாழ்க்கை (தீவிரவாதம்).

**வ. 8:** சிலைவழிபாடு.

(c) சமாதானத்தின் அரசுக்கு முதல் வரும் நியாயத்தீர்ப்பு ("கர்த்தருடைய நாள்"): அதி. 2:9 - 4:1

- எருசலேம் மற்றும் யூதாவுடைய பாவம் (3:8), சிறப்பாக தலைவர்களுடைய பாவம் (3:12) மற்றும் பெண்களுடைய பாவம் (3:16) ஆகியவை அவர்கள் மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவரும்.
- அந்த நியாயத்தீர்ப்பு அனைத்துப் பெருமையையும் அழித்துப்போடும்: அதி. 2:11–17.
- அந்த நாளில் சிலைகளைப் போல (2:18) அல்லது மக்களைப் போல (2:22) இல்லாமல் யாவே மட்டும் அவர் உயர்ந்திருக்க வேண்டியபடியே அனைத்துக்கும் மேலாக உயர்ந்திருப்பார் (2:11.17).
- கர்த்தரைக் குறித்த பயத்தை அவர் பூமி முழுவதும் கொண்டுவருவார் (2:19.21) அப்போது மக்கள் அவரிடமிருந்து தங்களை மறைத்துக்கொள்ள முயற்சிப்பார்கள் (2:19; வெளி. 6:16).
- போரில் பல ஆண்கள் மரணமடைந்துவிடுவார்கள் என்பதால் அந்தக் காலத்தில் பெண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற ஆண்கள் இருக்கமாட்டார்கள் (4:1).

(d) நியாயத்தீர்ப்பின் விளைவுகள்: இஸ்ரவேல் சுத்திகரிக்கப்படும்: அதி. 4:2-6

- ➔ **"ஒரு துளிர்" அல்லது "கர்த்தர் துளிர்க்க அனுமதிப்பது":** ஏசாயா 11:1, துளிர், இந்த இளந்தளிர் என்பது தெளிவாக மேசியாவைக் குறிக்கிறது. தாவீதின் தந்தையின் பெயர் ஈசாய், தாவீதின் சந்ததியின் பெயர் இயேசு. மேசியா தோன்றும்போதுதான் சமாதானத்தை நிலைநிறுத்தி தம்முடைய மக்களுக்கு மனந்திரும்புதலைக் கொண்டுவருவார்: ரோமர் 11:26; சகரியா 12:10 முத- யன.
- தப்பிப்பிழைத்த இஸ்ரவே- ன் மீதியானவர்கள் சுத்திகரிக்கப்பட்டு மேசியாவின் அரசிற்குள் நுழைவார்கள்: வ. 3–4.

- *ஆண்டவர் இஸ்ரவேலைக் காப்பார்: வ. 5-6. இந்த வசனங்களில் விடுதலைப் பயணத்தின் கருத்துக்கள் இடம்பெறுவதைக் கவனியுங்கள்.*

### (3) ***நியாயத்தீர்ப்புக்கான காரணங்கள்: திராட்சைத் தோட்டத்தைக் குறித்த உவமையும் "ஐயோ" என்பதும் ஆறு முறை திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது: அதி. 5***

*குற்றச்சாட்டின் பாடலைப் புரிந்துகொள்வதற்கு வ. 7 திறவுகோல் ஆகும் (ஒரு உவமையின் வடிவில் இது தரப்பட்டுள்ளது). இந்தப் பாடலைப் பாடுகிறவர் ஏசாயா, அவர் "ஆண்டவருக்குப் பிரியமானவர்"; திராட்சைத் தோட்டம் இஸ்ரவேலைக் குறிக்கிறது. இந்தப் பாடலுக்கு கீழ்க்காணும் பொருளுண்டு:*

- *கடவுள் இஸ்ரவேல் மீது அதிக கரிசனையுள்ளவராயிருக்கிறார்: வ.* 2a.
- *ஆகிலும் இஸ்ரவேல் மோசமான முறையில் தோல்வியுற்றது: வ. 2*b.
- *இஸ்ரவேல்தான் குற்றவாளி - கடவுள் அல்ல: வ. 3-4.*

*நல்ல திராட்சைப் பழங்களுக்குப் பதிலாக கெட்ட திராட்சைப் பழங்களை திராட்சைத் தோட்டம் கொடுத்தது என்பதைத்தான் ஆறு "ஐயோ"-க்ளும் குறிக்கின்றன: **வ. 2.***

***வ. 8–10: <u>முதலாவது ஐயோ:</u>*** *இது பேராசையைக் குறித்துப் பேசுகிறது. அறுவடையைத் தீர்மானிக்கிறவர் கடவுள். லேவி. 26 மற்றும் உபா. 28 ஆகிய அதிகாரங்களில் "ஆசீர்வாதம்" மற்றும் "சாபம்" என்ற விதிமுறை இந்தப் பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

***வ. 11–17: <u>இரண்டாவது ஐயோ:</u>*** *குடிவெறி மற்றும் கொடூர செயல்களினால் ஏற்படும் பாவத்தின் இன்பம் கடவுளுக்குப் பயப்படும் இடத்தைப் பிடித்துக்கொண்டது.*

***வ. 18–19: <u>மூன்றாவது ஐயோ:</u>*** *அவநம்பிக்கையும் இறைநிந்தனையும்: கடவுளின் திருப்பெயரைப் பழித்துரைக்கும் வகையில் மக்கள் தங்கள் பாவங்களைக் கடவுள் தண்டிக்கட்டும் என்று கூறுகிறார்கள் (→ தூண்டுதல்).*

***வ. 20: <u>நான்காவது ஐயோ:</u>*** *ஒழுக்கச் சீரழிவு: தீமையை நன்மை என்றும் நன்மையைத் தீமை என்றும் கூறுதல்!*

***வ. 21: <u>ஐந்தாவது ஐயோ:</u>*** *பெருமையும் அகம்பாவமும்: தங்களைத் தாங்களே ஞானிகள் என்று நினைத்துக்கொள்ளும் மக்கள் (1கொரி. 1:19-31: இந்த உலகத்தின் ஞானம் கடவுளுடைய பார்வையில் பைத்தியம் ஆகும்).*

***வ. 22-23: <u>ஆறாவது ஐயோ:</u>*** *குடிவெறிக்கும் அநீதிக்கும் எதிரானது (முறைகேடுகளுக்கும் எதிரானது). ஆட்சியாளர்கள் சட்டத்தை மீறி தங்களைத் தாங்களே செல்வந்தர்களாக்கிக் கொள்கிறார்கள் (இலஞ்சம் வாங்குவதன் மூலம் இதைச் செய்கிறார்கள்).*

***வ. 24–30:*** *வசனங்கள் 25 மற்றும் 26 ஆகியவை "ஆகவே" என்று ஆரம்பமாகிறது, இதன் பொருள் என்னவென்றால் எல்லா பாவங்களுக்கும் உரிய கடவுளுடைய தண்டனை நிச்சயமாக வரும். கடவுளை அறியாத இன மக்களைக் கொண்டுதான் அவர் வரலாறு தோறும் இஸ்ரவேல் மக்களைத் தண்டித்து வந்திருக்கிறார். வ. 25: "இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல்" என்ற சொற்றொடர் மீண்டும் இடம்பெறுகிறது (9:12.17.21 மற்றும் 10:4).*

### (4) ***ஏசாயாவுக்குக் கிடைத்த தரிசனமும் அழைப்பும்: அதி. 6***

***வ. 1:*** *ஏசாயாவின் தரிசனம்:* ➔ ***உசியா மரணமடைந்த வருடம்:*** *இது கி. மு. 740. ஒருவேளை ஏசாயா முத- ல் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக இந்த தரிசனத்தைக் கண்டிருக்கலாம் அல்லது ஊழியத்தை ஆரம்பித்த பிறகு அதை உறுதிப்படுத்தும்படி இந்த*

தரிசனத்தை அவர் கண்டிருக்கலாம். ஏசாயா இந்த தரிசனத்தைக் காண்பதற்கு முன்பாகவே தீர்க்கதரிசனப் பணிக்கான அழைப்பைப் பெற்றிருந்தார் என்னும் கோணத்தில் 1:1-ஐ விளக்க முடியும். ஏசாயாவின் தரிசனத்தில் யார் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார்? பிதாவாகிய கடவுளா? எந்த ஒரு மனிதனும் பிதாவாகிய கடவுளை முகமுகமாகக் கண்டிராத காரணத்தினால் இது பிதாவாகிய கடவுளாக இருக்க முடியாது என்று நாங்கள் கருதுகிறோம். ஒரு மனிதன் கடவுளைப் பார்த்துவிட்டு உயிரோடு இருக்க முடியாது (யாத். 33:20; 1தீத்து 6:16 முத- யன). யோவான் 12:41 –ல் இயேசு தம்முடைய மனுவுருவாக்கத்திற்கு முந்தைய நிலையில்தான் ஏசாயாவிற்குக் காட்சி கொடுத்ததாக விளக்குகிறார். ஆகவே ஏசாயாவின் இந்தத் தரிசனத்தை கிறிஸ்துவின் திருவுருவக் காட்சி என்றே விளக்க வேண்டும்.[40]

**வ. 2:** பழைய புதிய ஏற்பாடுகளில் சேராபீன்கள் என்ற சொல் இந்த இடத்தில் மட்டும்தான் வருகிறது.

**வ. 3:** கடவுளின் மும்முனைப் பரிசுத்தம்: கடவுளின் பரிசுத்தத்தைப் பற்றி: லேவி. 11:44; 19:2; 1பேதுரு 1:15-16.

**வ. 4-7:** வெளி. 15:8:

- ஏசாயா ஆண்டவரைப் பார்க்கிறார்: அவர் உயரமும் பரிசுத்தமுமாக இருக்கிறார்: வ. 1-4.
- ஏசாயா தன்னைப் பார்க்கிறார்: தான் பாவமும் தகுதியற்றவருமாக இருக்கிறார்: வ. 5-7.
- தம்முடைய மக்களைப் பார்க்கிறார்:அவர்களும் பாவ நிலையில்தான் உள்ளனர்: வ. 8-13.

**வ. 8:** ➔ **"யார் நமது காரியமாய்ப் போவான்?":** இது திரித்துவத்தைக் குறிப்பதாக இருக்கலாம், அதாவது கடவுளில் பன்மைத் தன்மை காணப்படுகிறது (ஆதி. 1:26, 11:7; புஏ: மத். 28:19; யோவான் 10:30; 2கொரி. 13:13 முதலியன.).

**வ. 9-10:** ஒரு பிரச்சனை: இங்கே இருதயக் கடினம் என்பது பிரசங்கத்தைக் கேட்டதன் விளைவு என்று சிலர் கருதுகிறார்கள், வேறு சிலர் இந்தப் பிரசங்கத்தின் நோக்கமே அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்துவதுதான் என்று சொல்கிறார்கள். இந்த இரண்டு கருத்துக்களையும் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களாகக் கருத முடியாது என்று நாங்கள் நம்புகிறோம். தொடர்ந்து கடவுளுடைய வார்த்தையை நிராகரிக்கும் மன நிலையில் உள்ள மனிதனுடைய இருதயம் முற்றிலும் கடினப்பட்டுப் போவதற்குரிய வாய்ப்பிருக்கிறது. உதாரணமாக பார்வோனுக்கு இதுதான் நடந்தது: ஆறுமுறை பார்வோன் தன்னுடைய இருதயத்தைக் கடினப்படுத்தினான், அதன் பிறகு கடவுளே அவனுடைய இருதயத்தைக் கடினப்படுத்திவிட்டார். ஒரு மனிதன் மனப்பூர்வமாக கடவுளுடைய சத்தியத்தை புறக்கணித்தால், கடவுள் அவனைத் தீமையின் கரத்திலேயே ஒப்படைத்துவிடுவதற்கு வாய்ப்பிருக்கிறது: ரோமர் 1:24-31; 2தெச 2:9-12. ஏசாயாவின் இந்தப் பகுதி மத். 13:14-15; யோவான்12:39-41 மற்றும் அப்போஸ்தலர் 28:25-27.

**வ. 11-12:** இந்த நியாயத்தீர்ப்பு இன்னும் எத்தனை காலம் நிலைத்திருக்கும்? நாடு பாழாக்கப்பட்டு இஸ்ரவேல் மக்கள் பாபிலோனியச் சிறையிருப்புக்குக் கொண்டுபோகப்படும் வரைக்கும்.


**வ. 13:** ஆனால் ஒரு மீதியான மக்கள் கூட்டம் நிலைத்திருக்கும்: ➔ **"ஒரு பரிசுத்த சந்ததி":** ஏசாயா தீர்க்கதரிசன நூ- ல் "மீதியானவர்கள்" –ஐக் குறித்து அடிக்கடி வாசிக்கிறோம் (ரோமர் 11:1-5).

---

[40] ஆபிரகாமுக்கு யாவே தோற்றமளித்தபோதும் இதுவே நடைபெற்றது: ஆதி. 18:22; 19:24; 17:22 (இந்தப் பகுதியில் ஆபிரகாம் பார்த்த மனிதனைக் குறிக்கும் கடவுளுடைய பெயர் ஏலோஹிம் என்பது கொடுக்கப்பட்டுள்ளது). அவ்வாறே மேசேக்கு யாத் 3:1-ல் காட்சி கொடுக்கும்போது கர்த்தருடைய தூதன் யாவே ஆக அடையாளம் காணப்படுகின்றான். (ஒப்பிடுக : யாத். 3:2 ஐ யாத். 3:4 உடன்: அவர் ஒரே நேரத்தில் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் கடவுளாக இருக்கிறார்!). ஆண்டவருடைய இராணுவத்தின் தளபதிக்கும் இப்படித்தான் நடந்தது என்பதை யோசுவா 5:13-15 – ல் வாசிக்கிறோம்.

## *மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: இஸ்ரவேலுக்கு வரவிருக்கும் நியாயத்தீர்ப்பும் மேசியாவின் அரசும்: அதி. 7–12*

*கீழ்க்காணும் படம் அதிகாரங்கள் 7-12 வரையுள்ள விபரங்களை விளக்குகின்றது:*




*இந்தப் பகுதி சமீபத்தைய எதிர்காலத்தையும் (ஆகாஸ் அரசனுடைய பார்வையில்) நீண்ட கால எதிர்காலத்தையும் அறிவிக்கிறது. அசீரியர்கள் இஸ்ரவேலை மட்டும் அழிக்க மாட்டார்கள் யூதாவையும் தாக்குவார்கள் (ஏசாயா 8:8; 2இராஜா18:13).*

### (5) *இம்மானுவேலைக் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 7*

***வ. 1–13:*** *கி. மு. 735-ல் வட அரசாகிய இஸ்ரவேலும் சிரியாவும் அசீரியாவின் தாக்குதலிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள கூட்டணி சேர்ந்திருந்தன. தெற்கு அரசாகிய யூதா இந்தக் கூட்டணியில் சேர்ந்துகொள்ள மறுத்தபோது இஸ்ரவேல் தென்னரசாகிய யூதாவைத் தாக்கியது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, யூதாவின் அரசனாகிய ஆகாஸ் அசீரியா தங்களுக்கு எதிரியாக இருந்தபோதிலும் மூன்றாம் திக்லாத்-பிலேசர் என்னும் அசீரிய அரசனிடம் உதவி கேட்டார் (இந்த சூழமைவை பார்க்க: 2இராஜா. 16 மற்றும் 2நாளா. 28). ஏசாயா கடவுளுடைய வார்த்தையை ஆகாஸ் அரசனுக்கு அறிவித்தார்: அசீரியா இஸ்ரவேலைக் கைப்பற்றும் (7:16) யூதாவின் மீதும் தாக்குதல் நடத்தும் (8:8). வசனம் 7:8 –ல் உள்ள தீர்க்கதரிசனம் அசீரியாவின் மன்னாகிய ஏசார்ஹடான் (கி. மு. 681-668) என்ற அரசனால் நிறைவேறியது. இஸ்ரவேல் நாட்டில் தப்பிப் பிழைத்தவர்கள் (அதாவது வட அரசின் பத்து கோத்திரத்தில் மீதியானவர்கள்) பல்வேறு பகுதிகளுக்குச் சிதறுண்டு போனார்கள். ஆகாஸ் அரசன் (ஒரு அவிசுவாசி!) கடவுளிடம் ஒரு அடையாளத்தைக் கேட்க மறுத்தபோது, கடவுள் தாவீதின் வீட்டாருக்கு ஒரு அடையாளத்தைக் கொடுத்தார்: ஏசாயா 7:14:* ***இம்மானுவேல்!***

***வ. 14–15: ➔ “இம்மானுவேல்” = “கடவுள் நம்மோடு”.*** *ஏசாயா 7:14-ஐ மேற்கோள் காட்டி இந்த அடையாளம் இயேசுவைக் குறிக்கிறது என்று மத். 1:23 உறுதிப்படுத்துகிறது. மற்ற பகுதிகளில் “அல்மா” (= பெண்) என்ற சொல் ஒரு கன்னியையைக் குறிக்கும்படி பயன்படுத்துகிறது: ஆதி. 24:43; யாத். 2:8; சங். 68:26; நீதி. 30:19; உன். 1:3 மற்றும் அனைத்துக்கும் மேலாக மத். 1:23-ல்“பார்தினோஸ்” என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த அடையாளம் ஏசாயாவின் காலத்தில் நிறைவேறவில்லை என்பதைக் குறிக்கும் காரியங்கள் பின்வருமாறு:*

- *ஏசாயாவுக்குப் பிறக்கப் போகிற மகன் மஹேர்-ஷலால்-ஹஸ்-பாஸ் என்று அழைக்கப்படுவான் (இம்மானுவேல் என்று அல்ல, ஏசாயா 8:1).*
- *சில விமர்சன அறிஞரகள் இந்த அடையாளம் எசேக்கிய அரசனில் நிறைவேறியது என்று விளக்குகிறார்கள், ஆனால் அவர் ஏற்கனவே காலம் மாறிப் பிறந்தார்: 2இராஜா. 16:2 மற்றும் 18:2, இது அவருடைய பிறப்பைக் குறிக்கவில்லை என்று தெளிவாக்கப்படுகிறது.*
- *அறிவிக்கப்படும் கன்னிப் பிறப்பு என்பது ஒரு அற்புதம் (ஒரு அடையாளம்).*

*இந்தத் தீர்க்கதரிசனம் ஏசாயாவின் காலத்தில் நிறைவேறியது என்பதை நம்பாமல் இதை விளக்க முடியுமா? ஆம் என்று நாங்கள் நம்புகிறோம் அதற்கான காரணங்கள் இதோ:*

- *மனுவுருவான இறைமகனான இயேசு கிறிஸ்துவின் பிறப்பைத் தவிர வேறு யாருடைய பிறப்பையும் கன்னிப் பிறப்பு என்று சொல்ல முடியாது.*

- தொடர்புகள் மேசியாவைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது (ஏசாயா 8:8.10 மற்றும் 9:5-6).
- ஏசாயா 9:5-6 அல்லது 61:1-2 –ஆகிய பகுதிகளில் இருந்து வரும் உதாரணம் (லூக். 4:18-19; இயேசு ஏசாயா 61:1-2 –ஐ மேற்கோள் காட்டும்போது மீட்பின் நாளை மட்டும்தான் குறிப்பிடுகிறாரே தவிர நியாயத்தீர்ப்பின் நாளைக் குறிப்பிடவில்லை) ஏசாயா எப்போதும் காலங்களுக்கு இடையில் வித்தியாசப்படுத்திக் காண்பிப்பதில்லை என்றும் பிற்காலங்களில் நிகழும் காரியங்களையும் (இன்னும் நிகழாமல் காத்திருக்கும் காரியங்களையும்) முன்னறிவித்தார் என்றும் காண்பிக்கின்றன.
- 16-ம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிள்ளை "ஷியார்-யெசூப்" ஆகும்.

இந்த சூழமைவில் குரோக்கர் சொல்கிறார்:

> தீர்க்கதரிசன வார்த்தையின் இரகசியங்களில் ஒன்று என்வென்றால் அது வழக்கமாக ஒரு காலத்தையும் சூழ்நிலையையும் குறிப்பதோடு, அந்த சூழ்நிலையில் அது முதலில் நிறைவேறும். ஆயினும் அதை இறுதியான நிறைவேறுதலாகக் கொள்ள முடியாது. தீர்க்கதரிசனப்படி பார்க்கும் போது, நிறைவேற வேண்டிய தீர்க்கதரிசனம் என்பது அதன் ஆரம்ப நிறைவேறுதலையும் தாண்டி, ஒரு இறுதியான, முழுமையான நிறைவேறுதலைக் குறிக்கிறது.[41]

ஆயினும் 15-17 வரையுள்ள வசனங்கள் இந்தத் தீர்க்கதரிசனம் உடனடியாக நிறைவேற வேண்டிய தேவையைக் காண்பிக்கின்றன. அங்கருடைய கூற்றுப்படி:

> **மேசியாவைக் குறிப்பிடாத அடையாளம் சேர்க்கையாக, 16.** அது ஏசாயாவின் மகனாகிய ஷியார்-யசூப் –ன் வடிவில் ஆகாஸ் அரசனுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளம் ஆகும். ஷியார்-யசூப் என்ற இந்தப் பிள்ளை (7, 3) மூன்று அல்லது நான்கு வயதாகும்போது, "நீ அருவருக்கிற தேசம் அந்த இரண்டு இராஜாக்களால் விட்டுவிடப்படும்". இந்தத் தீர்க்கதரிசனம் கி. மு. 732-ல் திக்லாத்-பிலேசர் தமஸ்குவைக் கைப்பற்றி ரேத்சினைக் கொன்ற போது நிறைவேறியது (2இராஜா. 16:9). இந்த ஆச்சரியமான முன்னுரைப்பின் பின் இரண்டு ஆண்டுகள் சென்று பெக்கா படுகொலை செய்யப்பட்டார்.[42]

**வ. 17-25:** வ. 17 நியாயத்தீர்ப்பின் அளவைக் காண்பிக்கிறது. கடவுளுடைய சித்தத்திற்கு உட்பட்டு, தம்முடைய நியாயத்தீர்ப்பை நிறைவேற்றும் ஒரு கருவியாக கடவுள் அசீரிய அரசனைப் பயன்படுத்துகிறார். ஆகாஸ் அரசன் கடவுளைவிட அசீரிய மன்னனைத்தான் அதிகமாக நம்பினான். எத்தனை முரண்நகையானது! வேதாகம அநோட்டி என்ற நூல் 14-25 வரையுள்ள வசனங்களை இவ்வாறு சுருக்கிக்கூறுகிறது.

> கடவுள் கொடுத்திருக்கும் அடையாளம் உங்களுக்குத் தேவையில்லை: ஆகவே, கடவுளே ஒரு மீட்பின் அடையாளத்தை உங்களுக்குக் கொடுப்பார் (வ. 14), ஆனால் அது மக்களின் அழிவைத் தடுக்காத ஒரு மீட்பாக இருக்கும்: தற்போதைய எதிரிகள் நிச்சயமாக தோற்கடிக்கப்படுவார்கள் (வ. 15-16), ஆனால் அவர்களுடைய கையில் இருந்து உங்களை மீட்கும் அசீரியர்களே உங்களுடைய அவநம்பிக்கையின் காரணமாக உங்கள் மீது கடவுளின் நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருவார்கள் (வ. 17-25).[43]

வேதாகம அநோட்டியைப் பொறுத்தவரை, 8:8.10 மற்றும் 9:1-6 (அதிகாரம் 8-உடன் சேர்ந்து இந்தப் பகுதி முழுமை பெறுகிறது) 7:14 மேசியாவைக் குறிக்கும் தீர்க்கதரிசனம்தான் என்பதை தெளிவாக ஆதரித்து வாதிடுகிறது![44]

[41] Jakob Kröker, *Jesaja I*, *Jesaja 1–39: Immanuel und die Völker* in Das Lebendige Wort, Volume 5, 4th edition, revised and supplemented by Hans Brandenburg (Giessen: Brunnen Publishing House, 1982), p. 90.

[42] Merrill F. Unger, *"Die Propheten"*, Volume 3, *in* Bibel Aktuell, translated from American English (Wetzlar: Hermann Schulte, 1970), p. 25.

[43] Frédéric Godet, 'Ésaïe, Jérémie, Lamentations', AT 7 in *Bible Annotée*. Reprint (St-Légier: P.E.R.L.E., 1985), p. 73. We have translated the French text into English.

[44] For an in-depth study on the interpretation of this prophetic passage, we recommend the Bible Annotée, op. cit., pp. 73-76.

- *அதி. 7:14 –ல் : அவர் பிறப்பார்.*
- *அதி. 9:5-6 –ல்: அவர் பிறந்திருக்கிறார்.*
- *அதி. 11:1ச்ச் –ல்: அவர் ஆளுகிறார்.*

*மேலே கொடுக்கப்பட்ட இந்த அறிமுகம் ஏசாயாவின் புத்தகத்தினுடைய நோக்கத்தை விளக்குகிறது. இஸ்ரவேல் அரசர்களுடைய உண்மையற்ற தன்மை தெய்வீக அரசனாகிய இம்மானுவேலினால் பதிலீடு செய்யப்படும். ஆசிரியரின் சாமர்த்தியமான நோக்கத்தை அறியாதவரை இந்த சிறிய மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனம் புதிராகவே தோன்றும். அதிகரம் 7–ல் யூதாவின் அரசனாகிய ஆகாஸுக்கும் வடஅரசின் அரசனுக்கும் அவனுடைய கூட்டாளியாகிய சீரிய அரசன் ரேத்சினுக்கும் இடையில் நிலவிய முரண்பாடுகளைப் பற்றிப் பேசுகிறது. இந்த முரண்பாட்டில் ஆகாஸ் முழுவதும் கடவுளை நம்ப வேண்டும் என்று தீர்க்கதரிசியின் மூலமாக ஆகாஸை கடவுள் உற்சாகப்படுத்துகிறார். ஆகிலும், ஆகாஸ் கடவுளை நம்பவில்லை. இந்தக் காரியத்தைக் குறித்த உரையாட- ன் (கதையின்) நடுவில், ஏசாயா கன்னியிடத்தில் இம்மானுவேல் பிறக்கப் போகிறார் என்ற அறிவிப்பை உள்ளே நுழைக்கிறார். எட்டாவது அதிகாரமும் இப்படித்தான் இருக்கிறது: ஆசீரியர்களால் வரப்போகும் தாக்குதலை அறிவித்துக்கொண்டிருக்கும்போதே, 14–ம் வசனத்தில் மேசியாவைக் குறித்த அறிவிப்பை உள்ளே நுழைக்கிறார் (வ. 10). அசீரியர்களினால் வரவிருக்கிற நியாயத்தீர்ப்பு (அதி. 8-10) ஏசாயா 9:1-5 மற்றும் 11:1 ஆகிய பகுதிகளில் அறிவிக்கப்படும் மேசியாவின் வருகையைக் குறித்த அறிவித்தலோடு முரண்படுத்திக் காண்பிக்கப்படுகிறது. எருசேலம் மற்றும் சமாரியாவின் நம்பிக்கையற்ற அரசர்கள் சாதிக்க முடியாத காரியத்தை மேசியா இறுதியில் செய்து முடிப்பார்: அவரே சமாதானத்தைக் கொண்டுவருவார்!*

### (6) ***மகேர்-ஷலால்-ஹஸ்-பாஸ் –ன் அடையாளம்: அதி. 8***

*ஏசாயா தன்னுடைய இரண்டாவது பிள்ளைக்கு மகேர்-ஷலால்-ஹஸ்-பாஸ் என்று பெயரிட்டு அறிவித்த நியாயத்தீர்ப்பைக் குறித்த தீர்க்கதரிசனம் சிரியாவின் மேலும் இஸ்ரவேலின் மேலும் எப்படி நிறைவேறியது என்பதற்கு உரியாவும் சகரியாவும் சாட்சிகள் (வ2). இந்தப் பெயரின் பொருள் "கொள்ளைக்கு விரைந்தோடு, சூறையாடுவதை சீக்கிரமாய் கைப்பற்று" என்று பொருள். வட அரசு சீரியாவையும் தென்னரசு அசீரியாவையும் நம்பிய காரணத்தினால் கடவுள் இரண்டு அரசுகளையும் அழிக்க விரும்பினார். அரசியல் கூட்டணியோ அல்லது குறிகேட்டலோ அல்ல கடவுளை நம்புவது மட்டும்தான் நம்மை மீட்க முடியும். தம்மை நம்பாதவர்களுக்கு கர்த்தர் "தடுக்க- ன் கல்லும் இடறுத- ன் கன்மலையுமாயிருப்பார்" (வ. 14). மேசியாவைக் குறித்த மறைமுகக் குறிப்புகளுக்கு இந்த அதிகாரத்தின் 10 மற்றும் 14 ஆகிய வசனங்களைப் பாருங்கள் (இம்மானுவேல் தம்மை நம்பாமல் வேறு சக்திகளை நம்புபவர்களுக்கு (இந்த இடத்தில் அசீரியரை) தடுக்கலின் கல்லாக விளங்குவார்).*

### (7) ***மேசியாவின் பிறப்பையும் ஆளுகையையும் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 9:1-7***

*சில வேதாக மொழிபெயர்ப்புகளில் இந்த வசனங்கள் 8:23 லிருந்து 9:6 –வரை இடம் பெற்றிருக்கிறது (உதாரணம். லூத்தர் வேதாகமம்). அசீரியர்கள் கைப்பற்றிய நிலப்பகுதி (அதாவது வடக்கு இஸ்ரவேல்) ஒரு காலத்தில் மேசியா வாழும் இடமாக இருக்கும். செபுலோன் மற்றும் நப்தலி: இயேசு ஒரு மனிதனாக நடந்து திரிந்த பகுதி இதுதான்! மத். 4:15-16 –ல் ஏசாயா 9:1 மேற்கோள் காண்பிக்கப்படுகிறது. இந்தப் பகுதி கிறிஸ்துவின் முதல் வருகையை அறிவிக்கும் தீர்க்கதரிசனமாகும். இறை மகன்தான் மேசியா, ஏசாயாவின் அறிவிப்பின்படி அவர் இம்மானுவேல்!*

***வ. 5: "மீதியான்":*** *நியா. 7.*

***வ. 6: ➔ "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்":*** *இது மனுவுருவில் வந்த இயேசுவின் மனிதத் தன்மையைக் குறிக்கிறது.* ***"நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்":*** *இது அவருடைய தெய்வீகத் தன்மையைக் குறிப்பதாகக் காணப்படுகிறது. பட்டப் பெயர்கள் ➔*

***"ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு"*** *இவை அவருடைய தன்மையையும் குணாதிசயங்களையும் வெளிப்படுத்துகிறது. கடவுளை நம்பாதவன் இருளில் வாழ்கிறான் (8:21-22) தெய்வீகக் குழந்தையாகிய மேசியாவோ வெளிச்சத்தைக் கொண்டு வருகிறார் (9:1-6).*

(8) ***இஸ்ரவேலுக்கு (சமாரியாவுக்கு) எதிரான தீர்க்கதரிசனங்கள்: அதி. 9:8 முதல் 10:4***

*பல்லவி* ➔ ***"இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல்…"*** *(இந்த சொற்றொடர் 4 முறை கூறப்பட்டுள்ளது: 9:12.17.21 மற்றும் 10:4; முதல் முறை 5:25 –ல் இடம்பெறுகிறது) இது கீழ்க்காணும் காரணங்களினால் வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது:*

- *பெருமையும் அகம்பாவமும்: 9:10-11*
- *மக்களை வழிவலகச் செய்தல்: 9:16*
- *எல்லாருடைய தீமைகள்: 9:17*
- *அநியாயமும் முறைகேடுகளும்: 10:1-2.*

(9) ***அசீரியாவிற்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்: கடவுள் எதிரிகளை பயன்படுத்தவும் செய்கிறார், நியாயந்தீர்க்கவும் செய்கிறார்: அதி. 10:5-34***

*"என்னுடைய கோபத்தின் கோல்" (வ. 5-6) என்ற நிலையில் இஸ்ரவேலைத் தண்டிக்க கடவுள் அசீரியாவைப் பயன்படுத்துகிறார், ஆனால் அசீரியாவும் பெருமையோடு செயல்பட்ட காரணத்தினால் (வ. 8-14) கடவுள் அசீரியாவையும் நியாயந்தீர்க்கிறார். கடவுள் பாபிலோனை ஒரு சவுக்கைப் போல பயன்படுத்தி (வ. 26) அசீரியாவைத் தோற்கடிப்பார்; அவ்வாறே கி. மு. 610-ல் பாபிலோன் நினிவேயைக் கைப்பற்றியது.*

***வ. 20-22:*** *மனமாற்றம்* ➔ *"அந்த நாளில்" (வ. 20.27) என்ற இறுதி இயலுக்குரிய சொற்றொடரின் மூலமாகவும் இந்தப் பகுதியின் (அதி. 11-12) முழுமையான சூழமைவைப் பார்ப்பதன் மூலமாகவும் "இஸ்ரவேலில் மீதியானவர்கள்" இன்னும் நிறைவேற வேண்டியிருக்கிறது. இதே பகுதி ரோமர் 9:27-28 –ல் பயன்படுத்தப்படுவதும் இதையே காண்பிக்கிறது ஆனாலும் நாம் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஒன்றுக் மேற்பட்ட நிறைவேறுதல்களின் சாத்தியத்தையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.*

(10) ***மேசியாவின் அரசைக் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 11–12***

*இந்த இரண்டு அதிகாரங்களும் முழுவதும் மேசியாவைக் குறித்துப் பேசுவதால் எதிர்காலத்தில் வரப்போகும் மேசியாவின் அரசைக் குறித்த பல்வேறு உண்மைகளை நமக்கு அறிவிக்கின்றன. தாவீதின் தந்தையாகிய ஈசாயின் குடும்பத்தில் இருந்து மேசியா வருவார் (வ. 1; ரோமர் 15:12).*

*முதலாவது 11:2-ல் உள்ள கடவுளுடைய ஆவியானவரின் ஏழு குணாதிசயங்கள் குறித்து விளக்க விரும்புகிறேன்: இந்தப் பகுதி வெளிப்படுத்தல் நூலில் உள்ள கடவுளின் ஏழு ஆவிகளை விளக்க முடியும் (1:4; 3:1; 4:5; 5:6): ஏழு எனும் எண் பரிபூரணத்தைக் குறிக்கிறது. இது வெளி. 5:6-ல் இறை மகன் 7 கண்களும் (→ எல்லாம் அறிந்தவர்) 7 கொம்புகளும் (→ எல்லாம் வல்லவர்) என்றும், வெளி. 5:12-ல் 7 குணாதிசயங்கள் விவரிக்கப்படுவதைப் போலவே இங்கும் சொல்லப்பட்டிருக்கிறது. வெளி. 7:11-12 –ல் பிதாவாகிய கடவுளும் இந்த ஏழு குணாதிசயங்களையும் பெற்றிருக்கிறார்.*

***மேசியா பரிசுத்த ஆவியானவரால் நிறைந்திருப்பார் (வ. 1-2) அவருடைய அரசிற்கு கீழ்க்காணும் குணாதிசயங்கள் இருக்கும்:***

- *நீதியும் உண்மையும்: வ. 3-5.*

- மிருகங்களில் உலகத்தில் சமாதானம் இருக்கும்: வ. 6-8.
- எருசலேமில் தீமை இருக்காது: வ. 9.
- கடவுளை அறியா வேற்று இன மக்களும் மேசியாவினிடத்தில் வருவார்கள்: வ. 10 (ஏசாயா 66:20; சகரியா14:16ச்ச்).
- பல இனங்கள் நடுவில் சிதறிப்போன யூதர்கள் திரும்ப இஸ்ரவேலுக்கு வருவார்கள்: வ. 11-12 (ஏசாயா 27:12-13; எசே. 39:27-28 இதுபோல் இன்னும் பல பகுதிகள்).
- வட அரசும் தென்னரசும் (எப்ராயீம் மற்றும் யூதா) ஒன்றாக இணைப்படும்: வ. 13 (எசே. 37:15-22).
- மற்ற இனங்கள் இஸ்ரவேலுக்கு அடிபணிந்து போகும்: வ. 14.
- நிலப்பரப்புகள் தொடர்பான மாற்றம் இஸ்ரவே- ன் நாடு திரும்புதலுக்கு அனுசரணையாக இருக்கும்: வ. 15-16 (வெளி. 16:12; சகரியா 14:4-10).
- அந்த நாளில் இஸ்ரவேல் துதிப் பாடலைப் பாடும்: அதி. 12 (ஏசாயா 26:1ச்ச்).

ஏசாயா 8:18 ஏசாயாவினுடைய மகன்களின் பெயர்களின் அடிப்படையில் அதி. 7–12 ஐ விளக்குவதற்கு அனுமதிக்கிறது:

- மகேர்-ஷலால்-ஹஸ்-பாஸ்: ➔ இஸ்ரவேல், சீரிய, அசீரியா ஆகியவற்றின் நியாயத்தீர்ப்பு உடனே வரும்.
- ஷியார்-யசூப்: ➔ மீதியானவர்கள் திரும்புவார்கள்.
- ஏசாயா (யாசயாகு) ➔ யாவேயே மீட்பு (யாவே மீட்பார்).

அதிகாரங்கள் 7–10 நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுகின்றன. ஏசாயா 10:20-21 தப்பிச் சென்றவர்கள் திரும்ப வருவதைக் குறித்துச் சொல்கிறது. 7:14; 9:5-6, மற்றும் அதி. 11–12 மீட்பைக் குறித்துப் பேசுகின்றன.

அதிகாரங்கள் 1–12 – ல் இஸ்ரவே- ன் நியாயத்தீர்ப்பையும் மீட்பையும் குறித்த அறிவித்த பிறகு, கடவுள் மற்ற இனங்களையும் நியாயந்தீர்க்கப் போகிறார் என்பதைப் பற்றி பேச ஆரம்பிக்கிறார் (ஆதி. 13–23). அதிகாரங்கள் 24–27 –ஐ பொதுவாக வியாக்யானிகள் “ஏசாயாவின் வெளிப்பாடு” என்று அழைக்கிறார்கள்; இறுதியில் முழு உலகமும் நியாயந்தீர்க்கப்படும் என்றும், நம்பிக்கையுள்ள மக்களாகிய ஒரு மீதியான அவருடைய மக்கள் மட்டும் மீட்கப்படுவார்கள் என்றும் தீர்க்கதரிசி அறிவிக்கிறார்.

## 2. இனங்களைப் பற்றி நியாயத்தீர்ப்பைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 13–23

இந்த அதிகாரங்களில் பேசப்பட்டிருக்கும் பாடப்பொருள்களின் சுருக்கும்:

- இனங்களைப் பற்றியும் இஸ்ரவேல் மக்களுக்கு எதிரான அவர்களுடைய பகைமையைக் குறித்தும் பேசப்படுகிறது.
- கடவுள் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குறுதி நிறைவேறும்: ஆதி. 12:3.
- வாக்குறுதிகள் நிறைவேறியிருக்கிறது அல்லது நான்கு வெவ்வேறு காலகட்டத்தில் அவை நிறைவேறும்:

1. கி. மு. 722-ல் அசீரியர்களால் ஏற்பட்ட சிறைப்பிடிப்பு: அதி. 15; 18; 20; 22.
2. கி. மு. 605-ல் பாபிலோனியர்களால் ஏற்பட்ட சிறைப்பிடிப்பு: அதி. 23.
3. பாபிலோனின் வீழ்ச்சி: கி. மு. 539-ல் மேதியர்கள் பாபிலோனைத் தோற்கடிப்பது: அதி. 13–14 (சிறப்பாக பார்க்க வேண்டியது. 13:17).
4. வரப்போகிற “மகா உபத்திரவம்”: அதி. 19; இப்படிப்பட்ட இன்னும் பல தனிப்பட்ட கூற்றுக்களை ஒப்பிடவும்: உதாரணமாக 13:4-13; 22:5 முத- யன.

## *பாபிலோன், அசீரியா மற்றும் பெலிஸ்தியாவுக்கு எதிராக: அதி. 13–14*

### (1) *பாபிலோனுக்கு எதிராக: அதி. 13–14:23*

*வசனம் 13:17 –ல் உள்ள தீர்க்கதரிசனம் பாபிலோன் உடனடியாக வீழ்ச்சியுறும் என்றும் மேதிய-பெர்சிய அரசனாகிய கோரேஸ் கி. மு. 539-ல் அதை வெற்றிகொள்வான் என்றும் அறிவிக்கிறது. ஆயினும் கீழ்க்காணும் சொற்றொடர் இறுதியியலோடு தொடர்புடையதாக இருக்கிறது: "கர்த்தருடைய நாள்" (வ. 6), "சர்வ வல்லவரிடத்தில் இருந்து வரும் மகா சங்காரம்" (வ. 6) மற்றும்"அவருடைய கடுங்கோபத்தின் நாள்" (வ. 13). இந்த விளக்கத்திற்கு கீழ்க்காணும் ஆதாரங்களை முன்வைக்கலாம்: (1) நியாயத்தீர்ப்பு முழு அண்டத்தையும் பாதித்தது (13:10-13), மற்றும் (2) யோவானுடைய வெளிப்பாட்டு நூலில் இதற்கு இணையான பகுதிகள் இடம் பெற்றிருக்கின்றன (ஏசாயா 13:9-13 : வெளி. 6–16).*

*விபச்சாரியாகிய பாபிலோன் என்பது மீண்டும் புதுப்பிக்கப்பட்ட பாபிலோனிய அரசா (தற்போதைய ஈராக்கும் அதைச் சுற்றியிருக்கிற நாடுகளும்) அல்லது புராதன பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் தன்மைகளைக் கொண்ட அரசாக இருக்குமா என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. ஒரு வேளை இறுதிக் காலத்தில் தோன்றும் பாபிலோன் என்பது மீண்டும் புத்துயிர் பெற்று எழும் ரோமப் பேரரசாக இருக்கலாம். இந்த தருணத்தில் தானியேல் புத்தகத்திற்கு நாங்கள் வெளியிட்ட விளக்கவுரையில் 2-ம் மற்றும் 7-ம் அதிகாரத்திற்கான விளக்கவுரையைப் பார்க்கவும். அப்போஸ்தலனாகிய பேதுரு தன்னுடைய முதல் கடிதத்தில் பாபிலோனை ரோம் என்று குறிப்பிடுவதைக் கவனிக்கவும் (5:13). இதை அவர் உபத்திரவத்திலிருந்து தப்பிப்பதற்காக மறைமுக மொழியாகப் பயன்படுத்தியிருக்கலாம். பாபிலோன் ஒரு காலத்தில் இருந்ததைப் போல திரும்பவும் புதுப்பிக்கப்படும் என்று நாங்கள் நம்பவில்லை (ஏசாயா 13:19-22); இந்த பாபிலோன் என்ற பதம் புராதன பாபிலோனிய சாம்ராஜ்யத்தின் தன்மைகள் கொண்ட ஒரு புதிய வேறுபட்ட அரசாக இருக்கும் என்றுதான் நம்புகிறோம் (கொடூரத்தன்மை: மேசியாவின் அரசைப் பற்றிய விளக்கத்திற்கு முன்பாக தானியேல் 7-ம் அதிகாரத்தில் வரும் மிருகத்தைக் (அரசை) குறித்த விளக்கத்தைப் பார்க்கவும்).*

*அதிகாரம் 14 –ன் சில சிறப்பம்சங்கள்:*

(a) *இஸ்ரவேல் தங்கள் நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு மற்ற இனங்கள் வழிவகுக்கும்: 14:1–3*

*இந்தப் பகுதி மிகவும் குறிப்பாகப் பேசுகிறது. ஏசாயாவில் இருக்கும் பல பகுதிகளும் (உதா. 11:11ச்ச்; 27:12-13; 35:9) மற்ற ப.ஏ. தீர்க்கதரிசனப் பகுதிகளும் (உதா.: எசே. 37; ஓசியா 14:4-7; ஆமோஸ் 9:11-15; சகரியா 10:6-12) இஸ்ரவேல் திரும்பக் கட்டப்படும் என்பதை அறிவிக்கின்றன, அதாவது இறுதிக் காலத்தில் யூதர்கள் தங்களுடைய நாட்டிற்குத் திரும்புவார்கள். இஸ்ரவேல் தங்கள் வாக்குத்தத்த நாட்டிற்குத் திரும்புவதற்கு மற்ற கடவுளை அறியாத இன மக்கள் உதவி செய்வார்கள் என்பதை இந்தப் பகுதி குறிப்பாக அறிவிக்கிறது (ஏசாயா 49:22; 60:9; 66:18-23).*

(b) *ஏசாயா. 14:4-17 (எசே. 28:12-19) –ல் உள்ள அரசன் யார்?*

*ஏசாயா 14 பாபிலோனிய அரசனையும் எசே. 28 தீருவின் இராஜாவையும் குறிப்பிடுகிறதா?*

- *ஒருவேளை வரலாற்று ரீதியான பாபிலோனிய அரசனா? உதா. நெபுகாத்நேச்சர், நெபோனிடஸ், அல்லது பெல்ஷாத்சார்?*
- *ஒருவேளை இறுதிக்கால ஆட்சியாளர். உதா. வெளி. 13-ல் வருவதைப் போல (10 கொம்புகளும் 7 தலைகளும் உள்ள அந்திக் கிறிஸ்து) அல்லது தானி. 7:23-25 (சிறிய கொம்பாகிய அந்திக் கிறிஸ்து)?*
- *பாபிலோனுடைய சக்திக்கு அடிப்படைக் காரணமாகிய சாத்தானாக ஒரு வேளை இருக்கலாம் (யோவான் 12:31; வெளி. 12:8-9; லூக். 10:18; 2தெச. 2:9)? உதாரணமாக 14:12-14 ஆகிய வசனங்களில் வரும் கூற்றுகள் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளைக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. எசே. 28:11 –க்கு இது இன்னும் பொருத்தமாகத் தெரிகிறது. நாம் மீண்டும் நினைவுகூர வேண்டியது என்னவென்றால் ஒரே தீர்க்கதரிசனம் இரண்டு*

நிகழ்வுகளை அல்லது நபர்களைப் பற்றிப் பேசலாம். உதாரணம்: 2சாமு. 7:14 ஆரம்பத்தில் சாலமோனைப் பற்றிப் பேசுகிறது இறுதியில் தாவீதின் மகனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையில்தான் அந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது!

இந்தப் பகுதி அந்திக் கிறிஸ்துவைக் குறிக்கிறது என்று சில வியாக்யானிகள் கருதுகிறார்கள் (வெளி. 13:1-18; 2தெச. 2:3-4,8; தானி. 7:8; 9:27-ல் வரும் சிறிய கொம்பு; அல்லது தானி. 11:36-45-ல் வரும் அரசன்). இந்த விளக்கத்தின்படி அந்திக் கிறிஸ்து நரகத்தில் இருப்பான் (வெளி. 19:20; 20:10). இது அந்திக் கிறிஸ்துவினுடைய வீழ்ச்சிக்கும் படைப்பின் ஆரம்பத்தில் நடைபெற்ற சாத்தானுடைய வீழ்ச்சிக்கும் இடையிலான ஒப்பீடு என்று அங்கர் உறுதியாக நம்புகிறார். ஒருவேளை இந்த இரண்டு விளக்கங்களுமே சரியாக இருக்கலாம்.

“வானங்கள்”, “தேவனுடைய பர்வதம்”, மற்றும் “சேரூப்” (ஒரு தூதன்) மற்றும் “நீ படைக்கப்பட்ட நாள் முதல் உன் வழிகளில் நீ குற்றமற்றவனாயிருக்கிறாய்” (ஏசாயா 14 மற்றும் எசே. 28) சாத்தானைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. சாத்தான் விழுந்து போவதற்கு முன்பாக பரலோகத்தில் ஒரு தேவதூதனாக இருந்தான்..

இந்த இரண்டு தீர்க்கதரிசனப் பகுதிகளும் சாத்தானுடைய தோற்றத்தையும் வீழ்ச்சியையும் குறிப்பிடுவதாக ஆரம்ப கால திருச்சபை கருதியது. எசாயா **14:9-14** மற்றும் எசே. **28:11-19,** ஆகிய பகுதிகளை வாசிக்கும் ஒருவர் இவற்றிலுள்ள கூற்றுகள் விவரங்கள் அனைத்தும் பாபிலோனிய அரசனையோ அல்லது தீருவின் அரசனையோ மட்டும் குறித்துவிட முடியாது என்பதை அறிவர். இந்த வேதப் பகுதியின் மூலமாக கடவுள் சாத்தானைக் குறித்த சில உண்மைகளை வெளிப்படுத்த நினைத்தாரா? அது உண்மையானால் (நாங்கள் அவ்வாறுதான் கருதுகிறோம்) இந்தப் பகுதி ஆரம்ப கால தோற்றம் குறித்த சில தீர்க்கதரிசனங்களைப் பற்றி எடுத்துரைக்கிறது:[45]

- சாத்தான் கடவுளால் படைக்கப்பட்டவன் (**எசே. 28:13,15**).
- அவன் ஒரு சிறப்பான நிலையைப் பிடித்திருந்தான் (**எசே. 28:12-13**). ஒரு வேளை அவன் திரித்துவத்திற்கு அடுத்த நான்காவது நபராக இருந்தானா?
- பரலோகத்தில் அவன் தனக்கு ஒரு சிங்காசனத்தை நிறுவினான் (**எசே. 14:13**).
- அவன் **“விடிவெள்ளி நட்சத்திரம்” என்றும் “அதிகாலையின் மகன்‘ என்றும் அழைக்கப்படுகிறான் (ஏசாயா 14:12)**. ப.ஏ.-ன் இலத்தீன் மொழிபெயர்ப்பாகிய வல்கேட் இதை **“லூசிபர்” என்று மொழிபெயர்த்திருக்கிறது, அதன் பொருள் ஒளி கொண்டு வருகிறவன்.**

இந்தப் பெயர் எவ்வளவு அற்புதமான (**ஏசாயா 14:13**) மற்றும் வல்லமையுள்ள (**எசே. 28:14**) ஆட்சி செய்யும் தூதனாக அவன் இருந்திருப்பான் என்பதைக் காண்பிக்கிறது… “… தீமை உன்னில் காணப்படும் வரை” (**எசே. 28:15**). அந்தப் பாவம் என்ன?

அவனுடைய பெருமையே அவனை வீழ்ச்சிக்கு வழிநடத்தியது. **சாத்தான் பாவத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருந்தான் (எசே. 28:16-17**) – பாவத்தை அவன் மனித இனத்திற்கும் அறிமுகம் செய்தான் (ஏவாளைச் சோதித்ததன் மூலமாக, ஆதி. 3). பிசாசினுடைய, லூசிபருடைய பாவம் என்ன? ஒருவேளை **ஏசாயா 14:13-14** இந்தக் கேள்விக்கு பதில் தரக்கூடும்:

- **நான் உன்னதத்திற்கு ஏறுவேன்…**
- **கடவுளின் நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்.**
- **ஒன்றுகூடுகையின் மலையில் என் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பேன்..**
- **நான் மேகங்களின் உச்சிக்கு மேலாக ஏறுவேன்…**
- **நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்.**

[45] ஏசாயா 14 மற்றும் எசே. 28 ஆகிய பகுதிகளைக் குறித்த கீழ்க்காணும் ஆய்வை “தூதரியல்” என்ற பாடத்திலும் காணலாம்.

*எபிரெய மொழியில் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் வினைச் சொற்கள் தன்னிலை ஒருமையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன: **"நான் ஏற வேண்டும்..."** அல்லது **"நான் ஏறட்டும்..."** என்றவாறு.*

***எசே. 28:16-18** கீழ்வருமாறு சுருக்கித் தருகிறது:*

- ***உன் வியாபாரத்தின் பெருக்கத்தினால் உன் கொடுமை அதிகரித்து...***
- ***உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாகிற்று...***
- ***உன் பரிசுத்த ஸ்தலங்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்கினாய்.***

*கடவுள் சாத்தானுக்கு எதிரான முதல் நியாயத்தீர்ப்பின் வார்த்தையைச் சொன்னார் (மற்றவை அதைத் தொடர்ந்து சொல்லப்படுகின்றன: உதா. **யோவான் 12:31; 2பேதுரு 2:4**):*

***நீ பாவம் செய்தாய்... நான் உன்னை விரட்டிவிட்டேன்... (எசே. 28:16).***
***விடிவெள்ளியே, எப்படி நீ வானத்தி- ருந்து விழுந்தாய்! (ஏசாயா 14:12)***

(2) ***அசீரியாவுக்கு எதிராக: அதி. 14:24-27***

*முத- ல் அசீரியாவுக்கு எதிரான நியாயத்தீர்ப்பில் இந்தப் பகுதி கவனம் செலுத்துகிறது; ஆகிலும் 26-ம் வசனம் இறுதி நாளில் அனைத்து இனங்கள் மீதும் வரவிருக்கிற நியாயத்தீர்ப்பைக் குறிப்பதாக இருக்கிறது.*

(3) ***பெலிஸ்தியர்களுக்கு எதிராக: அதி. 14:28-32***

***வ. 29:** "பாம்பின் வேர்" கடவுள் பயமற்ற அரசன் ஆகாஸைக் குறிக்கிறது. அந்தப் பாம்பி- ருந்து வரும் விரியனாக, பிறகு பெலிஸ்தியரைத் தோற்கடிக்கும் பறக்கிற அக்கினி சர்ப்பமாக மாறுவது எசேக்கியா அரசன் (2இராஜா.18:8ச்ச்).*
***வ. 31-32:** பெலிஸ்தியர்கள் அசீரியர்களால் வெற்றி கொள்ளப்பட்டு முற்றிலும் அழிக்கப்படுவார்கள் என்ற தீர்க்கதரிசனம் சனகெரிப் என்ற அசீரிய அரசனால் நிறைவேற்றப்பட்டது.*

## ***மோவாபுக்கு எதிராக: அதி. 15–16***

*மோவாபுடைய பெருமையின் காரணமாக அது அசீரியர்களால் அழிக்கப்படும். 16:3-4: மோவாபி- ருந்து வரும் அகதிகளை யூதா ஏற்றுக்கொள்ள வேண்டும். இது தீமைக்குத் தீமை செய்யாமல் தீமையை நன்மையால் வெல்லுங்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை பிரதிபலிப்பதாக இருக்கின்றது (மத். 5:38ச்ச்; அப். பவுலின் எச்சரிக்கை: ரோமர் 12:19-21). 16:5 –ல் மீண்டும் "மேசியாவைக் குறித்த வெளிச்சம்" வருகிறது! தெய்வீக நியாயாதிபதியாகிய மேசியா, கடவுளுடைய எதிரிகளைப் போல தீமையும் அநீதியும் உள்ளவராக இராமல் கிருபையும் நீதியும் உள்ளவராக இருக்கிறார். 16:13-14: இது மூன்று வருடங்களுக்குள்ளாக நடைபெற வேண்டும் ( 21:16: அரேபியாவில் உள்ள கேதார் (தற்போதைய சவுதி அரேபியா) "இன்னும் ஒரு வருடத்திற்குள்ளாக" தண்டிக்கப்பட வேண்டும்!)*

## ***தமஸ்குவுக்கும் சமாரியாவுக்கும் எதிராக: அதி. 17***

***வ. 1:** தமஸ்குவுக்கு எதிரான தீர்க்கதரிசனம்.*
***வ. 3:** எப்பிராயீமுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (வட அரசாகிய இஸ்ரவேலின் தலைநகரம் சமாரியா).*

*வட அரசாகிய இஸ்ரவேல் சிரியாவோடு கூட்டுச் சேர்ந்த காரணத்தினால் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் மீதும் சிரியாவின் மீதும் வரும் (ஏசாயா 7:2). வ. 6-7: இஸ்ரவேலில் (சமாரியாவில்) ஒரு சிறு கூட்டம் மட்டும் தப்பிப் பிழைத்து இஸ்ரவேலின் பரிசுத்தரும் அவர்களைப் படைத்தவருமாகிய யாவேவை நம்பும். "பரிசுத்தர்" என்ற*

*சொல்லாடல் ஏசாயா மட்டும் பயன்படுத்தும் ஒரு சிறப்புச் சொல்லாடல் என்பதை நாம் அறிமுகத்தில் ஏற்கனவே சொல்- யிருக்கிறோம். இந்தப் பகுதியில் உள்ள சில கூற்றுகளும் இறுதிக் காலத்தைக் குறிப்பதாக இருக்கின்றன: வ. 4.7.9.*[46] *தமஸ்கு (அதாவது ஆராம்: கி. மு. 732-லும்) சமாரியா (வட அரசு கி. மு. 722-லும்) அசீரியர்களினால் வெற்றிகொள்ளப்படும் (ஏசாயா 8:4). வசனங்கள் 12-14 மீண்டும் அசீரியாவின் மீதான நியாயத்தீர்ப்பைக் குறித்துப் பேசுகின்றன. இஸ்ரவேலையும் சிரியாவையும் நியாயந்தீர்க்க கடவுள் ஒரு கருவியாக அசீரியாவைப் பயன்படுத்திய போதிலும் அதன் பெருமை மற்றும் கொடுமையின் காரணமாக கடவுள் அசீரியாவையும் நியாயந்தீர்க்கிறார் (ஏசாயா* 10:5ff*; எருசலேமின் நகர வாசலுக்கு முன்பான 185,000 அசீரிய போர் வீரர்கள் மரணமடைந்தது (ஏசாயா 37:36-37) ஒரு வேளை இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இருக்கலாம்.).*

## *எத்தியோப்பியாவுக்கு (கூஸ்) எதிராக: அதி. 18*

*தோராயமாக கி. மு. 714-- - ருந்து 633 வரை எத்தியோப்பியர்கள் (கூஸியர்கள்) எகிப்தின் மீது ஆட்சி செய்தார்கள் (25-வது அரச வம்சம்). வசனங்கள் 3-6-ல் அறிவிக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பைக் குறித்து வியாக்யானிகள் நடுவில் வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. சிலர் இது அசீரியர்களுடைய தாக்குதல் என்று கருதுகிறார்கள். ஆயினும், எத்தியோப்பியர்கள் எதிர்காலத்தில் கடவுளுக்குப் பயப்படுவார்கள் என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.*

## *எகிப்துக்கு எதிராக: அதி. 19–20*

*தாலமி பிலோமீடர் என்ற எகிப்திய அரசனுடைய ஆட்சியின் கீழ் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் நிறைவேறினாலும் அதன் முதன்மையான நிறைவேறுதல் இன்னும் காத்திருக்கிறது.*

***அதிகாரம் 19:***

***வ. 2-4:*** *நாட்டில் உள்நாட்டுப் போர் மற்றும் பிரச்சனைகள்: இந்த சூழ்நிலை கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் பாதியளவு உருவாகிவிட்டது. கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் எகிப்து இருந்த நிலை 21-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நம்முடைய உலகம் இருக்கும் நிலைக்கு ஆச்சரியமான முறையில் ஒத்திருக்கிறது: தீவிரவாதம் எங்கும் காணப்படுகிறது; மதச் சார்பான் யுத்தங்கள் பெருகி வருகின்றன. தீவிரவாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் இடையில் உள்நாட்டுக் கலகங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன (- பியா, ஈராக், சிரியா மற்றும் யேமன் போன்ற நாடுகளில்). அல்ஜீரியாவில் இந்த வகையான பிரச்சனை தொடர்ந்து நடந்து வருகிறது.*

***வ. 5-7:*** *இயற்கைப் பேரழிவுகள்.*
***வ. 8-10:*** *பொருளாதார நெருக்கடி நிலை.*
***வ. 11-15:****குழப்பமான உள்நாட்டு அரசியல்.நம்முடைய காலத்தில் மிகவும் உண்மையான ஒன்று.*
***வ. 16-17:*** *யூதாவுக்கு எகிப்து பயந்திருக்கும் (இன்று இதுதான் நிலை).*
***வ. 18:*** *சில நகரங்களில் எபிரெய மொழிகூட பேசப்படும்!*
***வ. 19-21:*** *மக்கள் யாவேயிடத்தில் வேண்டிக்கொள்வார்கள் (அல்லாஹ்விடத்தில் அல்ல)!*
***வ. 22-25:*** *யாவே எகிப்தை மீட்டெடுப்பார்; அசீரியாவுடனும் இஸ்ரவேலுடனும் சேர்ந்து அவர்கள் யாவே கடவுளைச் சேவிப்பார்கள். மத்திய கிழக்கில் உள்ள பிரச்சனைகளுக்கு இதுதான் தீர்வாக இருக்கும்!*
***அதிகாரம் 20:*** *சமீபத்திய எதிர்காலத்தில் எகிப்தும் எத்தியோப்பியாவும் அசீரியாவினால் மேற்கொள்ளப்படும் (ஏசாயாவின் கண்ணோட்டத்தில்). இது கி. மு. 680-க்கும் 660-க்கும் இடைப்பட்ட காலத்தில் அசீரிய அரசனாகிய ஈசார்ஹடான் என்பவரின் தலைமையில் நடைபெற்றது (வ. 4).*
***வ. 5-6:*** *இதன் பொருள் யூதா இராணுவ உதவிக்காக எகிப்தையும் எத்தியாவையும் சார்ந்திருந்த காரணத்தினால் வெட்கப்பட வேண்டிய நிலை வரும் என்பதுதான் (போலியான உடன்படிக்கை மீண்டும் கண்டிக்கப்படுகிறது: 30:1*ff*)!*

[46] This is also the opinion of John A. Martin, op cit, p. 1064.

## பாபிலோன், ஏதோம் மற்றும் அரேபியாவுக்கு எதிராக: அதி. 21

(4) ***பாபிலோனுக்கு எதிராக: வ. 1–10***

*ஏலாம் மற்றும் மேதியர்கள் மூலமாக பாபிலோனியர்களின் அழிவை தீர்க்கதரிசி அறிவிக்கிறார் (வ. 2). கி. மு. 539-ல் கோரேஸ் அரசன் பாபிலோனை வெற்றிகொள்வார் என்பதை ஏசாயா முன்னறிவிக்கிறார். அவருடைய தீர்க்கதரிசனம் 150 வருடங்களுக்குப் பிறகு நிறைவேறியது (வ. 9 வெளி. 14:8; 18:2).*

(5) ***ஏதோமுக்கு எதிராக: வ. 11–12***

*சேயீர்: இதுதான் ஏதோம்:ஆதி. 32:3; எண். 24:18; நியா. 5:4. இந்த நியாயத்தீர்ப்பை நடத்துகிறவர்களுடைய விவரம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை; ஏதோமியர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் என்று மட்டும்தான் இந்த பகுதி சொல்கிறது. எருசலேம் தவிர்ந்த மற்ற அனைத்து இனங்களையும் போல ஏதோமியர்களும் அசீரியர்களினால் மேற்கொள்ளப்பட்டார்கள் (ஏசாயா 36—37)!*

(6) ***அரேபியா: வ. 13-17***

*தேதான் மற்றும் கேதார் ஆகியவை அரேபிய பூர்வ குடிகள். அவர்கள் மூன்று வருடங்களில் அழிக்கப்படுவார்கள், இதைத்தான் ஒருவேளை இரண்டாம் சார்கான் என்ற அசீரிய பேரரசன் பல அரேபிய பூர்வ குடிகளை வென்றதான கி. மு. 716-ல் எழுதி வைத்திருக்கிறார் என்று கருத இடமுண்டு.*

## எருசலேமுக்கு எதிராக: அதி. 22

*கர்த்தருக்கு உண்மையில்லாமல் வாழ்ந்த காரணத்தினால் அசீரியர்களைக் கொண்டு கடவுள் எருசலேமைத் தண்டித்தார் (வ. 12-14). மக்கள் இதைக் குறித்துக் கவலை கொள்ளாமல் அதற்கு நேர் எதிராக நடந்துகொண்டார்கள்:*

***வ. 13:*** ➔ *மக்கள் தங்கள் இருதயக் கடினத்தின் காரணமாக, "புசித்துக் குடித்து… நாளைக்குச் சாவோம்" என்று சொல்கிறார்கள். இந்த புகழ்பெற்ற பகுதியை பவுல் 1கொரி. 15:32 –ல் மேற்கோள் காட்டுகிறார்.*[47] *செப்னா (எருசலேம் அரண்மனையில் ஆளுனராக இருந்தவர்) மற்றும் எலியாக்கீம் (வ. 20) ஆகியோரைக் குறித்த குறிப்புகள் உடனடியாக நடைபெறவிருந்த சனகெரிப்பின் படையினால் நடைபெற்ற தாக்குதலைக் குறிக்கிறது. ஏசாயாவின் வார்த்தைகளுக்கு செப்னா எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும், அதனால் அவன் தனக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருந்த கல்லறையில் அடக்கம் செய்யப்படுவதில்லை (பரிசுத்தமாக்கப்பட்ட அரிமத்தேயு யோசேப்பின் கல்லறை: மத். 27:57-61), மாறாக அந்நிய நாட்டில், பெரும்பாலும் அசீரியாவில்தான் அடக்கம் செய்யப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசனமுரைத்தார்.*

***வ. 20:*** ➔ ***எலியாக்கீம்:*** *ஏசாயா 36:3 மற்றும் 2இராஜா. 18:18. செப்னாவைப் போலல்லாது எலியாக்கீம் கடவுளுக்கு உண்மையுள்ளவராக இருந்தார். ஆகவே கடவுள் அவருக்கு சிறப்பான பொறுப்புகளைக் கொடுத்தார். அரச மாளிகையின் திறவுகோலை வைத்திருப்பது பொறுப்பையும் சக்தியையும் காண்பிக்கிறது. எ- யாக்கீம் ஒரு ஆப்பைப்* (ஆணியைப்) *போன்றவர். ஆகிலும் வசனம் 26-ல் பார்க்கிறபடி அந்த நாளில் ஆப்பு வழிவிட்டுக் கொடுக்கும். இது ஒருவேளை மக்களுடைய எதிர்காலச் சிறையிருப்பைக் குறிக்கலாம்.*

---

[47] *பொருள் விளக்கம்: உயிர்த்தெழுதல் இல்லை என்றால் எல்லாரும் எப்படியும் சாகத்தான் போகிறார்கள் என்று ஒருவன் தன்னுடைய வாழ்வை அனுபவித்து வாழ்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருப்பான்!*

**வ. 22: ➔ "தாவீதுடைய வீட்டின் திறவுகோல்":** இந்த தீர்க்கதரிசனம் இறுதியில் தாவீதின் மகனாகிய இயேசு கிறிஸ்துவினால் நிறைவேற்றப்படும். வெளி. 3:7, தாவீதின் திறவுகோலை இயேசு வைத்திருக்கிறார் என்று சொல்கிறது.[48] இந்தப் பொருளில் பார்க்கும்போது எலியாக்கீம் கிறிஸ்துவின் மாதிரியாக இருக்கிறார். வசனம் 22 தெளிவாக மேசியாவைக் குறித்துப் பேசுகிறது. அறிமுகம் மற்றும் ஏசாயா நூலின் நோக்கத்தைக் குறித்த நம்முடைய முந்தைய விவாதங்களின் அடிப்படையில், தீர்க்கதரிசனங்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம், எருசலேம் மீதான நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது மேசியாவைப் பற்றி தீர்க்கதரிசனம் உரைக்கப்படுவதை தர்க்கரீதியாக நாம் விளக்கலாம்: யூதாவின் ஆட்சி நீக்கப்பட்டு, புதிய தாவீதின் ஆட்சி ஏற்படுத்தப்டும் நாள் வரும், அதாவது அந்த நாளில் தாவீதின் மகனாகிய கிறிஸ்து ஆட்சி செய்வார். அதிகாரம் 7 கடவுள் பயமற்ற அரசாகிய ஆகாஸையும் பிறக்கப்போகும் தெய்வீகக் குழந்தையாகிய மேசியாவையும் முரண்படுத்திக் காண்பிக்கிறது. ஏசாயா இந்தப் பகுதியில் அரண்மனைத் தலைவனாகிய செப்னாவை யூதாவின் அரசனாகிய எசேக்கியாவுக்கு முரணாகக் காண்பிக்காமல், புதிய தாவீதுக்கு முரணாகக் காண்பிக்கிறார்? எசேக்கியா கடவுளுக்கு உண்மையுள்ளவராக இருந்தபடியால் அவர் அப்படிச் செய்திருக்கலாம். ஆனால் மக்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மையில்லாமல் போய்விட்டார்கள். ஆகிலும் எசேக்கியாவின் மகனாகிய மனாசேயைவிட மோசமான அரசன் யூதா நாட்டை ஆண்டதே இல்லை.

### தீரு சீதோனுக்கு எதிராக: அதி. 23

பினீசியர்கள் மிகவும் அனுபவம் வாய்ந்த வியாபாரிகள் என்று குரேக்கர் அவர்கள் எழுதுகிறார் (இன்றுள்ள லெபனானியர்களைப் போல). அவர்கள் உலகத்தின் பெருங்கடல்கள் அனைத்தையும் தங்கள் திறமையுடனும் தொழில் செய்யும் ஆர்வத்துடனும் கடந்து வந்தார்கள். அவர்கள் மிகப் பெரிய வியாபாரக் கப்பல்களையும் அவர்கள் பயணம் செய்த கடற்கரைகளில் பல வியாபார நகரங்களையும் கட்டினார்கள். ஆமோஸ் 1:9 சொல்கிறபடி அவர்கள் தங்கள் சிறைக் கைதிகளை அடிமைகளாக மற்ற மக்களுக்கு விற்பனை செய்தார்கள். எசேக்கியேல் 28-ம் அதிகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்! ஆகிலும் அவர்களுக்குக் கிடைக்கப் போகும் நியாயத்தீர்ப்புக்கு முக்கிய காரணம் அவர்களுடைய பெருமையே (வ. 8-12). கி. மு. 585 வரை நீண்ட காலமாக நெபுகாத்நேச்சர் அவர்களுடைய நகரத்தை முற்றுகையிட்டும் அதைக் கைப்பற்ற முடியாமல் போனது. கி. மு. 322 மகா அலெக்சாண்டர் அந்த நகரத்தை முற்றிலும் அழித்துப் போட்டார் (எசே. 26:14 மற்றும் சகரியா 9:2-4)!

**வ. 15: ➔** 70 வருடங்கள்: இந்த வருடங்களை நெபுகாத்நேச்சர் ஆட்சி செய்த வருடங்களாகிய கி. மு. 606-ஹ்லிருந்து 538 வரையுள்ள காலப்பகுதிக்கு இணையாகப் பார்க்கிறது வேதாகம அனோட்டி.. இந்த காலத்தில் யூதாவையும் அந்த பகுதியில் இருந்த அனைத்து அரசுகளையும் நெபுகாத்நேச்சர் ஆண்டு வந்தார். மேதிய-பெர்சிய அரசு பாபிலோனை அழித்த போது அவருடைய ஆட்சி முடிவுக்கு வந்தது.

## 3. ஏசாயாவின் வெளிப்பாடு: உலகத்தின் நியாயத்தீர்ப்பு, உயிர்த்தெழுதல் மற்றும் மேசியாவின் அரசைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 24—27

### a. ஏசாயாவின் முதல் புத்தகத்தில் ஏசாயாவின் வெளிப்பாடு வரும் இடம்

இந்த நான்கு அதிகாரங்களும் **"ஏசாயாவின் வெளிப்பாடு" என்று அழைக்கப்படுகிறது.**
பல வியாயக்யானிகள் (பழைமை மாறாக் கோட்பாட்டாளர்களும், தாராளவாத விமர்சகர்களும்) ஏசாயாவின் வெளிப்பாட்டுப் பகுதியும் (அதிகாரங்கள் 24–27) அதற்கு முந்தைய அதிகாரங்களாகிய 13–23–ம் (இனங்களுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்) நெருங்கிய தொடர்புடையது. இஸ்ரவேலையும் அந்தக் காலத்தில் இருந்த மற்ற இனங்களையும் குறித்த தீர்க்கதரிசனங்களின் நடுவில் ஏசாயாவின் வெளிப்பாடு இடம்

---

[48] மத். 16:19-ல் திருச்சபைச் சூழமைவில் இயேசு பாதாளத்தின் திறவுகோல்களை பேதுருவுக்குக் கொடுப்பதாகக் கூறுகிறார்.

பெற்றிருக்கிறது. 1-12 அதிகாரங்களில் இஸ்ரவேல் மற்றும் யூதா செய்த பாவத்தின் காரணமாக வரப்போகிற கடவுளுடைய நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. அசீரியாவை நியாயத்தீர்ப்பின் கோலாகப் பயன்படுத்துவார். அப்படியிருந்தாலும், ஒரு மீதியான கூட்டம் மீட்கப்படும், எருசலேம் மீண்டும் கட்டி எழுப்பப்படும். அதிகாரங்கள் 13−23, எருசலேம் (அதிகாரம் 22) உள்ளிட்ட தனிப்பட்ட இனங்கள் மீது கடவுளுடைய நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறது. அதிகாரங்கள் 28−39-ல் எருசலேம் யூதா உள்ளிட்ட தனிப்பட்ட இனங்கள் மீதான நியாயத்தீர்ப்பு அறிவிக்கப்படுகிறது. அதிகாரங்கள் 1−12 ஆகாஸ் அசீரியாவுடன் முரண்படுவதைப் பற்றிப் பேசுகிறது. இறுதி அதிகாரங்களில் எசேக்கியா அரசனைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது (அதி. 28−39, அதிகாரங்கள் 36−39-ல் வெளிப்படையாக பேசப்படுகிறது). ஏசாயாவின் வெளிப்பாடு – முழு உலகத்தின் மீதான நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறது இஸ்ரவேலிலும் மற்ற இனங்களிலும் இருந்து ஒரு மீதியானவர்களின் மீட்பைக் குறித்து அறிவிக்கிறது – எருசலேம், யூதா மற்றும் பிற இனங்களைக் குறித்த நியாயத்தீர்ப்பின் மையம் இதுதான்[49].

## ஏசாயாவின் வெளிப்பாடு என்ற பகுதியின் வடிவமைப்பு அதன் இணக்கமான தன்மையையும் உண்மைத் தன்மையையும் குறித்து சான்றழிக்கிறது

இந்த நான்கு அதிகாரங்களும் நான்கு பகுதிகளைக் கொண்டிருக்கின்றன என்று நம்புகிறோம்; இந்த நான்கு பகுதிகளிலும் உள்ள தீர்க்கதரிசனங்களின் வடிவமும் பாணியும் பாடல்கள், துதி, விண்ணப்பம் என்று தொடர்ச்சியாக மாறி வருகிறது.[50]

முதலாவது பகுதி:
24:1-6: இறைவாக்கு (மீதியானவர்கள் தவிர்த்து உலகத்தின் மீதான நியாயத்தீர்ப்பு)
24:7-12: நகரத்திற்கான பாடல் (கடவுள் பக்தியற்றவர்களுக்கான புலம்பல்)
24:13: இறைவாக்கு (மீதியானவர்கள்)
24:14-16ஹ: மகிழ்ச்சிப் பாடல் (மீட்கப்பட்டவர்களின் மகிழ்ச்சி)
24:16கூ-20: இறைவாக்கு (உலகத்தின் முடிவு)

இரண்டாவது பகுதி:
24:21-23: இறைவாக்கு (சீயோனில் யாவே ஆளுகிறார்)
25:1-5: நகரத்தின் பாடல் (நகரத்தின் வீழ்ச்சிக்கான நன்றி)
25:6-8: இறைவாக்கு (சீயோனின் மீட்பு)
25:9-10ஹ: சீயோனின் களிப்பு
25:10கூ-12: இறைவாக்கு (மோவாபின் வீழ்ச்சி)

மூன்றாவது பகுதி:
26:1-6: நகரத்தின் பாடல் (சீயோனின் மகிழ்ச்சி-நகரத்தின் வீழ்ச்சி): உள்ளே நுழைக!
26:7-19 ஜெபம் (இடைச் செருகல்)
26:20-21 இடைச் செருகல் (நியாயத்தீர்ப்பும் மீட்பும்): உள்ளே நுழைக!

நான்காவது பகுதி:
27:1: இறைவாக்கு (கட- ன் கொடூரனை யாவே மேற்கொள்கிறார்)
27:2-6: திராட்சைத் தோட்டத்தின் பாடல் (இஸ்ரவே- ன் மீட்டெடுப்பு)
27:7-11: இஸ்ரவேல் தண்டிக்கப்படுதல் – நகரம் பாழாகுதல்
27:12-13: இரண்டு இறைவாக்கு (இஸ்ரவேல் ஒன்று கூட்டப்பட்டு திரும்ப வருதல்)

ஏசாயாவின் வெளிப்பாடு முழுவதிலும் கடவுளுக்கு எதிர்த்து நிற்கும் நகரம் அவரால் கவிழ்க்கப்படுவதையும் எருசலேம் நகரம் மீட்டுருவாக்கம் செய்யப்படுவதையும் குறித்த

[49] Cf. with Robert H. O'Connell, Concentricity and Continuity: The Literary Structure of Isaiah. Journal for the Study of the Old Testament Supplement Series 188 (Sheffield: Sheffield Academic Press, 1994); he refers to Isaiah's Apocalypse as the "innermost core" (p. 120) and an axis in the section from chapters 13–39.

[50] Compare all structures proposed in our commentary on chapters 24−27 with our dissertation *Restauratio und Resurrectio in der Jesaja-Apokalypse*, defended in 2001 at the *Evangelische Theologische Faculteit*, Leuven (Belgium), published in 2008 under the title *Endzeitliche Wiederherstellung Israels und Auferstehung in der Jesaja-Apokalypse* by the Diplomica publishing house in Hamburg. For structures, refer to chapter 2 (exegetical commentary) pages 75ff.

இறைவாக்குகள் தொடர்ச்சியாக மாறி மாறி வருவதை அவதானிக்கலாம். முந்தைய நகரம் "அழிக்கப்பட்ட நகரம்" (24:10), "நகரம்" (25:2), "அரணான சுவர் கட்டப்பட்ட நகரம்" (25:12), "அரணான நகரம்" (26:5) அல்லது "பாதுகாக்கப்பட்ட நகரம்" (27:10) என்று அழைக்கப்படுகிறது; பிந்தைய நகரம் "எருசலேம்" (24:23; 27:13), "சீயோன் மலை" (24:23), "இந்த மலை" (25:6-10a), "பலமான நகரம்" (26:1), "திராட்சைத் தோட்டம்" (27:2) அல்லது "பரிசுத்த பர்வதம்" (27:13) என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு மாறி மாறி வருவது மேல் நோக்கியும் கீழ்நோக்கியும் சீராக நகருகிறது: உயரமான நகரத்திலிருக்கிற மக்கள் தரையில் எறிந்துவிடப்படுகிறார்கள் (5 பகுதிகள்: 24:10; 25:2; 25:12; 26:5-6; 27:10), தூசியில் எறிந்துவிடப்படுகிறார்கள் (cf. 25:12; 26:5) ஆனால் பூமியில் வாழும் மற்ற மக்கள் (26:21), தூசியில் வாழ்ந்த அந்த மக்கள் (26:19), சீயோன் மலைக்கு உயர்த்தப்படுகிறார்கள் (5 பகுதிகள்: 24:23; 25:6-10a; 26:1-2; 27:2; 27:13):

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 24:23 | | 25:6-10a | | 26:1-2 | | 27:2 | | 27:13 |
| 24:10-12 | | 25:2 | | 25:10b-12 | | 26:5-6 | | 27:10-11 | |

ஐந்து பகுதிகள் தீயவர்களின் நகரத்தைப் பற்றியும் ஐந்து பகுதிகள் நீதிமான்களின் நகரத்தையும் பற்றியும் பேசுகின்றன. ஏசாயாவின் வெளிப்பாடு ஒரே மையமுள்ள பல வட்டங்களாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது, அவற்றை ஒன்றாகப் புரிந்துகொள்ளும்போது மிகவும் தெளிவான செய்தியைக் கொடுக்கிறது: பெருமையுள்ளவர்கள் தாழ்த்தப்படுவார்கள், தாழ்த்தப்பட்டவர்கள் யாவேயினால் உயர்த்தப்பட்டு சீயோன் மலையில் அவருடைய பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பார்கள். ஏசாயாவின் வெளிப்பாடு அழிக்கப்பட்ட நகரத்தைக் குறித்த கரிசனையோடு கூடிய நியாயத்தீர்ப்புடன் ஆரம்பமாகிறது (24:10) எருசலேமில் உள்ள பரிசுத்த பர்வதத்திற்கு யாவேயின் மக்கள் திரும்புவதோடு முடிவடைகிறது (27:13). ஏசாயாவின் வெளிப்பாடு ஒன்றுக்கொன்று முரண்படுகிற அதே வேளையில் ஒரே மையத்தை உடைய வட்டங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருக்கிறது: தீயவர்களின் நகரம் மற்றும் யாவேயின் நகரமும் அதிலுள்ள அவருடைய நீதிமான்களான மக்களும் தொடர்ச்சியாக ஒன்றி- ருந்து ஒன்று முரண்படுத்திக் காண்பிக்கப்படுகிறார்கள்:

அ **இனிமேல் நுழைய முடியாத அழிந்த நகரம்** (24:10-12) முரண்
ஆ **சீயோன் மலை** (24:23) முரண்
இ **அழிந்த நகரம்** (25:2) முரண்
ஈ **இந்த மலை** (25:6-10a) முரண்
உ **பாதுகாப்பான மோவாபின் மதில்கள்** (25:10b-12) முரண்
உ$^1$ **யூதாவின் பாதுகாப்பான நகரம்** (26:1-2) முரண்
ஈ$^1$ **உயர்ந்த நகரம் தரைமட்டமாகிறது** (26:5-6) முரண்
இ$^1$ **திராட்சைத் தோட்டம்** (27:2-6) முரண்
ஆ$^1$ **பாதுகாப்பான நகரம் பாழாக்கப்பட்டது** (27:10-11) முரண்
அ$^1$ **இஸ்ரவேல் மக்கள் திரும்பிவரும் எருசேலமின் பரிசுத்த பர்வதம்** (27: 13) ~~முரண்~~ முடிவு

இந்த வடிவத்தின் மையத்தில் உள்ள, மோவாபின் "உயர்ந்த பாதுகாப்பான மதில்கள்" என்பது "யூதாவின் நாட்டிலுள்ள உறுதியான நகரத்தோடு" **முரண்படுத்திக் காண்பிக்கப்படுகிறது.**
கீழ்வருபவையே ஏசாயாவின் வெளிப்பாட்டிலுள்ள நான்கு மையப்பகுதிகள் :


| (1) 24:1-20 | (2) 24:21–25:12 | (3) 26:1-21 | (4) 27:1-13 |
|---|---|---|---|
| A வ. 1-6 | A வ. 21-23 | A வ. 1-6 | A வ. 1 |
| B வ. 7-12 | B வ. 1-5 | B வ. 7-10 | B வ. 2-6 |
| C வ. 13 | C வ. 6-8 | C வ. 11-15 | C வ. 7-11 |
| B$^1$ வ. 14-16a | B$^1$ வ. 9-10a | B$^1$ வ. 16-19 | B$^1$ வ. 12 |
| A$^1$ வ. 16b-20 | A$^1$ வ. 10b-12 | A$^1$ வ. 20-21 | A$^1$ வ. 13 |

மையப் பகுதி (C) கீழ்க் காணும் செய்தியை தன்னில் கொண்டிருக்கிறது: (1) யாவே உலகத்தை நியாயந்தீர்ப்பார் ஆனால் ஒரு மீதியான கூட்டம் தப்பிப்பிழைத்திருக்கும்

*(எதிர்காலம்: 24:13). (2) இந்த மீதியானவர்கள் சீயோன் மலையில் நடைபெறும் விருந்தில் கலந்துகொள்வார்கள் (எதிர்காலம்: 25:6-8). (3) யாவே, நீரே இதைச் சாதிப்பீர் (எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையோடும் ஜெபத்தோடும் நிகழ்காலத்தில் வாழுதல்: 26:11-15). (4) ஆயினும், இஸ்ரவேல் முத- ல் மனந்திரும்ப வேண்டும் கடவுளுக்கு எதிரான நகரம் அழிக்கப்பட வேண்டும் (இது எதிர்காலத்தில் வரப்போகிற மீட்புக்கான முன் நிபந்தனை: 27:7-11). ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களும் மாறி மாறி வரும் வடிவமைப்பும் (கடவுளுக்கு எதிரான நகரத்திற்கும் கடவுளுடைய மக்களின் நகரத்திற்கும் இடையில்) இன்னொரு காரியத்தைக் கூடுதலாகச் சேர்க்கும்போது முற்றிலும் உருக்குலைந்து போய்விடும். இந்த நான்கு அதிகாரங்களும் வளர்ச்சி செயல்பாடு என்று அழைக்கப்படும் செயல்பாட்டின் விளைவாகவே தோன்றின என்று பல்வேறு விளக்கவுரையாளர்களும் வியாக்கியானிகளும் அன்றும் இன்றும் உரிமைகோரி வருகிறார்கள் (உதா. ருடால்ஃப் (*Rudolph*), வில்ட்பர்கர் (*Wildberger*), வெர்மேலன் (*Vermeylen*)); இந்தப் பகுதியில் தனிப்பட்ட ஒட்டு வேலைகள் செய்யப்பட்ட பகுதிகள் இதில் இருக்கின்றன என்று அவர்கள் கருதுகிறார்கள் (பிரித்துப் பார்த்தல் கருதுகோள்; உதா. செய்னே (*Cheyne*)), அவை வெவ்வேறு ஆசிரியர்களினால் வெவ்வேறு காலத்தில் எழுதப்பட்டு பெயர் அறியப்படாத ஆசிரியரால் தொகுக்கப்பட்டது என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்தப் பகுதியின் அற்புதமான கலைநய வடிவமைப்பைப் பார்க்கும்போது இந்த விமர்சன அறிஞர்களின் கருதுகோள்கள் அனைத்தும் மிகவும் சந்தேகத்திற்கு உரியவைகளாகவே இருக்கின்றன. எங்களைப் பொறுத்தவரை, சில வசனங்களை அல்லது வசனத்தின் சில பகுதிகளை தனியாகப் பிரித்துப் பார்ப்பது ஒவ்வொரு தனித்தனிப் பாகத்தின் குறிப்பிட்ட வடிவத்தின் (அ, ஆ, இ) வெளிச்சத்தில் பார்க்கும்போது பிரச்சனைக்குரியதாகவும் பொருத்தமற்றதாகவுமே காணப்படுகிறது.*

## c. *தெளிவுபடுத்தும் நோக்கத்திற்கான ஒரு இறுதியியல் வடிவம்*

*இந்த உலகம் நியாயத்தீர்ப்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்பதை இந்த நான்கு அதிகாரங்களும் தெளிவுபடுத்துகின்றன. யாவேயைச் சார்ந்தவர்களுடைய உயிர்த்தெழுதல் (26:19) மற்றும் மேசியாவின் அரசு ஆகியவை (24:23; 25:6-8; 26:1-4; 27:2-13) நியாயத்தீர்ப்பைத் தொடர்ந்து நடைபெறுகின்ற காரியங்களாக இந்த அதிகாரங்கள் சித்தரிக்கின்றன.*




## *ஏசாயாவின் வெளிப்பாட்டின் நான்கு பகுதிகளுக்குமான விளக்கவுரை*

*முத- ல் நாம் ஒவ்வொரு பகுதிகளிலும் இருக்கக்கூடிய ஒரே புள்ளியில் அமைந்த வட்ட வடிவமான அமைப்பை விளக்கி, அதன் உள்ளடக்கத்திற்கு விளக்கவுரை கொடுக்கலாம்.*

(1) ***முதல் பகுதி: பூமியின் மீதான நியாயத்தீர்ப்பு: 24:1-20***

இந்தப் பகுதி கீழ்வருமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது:

**அ** உலகத்தின் நியாயத்தீர்ப்பு: **a** அனைத்து வகுப்பும் பாதிக்கப்படும்: வ. 1-3
**b** உடன்படிக்கையை மீறியதே காரணம்: வ. 4-6

**ஆ** அழிக்கப்பட்ட நகரம்: புலம்ப- ன் பாடல்: வ. 7-12

**இ** ஒ- வப் பழங்களின் அறுவடை: மீதியான ஒரு கூட்டம் தப்பிப்பிழைக்கும்:வ. 13

**ஆ'** தப்பிப்பவர்கள்: மகிழ்ந்து களிப்பார்கள்: வ. 14-16a

**அ'** உலகத்தின் நியாயத்தீர்ப்பு: **$a^1$** ஒருவரும் தப்புவதில்லை: வ. 16b-18
**$b^1$** காரணம் பாவம்: வ. 19-20

(a) யாவே பூமி முழுவதையும் தண்டிக்கிறார்: வ. 1-6

(i) நியாயத்தீர்ப்பு அனைவரையும் பாதிக்கிறது: வ. 1-3

ஒரே மையத்தைக் கொண்ட வட்டவடிவங்கள் இவ்வாறு தெளிவுகொடுக்கின்றன:

**A a** யாவே நிலத்தை அழித்து அதைப் பாழாக்குகிறார் (வ. 1a)
**b** அதன் முகத்தை உருக்குலைத்து அதன் குடிகளை சிதறடிக்கிறார் (வ. 1b)

**B** எல்லா வகுப்பாரும் பாதிக்கப்படுகிறார்கள் (வ. 2)

**$A^1$ $a^1$** பூமி முழுவதும் வீணாக்கப்பட்டு கொள்ளையிடப்படும் (வ. 3a)
**$b^1$** யாவே வார்த்தையைச் சொன்னார் அதைத் தீர்மானித்தார் (வ. 3b).

சில வியாக்யானிகள் வசனம் 1 மற்றும் 3-ல் வருகிற "எரஸ்" (நிலம் அல்லது பூமி) என்ற எபிரெயச் சொல்லை "பூமி" என்று மொழிபெயர்க்காமல் "நிலம்" என்று மொழிபெயர்க்க வேண்டும் என்று கருதுகிறார்கள், ஏனெனில் அப்போது அது இஸ்ரவேல் மற்றும் யூதாவின் மீது வரும் நியாயத்தீர்ப்பை மட்டும் குறிப்பதாக இருக்கும் என்று. நாங்கள் பல்வேறு காரணங்களின் நிமித்தமாக பல வியாக்யானிகளுடைய கருத்திற்கு இசைய அதை "நிலம்" என்று மொழிபெயர்க்காமல் "பூமி" அல்லது "உலகம்" என்று மொழிபெயர்க்க வேண்டும் என்றே கருதுகிறோம்:

- வசனங்கள் 1 மற்றும் 4 –ல் இடம்பெறும் "எரஸ்" (பூமி) மற்றும் "திபெல்" (உலகம்) ஆகியவை முழு உலகத்தைக் குறிக்கின்றன.
- ஐந்தாம் வசனத்தில் வரும் "நித்திய உடன்படிக்கை" என்ற சொற்றொடர் மற்றும் $A^1$ பகுதியில் இடம் பெறும் வெள்ளம் என்ற கருத்தாக்கம் (vv. 16b-20) ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களின் வடிவத்தில் வரும்போது அவை முழு உலகத்தையும் குறிப்பதாகவே இருக்கின்றன.

(ii) நித்திய உடன்படிக்கையை மீறியதே நியாயத்தீர்ப்புக்கான காரணம்: வ. 4-6

ஒரே மைய வட்ட வடிவம் கீழ்க்காணும் தெளிவைக் குறிக்கிறது:

**A** முழு உலகமும் பாழாக்கப்பட்டது (வ. 4)
**a** உலகம் புலம்பி, வாடி, செயலற்றுக் கிடக்கிறது
**b** பூமியில் உயர்ந்திருந்தவர்கள் இப்போது செயலற்றுக் கிடக்கிறார்கள்

**B** ஏனெனில் பூமியின் குடிகள் நித்தியஉடன்படிக்கையை மீறிவிட்டார்கள்(வ.5)

**a** *பூமியின் குடிகள் பூமியைத் தீட்டாக்கிவிட்டார்கள்*

**b** *அவர்கள் சட்டங்களை மீறி, விதிகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதுதான் காரணம்*

**c** *அவர்கள் நித்திய உடன்படிக்கையை மீறினார்கள்*

**$A^1$** *பாவம் பூமியைச் சீரழித்தது (வ. 6)*

**$a^1$** *ஒரு சாபம் பூமியை அழிக்கிறது, அதன் குடிகள் அந்தக் குற்றத்தைச் சுமக்க வேண்டும்*

**$b^1$** *பூமியின் குடிகள் எரிக்கப்படுகிறார்கள், ஒரு சிலர் மட்டுமே தப்புகிறார்கள்.*

*ஆசாரியர்கள் உட்பட நியாயத்தீர்ப்பு எந்த வகுப்பாரையும் தப்பவிடவில்லை. இந்த வசனங்களில் விவரிக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து ஒரு சிறிய எண்ணிக்கையிலான மக்கள் தப்பிப் பிழைப்பார்கள் என்று 6-ம் வசனத்தில் சொல்லப்படுவதை நாம் கவனிக்க வேண்டியது முக்கியம். வசனம் 13-ம் இதே உண்மையைச் சொல்கிறது. ஆயினும் வசனங்கள்* 16b-20 *யாருமே தப்பிக்க மாட்டார்கள், முழு உலகமும் அழிந்துபோகும் என்று சொல்கிறது. முரண்பாடு போல தோன்றுகிற இந்தக் காரியத்தைக் குறித்து நாம் பிறகு சிந்திப்போம்.*

*(b) அழிக்கப்பட்ட கடவுளுக்கு எதிரான நகரம்: வ. 7-12*

*இந்தப் பகுதி கீழ்க்காணுமாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது:*

**A** *புதிய திராட்சை ரசம் காய்ந்து போகிறது; திராட்சைத் தோட்டம் வாடிப்போகிறது (*7a)

**B a** *யாரெல்லாம் மகிழ்ச்சியாக இருந்தார்களோ அவர்கள் புலம்புகிறார்கள் – இசைக் கருவிகளின் சத்தங்கள் ஓய்ந்தன (*7b-8a)

**b** *மகிழ்பவர்கள் இப்போது சத்தமிடுவதில்லை – மகிழ்ச்சியான யாழ் இப்போது அமைதியடைந்தது (*8b-c)

**c** *மக்கள் இப்போது பாடல் பாடிக்கொண்டு திராட்சை ரசம் குடிப்பதில்லை – மதுபானம் அது குடிக்கிறவர்களுக்குக் கசக்கும் (வ. 9)*

**C** *அழிக்கப்பட்ட நகரம் பாழாய்க் கிடக்கிறது; ஒவ்வொரு வீட்டிற்கும் செல்லும் பாதை அடைக்கப்பட்டிருக்கிறது; யாரும் உள்ளே நுழைய முடியாது (வ. 10)*

**$B^1$ $c^1$** *திராட்சைரசம் இல்லை என்று மக்கள் தெருக்களில் முறையிடுகிறார்கள் (*11a)

**$b^1$** *அனைத்து மகிழ்ச்சியும் துக்கமாக மாறுகிறது (*11b)

**$a^1$** *மகிழ்ச்சியான சத்தம் அனைத்தும் பூமியைவிட்டு நீக்கப்படுகிறது (*11c)

**$A^1$** *நகரம் அதன் அழிபாடுகளில் விடப்பட்டிருக்கிறது, நகர வாசல் அடித்து நொருக்கப்பட்டிருக்கிறது (வ. 12)*

*கடவுளுடைய மக்களுக்கு எதிரான நகரம் என்று இந்தப் பகுதி 5 முறை அறிவிக்கிறது. அந்த நகரத்தைக் குறித்து பல்வேறு பரிந்துரைகள் வியாக்யானிகளால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகிலும் இந்தப் பரிந்துரைகள் எழுதப்பட்ட காலத்தைக் குறித்த தப்பெண்ணங்களில் இருந்து தோன்றுகின்றன. கீழ்க்காணும் நகரங்கள் முன்வைக்கப்படுகின்றன:*

1. *நினிவே*
2. *எருசலேம்*
3. *பாபிலோன்*
4. *சூசா*
5. *ஒரு மோவாபிய நகரம்*
6. *தீரு*
7. *சீதோன்*
8. *கார்தேஜ்*
9. *சமாரியா*
10. *ரோம்*

11. இந்த ஐந்து பகுதிகளில் வரும் பல்வேறு நகரங்கள்
12. கடவுளுடைய மக்களுக்கு எதிரான நகரங்களைக் குறிக்கும் ஒரு அடையாள நகரம்

*முழுமையான சூழமைவையும் பார்க்கும்போது இஸ்ரவேலை எதிர்க்கின்ற ஒரு உலகளாவிய அடையாள நகரத்தைத்தான் இந்தப் பகுதி குறிக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். அதிகாரங்கள் 13–23 உண்மையுள்ள மக்களுக்கு எதிரான பல்வேறு நகரங்களைப் பற்றிப் பேசுகின்றது, அனால் அதிகாரங்கள் 24–27, அதாவது ஏசாயாவின் வெளிப்பாட்டில், கடவுளை எதிர்க்கிற எல்லா மக்களையும்தான் தீர்க்கதரிசி குறிப்பிட்டுப் பேசுகிறார்.*

(c) ஒ- வ அறுவடை: ஒரு மீதியான கூட்டம் பிழைத்திருக்கும்: வ. 13

*காடட் அவர்கள் சிறப்பாச் சுருக்கியுரைக்கிறார்:*

> *சமீபத்திய நியாயத்தீர்ப்பின் விளைவாக அனைத்துமே அழிக்கப்பட்டுவிட்டது போல தோன்றுகிறது (வ. 1-12). ஆயினும் அது உண்மையல்ல. உலகத்தின் தலைநகரம் அழிக்கப்பட்டிருக்கிறது, ஆனால், பூமியின் குடிகளில் ஒரு பகுதி உயிரோடுதான் இருக்கின்றது; இவர்களுக்குள்தான் உண்மையுள்ள இஸ்ரவேலர்களும் கடவுளை அறியாத மக்களி- ருந்து தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் மக்களுக்குள் சிதறியிருக்கிறார்கள்.*[51]

*இந்த வசனம் (6-ம் வசனமும்) உலகத்தின் நியாயத்தீர்ப்பு வருகிறது என்றும், பூமியினுடைய மக்கள் தொகையில் ஒரு பகுதி பிழைத்திருக்கும் என்றும் அறிவிக்கிறது. ஏசாயா புத்தகத்தில் உள்ள பல்வேறு பகுதிகள் இஸ்ரவேலில் இருந்து ஒரு மீதியான மக்கள் கூட்டம் தப்பிப் பிழைப்பார்கள் என்றும் அவர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்புவார்கள் என்று அறிவிக்கிறது.*

(d) தப்பிப் பிழைத்தவர்களின் மகிழ்கொண்டாட்டம்: வ. 14-16a

*நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கும்போது தீர்க்கதரிசி திடீரென கடவுளைத் துதிக்க ஆரம்பிப்பது ஆச்சரியமாக உள்ளது. ஆகிலும் இதுதான் தீர்க்கதரிசியின் எதிர்மறை ஒப்பீடு மற்றும் ஒரே புள்ளிமைய மையமாகக் கொண்ட வட்டவடிவில் அமைந்த அவருடைய பாணி! இந்த வசனங்களில் வரும் தப்பிப் பிழைத்தவர்களுடைய மகிழ்கொண்டாட்டத்தை வசனங்கள் 7-12-ல் வரும் அழிக்கப்பட்ட நகரத்தில் உள்ள மக்களின் அழுகையோடு முரண்படுத்தி ஒரு எதிர்மறை ஒப்பீட்டைச் செய்கிறார்!*

| | |
|---|---|
| *24:14:* | *யாவேயின் மேன்மையின் நிமித்தமாக தப்பித்தவர்கள் மகிழ்ந்திருக்கிறார்கள்: கடலின் தீவுகளில் இருக்கிறவர்கள் மகிழ்கொண்டாடுகிறார்கள்!* |
| *24:*15a: | *ஆகவே கிழக்கில் யாவேக்கு மகிமையைச் செலுத்துங்கள்!* |
| 24:15b*:* | *இஸ்ரவேலின் கடவுளாகிய யாவேயின் திருப்பெயரை கடலின் தீவுகளில் உயர்த்துங்கள்!* |
| *24:*16f: | *பூமியின் கடைசிப் பகுதிகளில் இருந்து நாங்கள் பாடல்களைக் கேட்கிறோம்: நீதியுள்ளவருக்கு மகிமை உண்டாவதாக!* |

*இந்தப் பகுதியும் மிகத் தெளிவான முறையில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது: நான்கு வரிகளில் ஒவ்வொரு வரிகளும் கடவுளையும் புவியியல் திசையையும் குறித்துக் காட்டுகிறது.*

(e) முழு உலகமும் நியாயத்தீர்ப்பினால் பாதிக்கப்பட்டிருக்கிறது: வ. 16b-20

*இந்தப் பகுதி கீழ்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது:*

**A** *எனக்கு ஐயோ: துரோகிகள் காட்டிக்கொடுப்பார்கள்: பாவத்தின் மெய்த்தன்மை அனைத்தையும் உள்ளடக்கியது: வ. 1*6b

[51] Frédéric Godet, *AT 7: Ésaïe, Jérémie, Lamentations.* La Bible Annotée. Par une Société de Théologiens et de Pasteurs sous dir. Frédéric Godet. 2nd edition, St-Légier, Suisse: P.E.R.L.E., bibliothèque de l'Institut Emmaüs, 1981 (1re éd.: La Bible Annotée par une Société de théologiens et de pasteurs, Ancien Testament, Les prophètes I. Paris: Sandoz et Fischbacher; Neuchâtel: J. Sandoz; Genève: Desrogis, n. d. [1881]), p. 136. We translated from French into English.

**B** தப்பிப்பதற்கு வழியே இல்லை: வ. 17-18b

**C** வானத்தின் வெள்ளத்தின் கதவுகள் திறக்கப்பட்டிருக்கின்றன; பூமியின் அத்திபாரங்கள் அசைக்கப்படுகின்றன: வ. 18c

**B¹ முழு உலகமும் பிளக்கப்படுகிறது**: வ. 19-20a

**A¹** பூமி விழுகிறது அது எழுந்திருப்பதில்லை: ஏனெனில் பாவத்தின் பாரம் அதைக் கடுமையாக அழுத்துகிறது: வ. 20க்ஷ

பகுதி **A** (வ. 1-6) -ல், பூமியில் உள்ள அனைத்து வகுப்புகளும் நியாயத்தீர்ப்பினால் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறது. "குழி" மற்றும் "கண்ணி" ஆகிய உருவகங்கள் A¹ –ல் உள்ளபடி ஒருவரும் தப்பிப்பதில்லை என்பதன் பகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் பகுதி **A** –க்கும் பகுதி **A¹** –க்கும் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு காணப்படுகிறது: வசனம் 6 (பகுதி A), மீதியான ஒரு கூட்டம் தப்பிப் பிழைக்கும் என்று சொல்கிறது (பகுதி **C**, வ. 13-ஐயும் பார்க்கவும்) ஆனால் பகுதி A¹ யாரும் தப்பிப்பதில்லை என்று சொல்கிறது; பூமி விழுந்தது அது திரும்ப எழுந்திருப்பதில்லை என்கிறது. பல வியாக்யானிகள் இதை ஒரு முரண்பாடாகப் பார்த்து வெவ்வேறு ஆசிரியர்கள் வெவ்வேறு பகுதிகளை எழுதியதால் அல்லது பிறகு சில பகுதிகள் சேர்க்கப்பட்டதால் (சிறப்பாக வசனம் 20) இந்த முரண்பாடு என்று விளக்குகிறார்கள்.[52] ஆனால் 24:1-20 –ன் ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களில் வடிவில் அமைந்திருக்கும் இந்தப் பகுதியின் வடிவமைப்பை நாம் முழுமையாக ஆராயும்போது இவர்களுடைய இந்தக் கருதுகோள்கள் உண்மையற்றுப் போகின்றன.

முரண்பாடு போல தோன்றுகிற காரியம் 24:21-23-ல் விளக்கப்படுகிறது. 24:1-6 –ல் கொடுக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்கும் ஒரு சிறு மீதியான கூட்டம் மகா உபத்திரவத்தைக் குறிக்கிறது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் (வெளி. 6–19) ஆனால் 24:19-20 பூமியின் முடிவைக் குறிக்கிறது (cf. 2பேதுரு 3:10-12; வெளி. 20:11-12).

## (2) இரண்டாவது பகுதி: யாவே சீயோனில் ஆளுகிறார்: 24:21–25:12

இந்தப் பகுதி பின்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது:

**A** எதிரிகள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள் – யாவே சீயோனில் ஆளுகிறார்: 24:21-23

**B** எதிரியான நகரத்தை யாவே அழிக்கிறார்: 25:1-5

**C** சீயோன் மலையில் யாவே ஒரு விருந்தை ஆயத்தம் செய்கிறார்: 25:6-8

**B¹** சீயோனில் மீட்கப்பட்டவர்களின் மகிழ்ச்சி: 25:9-10a

**அ¹** மோவாப் கவிழ்க்கப்படுகிறது; அதன் பாதுகாப்பான மதில் சுவர்கள் தகர்க்கப்படுகிறது: 25:10b-12

[52] E.g. Rudolf Kilian, *Jesaja II: 13−39.* Die Neue Echter Bibel: Kommentar zum Alten Testament mit der Einheitsübersetzung (Würzburg: Echter Verlag, 1994), p. 145 and Otto Plöger, *Theokratie und Eschatologie.* Wissenschaftliche Monographien zum Alten und Neuen Testament. Ed. by Günther Bornkamm and Gerhard von Rad, 2nd volume (Neukirchen Kreis Moers: Neukirchener Verlag, 1959), p. 78. Bernhard Duhm, *Das Buch Jesaia*. Göttinger Handkommentar zum Alten Testament. Ed. W. Nowack. 3rd div.: Die prophetischen Bücher. 1st volume, 4th edition rev. Göttingen: Vandenhoeck & Ruprecht, 1922, p. 177, considers the last part of verse 20 (*the earth does not rise again*) as an unfortunate later addition (gloss) by a reader).

இந்தப் பகுதி தீர்க்கதரிசனம் மற்றும் மகிழ்ச்சிப் பாடல் மற்றும் எதிரிகள் தாழ்மைப்படுத்தப்படுதல் மற்றும் யாவேயும் அவருடைய மக்களும் சீயோனில் உயர்த்தப்படுதல் ஆகிய கருத்துக்களை மாறி மாறி எடுத்துரைக்கின்றன.

*24:21-23:* ***இறுதியில் இறைவாக்கு*** *எதிரிகள் வீழ்த்தப்படுதல் -சீயோனில் யாவே ஆளுதல்*

*25:1-5:* ***நன்றியின் பாடல்*** *நகரம் அழிக்கப்பட்டதற்கு*

*25:6-8:* ***இறுதியியல் இறைவாக்கு*** *யாவேயும் சீயோன் மலை விருந்தும்*

*25:9*-10a: ***மகிழ்ச்சிப் பாடல்*** *அந்நாளில் சீயோன் மலையில்*

*25:*10b-*12:* ***இறுதியில் இறைவாக்கு*** *மோவாபின் பாதுகாப்பான மதில்கள் கவிழ்க்கப்படுதல்*

*(a) எதிரிகள் விரட்டப்படுதல் - யாவே சீயோனில் ஆளுதல்: 24:21-23*

*இந்தப் பகுதி பின்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது:*

***நியாயாதிபதியாகிய யாவே:*** *வ. 21*

a) *அந்நாளில் யாவே தண்டிப்பார்: வ.* 21a
b) *மேலுள்ள வானங்களில் வல்லமை: வ.* 21b
c) *கீழே உள்ள பூமியின் அரசர்கள்: வ.* 21c

***(பெருமையுள்ளவர்களை எல்லாவற்றிற்கும் மேலான ஆளுனர் தாழ்த்துகிறார்)***

**B** ***எதிரிகள் தோற்கடிக்கப்படுகிறார்கள்:*** *வ. 22*

a) *அவர்கள் இருட்டறையில் சிறைவைக்கப்படுகிறார்கள்: வ.* 22a
b) *அவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்: வ. 2*2b
c) *பல நாட்களுக்குப் பிறகு அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள்: வ. 22*c

***(ஒரு காலத்தில் உயர்ந்திருந்தவர்கள் இப்போது தாழ்மைபபடுத்தப்படுவார்கள்)***

**A[1]** ***யாவேதான் அரசன்:*** *வ. 23*

a) *சந்திரன் கலங்கும் சூரியன் நாணமடையும்: வ. 2*3a
b) *ஏனெனில் யாவே இப்போது சீயோன் மலையில் ஆளுகிறார்: வ. 2*3b
c) *மாபெரும் மகிமையோடு – மூப்பர்களுக்கு முன்பாக: வ.* 23c

***(ஒரு காலத்தில் தாழ்மைப்படுத்தப்பட்டவர்கள் இப்போது எல்லாவற்றிற்கும் மேலான ஆளுனரோடு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள்)***

*ஒரு புதிய பகுதி 24:21 –ல் ஆரம்பமாகிறது, "அந்த நாளில்" என்ற சொற்றொடரோடு அது அறிமுகப்படுத்தப்படுகிறது (25:9; 26:1; 27:1.2.12.13 இதே சொற்றொடரைப் பார்க்க). இந்த பகுதியில் காலத்தைக் குறிக்கும் ஏழு சொல்லாடல்களும் இறுதிக் காலமாகிய மேசியாவின் காலத்தைக் குறிக்கின்றன.*

*இந்த பகுதியும் இறுதிக் காலத்தைக் குறிக்கின்றது. இந்த பகுதியின் எதிர்மறை ஒப்பீடு வடிவம் கீழ்க்காணும் செய்தியை தெளிவுபடுத்துவதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிறது: இதுவரை ஆட்சி செய்தவர்கள் யாவேயினால் கவிழ்க்கப்பட்டு, தாழ்மைப் படுத்தப்படுவார்கள்* **(A)** *அவர்கள் நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கும்படி ஒரு இருட்டறையில் அடைக்கப்படுவார்கள்* **(B).** *ஆனால் இதுவரை தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்கள் யாவேயின் பிரசன்னமும் மகிமையும் இருக்கும் இடத்திற்கு உயர்த்தப்படுவார்கள் (யாவே இப்போது எருசலேமிலுள்ள சீயோனில் ஆளுகிறார்)* **(A[1])**. *இந்தப் பகுதியில் கீழ்க்காணும் எதிர்மறை ஒப்பீட்டை நாம் கவனிக்கலாம்: இதுவரை உயரத்தில் இருந்தவர்கள் இப்போது கீழ்நிலையில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டவர்கள் (மூப்பர்கள் என்று அவர்களுக்கு பெயர் தரப்படுகிறது, வ. 23) இப்போது உயர்த்தப்படுகிறார்கள், அதாவது சீயோன் மலைக்குக் கொண்டுவரப்படுகிறார்கள். மேலும் சேனைகளின் கர்த்தர் (யாவே சாபோத்) வானங்களின் இராணுவங்களின் வல்லமையை எடுத்துவிட்டார் (மேலே வானத்தில் உள்ள வல்லமைகள்; இது சாத்தானையும்*

அவனுடைய தூதர்களையும் குறிக்கிறது என்பது நிச்சயம்: லிவியாதான் மீதாக வெற்றி: ஏசாயா 27:1 மற்றும் தானி. 10:11ff; எபே. 2:2; 6:12; வெளி. 12:7-9; 20:1-3) மேலும் அவர் சீயோனில் அரசனாக ஆளுகை செய்யும்போது அவனை இருட்டறையில் கட்டிவைப்பார். யாவேயின் எதிரிகள் இருட்டறையில் நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கும்போது (அங்கே காரிருள் இருக்கும்; நியா. 1:6; 2பேதுரு 2:4), மூப்பர்கள் யாவேயின் மகிமையான பிரசன்னத்தில் மகிழ்ந்திருப்பார்கள். யாவேயின் மகிமைக்கு முன்பாக சூரியன் கலங்கும் சந்திரன் நாணமடையும். “சேனைகளின் கர்த்தர்” என்ற பெயரின் அர்த்தங்களில் முக்கியமானது அவர் வானத்தின் சேனைகளுக்குக் கட்டளையிடுகிறவர், அதாவது விழுந்துபோன தூதர்களுக்கு (அதாவது பிசாசுகளுக்கு) எதிராக இருப்பவர்களே வானத்தின் சேனைகள். பூமியின் தீய அரசர்களோடு சேர்ந்து செயல்பட்ட சாத்தானின் தூதர்களுடைய வல்லமைகள் எல்லாம் பறிக்கப்படும். வசனம் 21-ல் பிசாசுகள் இந்த உலகத்தின் அரசர்களைச் சூழ்ந்திருக்கும் வண்ணமாகவே வசனம் 23 –ல் மூப்பர்கள் தூதர்களால் சூழப்பட்டிருப்பார்கள். மூப்பர்கள் பரிசுத்த தூதர்களால் சூழப்பட்டிருக்கும்போது இவ்வுலகத்தின் மன்னர்கள் யாவேயின் நியாயத்தீர்ப்புக்காகக் காத்துக்கொண்டிருக்கும் பிசாசுகளால் சூழப்பட்டிருக்கிறார்கள் (வெளி. 4 மூப்பர்களையும் தூதர்களையும் குறித்து பார்க்க).

மேலே சொல்லப்பட்டபடி, வசனங்கள் 21–23 நிரூபிக்கும் உண்மையாவது: 24:1–6 (சிறு கூட்ட மக்கள் நியாயத்தீர்ப்பி- ருந்து தப்பிப்பார்கள் என்று சொல்லும் பகுதி) மற்றும் 24:16b-20 (வ. 19-20 பூமியின் முடிவை அறிவிக்கின்றது) ஆகியவை ஒன்றுக்கொன்று முரணானவைகள் அல்ல. மாறாக இந்தப் பகுதிகள் இறுதிக்கால நிகழ்வுகள் கீழ்க்காணும் கால வரிசையில் நடைபெறும் என்று அறிவிக்கின்றன: பாவத்தின் காரணமாக கடவுள் இந்தப் பூமியை நியாயந்தீர்ப்பார், அதிலிருந்து ஒரு சிறிய கூட்டம் மட்டுமே தப்பிக்கும் (24:1-6).[53] இந்தப் பகுதி மகா உபத்திரவ காலத்தில் வரும் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம், அந்திக் கிறிஸ்துவின் காலமாகிய இந்தக் காலத்தைக் குறித்து வெளி. அதிகாரங்கள் 6-19-ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. நியாயத்தீர்ப்பபின் முடிவு ஏசாயா 24:22 –ல் விவரிக்கப்பட்டிருக்கும் காரியங்களோடு இணைந்து நடைபெறும்: வானத்தின் சேனைகளும் (விழுந்துபோன தூதர்கள்) மற்றும் பூமியின் அரசர்கள் (கடவுளின் மக்களுக்கு எதிரான நம்பிக்கையற்ற மக்கள்) ஆகியோர் சிறை வைக்கப்படுவார்கள். ஏசாயா 24:22 –ல் விவரிக்கப்பட்டிருக்கும் பரலோகத்தின் இராணுவங்கள் சிறை வைக்கப்படும் நிகழ்வு வெளி. 20:1–3 –ல் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியோடு தொடர்புடையது என்று நாங்கள் நம்புகிறோம். வெளி. 6–19: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மகா உபத்திரவம் முடிவுக்கு வரும், அதோடு அந்தி கிறிஸ்துவும் கள்ளத் தீர்க்கதரிசியும் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (வெளி. 19:11ff); இந்தக் காலத்தில் சாத்தான் சிறையிடப்பட்டிருப்பான் (வெளி. 20:1–3). இவ்வுலகத்தின் தீய மக்களும் (அரசர்களும்) விழுந்துபோன தேவதூதர்களும் சிறை வைக்கப்பட்டு பல நாட்களுக்குப் பிறகு தண்டிக்கப்படுவார்கள் என்று ஏசாயா அறிவிக்கிறார் (எபிரெயம்:வுமராப் யாமிம்); ஆகவே, கிறிஸ்துவின் வருகைக்கும் இறுதி நியாயத்தீர்ப்புக்கும் இடையில் கால இடைவெளி இருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும்படி ஏசாயா “பல நாட்கள்” என்று சொல்கிறார். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான் வேதாகமத்தின் இறுதி நூலாகிய தனது வெளிப்படுத்தல் நூ- ல் அதை ஆயிரம் வருடம் என்று சொல்கிறார் (வெளி. 20:1-10 –ல் ஆயிரம் என்ற சொல் 6 முறை இடம் பெறுகிறது).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கும் இறுதி நியாயத்தீர்ப்புக்கும் (உலகத்தின் முடிவுக்கும்) இடையில் கால இடைவெளி இருக்கிறது என்பதை மறுக்கிற வியாக்யானிகள் 24:22-ல் இடம்பெறும் “பல நாட்களுக்குப் பிறகு” என்ற சொற்றொடரை சரியாக விளக்க முடிவதில்லை.[54] இந்த அறிஞர்களைப் பொறுத்தவரை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும் உலகத்தின் முடிவும் இறுதி நியாயத்தீர்ப்பும் அதாவது அவிசுவாசிகளையும் விழுந்துபோன தூதர்களையும் நியாயந்தீர்ப்பதும் ஒன்றுதான். அப்படியல்ல என்று ஏசாயா கூறுகிறார். இருட்டறையில் நீண்ட காலம் காத்திருந்த

[53] Compare passages Rev 6:8 and 9:15, which state that a quarter and a third of the earth’s population will perish in the judgments of the Great Tribulation.

[54] As e.g. Joh. Lindblom, *Die Jesaja-Apokalypse: Jes. 24−27.* Lunds Universitets Årsskrift. N. F. Avd. 1. Volume 34. No. 3 (Lund: C. W. K. Gleerup, 1938), p. 28. He says the author was unaware of his contradiction [“...without the author being aware of his self-contradiction.”]). Other exegetes (e.g. Ernst Liebmann) simply change (amend) the traditional Hebrew text by striking “after” (*min*). This alteration is completely arbitrary since 1QIs[a], LXX, the Vulgata and other early texts confirm the Masoretic text.

பிறகுதான் நியாயத்தீர்ப்பு நடைபெறும். நாம் ஏசாயா 26:14, 26:19 மற்றும் 27:1ff ஆகிய பகுதிகளுக்கு விளக்கம் கொடுக்கும்போது இதைப் பற்றி நாம் மீண்டும் சிந்திக்கலாம். வசனம் 23-ல் மூப்பர்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது மட்டுமல்ல விடுதலைப் பயணக் கருத்தும் (யாத். 24) இந்தப் பகுதிகளுக்கும் வெளிப்படுத்தல் (அதி. 4-5) பகுதிகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமையாக இருக்கின்றன. இந்த விடுதலைப் பயணக் கருத்து ஏசாயாவின் புத்தகத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது (ஏசாயா 11:11ff; 27:12-13; 43:16ff; 52:4ff; 63:9ff).

(b) நன்றியின் பாடல்: எதிரியான நகரம் அழிக்கப்படுகிறது: 25:1-5

இந்த வேதபகுதியை கீழ்க்காணுமாறு எதிர்மறை ஒப்பீட்டு வடிவமைப்பு முறையில் தெளிவுபடுத்தலாம்:

**A** துதி: யாவே உயர்த்தப்பட்டிருக்கிறார்: வ. 1
  **B** எதிரி நகரம் நிரந்தரமாக அழிக்கப்படுகிறது: வ. 2
    **C** எதிரி நகரத்தின் இனங்கள் யாவேயைக் கனப்படுத்துகின்றன: வ. 3
  **B¹** யாவே ஏழைகளையும் தேவையுள்ளவர்களையும் பாதுகாக்கிறார்: வ. 4
**A¹** யாவே கொடுமையானவர்களின் இரைச்சலை அமர்த்துகிறார்: வ. 5

முதல் வசனம் 2-ம் வசனம் மற்றும் இந்தப் பகுதியின் கடைசி வசனமாகிய 5-ம் வசனம் ஆகியவற்றிற்கு முரணுருவாக வருகிறது: யாவே உயர்த்தப்பட்டிருக்கும்போது (வ. 1: **A**), எதிரி நகரமும் கொடுமையான அந்நியர்களும் (வ. 2: **B**), அதாவது கடவுளுடைய பிள்ளைகளை ஒடுக்கிறவர்கள் அழிக்கப்படுகிறார்கள் அல்லது தங்களைத் தாங்களே ஒடுக்குகிறார்கள் (வ. 5: A¹). ஒடுக்குகிறவர்கள் மீண்டும் அவர்களால் ஒடுக்கப்படுகிறவர்களும் யாவேயினால் காக்கப்படுகிறவர்களுமாகிய தேவையுள்ளவர்கள் மற்றும் ஏழைகளுடன் முரண்படுத்திக் காண்பிக்கப்படுகிறார்கள் (வ. 4: B¹). இந்த பகுதியின் மைய வசனம் இனங்களின் நகரம் யாவேக்கு மரியாதை செலுத்தி அவருடைய திருப்பெயருக்கு கனத்தைச் செலுத்தும் என்று சொல்கிறது (வ. 3: **C**).

யாவே ஒடுக்கிறவர்களை நியாயந்தீர்ப்பதனால் தீர்க்கதரிசி யாவேக்கு துதி செலுத்துகிறார் (ஏசாயா 12:1-6).

(c) சீயோன் மலையில் விருந்து: 25:6-8

இந்த பகுதி கீழ்வருமாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது:

**A** இந்த மலையில் யாவே அனைத்து இனங்களுக்குமான விருந்தை ஆயத்தம் செய்கிறார் வ. 6
  **a** செழிப்பான உணவும் பழம்பெருமை வாய்ந்த திராட்சைரசமுள்ள விருந்து
  **b** சிறப்பான இறைச்சிகளும் தரமான திராட்சைரசமும் உள்ள விருந்து

**B** இந்த மலையில் யாவே அழிக்கிறார் வ. 7
  **a** அனைத்து மக்கள் மேலுள்ள முக்காடு
  **b** அனைத்து மக்களையும் மூடியிருக்கும் மூடல்

**C** யாவே மரணத்தை நித்தியமாக விழுங்குவார் வ. 8
  **a** அவர் அனைத்து முகங்களில் இருந்தும் கண்ணீரைத் துடைப்பார்
  **b** பூமி முழுவதும் உள்ள மக்களின் நிந்தையை நீக்கிப்போடுவார்
  இப்படி கர்த்தர் பேசியிருக்கிறார்.

ஏசாயா 25:6 –ம் வசனம் 24:21-23 –ன் தொடர்ச்சி என்று பல வியாக்யானிகள் கருதுகிறார்கள். 25:6.7.10 -ல் வரும் “இந்த மலையில்” எனும் சொற்றொடர் 24:23-ல் முன்பு குறிப்பிடப்பட்ட சீயோன் மலையைக் குறிக்கிறது. அரசர்கள் முடிசூட்டு விழாவில் விருந்தளிப்பதைப் போல, யாவே பூமியில் தம்முடைய ஆட்சியை ஆரம்பிக்கும்போது எருசலேமில் உள்ள சீனாய் மலையில் அனைத்து இனங்களுக்குமான ஒரு விருந்தை

ஆயத்தம் செய்கிறார் (ஏசாயா 2:1ff). வசனம் 6 யாவே மக்களுக்கு என்ன கொடுப்பார் என்பதைப் பற்றிப் பேசும்போது வசனங்கள் 7-8 அவர் அந்த நாளில் எதை எடுத்துப் போடுவார் எதை அழித்துப் போடுவார் என்பதைப் பற்றிப் பேசுகிறது.[55]

ஒரு பெரிய விருந்துடன் மேசியாவின் அரசு ஆரம்பமாகும். மத். 8:10-11 –ல் உள்ள இயேசுவின் வார்த்தைகள் நினைவுக்கு வருவதை தவிர்க்க முடியாது. “மக்களின் முக்காட்டை அவர் அழிப்பார்” என்பதை சில வியாக்யானிகள் 2கொரி. 3:15 –உடன் தொடர்புபடுத்தி விளக்குகிறார்கள், அதாவது யாவே ஆன்மீக குருட்டுத் தனத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பார். மேசியாவின் அரசின் ஆரம்பத்தில் வைக்கப்படும் விருந்து கர்த்தருக்கு உரியவர்களுக்குத்தான் என்பதால், நாங்களும் இன்னும் பல வியாக்யானிகளும் இது கர்த்தர் பாடுகளுக்கும் துன்பத்திற்கும் முடிவைக் கொண்டுவருவார் என்பதைக் குறிப்பதாகக் கருதுகிறோம் (ஏசாயா 35:10; வெளி. 7:17 மற்றும் புதிய எருசலேமில்: வெளி. 21:4). சில மக்கள் மேசியாவின் ஆட்சியில்தான் விசுவாசத்திற்குள் வருவார்கள் (ஏசாயா 66:18-20; சகரியா 14:16).

“அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்” வ. 8a: உயிர்த்தெழுந்த விசுவாசிகளுக்கு ஆயிரம் வருட அரசாட்சியில் இது யதார்தமாக இருக்கும், மற்றவர்கள் இதை மேசியாவின் அரசிற்குப் பிறகுதான் அனுபவிப்பார்கள் (ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு: ஏசாயா 26:14.19 மற்றும் வெளி. 20:5-6). நித்தியத்தில் வாக்குத்தத்தம் முற்றிலுமாக நிறைவேறும் (வெளி. 21:4; 22:1-5). ஆயிரம் வருட அரசாட்சியில் யாவேயோடு ஆளுகை செய்யும் உயிர்த்தெழுந்த விசுவாசிகள் ஒரு போதும் இனிமேல் மரணமடையமாட்டார்கள் (ஏசாயா 25:8; 26:19; 1கொரி. 15:54; வெளி. 20:4-6), இன்னும் அழிவிற்குரிய இவ்வுலகத்தின் உடலை அணிந்திருப்பவர்கள் (ஆனால் பிசாசு கட்டப்பட்டிருக்கிற காரணத்தினால் சோதிக்கப்பட முடியாதவர்கள்: வெளி. 20:1-3; ஏசாயா 24:22) மீண்டும் அதிக முதிர்வயதை அடைவார்கள் (அதாவது ஆதாம் முதல் நோவா வரையுள்ள முற்பிதாக்களைப் போல; ஏசாயா 65:20; சகரியா 8:4). ஏசாயா 65:18-20 மேசியாவின் ஆட்சியில் மரணம் ஒரு யதார்த்தமாகவே காணப்படும் என்று சொல்கிறது. ஏசாயா 25:8a –ல் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதி, புதிய வானம் புதிய பூமி படைக்கப்படும் நித்தியத்தில்தான் முழுவதுமாக நிறைவேறும் (ஏசாயா 21:4).

(d) மகிழ்ச்சியின் பாடல்: சீயோன் மலையின் மகிழ்ச்சி: 25:9-10a

இந்தப் பகுதி இதைத் தொடர்ந்து வரும் பகுதிக்கு (25:10b-12) எதிர்மறை ஒப்பீடாக வருவது மிகவும் ஆச்சரியமாக உள்ளது. மேலே சீயோன் மலையில் மகிழ்ச்சி ஆளுகை செய்யும்போது, எதிரியாகிய மோவாப் கீழே தாழ்த்தப்பட்டு அழிக்கப்படுகிறது (வ. 10b-12). மக்களைப் பாதுகாக்கும் யாவேயின் கரம் சீயோனில் தரித்திருக்கும்போது, மோவாப் பயனற்ற வகையில் தன்னைத்தானே மீட்டுக்கொள்ள தன்னுடைய கைகளை நீட்டுகிறான். கர்த்தருடைய கரம் (வ. 10) என்பது ஏசாயாவின் புத்தகத்தில் பல முறை குறிப்பிடப்பட்டிருக்கிறது, உதா. ஏசாயாவின் விசுவாசத்திற்கான ஜெபம் (26:11).

(e) மோவாபின் உயர்ந்த அரணாக மதில்கள் வீழ்கின்றன: 25:10b-12

மோவாப் கடவுளுடைய மக்களுக்கு எதிராக இருக்கின்ற அனைத்து இன மக்களையும் குறிக்கிறது என்று நாங்களும் இன்னும் பல வியாக்யானிகளும் கருதுகிறோம். ஏசாயா 26:1 –ல் வேண்டுமென்றே யூதாவுக்கு எதிராக மோவாபைப் பற்றிப் பேசுகிறார். உயர்ந்த அரணான மோவாபியரின் மதில்கள் தாழ்ந்து வீழ்ந்தன, யாவே யூதாவின் நகரத்தையோ பெலப்படுத்துகிறார் (நிச்சயமாக எருசலேமை). ஏசாயா 25 கடவுளுடைய மக்களை எதிர்க்கும் இனங்கள் அனைத்துக்கும் பிரதிநிதியாக மோவாபைப் பயன்படுத்துகிறது, ஏசாயா 34 இதே நோக்கத்திற்காக ஏதோமைப் பயன்படுத்துகிறது: (வ. 5-6) மற்றும் 63 (வ. 1). ஏன் மோவாபும ஏதோமும் உருவகமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்? ஏசாயாவின் புத்தகம் திரும்பத் திரும்ப விடுதலைப் பயணத்தைக் குறித்துப் பேசுகிறது. மோவாபும் ஏதோமும் இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த நாட்டுக்குள் செல்வதைத் தடுத்தார்கள் என்பது நன்கு அறியப்பட்ட உண்மையாகும்.

### (3) **மூன்றாவது பகுதி: யாவேயின் வெற்றி: மீட்பும் நியாயத்தீர்ப்பும்: அதி. 26**

[55] Franz Delitzsch, *Commentar über das Buch Jesaia*, 4th revised edition (Leipzig: Dörfling & Franke, 1889), p. 295.

*இருபத்தொரு வசனங்கள் (அதாவது, மூன்றாவது முறை “அந்த நாளில்” என்று வரும் வ. 1 –– ருந்து நான்காவது முறை “அந்த நாளில்” என்று வரும் 27:1 வரை) ஒரே வடிவத்தைப் பின்பற்றுகின்றன[56] அது இந்தப் பகுதியின் ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களாகவும் எதிர்மறை ஒப்பீடாகவும் உள்ள அமைப்பை பின்வருமாறு தெளிவாக்குகின்றன:*

**A** *மீட்பும் நம்பிக்கையும்:* ***இனங்கள் நுழையும்படி வாசல்களைத் திறவுங்கள்*** *(வ. 1-6)*
- a *பாதுகாக்கப்பட்ட நகரத்தின் நிமித்தமாக நீதியுள்ள இனம் மகிழுதல் (வ. 1-2)*
  - b *நம்புகிறவர்களுக்குச் சமாதானம் (வ. 3)*
  - $b^1$ *என்றென்றைக்கும் கர்த்தரை நம்புதல் (வ. 4)*
- $a^1$ *உயர்ந்த நகரத்தில் உயரமாக வாழ்கின்ற மக்களின் அழிவு (வ. 5-6)*

**B** *நீதிமான்களின் காத்திருப்பும் கடவுள் பயமற்றவர்களின் குருட்டுத்தனமும்(வ. 7-10)*
- a *நீதிமான்களின் செம்மையான வழி (வ. 7)*
  - b *நாங்கள் உமக்காகக் காத்திருக்கிறோம் (வ. 8)*
  - $b^1$ *என் ஆத்துமாக உமக்காக ஏங்குகிறது (வ. 9*a)
- $a^1$ *கடவுள் பயமற்றவர்களின் தீமையும் குருட்டுத்தனமும் (வ. 9*b*-10)*

**C** ***அந்நிய ஆட்சியாளர்கள் மீது யாவேயின் வெற்றி*** *(வ. 11-15)*
- a *யாவே! உம்முடைய கை உயர்த்தப்பட்டிருக்கிறது, எதிரிகள் எரிக்கப்படுவார்கள் (வ. 11)*
  - b *யாவே! நீர் எங்களுக்கு சமாதானத்தைக் கொண்டுவந்தீர் - நீரே எங்களுக்கு எல்லாவற்றையும் செய்தீர் (வ. 12)*
    - c *யாவே!,* *நாங்கள் உம்முடைய நாமத்தை மட்டும் உயர்த்துகிறோம் மற்ற ஆட்சியாளர்களை அல்ல (வ. 13)*
  - $b^1$ *மரித்தவர்களின் ஆவி திரும்ப வருவதில்லை - நீரே எதிரிகளை அழித்தீர் (வ. 14)*
- $a^1$ *யாவே, நாட்டைப் பெரிதாக்கி எல்லைகளை விஸ்தாரமாக்கினீர் (வ. 15)*

**$B^1$** *மக்களின் ஏக்கமும் யாவேயின் மரித்தோருடைய வெளிச்சத்தின் பனியும் (வ. 16-19)*
- a *யாவே! எங்கள் துன்பத்தில் நாங்கள் உம்மிடத்தில் வருவோம் (வ. 16)*
  - b *நாங்கள் பிரசவிக்கப்போகிற பெண்ணைப் போல் இருந்தோம் (வ. 17)*
  - b' *நாங்கள் காற்றைப் பெற்றோம் – மீட்பு எங்களுக்கு வரவில்லை (வ. 18)*
- $a^1$ *உங்களில் மரணமடைந்தவர்கள் உயிர்பெறுவர் – என்னுடைய பிணங்கள் எழும் (வ. 19)*

***அ/*** *நம்பிக்கையும் இழப்பீடும்:* ***கதவைப் பூட்டுங்கள் யாவே வெளியே போகிறார்!*** *(வ. 20-21)*
- a *உங்கள் அறைகளுக்குள் நுழைந்து உங்கள் கதவுகளைப் பின்னாகப் பூட்டுங்கள் (வ. 20*a)
  - b *கோபம் கடந்து போகும் மட்டும் ஒளித்துக்கொண்டிரு (வ. 20*b).
  - $b^1$ *யாவே பூமியின் மக்களை அவர்களுடைய பாவத்தின் நிமித்தம் தண்டிக்கிறார் (வ. 21*a)
- $a^1$ *பூமி இரத்தத்தை வெளிப்படுத்தும்; பூமி தான் கொன்றழித்தவர்களை இனி மறைக்காது (வ.* 21b)

*ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களைப் போன்று அமைந்துள்ள இந்தப் பகுதிகளைக் குறித்த சில விளக்கங்களும் அவதானிப்புகளும்:*

- **A** *மற்றும்* **$A^1$:** *இங்கே தப்பித்தவர்கள் யூதாவின் நாட்டில் பாட்டுப் பாடுகிறார்கள் (* בְּאֶרֶץ יְהוּדָה); *உலகம் நீதிமான்களின் இரத்தத்தை இனி மறைக்காது (வ. 21). நீதியுள்ள*

[56] Similar in J. Alec Motyer, Motyer, *The Prophecy of ISAIAH: An Introduction & Commentary*. Downers Grove, Illinois: InterVarsity Press, 1993), p. 212.

*இனங்கள் உள்ளே நுழையும்படி வாசல்கள் திறக்கப்படுகின்றன (வ. 2); யாவேயின் மக்கள் அறைகளுக்குள் நுழைந்து கதவுகளை உள்ளாகப் பூட்ட வேண்டும் (வ். 20*a*). இங்கே மக்கள் நம்பிக்கை வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் (வ. 3-4); அங்கே மக்கள் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் (வ. 20ஹ). இங்கே உயர்ந்த நகரத்தில் இருந்த மக்கள் கீழே தள்ளப்பட்டு புழுதியில் போட்டு மிதிக்கப்படுகிறார்கள் (வ. 5-6); அங்கே யாவே பூமியில் உள்ள மக்களைத் தண்டித்து நீதிமான்களின் இரத்தத்தையும் அவர்கள் கொலை செய்தவர்களையும் இனிமேல் மறைக்க முடியாதபடி செய்கிறார் (வ. 21).*

- **B** *மற்றும்* **B$^1$:** *யாவே இங்கு நீதிமான்களுக்கான பாதையைச் செவ்வைப்படுத்துகிறார் (வ. 7); அங்கே மரணமடைந்தவர்களை யாவே புழுதியில் இருந்து எழுப்புகிறார் (வ. 19). இங்கே நீதிமான் யாவேக்காக ஏக்கங்கொண்டு காத்திருக்கிறான் (வ. 8-9); அங்கே மக்கள் குழந்தைப் பேற்றிற்காகக் காத்திருக்கிற கர்ப்பிணிப் பெண்ணைப்போல வேதனையில் நெழிகிறார்கள் (வ. 17-18). இங்கே கடவுள் பக்தியற்றவர்கள் தீமையாக செயல்பட்டு யாவேயின் மகத்துவத்தை அசட்டை செய்கிறார்கள் (வ. 10); அங்கே துன்புறுத்தப்பட்ட மக்கள் யாவேயினிடத்தில் திரும்புகிறார்கள் (வ. 16).*

- **C:** *இங்கே தம்முடைய எதிரிகளைப் பட்சிக்கிறதில் யாவேயின் கரம் உயர்ந்திருக்கிறது (***a:** *வ. 11); அங்கே யாவே இனத்தைப் பெருக்கி நாட்டின் எல்லைகளை விஸ்தரிக்கிறார் (***a$^1$:** *வ. 15). இங்கு யாவே சமாதானத்தை உண்டாக்கி அனைத்து வேலைகளையும் முடிக்கிறார் (***b:** *வ. 12); அங்கு யாவே தண்டித்து தம்முடைய அனைத்து எதிரிகளையும் அழிக்கிறார் (***b$^1$:** *வ. 14). இந்தப் பகுதியின் மையத்தில் மக்கள் யாவேயோடு சேர்ந்துகொள்கிறார்கள்: மற்ற ஆட்சியாளர்கள் எங்களை ஆண்டார்கள்; ஆனால் நாங்கள் உம்முடைய திருப்பெயரை மட்டுமே கனப்படுத்துவோம் (***c:** *வ. 13). இந்த வசனமும் ஒரே மையமுள்ள வட்டங்களின் வடிவில் அமைந்திருக்கிறது:* **a:** *யாவே தம்முடைய இரண்டு தெய்வீகப் பெயர்களினால் இங்கு அறியப்படுகிறார்: யாவே, ஏலோஹிம்; முதலாவது பெயர் தன்மைப் பன்மையில் முடிவடைகிறது (எங்கள் கடவுளாகிய யாவே)* **b:** *உம்மைத் தவிர வேறு ஆட்சியாளர்கள்* **a$^1$:** *யாவேயைக் குறிக்கும் இரண்டு பதங்களும் முன்னிலை ஒருமையில் முடிவடைகிறது: உம்முடைய திருப்பெயர் மற்றும் உமக்கு மட்டுமே.*

*(a) யூதாவின் நாட்டில் வெற்றியின் பாடல்: 26:1-6*

*இறுதியாக யாவே யூதாவின் நாட்டில் உள்ள எருசலேமில் வெற்றி பெறும்போது மீட்கப்பட்ட மக்கள் மகிழ்ச்சியினால் பாடுகிறார்கள். யூதா அரணிக்கப்படுகிறது (வ. 1-4) ஆனால் எதிரி நகரமோ தரையில் தள்ளப்படுகிறது (வ. 5-6).*

*(b) தீர்க்கதரிசியின் விசுவாச ஜெபம்: 26:7-19*

*ஆரம்பத்தில் பார்க்கும்போது 1-6 வரையுள்ள வசனங்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பது போல 7-19 வசனங்கள் பிணைப்பின்றி இருப்பது ஆச்சரியமாக உள்ளது. இந்த அதிகாரத்திற்கும் இந்தப் பகுதிக்கும் பல்வேறு தோற்றுவாயக் கருதுகோள்களை பல்வேறு வியாக்யானிகள் முன்வைக்கிறார்கள். ஆயினும் இந்தப் பகுதி ஒரே மையத்தைக்கொண்ட வட்டங்களில் வடிவிலும் எதிர்மறை ஒப்பீட்டு வடிவிலும் அமைந்திருக்கிறது என்பதை ஒருவர் புரிந்துகொண்டால் இவ்வாறு பிணைப்பின்றி இருப்பது ஆசிரியர் நோக்கத்தோடு செய்த காரியம்தான் என்பதை அறிந்துகொள்வார்: வசனங்கள் 1-6: கடவுள் தம்முடைய மக்களையும் அவருடைய நகரத்தையும் மீட்டு தனது எதிரி நகரத்தை அழிப்பார் என்று வாக்குறுதி கொடுக்கிறார். ஆயினும் மக்கள் பொறுமையாக இருக்க வேண்டும்; மக்கள் அறைகளுக்குள் நுழையவும் யாவே செயல்பட்டு எதிரிகளை அழிக்கும்வரைக் காத்திருக்கும்படியும் உற்சாகப்படுத்தப்படுகிறார்கள் (வ. 20-21). ஆனால் இப்போதோ மக்கள் பிரசவிக்கிற பெண்ணைப் போல கர்ப்ப வேதனைப்படுகிறார்கள். இந்த பகுதியின் நடுவில் (வ. 7-19), கடவுள் இடைப்பட்டு தமது மக்களுடைய நாட்டை மீட்டெடுப்பதன் மூலமாகவும் இறந்தவர்களை உயிரோடு எழுப்புவதன் மூலமாகவும் (வ.19,21) மக்களையும் மீட்க வேண்டும் என்று தீர்க்கதரிசி தம்முடைய நம்பிக்கையில் விண்ணப்பிக்கிறார் (வ. 15: தேசிய மீட்பு). இவ்வாறு தீர்க்கதரிசி தன்னுடைய வெளிப்பாட்டுப் பகுதியில் இனத்தின் மீட்பும் (வ. 15) உடல்ரீதியான உயிர்த்தெழுதலும் (வ. 19.21) ஒன்றாக நடைபெறும் என்று சொல்கிறார். இது*

***"இறுதியியல் கூட்டுச் சேர்க்கை" என்று அழைக்கப்படுகிறது!*** *வசனம் 6-லிருந்து 7-க்கு மாறும்போது ஏற்படும் பிணைப்பற்ற தன்மை மற்றும் "முரண்பாடு போல காணப்படும்" 14 மற்றும் 19 வசனங்கள் ஆகியவற்றின் காரணமாக பல்வேறு வியாக்யானிகள் இந்தப் பகுதி பல ஆசிரியர்களால் எழுதப்பட்டது என்று பின்நாட்களில் இடைச்செருகல் செய்யப்பட்டது என்று கூறுகிறார்கள். வசனம் 14-ல் "அவர்கள் செத்தவர்கள், ஜீவிக்கமாட்டார்கள்" என்றும் ஆவிகள் திரும்ப எழுந்திருக்காது என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் 19-வது வசனம் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுகிறது. இந்த வசனம் இஸ்ரவேல் நாட்டின் மீட்டுருவாக்கத்தைப் பற்றி உருவக மொழியில் பேசாமல் உண்மையான உடல்ரீதியான உயிர்த்தெழுதலைக் குறித்துப் பேசுகிறது.*[57] *வசனம் 21 இதை உறுதி செய்கின்றது. சிறப்பாக அதிகாரம் 27 (வசனங்கள் 2-13) இறுதிக் காலத்தில் நிகழும் தேசிய மீட்பைக் குறித்துப் பேசுகிறது (அந்த நாளில்). வசனங்கள் 14-ம் 19-ம் ஒன்றோடு ஒன்று முரண்படுகிறதா என்ற கேள்வி இன்னும் பதிலளிக்கப்பட வேண்டியிருக்கிறது.*

*வசனம் 19 மரித்தவர்கள் உயிரோடு எழும்புவார்கள் என்றும் 14 அவர்கள் ஜீவிப்பதில்லை என்று சொல்கின்றன. சில தாராளவாத இறையியலாளர்களுக்கு இது ஒரு பிரச்சனையாக இருப்பதில்லை ஏனெனில் 19-ம் வசனம் பிறகு வரும் அலங்காரிப்புக்கான வார்த்தைகள்தான்: உதா. விமர்சக வியாக்யானி பெர்னார்ட் டூம் (*Bernhard Duhm*). ருடொல்ஃப் (*Rudolph*) அவர்களும் இவ்வாறுதான் விளக்கப்படுத்துகிறார்கள்.*[58] *அவர் ஏசாயா* ***25:8*** *முழு உலகத்தைப் பற்றியும் பேசும் வேளையில் ஏசாயா* ***26:19*** *ஒரு குறிப்பிட்ட மக்களைக் குறித்துப் பேசுகிறது. உண்மையில் ஏசாயா 25:8 மரணம் விழுங்கப்படும் என்று சொல்கிறது, ஆனால் ஏசாயா 26:19 யாவேயின் மக்கள் மீண்டும் உயிர்த்தெழுந்திருப்பார்கள் ("உங்கள் மரித்தோர்") என்று சொல்கிறது. ருடொல்ஃப்பைப் பொறுத்தவரை இரண்டு வசனங்களும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. ஆகவே இந்தப் பகுதிகள் வெவ்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்டவை என்று சொல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை (ருடொல்ஃப்பைப் பொறுத்தவரை இதுதான் முரண்பாட்டிற்கான காரணம்). இவ்விதமான வேதாகம விமர்சனத்திற்கு ஒரு நற்செய்திக் கோட்பாட்டாளர் எப்படி பதிலுரைப்பது?* ***ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை*** **(Premillennialism)** ***நம்புகிறவர்கள் மட்டுமே ஏசாயாவின் புத்தகத்தின் மெய்த்தன்மையைக் குறித்து எழுப்படும் இந்த விமர்சனங்களுக்குச் சரியாக பதிலளிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்:*** *ஏசாயா 26:14 –ல் சொல்லப்படும் இனிமேல் ஜீவிக்கமாட்டாதவர்கள் ஏசாயா 24:21-22 –ல் சொல்லப்பட்டிருக்கும் இருட்டறையில் (அதாவது மரணத்தின் அரசில்) இறுதி நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கும் இந்த பூமியின் அரசர்களைப் போன்றவர்கள். அவர்கள் ஏசாயா 26:19 –ல் வரும் யாவேக்குரியவர்களாகிய விசுவாசிகளோடு உயிரோடு எழுந்திருப்பதில்லை (ஏசாயா 14:20-21). வெளி. 20:1-10 –ஐ எழுத்தின்படி விளக்குவதுதான் முழுமையான தெளிவைக் கொடுக்கிறது. மரணமடைந்த அவிசுவாசிகள் (மரணமடைந்த விசுவாசிகளுக்கு மாறாக) ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பாக எழுந்திருப்பதில்லை என்று அது வெளிப்படையாகச் சொல்கிறது (வெளி. 20:5), கிறிஸ்துவின் ஆட்சிக்குப் பிறகுதான், அதாவது ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிறகு (****"அநேக நாட்களுக்குப் பிறகு"*** *ஏசாயா 24:22) அவர்கள் எழுந்திருப்பார்கள். அவிசுவாசிகள் மீண்டும் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்றாலும் (இல்லையென்றால் அது தானி. 12:2 மற்றும் யோவான் 5:29 போன்ற பகுதிகளுக்கு முரண்பாடாக இருக்கும்), வெளி. 20:14-15 கூறுகிறபடி அவர்கள் உயிர்த்தெழுந்த பிறகு அக்கினிக் கடலில் அல்லது நரகத்தில் தள்ளப்படுவார்கள். அழிவுக்கான இந்த உயிர்த்தெழுதல்*

---

[57] *வசனம் 19 உடல்ரீதியான உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது என்று பல வியாக்யானிகள் நம்புகிறார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டோம்; ஆனால் சுமார் மூன்றில் ஒரு பங்கு விளக்கவுரையாளர்கள் எசே. 37:11*ff *(எலும்புகள் உயிரடைவது தேசிய மீட்டுருவாக்கத்தின் படமாக) மற்றும் ஓசியா 14 ஆகிய பகுதிகளை இஸ்ரவேல் நாட்டின் மீட்டுருவாக்கமாகத்தான் பார்க்கிறார்கள். பத்தில் எட்டு (சிலவேளை இதைவிட அதிகமான பேர்) மொழிபெயர்ப்பாளர்கள் அல்லது விளக்கவுரையாளர்கள் 19-ம் வசனத்திள் நான்கு பகுதிகளுமே உடல்ரீதியான உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசுகிறது என்கிறார்கள். சில மொழிபெயர்ப்புகள் இறையியல் கருத்துக்களின் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. உதா. உடல்ரீதியான உயிர்த்தெழுதல் என்பது பின்நாட்களில் யூத மதத்தில் எழுந்த நம்பிக்கையைப் பிரதிப- க்கிறது என்ற கருத்து. இந்த சுருக்கமான விளக்கவுரையில் இந்த பிரச்சனையை முழுமையாகக் கையாள்வது இயலாது. எங்கள் ஆய்வுக் கட்டுரையை வாசிக்கும்படி வாசகர்கள் பரிந்துரைக்கப்படுகிறார்கள். இந்த இடத்தில் எபிரெய ஆசிரியர் தன்னுடைய கடிதத்தில் அதிகாரம் 11:17-19 –ல் கடவுள் மரித்தோரை உயிரோடு எழுப்ப வல்லமையுள்ளவர் என்பதை நம்பினார் என்று குறிப்பிடுவதை மட்டும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறோம் (ரோமர் 4:17-ஐயும் பார்க்க).*

[58] Wilhelm Rudolph, *JESAJA 24 – 27*, Beiträge zur Wissenschaft vom Alten und Neuen Testament, 4th series, booklet 10 (Stuttgart: W. Kohlhammer Verlag, 1933), p. 48-49.

**“இரண்டாம் மரணம்” என்று அழைக்கப்படுகிறது**. அவிசுவாசிகளும் உடல்ரீதியாக உயிரோடு எழுப்பப்படுவார்கள் (தானி. 12:2, யோவான் 5:29 மற்றும் 1கொரி. 15:22ச்ச்), ஆனால் அவர்களுடைய உயிர்த்தெழுதலும் நித்திய நிலைமையும் (வெளி. 20:5-6-ல் சொல்லப்பட்ட “முதலாம் உயிர்த்தெழுதல்” –க்கு மாறுபட்டதாக இருக்கிறது) “இரண்டாம் மரணம்” என்று சித்திரிக்கப்பட்டிருக்கிறது (ஏசாயா 20:14, வ. 6) ஏனெனில் அவிசுவாசிகள் ஏற்கனவே ஆவிக்குரிய நிலையில் மரணமடைந்திருக்கிறார்கள். ஆகவே ஏசாயா 26:14 மற்றும் 26:19 – ஆகிய பகுதிகளுக்கு இடையில் உள்ள முரண்பாடு தோற்றத்தில் மட்டுமே காணப்படுகிறது. ருடொல்ஃப் போன்ற விமர்சகர்களுடைய விமர்சனத்திற்கு ஆயிரம் வருட ஆட்சிக்குப் முந்தைய கிறிஸ்துவின் வருகையைக் குறித்த கொள்கையே சரியான பதிலைத் தருகிறது, ஆயிரம் வருட ஆட்சியில்லை என்ற கொள்கை சரியான பதிலைத் தருவதில்லை என்று நாங்கள் நம்புகிறோம்.[59]

இந்த வசனங்களுக்கான சில விளக்கவுரைகள்:

வ. **7-10:** தற்காலத்திலும் மகா உபத்திரவ காலமாகிய எதிர்காலத்திலும் உள்ள நோவுள்ள அனுபவங்கள்.

வ. **11-15:** ஒடுக்குமுறையாளர்கள் இறுதியில் வெற்றிகொள்ளப்படுவார்கள், கடவுளின் மக்கள் சமாதானமாக வாழ்வார்கள். கடவுள் பயமற்றவர்கள் மரணமடைந்து இவ்வுலகத்தில் உள்ள நடப்புகளில் இனிமேல் தலையிட முடியாத நிலை வரும்போது மட்டுமே இது சாத்தியமாகும் (ஏசாயா 14:20-21). பூமியில் அவர்களுடைய நினைவுகூட முழுவதும் துடைத்து எறியப்படும்.

வ. **16-19:** ஆகிலும் இஸ்ரவேல் திரும்பக்கட்டப்படுதலும் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் இனிமேல் நடைபெற வேண்டியவைகள். ஒரு கர்ப்பிணித்தாய் தன்னுடைய குழந்தைப் பேற்றிற்காக வேதனையோடு காத்திருப்பதைப் போல தீர்க்கதரிசியும் கடவுளுடைய மக்களும் மீட்புக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் கடவுளிடம் ஜெபிக்கதான் முடியும் (வ. 16), அவர்கள் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய முயற்சிகள் அனைத்தும் வீண்… “காற்று” (வ. 18). யாவே தன்னுடைய மரித்தோரை உயிரோடு எழுப்புவார் என்று தீர்க்கதரிசி நம்புகிறார்: வ. 19a: ➔ மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடு எழுந்திருப்பார்கள்”: எபிரெய மொழியில் இது அழகிய இருமைத் தொகுதியை உருவாக்குகிறது (chiasmus): „உம்முடைய மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள், என்னுடைய பிரேதங்களும் எழும்!”. **„உம்முடைய மரித்தவர்கள்”** என்பது யாவேக்குரிய மக்களையும் இப்போது தீர்க்கதரிசியின் வாக்குகளைக் கேட்டுக்கொண்டிருக்கும் மக்களையும் குறிக்கும். வசனங்கள் 7-19 சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் ஏசாயாவின் ஜெபமாக இருக்கிறது. வசனம் 19-ல் வரும் **“பனி”** என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பதாக நாங்கள் கருதுகிறோம். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கடவுள் மரணமடைந்தவர்களை எழுப்புவார் என்பதை நாம் பு.ஏ. பார்க்கிறோம் (ரோமர் 8:11). ➔ **“மண்ணிலே தங்கியிருக்கிறவர்கள்”** (26:19b) என்பதும் மரணமடைந்தவர்களையே குறிக்கும். அதேபோல அதே வசனத்தில் வரும் **“ஆவிகள்”** என்பதும் அதாவது நிழல்கள் (“ரெபெய்ம்” என்பது எபிரெய பாடம்; தமிழில் இது “மரித்தோர்” என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது) மரணமடைந்தவர்களையே குறிக்கும். “ரெபெய்ம்” என்ற அதே எபிரெயச் சொல் 26:14 –ல் மரணமடைந்தவர்கள் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஏசாயா 26:14 உண்மையில் மரணமடைந்தவர்களைக் குறித்தால், 26:19 –ல் வரும் மரணமடைந்தவர்களும் உண்மையில் உடல்ரீதியாக மரணமடைந்து உயிரோடு எழுப்பப்படுகிறவர்கள் (வெறும் இனத்தின் மீட்டுருவாக்கத்திற்கான உருவகம் அல்ல) என்பது மேலும் நிரூபிக்கப்படுகிறது. இந்த வசனங்கள் உடல்ரீதியான உயிர்த்தெழுதலைக் குறித்துத்தான் பேசுகின்றன. ஆகவே, சில விமர்சகர்கள் குறிப்பிடுவதுபோல தனி மனிதர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள் என்பது பெர்சிய சமயங்களில் உள்ள நம்பிக்கை மட்டுமல்ல (சொராஸ்டியன் மற்றும் மஸ்தாய் சமயங்கள்) அது இஸ்ரவேல் மக்களுடைய நம்பிக்கையாகவும் இருந்த காரணத்தினால்தான் ஏசாயா ஏற்கனவே அதைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

[59] For more on these questions, refer to the chapter about the Millennium in our brochure on biblical Eschatology as well as our commentary on chapter 20 in our brochure on the Revelation of John.

*(c) அறிவுரை: பாதுகாப்பும் நியாயத்தீர்ப்பும்: 26:20-21*

*இந்த பகுதிக்கும் இதன் எதிர் பகுதிக்கும் (வசனங்கள் 1-6) இடையில் இருக்கின்ற எதிர்மறை ஒப்பீடு மிகவும் தெளிவாகத் தெரிகிறது: வசனங்கள் 1-6-ல் தீர்க்கதரிசி நீதியுள்ள இனம் கதவுகளைத் திறந்து உள்ளே நுழைய வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளை கொடுக்கும்போது அவருடைய பார்வை எதிர்கால மகிமையைக் கண்ணோக்குகிறது (மகிமையான நகரம்). ஆனால் 20-21 – ல் தீர்க்கதரிசி அவருடைய காலத்தில் இருக்கிற துன்பத்தையும் உலகத்தின் மீது வரவிருக்கிற நியாயத்தீர்ப்பையும் பார்க்கிறார்; ஏனெனில் தம்முடைய மக்கள் அறைக்குள் சென்று கதவுகளை உள்ளிருந்து அடைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். இந்த இடத்தில் எதிர்மறை ஒப்பீடு மிகவும் தெளிவாகத் தெரிகிறது (இந்த இணை வசனத்தொகுப்பு உற்சாகப்படுத்தும் செய்தியைக் கொண்டிருக்கிறது):*

*என்னுடைய மக்களே நுழையுங்கள்* ➔ ***கதவுகளை மூடுங்கள்***

*யாவே புறப்பட்டுச் செல்கிறார்* ➔ *பூமியைத்* ***திறக்கிறார்*** *(*வெளிப்படுத்துகிறார்*)*

*பூமியின் குடிகள் மீது யாவேயின் கோபமும் நியாயத்தீர்ப்பும் நிறைவேறி முடியும் வரைக்கும் தற்போது மக்கள் ஒரு சிறிதளவு காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் (*20b*). "கொஞ்ச நேரம்" என்ற பதம் வசனங்கள் 24:21 முதல் 26:6 மற்றும்* 27:1ff *ஆகிய இடங்களில் வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கும்போதும் அவற்றின் நடுவில் ஏன் வ. 7-19 வசனங்களில் ஜெபம் செய்யப்படுகிறது என்பதை விளக்குகிறது. வசனங்கள் 24:21-- ருந்து 26:6-வரையுள்ள பகுதிகளில் அறிவிக்கப்பட்ட மீட்பின் தாமதத்தின் வெளிச்சத்தில் இது நீதிமான்களுடைய ஜெபமாக இருக்கிறது (2பேதுரு 3:9*ff *வெளிப்படையாக "மீட்பின் தாமதம்" என்று குறிப்பிடப்படுவதைக் கவனிக்கவும்). கடவுளுடைய மக்கள் (ஏசாயாவின் மக்கள்) வரவிருக்கும் நியாயத்தீர்ப்பின் காரணமாக மறைந்திருக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள் (நிச்சயமாக மகா உபத்திரவத்தின் நியாயத்தீர்ப்பு;ஏசாயா 24:1-6). வசனம் 21 உண்மையில் வெளி. 6:1 முதல் 19:21 வரையுள்ள பகுதிக்கான சுருக்கவுரையாக இருக்கிறது. கடவுளுடைய பார்வையில் இருந்து எதுவும் மறைந்திருப்பதில்லை என்று கடவுளுடைய வார்த்தை சொல்கிறது (எபி. 4:13). அனைத்தும் வெளிச்சத்தில் கொண்டுவரப்படும் கடவுள் நீதியாக நியாயந்தீர்ப்பார். ஒடுக்கப்பட்டவர்கள் மறுவாழ்வு பெறுவார்கள் ஒடுக்கிறவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (2தெச. 1:7-9; வெளிப்படுத்தல் 6:9-11).*

### (4) ***நான்காவது பகுதி: எதிரிகள் அழிக்கப்படுதலும் இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதலும்: அதி. 27***

*இந்த 27-ம் அதிகாரத்தின் மெய்த்தன்மை குறித்து பல வியாக்யானிகளும் இறையியலாளர்களும் கேள்வி எழுப்புகிறார்கள்.*[60] *குறிப்பாக வசனங்கள் 2-11 பிறகு சேர்க்கப்பட்டவையாகக் கருதப்படுகின்றது.*[61] *ஆயினும் இந்த பகுதியின் வடிவமைப்பைப் பார்க்கும்போது முழு அதிகாரமும் மெய்த் தன்மை உடையது என்பது நிரூபிக்கப்படுகிறது. இந்த பகுதியும் ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களில் வடிவில் அமைந்திருக்கிறது; நாடு மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட பிறகு இருக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலையைப் பற்றிப் பேசும் இந்தப் பகுதி நடுவில் இடம் பெற்றிருக்கிறது:*

**A** *அந்த நாளில்:* ***எரிதிகள் மீதான யாவேயின் வெற்றி*** *– கடல் கொடூரன் (வ. 1)*

**B** *அந்த நாளில்:* ***திராட்சைத் தோட்டம்*** *– இஸ்ரவே- ன் மீட்டுருவாக்கம் (வ. 2-6)*

**C** ***இஸ்ரவே- ன் தண்டனை – அரணான நகரத்தின் அழிவு*** *(வ. 7-11)*

---

[60] As e.g. Otto Plöger, op. cit., p. 89, 93, 96-97 and Otto Kaiser, op. cit., p. 179-185.

[61] As e.g. Hans Wildberger, *Jesaja: 2. Teilband: Jesaja 13—27.* Biblischer Kommentar Altes Testament. Ed. Siegfried Herrmann and Hans Walter Wolff. Volume X/2 (Neukirchen-Vluyn: Neukirchener Verlag, 1978), p. 903-904, 1001ff. He "discerns" 5 different additions in these 10 verses alone!

**$B^1$** *அந்த நாளில்: அறுவடைக்கான தானியங்கள் – இஸ்ரவேல் கூட்டப்படுதல் (வ. 12)*

**$A^1$** *அந்த நாளில்:* ***இஸ்ரவேல் திரும்ப வருதல் மற்றும் எருசலேமில் யாவே தொழுதுகொள்ளப்படுதல்*** *(வ. 13)*

*இந்த ஐந்து பகுதிகளும் ஒன்றிணைந்து இயைபான ஒரு முழுமையைக் கொடுக்கிறது. இவற்றில் எந்த பகுதியாவது பிற்காலத்தில் சேர்க்கப்பட்டது என்று சொல்வது பொருத்தமற்றதாகவே காணப்படுகிறது. "அந்த நாளில்" என்ற சொற்றொடர், இந்த சூழமைவில் நான்கு இடத்தில் வந்து, 24:21 –உடன் தொடர்புடையதாக விளக்கப்படும் நிகழ்ச்சிகளின் காலத்தை குறிப்பதாக இருக்கின்றது; வசனங்கள் 25:9 மற்றும் 26:1 ஆகிய பகுதிகளில் உள்ள நிகழ்ச்சிகளின் அதே காலத்தை இந்த நிகழ்ச்சிகளும் குறிக்கின்றன. நடுப்பகுதி மட்டும்தான், வசனங்கள் 7-11, "அந்த நாளில்" என்ற சொற்றொடரோடு ஆரம்பிப்பதில்லை. முத- ல், மீட்டுருவாக்கத்திற்கான நிபந்தனை – அதாவது* A, $A^1$, B *மற்றும்* $B^1$ *ஆகிய பகுதியில் பேசப்பட்டுள்ள மீட்டுருவாக்கம்– அனைத்து சிலைவழிபாட்டிலுமிருந்து மக்களைச் சுத்திகரிப்பதன் மூலமாகவே நிறைவேற்றப்பட வேண்டும் (வ. 9); அதற்குப் பிறகுதான் "அந்த நாளில்" யாவே தம்முடைய மக்களை மீண்டும் கூட்டுவார்.*

*எதிர்மறை* (antithetically) *வடிவத்திலும் கோப்பு (*chiastically) *வடிவத்திலும் உருவகங்கள் அடுக்கப்பட்டுள்ளன, இதன் மூலம் கடவுளுடைய மக்களுக்கும் அவர்களுடைய எதிரிகளுக்கும் இறுதிக் காலத்தில் எப்படிப்பட்ட முடிவுகள் ஏற்படும் என்று எதிர்மறை ஒப்பீடு செய்யப்படுகிறது:*

| | |
|---|---|
| **A** *வ. 2-6:இஸ்ரவே- ன் மீட்டுருவாக்கம்* | **B** *வ. 7-9:இஸ்ரவேலைத் தண்டித்துதூய்மைப்படுத்துதல்* |
| **$B^1$** *வ. 10-11: எதிரிகளைத் தண்டித்தல்* | **$A^1$** *வ. 12-13:இஸ்ரவேல் திரும்புதலும் மீண்டும் கட்டப்படுதலும்* |

*ஆகிலும் இந்த மகிமையான எதிர்காலத்தின் நிபந்தனையாக சர்ப்பம் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் (வ. 1). ஏற்கனவே குறிப்பிட்டபடி ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களின் வடிவில் அமைந்துள்ள இந்த வசனங்களில் (7-11) வசனம் 9 நடுவில் இடம்பெற்றிருக்கிறது. மனமாற்றம் இல்லாமல் இழப்பீடு கிடைக்காது! இந்த பகுதியில் உள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வசனங்கள் (உதா. வசனம் 9) பின்னர் சேர்க்கப்பட்டது என்று சொல்வது எளிமையாக இந்த பகுதியின் வடிவம் மற்றும் உள்ளடக்கத்தின் வெளிச்சத்தில் பார்க்கும்போது ஆதாரமற்றது.*

*(a) லிவியாதான் (சாத்தான்) நியாயந்தீர்க்கப்பட்டான்: 27:1*

*வ.* ***1:*** ➔ **"*லிவியாதான்*"** *(*cf. யோபு 41:1ff*; சங்கீதம் 74:14; 104:26) ஒரு கடல் கொடூரனுடைய பெயராக இருக்கிறது. கூற்றுகள்* ➔ *"நீண்ட பாம்மை… கோணலான சர்ப்பத்தை" (எபிரெயத்தில்: "நாகாஸ்") மற்றும்* ***"சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பம்"*** *(எபிரெயத்தில்:* ***தானின்****) போன்ற சொல்லாடல்கள் இந்த கடல் கொடூரனைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. தானின் என்ற சொல் பெரிய முதலை (எசே. 29:3) என்றும், சமுத்திரத்தில் உள்ள மகாமச்சங்கள் (ஆதி. 1:21) அல்லது பாம்பு அல்லது சர்ப்பம் என்றும் (யாத். 7:10; உபா. 32:33 முத- ய வசனங்களில்) மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. இந்த மூன்று சொற்றொடர்களும் அசீரியா, எகிப்து மற்றும் பாபிலோன் ஆகிய இஸ்ரவேல் நாட்டின் மூன்று எதிரிகளை அடையாளமாக குறிப்பிடுபவை என்று சில வியாக்யானிகள் கருதுகிறார்கள். ஆயினும் "லிவியாதான்" என்ற பெயர் இவ்வுலகின் சக்திகளுக்குப் பின்னாக இருந்து செயல்படும் சாத்தானுடைய சக்தியைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது: ஏசாயா 14:1-14; எசே. 28:12-14; 2தெச. 2:9; வெளி. 11:7; 12:3; 13:1. தானியேல் 10-ம் அதிகாரம் காணப்படாத உலகத்தைக் குறித்த சிறப்பான காட்சியை நமக்குக் காண்பித்து இவ்வுலகத்தின் வல்லமைகளில் சாத்தானின் சக்திகள் தாக்கம் செலுத்துகின்றன என்பதை தெளிவுபடுத்துகின்றது (எபே. 6:10ச்ச்). ஆதி. 3:1 (சர்ப்பம்) மற்றும் வெளி. 12:9 (பழைய சர்ப்பம்) ஆகிய பகுதிகள் நிச்சயமாக சாத்தானைக் குறித்தே பேசுகின்றன. பல விமர்சக வியாக்யானிகள், சூழமைவோடு பொருந்தி வராத இவை பிறகு சேர்க்கப்பட்டவை*

என்கிறார்கள். ஆனால் 26:19 நீதிமான்களின் உயிர்த்தெழுதலைப் பற்றியும் 26:20-21 – வசனங்கள் இழப்பீடு மற்றும் மறுவாழ்வைப் பற்றிப் பேசுவதால் இந்த வசனம் சூழமைவுக்குப் பொருத்தமாகவே இருக்கின்றது. இதே சூழமைவை நாம் வெளி. 19:11 முதல் 20:10 வரையுள்ள பகுதியிலும் காணலாம்: பூமி நியாயந்தீர்க்கப்படுகிறது (வெளி. 19:15-21; ஏசாயா 24:1-20) சாத்தான் அடைக்கப்படுகிறான் (வெளி. 20:1-3; ஏசாயா 24:21-22); விசுவாசிகள் உயிரோடு எழுப்பப்படுகிறார்கள் (வெளி. 20:4; ஏசாயா 26:19; 25:8) ஆண்டவரோடு ஆளுகை செய்கிறார்கள் (வெளி. 20:4-6; 5:10; ஏசாயா 24:23; 25:6-8). மகா உபத்திரவத்திலும் அரமகெதோன் யுத்தத்திலும் தப்பிப் பிழைத்த "பொது மக்கள்" அந்த காலத்தில் இன்னும் பூமியில் இருப்பார்கள் (வெளி. 7:1-8; 12:13-16; ஏசாயா 24:6.13; சகரியா 13:7-9: இஸ்ரவேலும் மற்ற இனங்களும்: கால் பகுதி மக்கள் வெளி. 6 –ல் அழிந்துவிடுகிறார்கள், மூன்றில் ஒரு பகுதி வெளி 9 –ல் அழிந்துவிடுகிறார்கள்... ஆனால் எல்லாரும் அழிவதில்லை: ஏசாயா 24:6.13). தப்பிப்பிழைத்தவர்கள் மேசியாவின் அரசிற்குள் செல்கிறார்கள்; மனித இனத்தை இனிமேல் சோதிக்க முடியாதபடி சாத்தான் சிறைவைக்கப்படுகின்றான் (வெளி. 20:1-3; ஏசாயா 24:22; 27:1). இஸ்ரவேல் ஒரு இனமாக மீண்டும் கட்டப்படும் (ஏசாயா 27:2-13) கிறிஸ்து திரும்ப வரும்போது அது நடைபெறும் (ஏசாயா 24:23; 59:20-21; சகரியா 14:4.9.16; ரோமர் 11:25-27; வெளி. 19:11ச்ச்). இஸ்ரவேலுக்கு எதிராக போரிடும்படி மற்ற இனங்களை இனிமேல் சாத்தானால் தூண்ட முடியாது (தானி. 10 மற்றும் வெளி. 16:12-16) அதன் பிறகு சாத்தான் கட்டப்படுவான் (ஏசாயா 27:1), இறுதியில் மகா உபத்திரவத்தில் பிழைத்திருந்த அனைத்து இஸ்ரவேல் மக்களும் தங்களுடைய சொந்த நாட்டிற்குள் சென்று சமாதானமாக வாழ்வார்கள் (ஏசாயா 27:2-13).

(b) திராட்சைத் தோட்டத்தின் பாடல்: இஸ்ரவேலின் மீட்டுருவாக்கம்: 27:2-6

இந்தப் பகுதியும் ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களின் வடிவிலும் எதிர்மறை ஒப்பீட்டு முறையிலும் அமைந்திருக்கின்றன:

**A** அந்த நாளில்: ஒரு திராட்சைத் தோட்டம்- அதைப் பற்றிப் பாடும்! (வ. 2)

**B** யாவேயே அந்த திராட்சைத் தோட்டத்தைக் காத்து அதற்கு நீர்விடுகிறார் (வ. 3)

**C** அவர் கோபமாக இல்லை – ஆனால் முள்ளுகளுக்கும் நெரிஞ்சில்களுக்கும் எதிராக சண்டையிடுவதாக ஆணையிடுகிறார்! (வ. 4)

**$B^1$** அவரிடத்தில் அடைக்கலம் பெறுகிறவர்கள் மட்டுமே அவரில் சமாதானத்தைக் கண்டுகொள்வார்கள் (வ. 5)

**$A^1$** வரும் நாட்களில்: இஸ்ரவேல் கனிகளினால் பூமியை நிரப்பும் (வ. 6)

ஒரே மையத்தைக் உடைய வட்டங்களின் வடிவில் அமைந்திருப்பதைக் குறித்த சில விளக்கங்கள்: வசனம் 2 – ல் (A) வரும் சொற்றொடர்களான"அந்த நாளில்" மற்றும் "திராட்சைத் தோட்டம்" ஆகியவற்றின் கருத்துக்கள் வசனம் 6-ல் வரும் ($A^1$) "வரவிருக்கும் நாட்கள்" மற்றும் "கனிகள்" ஆகியவற்றின் கருத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது; வசனம் 5-ல் வரும் மூன்று பெயர்ச்சொற்கள் "அடைக்கலம்" மற்றும் "சமாதானம்" ஆகியவை இரண்டு முறை ($B^1$) 3-ம் வசனத்தில் உள்ள (B) தம்முடைய திராட்சைத் தோட்டத்திற்குத் தண்ணீர் விட்டுப் "பாதுகாப்பவர்" என்ற யாவேயின் உருவகத்தோடு தொடர்புள்ளதாக இருக்கின்றன. நடுப்பகுதி யாவே எதிர்த்து சண்டையிடும் பகுதிகளைப் பற்றிப் பேசுகிறது, அதாவது 4-ம் வசனத்தில் (C) – உள்ள முட்களும் நெரிஞ்சில்களும். அவர்கள் திராட்சைத்தோட்டம் (வ. 2) மற்றும் கனிகள் (வ. 6) ஆகியவற்றிற்கு எதிர்மறையாக ஒப்பிடப்படுகிறார்கள்:

வ. **2-6:** இஸ்ரவேல், யாக்கோபு ஒரு கனிதரும் திராட்சைத் தோட்டமாக மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது. கடவுள் எதிரியை மேற்கொண்டு இஸ்ரவேலுக்கு சமாதானத்தைத் தருவார். இந்த இடத்தில் திராட்சைத் தோட்டம் என்பது (வ. 2) இஸ்ரவேலுக்கு உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது: ஏசாயா 5:1-7.

(c) தண்டனையும் நியாயத்தீர்ப்பும்: 27:7-11

இந்தப் பகுதியில் கீழ்க்காணுமாறு ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களின் வடிவமும் எதிர்மறை ஒப்பீட்டு முறையும் காணப்படுகின்றது:

**A** இஸ்ரவேல், அதன் எதிரிகளைப் போல அல்லாது, சிறையிருப்பினால் மட்டும் தண்டிக்கப்படுகிறது (வ. 7-8)

**B** சிலைவழிபாட்டை அழிப்பதன் மூலமாக இஸ்ரவேலுடைய பாவம் பரிகரிக்கப்படுகிறது (வ. 9)

**A**[1] இருப்பினும் அரணான நகரம் பாழாக்கப்படுகிறது இரக்கம் காண்பிக்கப்படுவதில்லை (வ. 10-11)

வ. ***7-9:*** சிலைவழிபாட்டில் இருந்து நிரந்தரமாக குணமாக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட இஸ்ரவேல் தண்டிக்கப்பட வேண்டும் என்பது நிபந்தனை.

வ. ***10-11:*** ஆயினும் இஸ்ரவே- ன் எதிரிகள் பாழாக்கப்படுகிறார்கள்.

(d) இஸ்ரவேல் திரும்ப வருவதும் அதன் மீட்டுருவாக்கமும்: 27:12-13

வ. ***12-13:*** இஸ்ரவேல் இப்போதிருப்பதற்கு முரணாக மீண்டும் மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது. ஜீப்பிரட்டீசு நதிக்கும் எகிப்தின் ஓடைக்கும் இடையில் மக்கள் அந்த நாட்டில் வாழ்வார்கள்: ஆதி. 15:18; எசே. 47:19. எகிப்தின் ஓடை என்பது “வால்டி-எல்-ஆரீஸ்” என்று இன்று அழைக்கப்படுகிறது.

வசனங்கள் 2-13-ன் பொருளடக்கத்தை கீழ்வருமாறு கோப்பு வடிவில் சுருக்கிக்கூறுலாம்:

| | | | | |
|---|---|---|---|---|
| வ. 2-6: | திராட்சைத் தோட்டமாக இஸ்ரவேல் மீட்டுருவாக்கப்படும் | **A** | **B** | ஆயினும் அது முத- ல் தண்டிக்கப்பட வேண்டும் (வ. 7-9) |
| வ. 10-11: | எதிரிகள் பாழாக்கப்படுகிறார்கள் | **B**[1] | **A**[1] | இஸ்ரவேல் அதன் நிலத்திற்கு திரும்ப கொண்டுவரப்படுகிறது (வ. 12-13) |

ஏசாயாவின் வெளிப்பாடு ஆச்சரியமான எதிர்மறை ஒப்பீடுகளையும் இணைகளையும் கொண்டிருக்கிறது, இவை இந்தப்பகுதியின் ஒருமைப்பாட்டிற்கு வலுவாக சாட்சியிடுகின்றன:

***<u>இரண்டு நகரங்கள் என்ற கருத்து</u>***

| | | | | |
|---|---|---|---|---|
| 24:10: | கடவுள் பயமற்ற நகரம் அழிக்கப்படுகிறது | **A** | **B** | எருசலே, சீயோன்மகிமையடைகிறது: 24:23 |
| 25:1-5: | கடவுள் பயமற்ற நகரம் அழிக்கப்படுகிறது | **A** | **B** | யாவேயின் மலையில் விருந்து:25:6-8 |
| 25:9-10a: | இந்த மலையில் மகிழ்ச்சி | **B** | **A** | மோவாபின் அரண் தாழ்த்தப்படுகிறது: 25:10b-12 |
| 26:1-4: | யூதாவின் நகரம் பாடுகிறது | **B** | **A** | உயர்ந்த நகரம்தாழ்த்தப்படுகிறது:26:5-6 |
| 27:10: | எதிரி நகரம் பாழாய் கிடக்கிறது: | **A** | **B** | எருசலேம் பரிசுத்த நகரம்: 27:12-13 |


***<u>இனங்களில் இருந்து ஒரு மீதியான கூட்டமும் இஸ்ரவேலில் இருந்து ஒரு மீதியான கூட்டமும் மகா உபத்திரவத்தில் இருந்து தப்பிப் பிழைக்கும்:</u>***

- இனங்களில் இருந்து வரும் மீதியானவர்கள்: 24:6.13-16; 25:3.
- இஸ்ரவேலில் மீதியானவர்கள்: 24:23; 25:4; 25:9; 26:1.20; 27:2-9.12-13.

- எதிரிகளுக்கு திராட்சைரசமும் இல்லை: 24:7-10.
- கடவுளுடைய மக்களுக்கு திராட்சைரசமும் திராட்சைத் தோட்டமும்: 25:6; 27:2.
- வனாந்தரத்தில் பாழாக்கப்பட்ட எதிரி: 24:12; 25:2; 27:10-11.
- பலன் தரும் நிலத்தில் இறைமக்கள்: 27:2.6.
- அநீதியாளர்கள் மறக்கப்படுதல்: 26:14.
- நீதிமான்கள் மரிக்கிறார்கள் ஆனால் மறக்கப்படுவதில்லை: 26:19 21.

## 4. சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் எச்சரிக்கை: அதி. 28–33

இந்த நீண்ட பகுதி அதிகாரங்கள் 36-37-ன் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஏசாயா வரப்போகிற நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எகிப்தோடு கூட்டணி சேர்ந்துகொண்டு அசீரியாவை எதிர்க்கும் முயற்சிக்கு எதிராகவும் எச்சரிக்கை செய்கிறார்:




தம்முடைய மக்களுக்கு எதிராக ஏசாயா ஐந்து "ஐயோ" –க்களை கூறுகிறார் (28:1; 29:1 29:15; 30:1; 31:1) இஸ்ரவே- ன் எதிரியாகிய அசீரியாவுக்கு ஒரு "ஐயோ" –வைக் கூறுகிறார் (33:1)!

### சமாரியாவின் வீழ்ச்சியைக் குறித்தும் எருசலேமுக்கான ஒரு எச்சரிக்கையைக் குறித்தும் தீர்க்கதரிசனம்:அதி. 28

**முதல் "ஐயோ":** கி. மு. 722-ல் அசீரிய அரசனாகிய சார்கான் சமாரியாவை வீழ்த்தினார். அவர்களுடைய பாவம் பட்டியலிடப்படுகிறது: பெருமை மற்றும் மதுபான வெறி (வ. 1.3.7.8); நியாயத்தீர்ப்பு வேகமாக வருகிறது (வ. 2.4).

வ. **5-6:** ஒரு சிறு கூட்டம் மக்கள் தப்பவிடப்படுவார்கள். இதுதான் உண்மையான இஸ்ரவேல் (10:20-23), இது மீதமுள்ள சமாரியாவையும் அல்லது யூதாவையும் குறிக்கிறது (எசே. 37: மீதிக்காலத்தில் யூதாவும் எப்பிராயீமும் ஒன்றாகச் சேரும்).

வ. **7-13:** எருசலேம் அதே பாவங்களைச் செய்கிறது; தீர்க்கதரிசிகள் கூட மறுபான வெறியில் இருக்கிறார்கள் (வ. 7):

- கடவுளுடைய வார்த்தையைச் சொல்கிற உண்மையான தீர்க்கதரிசிகளுக்கு மக்கள் செவிகொடுப்பதில்லை (வ. 9-10).
- இதன் விளைவாக வரும் நியாயத்தீர்ப்பு: கடவுள் மக்களோடு அந்நிய மொழியில் பேசுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரி. 14:21-ல் இந்த வசனத்தை மேற்கோள் காட்டி விளக்கம் சொல்கிறவர்கள் திருச்சபையில் இல்லாதபோது அந்நிய மொழிகளைப் பேசுவது பயனற்றது என்று கூறுகிறார். அசீரியர்களுடைய படையெடுப்பின்போது சமாரியாவைக் குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறியது. மக்கள், அதிலும் சிறப்பாக நினிவேக்கு சிறைப்பிடித்துக் கொண்டு செல்லப்பட்ட மக்கள் அசீரியர்களுடைய அந்நிய மொழியைக் கேட்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் (வ. 11).
- கடவுளுடைய சத்தத்திற்கு செவிகொடுக்க பிடிவாதமாக மறுப்பவர்களோடு பேசுவதற்கு கடவுள் "அந்நிய மொழியை" பயன்படுத்துவார்; அவர் நியாயத்தீர்ப்பின் மொழியில் அவர்களோடு பேசுவார் (வ. 12-13).

*வ. **14-29:** எருசலேமில் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கை:*

- *மரணத்தோடு உடன்படிக்கை மற்றும் மரணத்தின் இராஜ்யம் (சியோல்): இது அசீரியாவுக்கு எதிராக எகிப்தோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை குறிக்கும் அநேகமாக அடையாள மொழியாக இருக்கலாம். மக்கள் யாவேயின் மீது நம்பிக்கை வைப்பதைவிட அரசியல் உடன்படிக்கையில்தான் நம்பிக்கை வைக்கிறார்கள் (வ. 14-15).*
- *➔ **“சீயோனில் ஒரு கல்”:** 1பேதுரு 2:8; தானி. 2:34-35; சங். 118:22. இந்த தீர்க்கதரிசனம் கிறிஸ்துவைக் குறிக்கிறது. இந்த அதிகாரத்தில் ஏன் மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனம் இடம் பெறுகிறது? அந்த நாட்களில் இருந்த உண்மையில்லாத இஸ்ரவேல் நாட்டின் தலைவர்களுக்கு எதிராக இஸ்ரவே- ன் எதிர்காலத்து அரசனாகிய மேசியா எதிர்மறை ஒப்பீடு செய்யப்படுகிறார். வசனம் 15-ல் வரும் உடன்படிக்கை என்பது இறுதிக் காலத்தில் இஸ்ரவேல் அந்திக் கிறிஸ்துவோடு செய்துகொள்ளப் போகும் உடன்படிக்கையை அடையாளப்படுத்துவதால் இந்த பகுதியை இறுதியியலோடு தொடர்புள்ள நிலையில் விளக்குவது நியாயப்படுத்தப்படுகிறது (தானி. 9:27; மத். 24:15), இது ஏசாயாவின் காலத்தில் எகிப்தோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மட்டும் குறிப்பிடவில்லை (வ. 16).*
- *கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்காமல் துரோகத்தனமான உடன்படிக்கையை நம்புகிறவர்கள் நியாயம்தீர்க்கப்படுவார்கள். யாவே மட்டுமே மக்களை அவர்களுடைய எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவார் (மூலைக்கல்லாகிய மேசியாவின் மூலமாக: வ. 17-22).*
- *ஒரு விவசாயி எப்படி தன்னுடைய நிலத்தை பண்படுத்த வேண்டும் என்று அறிந்திருப்பது போல, கடவுளும் தம்முடைய மக்களை எப்படிக் கையாள வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்; கடவுள் தண்டனையை ஆணையிட்டால் அவர்கள் அதற்குத் தகுதி வாய்ந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள் (வ. 23-29).*

## *இஸ்ரவேலின் முற்றுகையும் மீட்பும்: அதி. 29*

*<u>**இரண்டாவது “ஐயோ”:**</u> எருசலேமிற்கு எதிரான முதல் “ஐயோ” (ஏரியல் = கடவுளின் சிங்கம் அல்லது கடவுளின் ப- பீடம்) சிலைவழிபாட்டைக் குறிக்கிறது (போலியான ஆராதனை): எருசலேமின் குடிகள் “வருஷாவருஷ பண்டிகையை” (வ. 1) கொண்டாடினாலும், அவர்களுடைய இருதயம் கடவுளைவிட்டு தூரமாக இருக்கிறது (வ. 13). தீர்க்கதரிசிக்கு அறிவிக்காமல் எகிப்தியர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கைக்கு எதிராகக்தான் இரண்டாவது “ஐயோ” சொல்லப்பட்டிருப்பது போல காணப்படுகிறது (வ. 15 மூன்றாவது “ஐயோ”). கடவுள் எருசலேமை முற்றுகையிடுவார் (வ. 3): அதி. 36–37; இந்த தீர்க்கதரிசனம் அசீரிய அரசனாகிய சனகரிப் மூலமாக நிறைவேறியது! ஆயினும் வசனங்கள் 6-8-ல் விவரிக்கப்பட்டிருக்கும் நிகழ்வுகள் எதிர்கால நிறைவேறுதலை வேண்டி நிற்பதாகத் தோன்றுகிறது: சகரியா 14:1ff, “இனங்கள்” என்று பன்மையில் பேசுகிறது; ஆனால் ஏசாயா அசீரியாவை மட்டும் குறிப்பிடுகிறார். மக்களுடைய கீழ்ப்படியாமை குருட்டாட்டம் என்ற கடவுளின் நியாயத்தீர்ப்புக்கு அவர்களை இட்டுச் செல்கிறது (வ. 9-12), ஆயினும் கர்த்தர் தம்முடைய மக்களில் சிலருடைய கண்களைத் திறப்பார் (வ. 18-24).*

## *எகிப்துடனான கூட்டணிக்குக் கண்டணம்: அதி. 30–31*

*கர்த்தரை எகிப்தியருடன் கூட்டணி வைத்தவர்களுக்கு எதிராகவே நான்கு மற்றும் ஐந்தவது ஐயோக்கள் கூறப்படுகின்றன (30:1-3 ஹய்க் 31:1-3; 2இராஜா. 18:24-25):*

- *அசீரியாவுக்கு எதிராக எகிப்தினால் எருசலேமைக் காப்பாற்ற முடியாது: 30:1.7; 31:1.3.*
- *யாவேதான் எருசலேமை அதன் எதிரிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்ற முடியும்: 31:5*
- *மக்கள் யாவேயை நம்ப வேண்டும்: 30:15.*
- *யாவே எதிரியை நியாயந்தீர்த்து இஸ்ரவேலைக் காப்பாற்றுவார்: 30:18-33; 31:7-9.*

*இந்த பகுதி சமீபத்தில் உள்ள நிறைவேறுதலைப் பற்றி மட்டும் பேசாமல் இறுதிக் காலத்தில் உள்ள நிறைவேறுதலைக் குறித்தும் பேசுகிறது:*

1. அசீரியாவின் மூலமாக சமீபத்தில் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும்: 30:31; 31:8.
2. இறுதிக் காலத்திலும் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறும்: 30:23-26 (யோவேல் 3:18; ஏசாயா 30:28: ஒரு இனம் மட்டுமல்ல இனங்கள், அதாவது ஏசாயாவின் காலத்தில் அசீரியாவைப் போல இறுதிக் காலத்தில் அனைத்து இனங்களையும் குறிக்கிறது: உதா. சகரியா 14:1ff [மேலே பார்க்கவும்], இது தெளிவாக இறுதிக் காலத்தை, அதாவது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தைக் குறிக்கும் ஒரு பகுதியாகும்).

### சமாதானத்தின் அரசில் நீதியான ஆளுகை: அதி. 32

**வ. 1-8:** சமாதானத்தின் அரசில் அரசர்களும் பிரபுக்களும் நீதியாக நியாயந்தீர்ப்பார்கள்!

**வ. 9-14:** வசனங்கள் 1-8-க்கும் 15-20 ஆகிய பகுதிகளில் சமாதானத்தின் அரசைக் குறித்த அறிவிப்பை நாம் பார்க்கிறோம்; இதற்கு இடையில் பகட்டான பெண்களுக்கும் களிப்புற்றிருக்கும் நகரத்துக்கும் எதிரான எச்சரிக்கையை நாம் வாசிக்கிறோம். மீண்டும் இந்த பகுதியில் முள்ளுகளையும் நெரிஞ்சிலையும் குறித்த உருவகம் எடுத்தாளப்படுகிறது (ஏசாயா 5:6, 27:4, முதலான பகுதிகள்.).

**வ. 15-20: நீதியும் சமாதானமும் ஆட்சி செய்யும்**; பூமி தன் பலனைக் கொடுக்கும்: **வ.** 15 (யோவேல் 2:28; சகரியா 12:10: பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுதல்).

### அசீரியாவின் அழிவையும் எருசலேமின் மீட்பையும் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 33

யூதாவின் எதிரியாகிய அசீரியாவுக்கு எதிராக ஆறாவது இறுதி "ஐயோ" அறிவிக்கப்படுகிறது. 2இராஜா. 18:14-17 மற்றும் ஏசாயா 36–37 ஆகிய பகுதிகள் இந்த காலத்திற்கான வரலாற்றுப் பின்னணியைக் கொடுக்கின்றன. அசீரிய அரசனாகிய சனெகெரிப் யூதா தன்னுடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மதிக்காமல் யூதாவின் மீது தாக்குதல் நடத்தியது. ஏற்கனவே 10-ம் அதிகாரத்தில் அறிவித்தது போல ஏசாயா இந்த எதிரியின் மீதும் கடவுளுடைய நியாயத்தீர்ப்பை அறிவிக்கிறார். இந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல் அதிகாரங்கள் 36-37-ல் விவரிக்கப்பட்டுள்ளது.

எருசலேமின் விடுதலையைக் குறித்த விவரணமும் இந்த இடத்தில் இறுதிக் கால நிறைவேறுதலையும் குறித்துக் காட்டுகிறது: **வ.** 17: ➔ "உன் கண்கள் இராஜாவை மகிமையுள்ளவராய் காணும்...!" இது மேசியாவைக் குறிக்கிறது, அதாவத இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது.

**வ24:**அந்த நேரத்தில் எருசலேமின் குடிகளில் யாரும், "நான் வியாதிப்பட்டிருக்கிறேன்!"என்று சொல்வதில்லை, எருசலேமின் மக்கள் இறுதியில் மன்னிக்கப்படுவார்கள் (சகரியா 12:9-10).

## 5. கர்த்தருடைய கோபத்தின் நாளைக் குறித்தும் அவருடைய சமாதானத்தின் அரசைக் குறித்தும் உள்ள தீர்க்கதரிசனங்கள்: அதி. 34–35

அதிகாரங்கள் 24–27 நாம் மேலே குறிப்பிட்டது போல "ஏசாயாவின் வெளிப்பாடு" என்று அறியப்படுகிறது; அதிகாரங்கள் 34–35 சில வேளைகளில் "ஏசாயாவின் சிறிய வெளிப்பாடு" என்று அறியப்படுகிறது. குறிப்பாக 34:8 மற்றும் 35:4 ஆகிய வசனங்கள் இந்த இரண்டு அதிகாரங்களையும் துல்லியமாக சுருக்கித் தருகின்றன, இவை இறுதிக் காலத்தைப் பற்றி மட்டுமே பேசுகின்றன. யாவே இஸ்ரவே- ன் எதிரிகளைத் தண்டித்து தம்முடைய மக்களுக்கு மீட்பளிப்பார் (கோபத்தின் நாள்: 61:2b):

- அனைத்து இனங்கள் மேலும் நியாயத்தீர்ப்பு இறங்கி வருகிறது: 34:2; எல்லாவற்றிற்கும் மேலாக இஸ்ரவேலின் எதிரியாகிய ஏதோம் மீது (**வ.** 6), அவர்களுடைய நாடு என்றென்றும் பாழக்கப்படும் (**வ.** 9-15). நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஏசாயா

63:1ff – ல் இருக்கிறது போல ஏதோம் என்பது கடவுளுடைய மக்களாகிய இஸ்ரவேலுக்கு எதிராக இருக்கும் அனைத்து இனங்களையும் குறிக்கிறது அப்படியே ஏசாயா 25:10-ல் மோவாப் குறிப்பிடப்பட்டுள்ளது (எபி. 12:16: ஊதாரியான ஏசாயா).

- நியாயத்தீர்ப்பு பரலோகத்திற்கும் (முழு அண்டத்திற்கும்) அதன் நட்சத்திரங்களின் சேனைகளுக்கும் எட்டும் (34:4). இந்த இடத்தில் நட்சத்திரங்களின் சேனை என்பது சாத்தானுடைய தீய சக்திகளைக் குறிக்கிறது என்று சில வியாக்யானிகளும் அது நட்சத்திரங்களைத்தான் குறிக்கிறது என்று சில வியாக்யானிகளும் கருதுகிறார்கள். நாங்களும் இந்த இரண்டாவது விளக்கத்தையே ஆதரிக்கிறோம். ஆயினும் ஏசாயா 24:21 விழுந்துபோன தூதர்களைக் குறிக்கிறது என்றே கருதுகிறோம். வசனம் 34:4-ல் அனைத்து நட்சத்திரங்களும் கரைந்துபோகும் என்று சொல்லப்படுகிறது (ஒப்பிடுக. வெளி. 20:11), ஒரு வேளை இது தற்போதைய அண்டத்தின் இறுதி முடிவைக் குறிக்கலாம் (ஏசாயா 65:17; 2பேதுரு 3:9–12). ஆகிலும் விழுந்துபோன தூதர்கள் முற்றிலும் அழிக்கப்படாமல் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.
- இஸ்ரவேல் மீட்டுருவாக்கம் செய்யப்படும்: 35:1-2.7. எங்களுடைய பார்வையில் 35-ம் அதிகாரம் முழுவதும் மேசியாவின் அரசைக் குறித்துப் பேசுகிறது.
- இஸ்ரவேல் மக்கள் மீட்கப்படுவார்கள்: 35:5-6.8-10.

அதிகாரம் 34-க்கும் 35-க்கும் இடையில் உள்ள எதிர்மறை ஒப்பீட்டைக் யாரும் தவறவிட முடியாது: ஏதோமும் கடவுளுக்கும் இஸ்ரவேலுக்கும் எதிராக இருக்கும் இனங்கள் அனைத்தும் வனாந்தரமாக மாறிப்போகும் வேளையில் இஸ்ரவேலர் நாடு திரும்பி பலன்கொடுக்கும் மக்களாக மாறுவார்கள்.

## 6. இடைச்செருகலான வரலாற்று அறிக்கை: அதி. 36–39

அதிகாரங்கள் 7-10 ஆகாஸ் அரசனுடைய காலத்தைப் பற்றிப் பேசுகிறத, அதிகாரங்கள் 36-39 அவருடைய மகனாகிய எசேக்கியாவின் காலத்தைப் பற்றிப் பேசுகிறது. பாபிலோனிய சிறையிருப்பையும் இஸ்ரவேலுடைய அரசர்களின் அதிகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதையும் விவரிக்கும் 39:6-7 ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய அதிகாரங்கள் ஏசாயா புத்தகத்தின் முதல் பகுதியில் இருந்து இரண்டாம் பகுதிக்கு மாறுவதைப் பற்றிப் பேசும் பகுதிகளாகும். இரண்டாம் பகுதியாகிய 40-55 வரையுள்ள அதிகாரங்களில் தீர்க்கதரிசி சிறையிருப்பில் உள்ள மக்களைக் காண்கிறார். சுருக்கமான விளக்கவுரை:

- இந்த பகுதியில் 35 முறை பெயர் குறிப்பிடப்படும் எசேக்கியா அரசன் இங்கு விவரிக்கப்பட்டிருக்கும் நிகழ்வுகளில் மையமாக இருக்கிறார்.
- அதிகாரங்கள் 36-37 அசீரியாவையும் யூதாவையும் குறித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலைப் பற்றிப் பேசுகிறது. சனகரிப் யூதாவின் நிலப்பரப்பை முற்றிக்கையிட்டு எந்த நிபந்தனையும் இன்றி சரணடைய வேண்டும் என்று கட்டளையிடும்படி தன்னுடைய தளபதியை எருசலேமிற்கு அனுப்பினான். ஆனால் எசேக்கியாவும் ஏசாயாவும் ஒரே இரவில் அசீரிய இராணுவத்தை அழித்த கர்த்தரை நம்பினார்கள்.(37:36). அதிகமாக அவர்கள் கொள்ளை நோயினால்தான் அழித்திருக்க வேண்டும் (2இராஜா. 19:35; 2நாளா. 32:20ff)


**<u>நடைமுறைப் பயன்பாடுகள்:</u>**

- **36:4ff:** எதிரியின் செயல்திட்டங்கள் எப்போதும் கடவுளின் பணியாளர்களைச் சோர்வடையச் செய்கிறது.
- **அதி. 37:** சூழ்நிலைகள் எவ்வளவுதூரம் நம்பிக்கையற்றதாகக் காணப்பட்ட போதிலும் தம்மை நம்புகிற பணியாளர்களுடைய பிரச்சனைகளை கடவுள் எப்போதும் தீர்த்துவைக்கக்கூடியவராக இருக்கிறார் (மத். 28:18; யாத். 14:3-14; 2நாளா. 20:15-17.22; 1கொரி. 10:13).
- **அதி. 38:** எசேக்கியாவின் வியாதியைக் குறித்து (2இராஜா. 20:1-11): அதிகாரங்கள் 36 மற்றும் 37 ஆகிய அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கு முன்பாக 38-39 அதிகாரங்களின் நிகழ்வுகள் நடைபெற்றிருக்க வேண்டும் என்றும் குரோகர் கூறுகிறார். 2இராஜா. 18:2-ன்படி எசேக்கியா 29 வருடங்கள் அரசாண்டார் (கி. மு. 719-691). அதிகாரம் 38-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய வியாதி, அவருடைய ஆட்சிக்

காலத்தின் நடுப்பகுதியில் ஏற்பட்டிருக்க வேண்டும், ஏனெனில் 38:5-ல் அவர் வியாதி குணமாகி 15 வருடங்கள் கூடுதலாக வாழ்ந்தார் என்று சொல்கிறது. தன்னுடைய தந்தையின் சிங்காசனத்தை கி. மு. 705-ல் கைப்பற்றிய சனகெரிப் தன்னுடைய ஆட்சியின் ஐந்தாவது வருடத்தில்தான் இந்த முற்றிகையை நடத்தினார், அதாவது எசேக்கியா மரணமடைவதற்கு 9 வருடங்களுக்கு முன்பாக. ஏசாயா அல்லது ஏசாயாவின் எழுத்துக்களை சேர்த்துத் தொகுத்த நபர் பாபிலோனிய அதிகாரிகளோடு தொடர்புடைய இந்த நிகழ்வை பொருத்தம் கருதித்தான் ஏசாயாவின் நூ- ன் முதல் பகுதியின் இறுதியில் வைத்திருக்கிறார் (அதாவது அதிகாரம் 39), ஏனெனில் இது அதிகாரங்கள் 40-48-ல் பேசப்படும் நிகழ்வாகிய பாபிலோனிய சிறையிருப்புக்கு பொருத்தமான அறிமுகமாக இருக்கும் என்று அவர் கருதியிருக்க வேண்டும். வசனம் 38:6 அசீரியர்களுடைய கரங்களில் இருந்து இஸ்ரவேலுக்குக் கிடைக்கும் மீட்பைப் பற்றிப் பேசுகிறது. இதிலிருந்து அதிகாரங்கள் 38-39-ன் நிகழ்வுகள் அதிகாரங்கள் 36-37-ன் நிகழ்வுகளுக்கு முன்பாகவே நடைபெற்றிருக்க வேண்டும் என்று உறுதிப்படுத்தப்படுகிறது. **38:21-22:** இந்த வசனங்கள் ஆரம்பத்தில் 6 மற்றும் 7 ஆகிய வசனங்களுக்கு நடுவில் இருந்திருக்க வேண்டும் அல்லது பிற்காலத்தில் வேதபாரகர் ஒருவரால் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று சில வியாக்யானிகள் கருதுகிறார்கள். எப்படியிருந்தாலும் செப்துவஜிந்து ஏற்கனவே இந்த வசனங்களை உள்ளடக்கியிருக்கிறது. இந்த வார்த்தைகளை 2இராஜா. 20:7-8-ல் காணலாம். எசேக்கியாவின் குணமாகுதல் குறித்து: ➔ "அத்திப்பழ அடை": இது குடல் புண்களைக் குணப்படுத்தும் மருத்துவ குணம் உடையது என்று சொல்லப்படுகிறது (வேதாகம அனோட்டி மற்றும் குரோக்கர்). கடவுள் அற்புதமாக சுகமளிக்கக்கூடியவராக இருக்கிறார், ஆயினும் இயற்கை உலகத்தைப் படைத்த அவர் இயற்கை மருந்துகளைப் பயன்படுத்தியும் சுகமளிக்கக்கூடியவராக இருக்கிறார். **வசனம் 38:8b –ல் உள்ள அற்புதம்: சூரியப் பாகையில்** "சூரியன் பின்னிட்டுத் திரும்பியது": 2இராஜா. 20:11 நிழல் திரும்பியது என்று சொல்கிறது. ப.ஏ. கடவுளுடைய மனிதர்கள் பலர் அடையாளங்களைக் கேட்டிருக்கிறார்கள்: நியா. 6:36ff (கிதியோன்); யாத். 4 (மோசே). கடவுள் அந்த தருணத்தில் ஒரு அற்புதத்தை அனுமதித்திருக்கிறார், அதை நம்முடைய குறைந்த அறிவைக் கொண்டு புரிந்துகொள்ள முடியாது. அற்புதங்களைக் குறித்த இன்னும் கூடுதல் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேதாகம அனோட்டியைப் பார்க்கவும் (பிரஞ்சு மொழி நூல்!).[62] யோசுவாவின் தலைமையில் இஸ்ரவேல் மக்கள் கைப்பற்றிய போதும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றது (யோசுவா 10:12-13).[63]

- **அதி. 39:** பாபிலோனிய அதிகாரிகள்: 2இராஜா. 20:12-19. **வ2:** எசேக்கியாவின் பெருமையும் அகம்பாவமும்: எசேக்கியா கடவுளுடைய கரத்திலிருந்து பெற்றுக்கொண்ட கிருபையை மறந்து போனது போல காணப்படுகிறது (1தீமோ. 6:7). **வ. 8b:** இப்படிப்பட்ட சுயம் சார்ந்த மனப்பான்மை வருந்தத்தக்கது: அவர் தன்னைப் பற்றி மட்டுமே சிந்தித்தார். நாம் நம்முடைய எதிர்கால சந்ததிகளைக் குறித்தும் சிந்தித்துப் பொறுப்புள்ளவர்களாகச் செயல்பட வேண்டும்.

ஆசிரியர் பாபிலோனிய சிறையிருப்பை அறிவிப்பது (**வ.** 5-7) 40 முதலான அதிகாரங்கள் 1-39 வரையுள்ள அதிகாரங்களை எழுதியவரே எழுதியுள்ளார் என்பதைக் காண்பிக்கிறது!





[62] Frédéric Godet, 'Ésaïe, Jérémie, Lamentations', AT 7 in *Bible Annotée*, Neudruck (St-Légier: P.E.R.L.E., 1985), p. 188.

[63] யோசுவா 10-ம் அதிகாரத்தில் 23 மணி நேரங்களும் 40 நிமிடங்களும் என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் ஏசாயா 38 மற்றும் 1 இராஜா. 20-ல் வெறும் 20 நிமிடங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு கால அளவுகள் இரண்டையும் கூட்டும் போது சரியாக ஒரு நாள் வருகிறது. வரலாற்றின் ஒரு பகுதியில் பூமி சூரியனைச் சுற்றிவருவதில் ஏற்பட்ட ஒரு தடங்கலைக் குறித்த ஆய்வுகள் சில வானவியல் ஆராய்ச்சியாளர்களால் விவாதிக்கப்படுகிறது. நாங்கள் இந்த துறையில் வல்லுனர்காக இல்லாத காரணத்தினால் இதைக் குறித்து நாங்கள் மேலதிகமாகப் பேச முடியது.

# B. தாழ்மை: சிறையிருப்பு மற்றும் மீட்பைக் குறித்த பருந்துப் பார்வை: அதி. 40–55

*புத்தகத்தின் முதல் பகுதி (அதிகாரங்கள் 1–39) இரட்சிப்பைப் பற்றிப் பேசுகிறது, சிறப்பாக அதிகாரங்கள் 2; 4; 11; 25–27 மற்றும் 35 (மற்ற பகுதிகள் முக்கியமாக நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுகிறது); இரண்டாவது பகுதி (அதிகாரங்கள் 40–55) அதிகாரங்கள் 46–47 நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசுவதோடு இன்னும் சில தனிப்பட்ட வசனங்களும் அதையே பேசுகின்றன (மற்ற பகுதிகள் பொதுவாக இரட்சிப்பைப் பற்றிப் பேசுகின்றன).*

## 1. கோரேஸ் மூலமான மீட்பு: அதி. 40–48




*மேதிய-பெர்சிய மன்னாகிய கோரேஸின் மூலமாக பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைக்கும் விடுதலையைப் பற்றி பேசுவதுதான் இந்த அதிகாரங்களின் மையக் கருத்தாகக் காணப்பட்ட போதிலும், இந்தப் பகுதி (அதிகாரங்கள் 40-48) யாவேயைக் குறித்த தகவல்களையும் அவர் கொடுக்கும் நித்திய விடுதலையையும் பற்றியும் பேசப்படுகின்றது (45:17).*

*கீழ்க்காணும் பாடப்பொருள்கள் மீண்டும் மீண்டும் இந்த பகுதியில் இடம்பெறுகிறது:*

- *யாவேயின் மகிமை: 42:8; 43:21.25; 48:9-11.*
- *யாவே மட்டுமே ஒரே கடவுள்: 11 முறை (உதா. 43:11; 45:5. 6. 21. 22; 46:9).*
- *யாவே மட்டுமே உண்மையான தீர்க்கதரிசனத்தைக் கொடுப்பவர்: 41:20; 42:9; 44:6-7; 45:6-11; 48:3.*
- *சிலைவழிபாடு வீணானது: 40:19-20; 41:6-7.21-24.29; 44:9-20; 46:1-2.5-7; 48:5.*
- *இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளுதலும் மீட்பும்: சிறப்பு 44:1-6; 46:3-4.13.*
- *தாசன்: என்பது எப்போதும் இஸ்ரவேலையும்: உதா. 42:19; 43:10; 44:1-2.21; 45:4; 48:20; மேசியாவையும்: 42:1*ff *மற்றும் 49:1*ff *(ஏசாயா 50:4; 52:13*ff*; மாற்கு 10:45; அப். 3:13.26; 4:27.30)* குறிக்கும்.
- ➔ *“பயப்படாதே!” என்ற பதம்: 41:10.13.14; 43:1.5; 44:2.8.*

### இரட்சிப்பைத் தொடக்குபவராக யாவே: அதி. 40

*கடவுளுடைய தன்மைகளைக் குறித்த தன்னுடைய முன்னுரையில் ஏசாயா கீழ்க்காணும் காரியங்களைக் குறிப்பிடுகிறார்:*

- *கர்த்தருடைய வருகையில்தான் இஸ்ரவே- ன் இரட்சிப்புத் தங்கியிருக்கிறது (ப.ஏ. –ல் மேசியா):* cf. *வ. 2-3.5. மத். 3:3-ல் ஏசாயா 40:3 மேற்கோள் காண்பிக்கப்படுவதால் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் திருமுழுக்கு யோவானில் நிறைவேறுகிறது என்பது காண்பிக்கப்படுகிறது. வ. 5: மேலே குறிப்பிட்டது போல, “கர்த்தருடைய வாய் இதைச் சொல்- ற்று” என்ற சொற்றொடர் 1:20 மற்றும் 58:14 ஆகிய இடங்களில் வருகிறது.*
- *அனைத்து மக்களும் புல்லைப் போல இருக்கிறார்கள்; கர்த்தருடைய வார்த்தையோ என்றென்றும் நிலைத்திருக்கிறது: வ. 6-8 (இந்த பகுதி 1பேதுரு 1:24-25 –ல் மேற்கோள் காட்டப்படுகிறது).*

*யாவே பின்வரும் வசனங்களில் இவ்வாறு சித்தரிக்கப்பட்டிருக்கிறார்:*

- *நியாயாதிபதி (பழிக்குப் பழி வாங்குகிறவர்): வ. 10.*
- *மேய்ப்பன்: வ. 11.*
- *எல்லாம் வல்லவர்: வ. 12 (மத். 28:18).*
- *எல்லாம் அறிந்தவர்: வ. 13-14 (சங். 139; எபி. 4:13).*
- *ஒப்பிட முடியாதவர்: வ. 15-21 (அவர் தனிச்சிறப்பானவர்).*
- *அனைத்தையும் ஆள்பவர்: வ. 22-26 (வெளி. 19:11-15: இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தர்).*
- *எல்லாவற்றையும் பார்க்கிறவர்: வ. 27-28 (சங். 139; எபி. 4:13).*
- *அனைவருக்கும் வேண்டியதைக் கொடுக்கிறவர்: வ. 29-31 (மத். 6:25-34). நம்பிக்கையின் உறுதிப்பாடாக 31-ம் வசனம் அடிக்கடி மேற்கோள் காட்டப்படுகிறது :* **“கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.”**

## சிலைகள் அல்ல, யாவேதான் கோரேஸை ஆட்சியாளராக ஏற்படுத்தினார்; இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டு இரட்சிக்கிறவரும் யாவேதான்: அதி. 41

*கவனிக்க:*

- *மேதிய-பெர்சியனான கோரேஸைக் குறித்த தீர்க்கதரிசனம்: வ2-4.25 (*cf. *44:28; 45:1)*
- *சிலைவழிபாட்டின் பயனற்ற தன்மை: வ. 6-7.29.*
- *இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளுதலும் மீட்பும்: வ. 8-19.13-14*
  *(“…***பயப்படாதே, நான் உனக்குத் துணைநிற்கிறேன். யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறுகூட்டமே, பயப்படாதே; நான் உனக்குத் துணைநிற்கிறேன்**…”) *வ.* 13b-14a. *வ. 8-ஐ பார்க்க: அதில் இஸ்ரவேல் “என் தாசன்” என்றும் “கடவுளின் சிநேகிதனான ஆபிரகாமின் சந்ததி” என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆபிரகாமுடைய பெயர் புத்தகத்தின் மூன்று பகுதிகளிலும் குறிப்பிடப்படுகிறது (பார்க்க: 29:22; 63:16).*
- *போலித் தீர்க்கதரிசிகளுக்கான சவால்: வ. 21-24.*

## யாவேயின் தாசன் (முதலாவது ‘ஓபேட் - யாவே – பாடல்கள்’) : அதி. 42

ஏசாயா புத்தகத்தின் இரண்டாம் பகுதியில் நாம் நான்கு ‘ஓபேட் - யாவே – பாடல்களை’ ( “Obed-Yahweh-Songs”) அடையாளம் காணளாம், அதாவது யாவேயின் தாசனுக்கான நான்கு பாடல்கள் : பார்க்க 42:1-4; 49:1-6; 50:4-9 மற்றும் 52:13 - 53:12.

*யார் இந்த “கர்த்தருடைய தாசன்”? முழுமையான சூழமைவைப் பார்க்கும்போது மட்டுமே இந்த தாசன் யார் என்பதை நாம் அறிந்துகொள்ள முடியும். வசனங்கள் 1-18-ல் தாசன் என்பது மேசியாவைக் குறிக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை:*

- *அவர் கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்டவர் (அவரில் கடவுள் மகிழ்ந்திருக்கிறார்): வ. 1.*
- *கடவுளால் அவர் தகுதிப்படுத்தப்படுகிறார் (பரிசுத்த ஆவியால்): வ. 1.*
- *இனங்களுக்கு நீதியைக் கொண்டுவரும்படி அவர் அனுப்பப்படுகிறார்: வ. 1.*
- *கடவுளுடனான உடன்படிக்கைக்கு அவரே மத்தியஸ்தர் (49:6): வ. 6.*
- *வெளிச்சமாக அவர் பிறஇனமக்களுக்கு நீதியையும் நியாயத்தையும் கொண்டுவருவார்: வ. 1- 12 .*
- *அவர்தான் இனங்களையும் நியாயந்தீர்ப்பார்: வ. 13-18.*

*ஆகிலும் வசனங்கள் 19-25 தன்னுடைய பணியைச் செய்யத் தவறிய இஸ்ரவேல்* பற்றிப் பேசுகிறது. *கர்த்தருடைய தாசனாகிய இஸ்ரவேல் செய்து முடிக்க வேண்டியதைச் செய்யத் தவறிய காரணத்தினால் அதைச் செய்து முடிப்பதற்கு கர்த்தருடைய தாசன் வந்தார் என்று*

சொல்லாம் (1-18). ஏற்கனவே அறிமுகத்தில் சொல்லப்பட்டது போல உண்மையுள்ள தாசனாகிய மேசியாவை உண்மையற்ற தாசனாகிய இஸ்ரவேலோடு (வ. 24) இந்த பகுதி எதிர்மறை ஒப்பீடு செய்கிறது.

வ. 25: "…அவர்கள் மனதிலே வைக்காமல் போனார்கள்" என்பதை 57:11: "…உன் மனதிலே வைக்காமல் போகிறாய்" என்பதோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்.

## யாவே இஸ்ரவேலை மீட்கிறார்: அதி. 43

- விடுதலைப் பயணக் கருத்து மீண்டும் 2-3.16-17.20 ஆகிய வசனங்களில் வருகிறது.
- தெய்வீக மீட்பின் செய- ன் நோக்கம் யாவேக்கு மகிமையைக் கொண்டுவருவதுதான்: வ. 7.21.
- வ. 11: "**நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை**" என்பது யோவான் 14:6 மற்றும் அப். 4:12ஆகிய பகுதிகளில் இயேசுவின் தனிச்சிறப்பான கோரிக்கைகளுக்கு ஒத்திருக்கிறது.
- வ. 18-19: "**முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளைச் சிந்திக்கவேண்டாம், இதோ, நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்!**" இந்த சூழமைவில் எகிப்தில் இருந்து புறப்பட்ட விடுதலைப் பயணம் நினைவுகூறப்படுகிறது. ஆனால் "புதிய காரியம்" என்பது என்ன (42:9; 48:6)? சமீபத்திய எதிர்காலத்தில் பாபிலோனி- ருந்து மக்கள் விடுதலை பெற்று மீண்டும் எருசலேமிற்குத் திரும்புவதைக் குறிக்கிறது (44:27; 45:1 மற்றும் 48:14.20), ஆனால், நீண்ட கால எதிர்காலத்தில் இறுதிக் காலத்தில் இஸ்ரவேல் மீண்டும் தன்னுடைய நாட்டிற்குத் திரும்புவது குறிக்கப்படுகிறது எனக் கூறலாம் (வ. 5-7, உலகத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் இஸ்ரவேல் திரும்ப வருதல்).
- யாவே அன்பினால் மீட்கிறார் (வ. 4.25) இஸ்ரவேல் இரட்சிப்புக்குத் தகுதியானது என்பதற்காக இரட்சிப்பதில்லை: வ. 22-23.
- இந்த மீட்பு பாவமன்னிப்பையும் உள்ளடக்கியதாக இருக்கிறது: வ. 24-25.

## சிலைகள் அல்ல யாவேயே இஸ்ரவேலை மீட்கிறார்: ஆதி. 44

இந்த அதிகாரத்தில் கீழ்க்காணும் வடிவம் காணப்படுகிறது:

**A** யாவே மீட்கிறார் (வ. 1-8)

**B** சிலைகள் ஒன்றுக்கும் உதவாது (வ. 9-20)

**A[1]** யாவே மீட்கிறார் (கோரேஸ் மூலமாக) (வ. 21-28).

- இஸ்ரவேல் யாவேயினால் தெரிந்துகொள்ளப்பட்டு, படைக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, பயிற்றுவிக்கப்படுகிறது: வ. 1-3.
- யாவே இஸ்ரவே- ன் பாவங்களை மன்னிக்கவும் செய்கிறார்: வ. 22.
- அவ்வப்போது இஸ்ரவேல் சிலைவழிபாட்டுக்குத் திரும்புகிற காரணத்தினால் சிலைவழிபாட்டின் பயனற்ற தன்மையையும் முட்டாள்தனத்தையும் ஏசாயா வலியுறுத்துகிறார். கீழ்க்காணும் உதாரணத்தை அவர் பயன்படுத்துகிறார்: ஒரு மனிதன் மரத்தினால் ஒரு தெய்வத்தைச் செய்கிறான் (வ. 9-20). இது முதன்மையாக கடவுளுடைய மக்களுக்குத்தான் சொல்லப்படுகிறது. பிறவின மக்களை நோக்கிச் சொல்லப்படவில்லை. ஆகிலும் இந்த உண்மை சிலைவழிபாட்டின் மாயத்தினால் ஏமாற்றப்பட்டிருக்கிற மனுக்குலத்தைச் சேர்ந்த அனைவருக்கும் பொருத்தமானது (ரோமர் 1:18-31).
- கோரேஸின் மூலமாக யாவே இஸ்ரவேலை இரட்சிப்பார்: வ. 21-28. இது 45-ம் அதிகாரத்தில் இன்னும் விளக்கப்பட்டுள்ளது: விடுதலைப் பயணமும் கோரேஸும்!

## யாவே கோரேஸின் மூலமாக இஸ்ரவேலை இரட்சிப்பார்: அதி. 45

மேதிய-பெர்சிய அரசனாகிய கோரேஸைப் பற்றி ஏசாயா தீர்க்கதரிசன நூலின் கீழ்க்காணும் பகுதிகள் பேசுகின்றன: 41:2.4.25; 44:28; 45:1-5.13; 46:11; 48:15 (மறைமுகக் குறிப்புகள் 13:17-19 மற்றும் 21:2-9 ஆகிய பகுதிகளில் இடம்பெற்றிருக்கின்றன):

***வ. 1-8: இவ்வுலக வரலாற்றில் கடவுளின் சர்வ ஏகாதிபத்யம்: பிற இனத்து அரசனாகிய கோரேஸ் தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புகளின்படி மட்டும் செயல்படவில்லை, மாறாக யாவேயினால் தெரிந்துகொள்ளப்பட்டு, தம்முடைய பணியைச் செய்வதற்கு வேண்டிய முறையில் ஆயத்தப்படுத்தப்பட்டவராக இருக்கிறார்***: ***வ. 1-4:*** *ஆகவே, இஸ்ரவேல் மக்கள் பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு 150 வருடங்களுக்கு முன்பாகவே அதை அறிவிக்கும் பணி ஏசாயாவுக்குக் கொடுக்கப்படுகிறது.* ***வ. 5-8:*** *இந்த அதிகாரத்தில் மட்டும் கடவுளுடைய ஆட்சியைப் பற்றி ஆறு கூற்றுகள் இடம் பெற்றுள்ளன (கடவுள் மட்டுமே சர்வ ஏசாதிபத்யமுள்ளவர்:* ***வ.*** *5.6.14.18.21.22).* ***வ. 7*** *ஒப்பிடுக: ஆமோஸ் 3:6-8.* ***வ. 8*** *இந்த தீர்க்கதரிசனம் இறுதியில் மேசியாவின் ஆட்சியில் நிறைவேறும்(*cf. *27:6; 55:13).*

***வ. 9-13: உலகத்தைப் படைத்தவராகவும் அனைத்து மனிதர்கள் மீதும் அதிகாரமுள்ளவராகவும் உள்ள கடவுளின் சர்வ ஏகாதிபத்யம்: வ. 9:*** "**தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?**" *(ரோமர் 9:20*ff*). குயவனுடைய உருவகத்தைப் பற்றி எரே. 18:6 –ல் வாசிக்கிறோம். வ.* ***10:*** *பெற்றோர் தங்களை ஏன் பெற்றார்கள் என்று பிள்ளைகள் அவர்களை கண்டிக்கக்கூடாது என்று எச்சரிக்கப்படுகிறார்கள்! இந்த காலத்தில், குறிப்பாக மேற்கத்தைய நாடுகளில், அரசாங்கங்கள் பெற்றோருடைய பொறுப்புகளை நிறைவேற்ற முடியாதபடி அவர்கள் முடமாக்கப்படும் சூழ்நிலையில் இந்த வசனம் பொருத்தமானதாக இருக்கிறது (குறிப்பாக இடதுசாரி அரசுகள்; பிராங்பர்ட் பள்ளி). வ.* ***11-12:*** *கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்தவர், அவரைப் பார்த்து கேள்வி கேட்கிறவன் யார்? வ.* ***13:*** *கடவுள் தம்முடைய மக்களாகிய இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும்படி கோரேஸை எழுப்பினார். ஆகவே, கடவுள் இவ்வுலகத்தில் உள்ள வல்லமையுள்ள அரசர்களின் இருதயங்களைத் திருப்பி தம்முடைய விருப்பங்களை நிறைவேற்றும் வல்லமையுள்ளவராயிருக்கிறார். இது தானியேல் தீர்க்கதரிசன நூலின் கருப்பொருள் வசனத்திற்கு அதிகம் ஒத்திருக்கிறது:* ***தானி. 2:21! கோரேஸ் தன்னுடைய சொந்த நன்மைக்காக செயல்படாமல், தான் விரும்பியோ, விரும்பாமலோ கடவுளுடைய திட்டத்தை நிறைவேற்றுகிறவனாக இருக்கிறான்.*** *யூத வரலாற்று ஆசிரியராகிய பிளேவியஸ் ஜொசீபஸ் என்பவர் கோரேஸைக் குறித்த தீர்க்கதரிசனம் அவருக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது என்று சொல்கிறார்.*[64]

*வ.* ***14-17: கர்த்தர் இஸ்ரவேலை மீட்பார்,*** *மற்ற இன மக்கள் இஸ்ரவேலுக்குக் கீழ்ப்படிந்திருப்பார்கள். கடவுளுடைய எதிரிகளும் சிலைவழிபாடு செய்கிறவர்களும் வெட்கப்படுத்தப்படுவார்கள், இது மேசியாவின் அரசில்தான் நடைபெறும்.*

*வ.* ***18-19: மீண்டும் படைப்பிலும் வரலாற்றிலும் கடவுளின் சர்வ அதிகாரத்தைக் குறித்த செய்திகள்,*** *அவர் மட்டுமே இவ்வுலகத்தின் நிகழ்வுகளைச் சரியாக முன்னறிவிக்கக்கூடியவர் (கோரேஸ் மூலமாக இஸ்ரவேல் மீட்கப்படும் என்பதைக் குறித்த மறைமுகக் குறிப்பாக இதை நாம் எடுத்துக்கொள்ளலாம்).*

*வ.* ***20-25:*** *மக்கள் தங்கள் சிலைகளை விட்டுத் திரும்பி, உண்மையான ஒரே கடவுளிடத்தில் சேர வேண்டும், ஏனெனில் அவர் மட்டுமே அவர்களை மீட்க முடியும் (வ. 20-22). வசனங்கள் 23-25, முழங்கால்கள் யாவும் முடங்கும் என்றும் யாவேயினிடத்தில் மட்டும் விடுதலையும் மீட்பும் இருக்கிறது என்று நாவுகள் அனைத்தும் அறிக்கை செய்யும் என்று சொல்கின்றன. வசனங்கள் 23-24 – பி- .* ***2:10-11 –ஐ ஒப்பிடவும்.***

## *பாபிலோனிய தெய்வங்களை யாவே எதிர்கொள்ளுதல்: அதி. 46*

*வ.* ***1:*** *பேல் (மர்துக் அல்லது மர்டாக் என்றும் அழைக்கப்படுகிறது), என்ற சூரியக் தெய்வம்தான், பாபிலோனியர்களுடைய முதன்மையான தெய்வம் ஆகும். நேபோ என்பது அறிவிற்கும் இலக்கியத்திற்கும் உரிய தெய்வம் ஆகும். பாபிலோனியர்களுடைய வீழ்ச்சி பாபிலோனிய தெய்வங்களின் பெலவீனத்தைக் காண்பிக்கிறது:*

- *அவைகளைச் செய்து உருவாக்க வேண்டும்:* *வ. 6.*

---
[64] *Antiquity of the Jews* 11.1.1 regarding Isa 44:28.

- அவைகளைச் சுமந்து செல்ல வேண்டும்: வ. 1.
- அவைகள் அசைவதில்லை: வ. 7a.
- அவைகள் செவிகொடுப்பதும் இல்லை உதவி செய்வதும் இல்லை: வ. 7b.

வ. **3-5.9-13:** ஆனால் யாவே எதையும் சார்ந்திரா உண்மைக் கடவுள்(!!); அவர் இஸ்ரவேலைச் சுமந்து சென்று நித்தியத்திற்குமாக இரட்சிக்கிறவராயிருக்கிறார்.

## பாபிலோனின் வீழ்ச்சி: அதி. 47

பெல்சாத்ஷார் என்ற பாபிலோனிய மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் கி. மு. 539-ல் மேதிய-பெர்சிய அரசனாகிய கோரேஸினால் பாபிலோன் வெற்றி கொள்ளப்பட்டது (தானி. 5). பாபிலோனின் வீழ்ச்சியைக் குறித்துப் பார்க்க: 13:17-22; 21:1-10; எரே. 51:33-58. இந்த அதிகாரம் கீழ்க்காணும் காரியங்களை வெளிப்படுத்துகிறது:

- பாபிலோனுடைய அகங்காரம்: வ. 7-8.10
- பாபிலோனின் படாடோகம்: வ. 5.
- பாபிலோனிய மந்திரவாதிகள், குறிகாரர், அஞ்ஞனக்காரருடைய பெலமின்மை: வ. 12-13.
- பாபிலோனின் திடீர் அழிவு: வ. 9.11.
- கடவுளின் ஆட்சி (அவர் மட்டுமே கடவுள்): வ. 1-4.6.

## இஸ்ரவேலுக்கான யாவேயின் அழைப்பு: அதி. 48

பாபிலோனுக்கு எதிரான நியாயத்தீர்ப்பை 47-ம் அதிகாரத்தில் அறிவித்த பிறகு மீண்டும் இஸ்ரவேலுக்கு கடவுள் செய்தி கொடுக்கிறார். இஸ்ரவேல் தனக்கு செவிகொடுக்க வேண்டும் என்று நான்கு முறை அறிவுரை கூறுகிறார் (வ. 1.12.14.16ff).

(1) **மனந்திரும்புவதற்கான அழைப்பு: வ. 1-11**

வ. **1-2:** அந்த மக்கள் தங்களை “யாக்கோபின் சந்ததி” என்றும் “இஸ்ரவேல்” சந்ததி என்றும் அழைத்துக்கொண்ட போதிலும், யூதாவின் சந்ததி என்று பெருமைப்பட்டு, யாவேயின் பெயரில் ஆணையிடத் துணிந்து, இஸ்ரவே- ன் தேவனாகிய கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினாலும் இவையனைத்தும் அவர்கள் உதட்டளவில் செய்பவைதான் என்று கர்த்தர் சொல்கிறார். மக்கள் உத்தம இருதயத்தோடு இவற்றைச் செய்வதில்லை.

வ. **3-5:** இந்த நிகழ்வுகளை கடவுள் ஏன் அவர்களுக்கு முன்னதாகவே அறிவிக்கிறார் என்பதை இங்கு குறிப்பிடுகிறார். யாவே கடவுள் மட்டுமே சர்வ ஏகாதிபத்யம் உள்ளவர் என்றும் தம்முடைய மக்களின் எதிர்காலத்தை அவர்தான் தீர்மானிக்கிறார் என்றும் எதிர்காலத்தில் சிலைகள் தங்களை மீட்டது என்று மக்கள் சொல்லக்கூடாது என்பதற்காகவும் இந்த தீர்க்கதரிசனங்களில் நடக்கவிருக்ககும் காரியங்களை கடவுள் முன்னதாகவே அவர்களுக்கு அறிவிக்கிறார் (வ. 5).

வ. **6-8:** கோரேஸின் மூலமாக கடவுளுடைய மக்கள் பாபிலோனிய சிறையிருப்பில் இருந்து விடுவிக்கப்படுவார்கள் என்ற இந்த புதிய காரியங்களை கடவுள் அவர்களுக்கு முன்னறிவிக்கிறார். “எங்களுக்கு இது தெரியும்” என்று அவர்கள் சொல்லாதபடி கர்த்தர் அதை முன்பாகவே அறிவிக்கிறார் (வ. 7)

வ. **9-11:** கர்த்தர் தம்முடைய சொந்த மகிமைக்காகவே தம்முடைய மக்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார். அவர் தம்முடைய சொந்த நாமத்திற்காக செயல்படுகிறார்: வ. 9.11. எசேக்கியே- ன் செய்தியோடு இதை ஒப்பிட்டுப் பாருங்கள்: 36:23.26; 39:28. கடவுள் இஸ்ரவேல் மக்களை தூய்மைப்படுத்த விரும்புகிறார் அவர்களை அழிக்க விரும்பவில்லை (வ. 9-10), அதனால்தான் அவர் தம்முடைய நோக்கங்களுக்காக கோரேஸைப் பயன்படுத்தி (வ. 15) தம்முடைய மக்களை பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து மீட்கிறார் (வ. 20).

(2) ***கடவுளின் சர்வ ஏகாதிபத்யத்தை உணர்ந்துகொள்வதற்கான அழைப்பு: வ. 12-19***

*வ. 12-13: தாமே வானத்தையும் பூமியையும் படைத்தவர் என்பதை அறிவிப்பதன் மூலம் தம்முடைய சர்வ ஏகாதிபத்தியத்தை கர்த்தர் உறுதிப்படுத்துகிறதை இங்கும் பார்க்கிறோம்.*

*வ. 14-16*a: *தான் மட்டுமே எதிர்காலத்தை முன்னறிவிக்க முடியும் என்று மீண்டும் வலியுறுத்துகிறார்: இங்கே கோரேஸின் பெயர் குறிப்பிடபடவில்லை என்றாலும் பாபிலோனின் அடிமைத்தனத்திலிருந்து தாம் அவர்களை விடுவிக்கப்போவதாக கடவுள் அறிவிக்கிறார்.*

*வ. 16*b: **"கர்த்தராகிய ஆண்டவரும், அவருடைய ஆவியும் என்னை அனுப்புகிறார்"**: *மார்டின், மெக்டொனால்ட் மற்றும் கிட்னர் ஆகியோர் இது பரிசுத்த திரித்துவத்தைக் குறிக்கிறது என்று கூறுகிறார்கள்.*[65] ***சர்வ வல்லமையுள்ள யாவே என்பது பிதாவாகிய கடவுளைக் குறிக்கிறது.*** **"*பரிசுத்த ஆவியானவர்*"** *(எபிரெயத்தில்: "ரூஆ"), இது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது (*cf. *11:2) மற்றும் "என்னை" என்பது "யாவேயின் தாசன்" –ஐக் குறிப்பிடலாம், அவர் தன்மையில் தம்மைப் பற்றி பேசுகிறார் (49:1; 50:4 மற்றும் 61:1).*

*வ. 17-19: "...என்னுடைய கட்டளைகளுக்கு நீங்கள் செவிகொடுத்தால்..." (வ. 18): யாவேக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவதால் ஏற்படும் நேர்மறையான நன்மைகள் இங்கே பட்டியலிடப்பட்டிருக்கிறது! கீழ்ப்படிதலே ஆசீர்வாதத்தைக் கொடுக்கிறது!*

(3) ***பாபிலோனை விட்டு வரும்படியான அழைப்பு: வ. 20-22***

*அரசனாகிய கோரேஸின் அறிவித்தல் (2நாளா. 36:22-23 மற்றும் எஸ்றா 1:1-4) தேவாலயத்தைக் கட்டவும் யாவேக்குச் சேவை செய்யவும் பாபிலோனைவிட்டு செல்வதற்கு அனுமதி அளித்தது. மக்கள் பாபிலோனைவிட்டு புறப்பட வேண்டும் என்று அந்த நிகழ்வை எதிர்பார்த்து தீர்க்கதரிசி அழைப்பு விடுப்பது 150 வருடங்கள் கழிந்து அந்த நாட்கள் வரும்போது மக்களில் பலர் பாபிலோனைவிட்டுச் செல்வதற்கு மனமற்றிருப்பார்கள் என்பதை மறைமுகமாகக் குறிப்பிடுவதாகவும் இருக்கலாம். பொருளாதார செழிப்பு (வியாயபார வெற்றி) இப்படிப்பட்ட நிலைக்கு மக்களைத் தள்ளும் வாய்ப்பிருக்கிறது. பாபிலோனைவிட்டு வெளியே வாருங்கள் என்ற அழைப்பு வெளி. 18:4-லும் பிரதிபலிப்பதால் அதற்கு இறுதிக் கால முக்கியத்துவமும் இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும்: மக்கள் போலித் திருச்சபையாகிய பாபிலோனை விட்டு வெளியே வரும்படி அழைக்கப்படுகிறார்கள், (இறுதிக் காலத்தில் சமய சமரசம் செய்துகொண்ட திருச்சபை அல்லது சமயத்தைவிட்டு) நியாயத்தீர்ப்பின் நாள் முடிவடைவதற்குள் வெளியே வரும்படி அழைக்கப்படுகிறார்கள். கடவுளுடைய எச்சரிக்கைக்குச் செவிகொடுக்காதவர்கள் அழிக்கப்படுவார்கள். அதனால்தான் முடிவு வசனமாகிய 22 –ல் : "துன்மார்க்காருக்கு சமாதானம் இல்லை என்று கர்த்தர் சொல்கிறார்" என்று முடிக்கப்படுகிறது. இதே எச்சரிப்பை மீண்டும் 57:21 –ல் பார்க்கிறோம், மேலும் இது ஏசாயா புத்தகத்தின் இரண்டாம் பகுதியையும் மூன்றாம் பகுதியையும் இணைக்கும் பாலமாக இருக்கிறது. வசனம் 21-ல் மீண்டும் விடுதலைப் பயணக் கருத்து வருகிறது. கடவுளுடைய மக்கள் எகிப்தை விட்டு வெளியேறியது போல இப்போது பாபிலோனைவிட்டு வெளியேற வேண்டும்.*

## ***அடைப்புக்குறிக்குள் உள்ள செய்தி:கடவுளின் ஆட்சி***

- ➔ **"*நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத்தவிர தேவன் இல்லை!*"**: *44:6; 45:18 21 22; 46:9; 48:12.*
- ➔ **"*நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் இரட்சகர் இல்லை!*"**: *43:11; 45:5-6.*

(4) ***கடவுள் சாத்தான் மீதும் சர்வ அதிகாரம் உள்ளவர்:அதி. 14:3-24***

[65] Derek Kidner, op. cit., p. 616, says: "It is a remarkable glimpse, from afar, of the Trinity."

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல 14:13-14-ல் சாத்தான் கடவுளுடைய சர்வ அதிகாரத்தை எதிர்த்து செய்த கலகம் என்று நாங்கள் நம்புகிறோம். ஒப்பிடுக: ஏசாயா 42:8: "…நான் என்னுடைய மகிமையை வேறொருவனுக்கும் கொடேன்…!" முதல் மனிதனுடைய வீழ்ச்சியில் இருந்து இந்த வார்த்தை அனைத்து மனிதர்களுக்கும் பொருத்தமாகவே இருக்கிறது (ஆதி. 3).

## (5) கடவுள் (சிலைகளாகிய) தெய்வங்களுக்கு மேலாக சர்வ அதிகாமுடையவர்

இந்த காரியத்தைப் பொறுத்தமட்டில் சிறப்பாக 44 மற்றும் 46 ஆகிய அதிகாரங்களைப் பார்க்கவும். பேலும் நோபோவும் பாபிலோனுடைய முக்கிய தெய்வங்கள்:

- அவைகள் சுமந்து செல்லப்பட வேண்டியவை: 46:1.
- அவை உருவாக்கப்பட வேண்டியவை: 46:6!

அதிகாரம் 46 முழுவதும் இந்த தெய்வங்களுடைய வல்லமையற்ற தன்மையையே விளக்குகின்றது. ஏசாயா 44:9-22 சிலைவழிபாட்டின் முட்டாள்தனத்தையும் பயனற்ற தன்மையையும் விளக்குகிறது. ஒருவன் ஒரு மரத்தை வெட்டுகிறான்; வெட்டப்பட்ட மரத்தின் ஒரு பகுதியை அவன் விறகாகப் பயன்படுத்துகிறான், மற்ற பகுதியைக் கொண்டு ஒரு சிலையைச் செய்கிறான். அது இப்போது அவனுக்கு தெய்வமாகிவிட்டது, அதற்கு முன்பாக அவன் குனிந்து வணங்குகிறான்! எவ்வளவு மூடத்தனம்… ஆனால் பெரும்பான்மையான மனிதர்கள் இதைத்தான் செய்கிறார்கள்.

- யாவேயை விட்டு விலகி சிலைவழிபாடு செய்யக்கூடாது என்று இஸ்ரவேல் மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. அதனால்தான் ஏசாயா சிலைவழிபாட்டின் முட்டாள்தனத்தை வெளிப்படுத்துகிறார் (cf. 44:13-23)!

## (6) கடவுள் இனங்கள் மீது சர்வ அதிகாரம் உள்ளவர்

### (a) அசீரியா

ஏசாயா 7:20: அசீரியா ➔ யாவேயின் கரத்தில் உள்ள "சவரகன் கத்தி". ஏசாயா 10:5-15-ல் கர்த்தர் அசீரியா இராணுவத்தை ➔ **"கோபத்தின் கோலாக" பயன்படுத்துகிறார்.** கடவுள் இஸ்ரவே- ன் எதிரிகளைக் கொண்டு இஸ்ரவேல் மக்களையும் மற்ற இனங்களையும் தண்டிக்கிறார். வசனங்கள் 12-15-ல் அசீரியாவும் தன்னுடைய பெருமையின் நிமித்தமாக அதைத் தொடர்ந்து தண்டிக்கப்படும் என்று சொல்கின்றன.

### (b) பாபிலோன்

39:6-7: இஸ்ரவேலை அல்லது யூதாவை பாபிலோனியர் சிறைப்பிடித்துச் செல்லும் காலம் வரும் என்று எசேக்கியா அரசனுக்கு அறிவிக்க ஏசாயாவைக் கடவுள் பயன்படுத்துகிறார். ஏசாயா 13:17-19-ல் பாபிலோனைக் கொண்டு தம்முடைய நியாயத்தீர்ப்புகளை நிறைவேற்றிய பிறகு கடவுள் அவர்களையும் நியாயந்தீர்ப்பார் என்று சொல்கிறார். மேதிய-பெர்சிய அரசனாகிய கோரேஸைப் பயன்படுத்தி கடவுள் பாபிலோனை நியாயந்தீர்ப்பார் (ஏசாயா 44:28; 45:1).

### (c) பெர்சியா

44:28–45:5: மேதிய-பெர்சிய அரசைப் பயன்படுத்தி (கோரேஸ்) கடவுள் இஸ்ரவேல் மக்களை அவர்களுடைய சொந்த நாட்டுக்குக் கொண்டு வருகிறார்.

### (d) அனைத்து இனங்கள்

அனைத்து இனங்களையும் கடவுள் நியாயந்தீர்ப்பார்: cf. 63:1-6. அனைத்து இனங்களையும் பயன்படுத்தி கடவுள் தம்முடைய மக்களை அவர்களுடைய சொந்த நாட்டிற்குக் கொண்டு வருகிறார் (14:1-2).

### (7) கடவுள் சனகரிப்பின் மீது சர்வ அதிகாரம் உள்ளவர்: அதி. 36–37

அசீரிய அரசானாகிய சனகரிப் தன்னுடைய வாழ்நாட்களில் அந்த பிரதேசத்தில் இருந்த அனைத்து சக்திகளையும் மேற்கொண்டான். எருசலேமை முற்றுகையிட்டு தன்னுடைய தளபதியை அனுப்பி அவர்களை சரணடையக் கட்டளையிட்டான். அசீரிய இராணுவத்தை எதிர்த்து நிற்பது யூதாவுக்கு (எருசலேமிற்கு) பயனற்றது என்பதற்குரிய 7 காரணங்களை அவன் பட்டிய- ட்டான்:

1. "**நெரிந்த நாணல்கோலாகிய அந்த எகிப்தை நம்புகிறாய்**": 36:6.
2. எசேக்கியா யாருடைய ப- பீடங்களை அகற்றினாரோ அவரையே யூதர்கள் சார்ந்திருக்கிறார்கள என்பதை அவர்களுக்கு உணர்த்த முற்படுகிறார்கள்: வ. 7 (இது உண்மையல்ல; எசேக்கியா சிலைவழிபாடு நடைபெற்ற உயர்ந்த இடங்களைத்தான் அழித்திருந்தார்).
3. "**நான் உனக்கு இரண்டாயிரம் குதிரைகளைக் கொடுப்பேன்; நீ அவைகள்மேல் ஏறத்தக்கவர்களைச் சம்பாதிக்கக்கூடுமானால்** ": வ. 8.
4. "**இந்தத் தேசத்துக்கு விரோதமாய்ப் போய் அதை அழித்துப்போடு என்று கர்த்தர் என்னோடே சொன்னாரே** ": வ. 10.
5. "**எசேக்கியா உங்களைக் கர்த்தரை நம்பப்பண்ணுவான்**": வ. 15.
6. "**நீங்கள் என்னோடே ராஜியாகி**": வ. 16-17.
7. "**ஜாதிகளுடைய தேவர்களில் யாராவது தங்கள் தேசத்தை அசீரியா ராஜாவின் கைக்கு தப்புவித்ததுண்டோ**": vv. 18-20!

**37:15-20:** எசேக்கியா யாவேயினிடத்தல் ஜெபம் செய்கிறார். அசீரிய மன்னன் மற்ற இனங்கள் அனைத்தையும் கைப்பற்றிவிட்டான், ஆகவே கர்த்தர் எருசலேமின் சார்பில் தம்முடைய திரு நாமத்தின் மகிமைக்காக செயல்பட்டு தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று எசேக்கியா வேண்டிக்கொள்கிறார்.

**37:21–35:** ஏசாயாவின் மூலமாகப் பேசிய கடவுள் தம்முடைய நாமத்தின் நிமித்தம் அசீரியர்களை அழித்துப் போடுவதாக வாக்களிக்கிறார்.

**37:36-38:** யாவே அசீரியர்களை வெற்றி கொள்கிறார், ஒரு இரவில் 1,85,000 அசீரிய படைவீரர்கள் கொல்லப்படுகிறார்கள்!

**கடவுளுடைய சர்வாதிகாரத்தைப் படிப்பதால் என்னுடைய தனிப்பட வாழ்க்கையில் ஏற்படக்கூடிய நடைமுறைப் பயன்பாடுகள்:**

1. **ஆறுதல்:**

- கடவுள் மிகவும் ஆபத்தான நம்முடைய எதிரிகளையும் தோற்கடிப்பார்.
- நம்முடைய பார்வையில் எந்த நம்பிக்கையும் இல்லை என்றாலும் கடவுள் அந்த பிரச்சனைக்கு ஒரு தீர்வை வைத்திருப்பார்: ரோமர் 4:18; யாத். 14 (இஸ்ரவேல் வனாந்தரத்தில் சுற்றி வளைக்கப்பட்டது!).


2. **அறிவுரை:**

- கடவுள் மட்டுமே சர்வ ஏகாதிபத்யமுள்ளவராகையால் அவர் மட்டுமே என்னுடைய வாழ்க்கையில் சகல உரிமையும் உள்ளவர் (1கொரி. 6:19-20).
- அவருக்கு மட்டுமே நாம் மகிமையைச் செலுத்த வேண்டும்: ஏசாயா 42:8.

## 2. யாவேயின் தாசனாகிய மேசியாவின் மூலம் மீட்பு: அதி. 49–55

இந்த பகுதியில் ஏசாயா மக்களுடைய பாவங்களைப் பற்றிப் பேசுகிறார். இது சமீப எதிர்காலத்தைப் பற்றி அதிகம் பேசாமல், யாவேயின் தாசனாகிய மேசியாவின் மீட்பின்

*செயலைக் குறித்துப் பேசுகிறது. ப.ஏ.-ல் உள்ள எந்தப் பகுதியிலும் ஏசாயா தீர்க்கதரிசன நூலின் இந்த பகுதிதான் மேசியாவைக் குறித்து மிக அதிகமான விவரங்களைக் கொடுக்கின்றன.*




### a) *யாவேயின் தாசனும் மீட்பும் (*இரண்டாவது ‘ஓபேட் - யாவே – பாடல்கள்’*): அதி. 49*

(1) *யாவேயின் தாசனும் (அதாவது மேசியா) அவரது ஊழியமும்: வ. 1–13*

- *அவர் பிறப்பதற்கு முன்பாகவே அழைக்கப்பட்டவர்: வ. 1.*
- *அவர் பிரசங்க வரம் உடையவர்: வ. 2.*
- *இஸ்ரவே- ன் தாசன் என்பது மேசியாவைத்தான் குறிப்பதாக இருக்க வேண்டும் ஏனெனில் அவரைக் குறித்துச் சொல்லப்பட்டிருப்பவை வேறு யாருக்கும் பொருந்தாது (வ. 6: அப். 13:47–ல் மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது).*
- *தன்னுடைய பணியின் பயனற்ற தன்மை குறித்த அவருடைய புலம்பல் (வ. 4) யாவேயின் தாசனுடைய மனிதத் தன்மையைக் காண்பிக்கிறது.*
- *யாக்கோப்பை, அதாவது இஸ்ரவேலை அவர் திரும்பக் கொண்டுவருவார் (வ. 5), மற்றும் அவர் உலகத்திற்கு வெளிச்சமாக இருப்பார் (வ. 6). இந்த இரண்டு வசனங்களும் ஏசாயாவின் புத்தகத்தில் இந்தப் பகுதியில் உள்ள யாவேயின் தாசன் என்பது இஸ்ரவேலைக் குறிக்கவில்லை என்பதை உறுதி செய்கின்றன, ஏனெனில் இந்தப் பகுதி “தாசனாகிய யாக்கோபை” அவர் மீட்டுத் திரும்ப கொண்டுவருவார் என்று தெளிவாகச் சொல்கிறது. ஏசாயா 40–55 வரையுள்ள பகுதிகளில் பேசப்பட்டிருக்கும் “பாடுபடும் தாசன்” என்பது இஸ்ரவேலைக் குறிக்கிறது என்ற யூதர்களுடைய வாதத்திற்கு எதிரான முதன்மையான வாதத்தை நாம் இந்த பகுதியில் இருந்துதான் பெற்றுக்கொள்கிறோம். ஏசாயா தெளிவாகவே “யாவேயின் தாசனுக்கும்” (அதாவது மேசியாவுக்கும் “தாசனாகிய யாக்கோபுக்கும்” (அதாவது இஸ்ரவேலுக்கும்) இடையில் உள்ள வித்தியாசத்தை வேறுபடுத்திக் காண்பிக்கிறார்.*
- *அவர் இஸ்ரவேலுக்கும் பிற இன மக்களுக்கும் (அதாவது முழு உலகத்திற்கும்) மீட்பைக் கொண்டுவருவார்: வ. 6.*
- *கடவுளுடனான உடன்படிக்கைக்கு அவரே நடுவர்: வ. 8 (42:6–ல் இருப்பதைப் போல).*
- *சிறைப்பட்ட தம்முடைய மக்களை மீட்டு அனைத்து இனங்களின் நடுவில் இருந்தும் அவர்களை தம்முடைய சொந்த நாட்டிற்குக் கொண்டுவருவார் (வ. 9–13).*

(2) *இஸ்ரவேலை உற்சாகப்படுத்துதல்: வ. 14–26*

- *கடவுள் தம்முடைய மக்களை மறந்துவிடவில்லை, அவர்களை அவர் தம்முடைய உள்ளங்கைகளில் வரைந்து வைத்திருக்கிறார். ஒரு தாய் தன்னுடைய பாலகனை மறக்கமாட்டள் அதுபோலதான் ஆண்டவரும் தம்முடைய மக்களை மறப்பதில்லை. ஒருவேளை தாய் தன்னுடைய மகனை மறந்தாலும் கடவுள் தம்முடைய மக்களை மறப்பதில்லை என்று சொல்வது இன்னும் ஆச்சரியமாக உள்ளது (வ. 14–18).* **“உன் மதில்கள்**

எப்போதும் என்முன் இருக்கிறது" (வ. 16): இது ஒருவேளை கி. மு. 586-ல் நேபுகாத்நேச்சருடைய படையெடுப்பின் போது விழுந்து போகக்கூடிய மதில்களைக் குறிக்கலாம்?

- அவர் தம்முடைய மக்களை ஆசீர்வதித்து, அவர்களைத் தங்களுடைய சொந்த நாட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார்: வ. 19-22 (வ. 22 ஒப்பிடுக. 14:1-3).
- அழிக்கப்படாத இனங்கள் இஸ்ரவேலைச் சேவிக்க வேண்டும்: வ. 23.
- இஸ்ரவேலின் எதிரிகள் அழிக்கப்பட வேண்டும்: வ. 24-26.

### b) *இஸ்ரவேலின் சிறையிருப்பும் யாவேயின் கீழ்ப்படிதலுள்ள தாசனும் (மூன்றாவதுவது 'ஓபேட் - யாவே – பாடல்கள்'): அதி. 50*

#### (1) *விவாகரத்துச் சீட்டு என்னும் உதாரணம்: வ. 1–3*

*இஸ்ரவேல் இன்று புலம்பத்தக்கதாக இருக்கிதென்றால் அதற்கு யாவேயின் சித்தமோ அல்லது பெலவீனமோ காரணம் அல்ல (உருவகங்கள் பட்டிய- டப்படுகின்றன: **"விவாகரத்துச் சான்றிதழ்"** மற்றும் **"கடன் கொடுத்தவர்களுக்கு விற்றுப்போடுதல்":** வ. 1), மக்களுடைய பாவம் மட்டுமே அதற்குக் காரணம். யாவேயினுடைய செயல்கள் மற்றும் இயற்கையின் மீதான அவருடைய சர்வ வல்லமையின் மூலமாக அவருடைய வல்லமையும் பராக்கிரமும் வெளிப்படுத்தப்படுகிறது: வ. 2b-3.*

#### (2) *யாவேயினுடைய தாசனின் (மேசியாவின்) கீழ்ப்படிதலும் உண்மைத் தன்மையும்: வ. 4–11*

*யாவேயினுடைய தாசன் (மேசியா):*

- *யாவேயினுடைய கட்டளைகளுக்குச் செவிகொடுத்து அவற்றை மற்றவர்களுக்குப் போதிக்கிறார்: வ. 4-5 (யோவான் 17:9).*
- *பாடுபடுவதை அவரே தெரிந்துகொள்கிறார்: வ. 6. மேசியாவுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் உள்ள பின்வரும் முரண்பாட்டைக் கவனியுங்கள்: யாவேயின் தாசனாகிய மேசியா இஸ்ரவேல் மக்களுக்காக தம்முடைய முதுகை அடிக்கக் கொடுக்கிறார், ஆனால் இஸ்ரவேல் மக்களோ தங்களுடைய பாவத்தின் காரணமாக தங்கள் முதுகில் அடிவாங்குகிறார்கள். (51:23)*
- *ஆகிலும் யாவே அவருக்கு வெற்றியைக் கொடுக்கிறார்: வ. 7-9. கர்த்தருடைய தாசன் ஆணவத்தோடு கேட்கிறார்:* "என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" *கீழ்க்காணும் பகுதிகளில் உள்ள "சட்ட பிரச்சனையை"-க் கவனிக்கவும்: 1:18; 41:1; 43:26.*

#### (3) *மேசியாவாகிய கர்த்தருடைய தாசனுக்கு செவிகொடுக்கும்படியான அழைப்பு: வ. 10–11*

- *மேசியாவை நம்புங்கள்: வ. 10.*
- *அல்லது நியாயத்தீர்ப்பு நிச்சயமாக உங்கள் மேல் நிலைத்திருக்கும்: வ. 11. இது நித்திய நியாயத்தீர்ப்பை, நித்திய தண்டனையைக் குறிக்கிறது. இந்த வாக்கியம் புத்தகத்தின் கடைசிப் பகுதிக்குரிய ஒரு தொடர்பாக இருக்கிறது, அதாவது 66:24, இந்த பகுதி அணைக்க முடியாத நெருப்பைப் பற்றி பேசுகிறது. இயேசு இந்தப் பகுதியை மறைமுகமாக மாற்கு 9:48-ல் மேற்கோள் காட்டுகிறார். ஒப்பிடுக: வெளி. 14:9-11 மற்றும் 20:14-15.*

### c) *யாவேயின் நீதியும் மீட்பும்: அதி. 51*

*தம்முடைய மக்கள் தமக்குச் செவிகொடுக்க வேண்டும் என்று யாவே பல முறை அவர்களிடம் கேட்டுக்கொள்கிறார்: வ. 1.2.4.6.7.17.21. கடவுள் கடந்த காலத்தில் அவர்களுக்குச் செய்த உதவியை அவர்களுக்கு நினைவூட்டுகிறார்:*

(1) ***கடந்த காலத்தில் கடவுளுடைய செயல்பாடுகள் அவருடைய உண்மைத் தன்மைக்கு சான்றாக இருக்கின்றன: வ. 1-3***

*அவர்கள் ஆபிராகமுடைய சந்ததி என்பதை நினைவூட்டுவதன் மூலமாக தம்முடைய உண்மைத் தன்மையைக் குறித்து அவர்களுக்கு உறுதியளிக்கிறார் (வ. 1-2). ஆபிரகாமை பெரிய இனமாக்குவேன் எனக் கடவுள் அவருக்கு பல முறை வாக்குறுதி கொடுத்திருக்கிறார் (ஆதி. 12:2; 13:16; 15:5; 17:5; 22:17). தங்கள் சரித்திரத்தில் மிக மோசமான காலமாகிய பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில்கூட கடவுள் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையை முறிக்கவில்லை என்பதை அவருடைய மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே கடவுள் அவர்களை எகிப்திலிருந்து விடுதலை செய்ததுபோல எப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத சூழ்நிலையி- ருந்தும் அவர்களைக் காப்பாற்ற அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார் (கீழே பார்க்க. வ. 9-10). உண்மையில் அவர் அவர்களுடைய நாட்டையே ஏதேனாக (பரதீசாக) மாற்ற வல்லமையுள்ளவர் (வ. 3).*

(2) ***உண்மையுள்ளவர்கள் மீட்கப்படுவார்கள்: வ. 4-8***

*கர்த்தர் தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றி தம்முடைய மக்களை மீட்டுக்கொள்வார். அவருக்கு உண்மையுள்ள மக்களும் மற்ற இனங்களில் இருந்து வருகிற அநேகரும் அவர் மேல் தங்கள் நம்பிக்கையை வைப்பார்கள் (வ.* 4b, 5b*). தம்முடைய மக்களைக் காப்பாற்றும்படி கடவுள் இனங்களை நியாயந்தீர்ப்பார் (வ.* 5a, 7b-8*). இந்த இடத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் நியாயத்தீர்ப்பு என்பது மகா உபத்திரவ காலத்தில் பூமியின் மீது வரும் நியாயத்தீர்ப்பைக் குறித்த விவரங்களுக்கு ஒத்திருக்கிறது (வெளி. 6; 8; 16). தம்முடைய மக்கள் சமாதானத்தோடும் நீதியோடும் வாழும்படி அநீதியுள்ளவர்களை நியாயந்தீர்த்து, நீதியை நிலைநாட்ட வேண்டும். இதைத் தான் ஏசாயா 11:*3ff *துல்லியமாக வாக்களிக்கின்றது. அநீதி செய்கிறவர்களையும் கொடிய அரக்கர்களையும் தம்முடைய இரும்புக் கோலால் அடித்து நொருக்கி, ஏழைகளுக்கு நீதியைக் கொண்டுவருவார் மேசியா. வெளி. 19:15 –ல் கிறிஸ்து திரும்ப வரும்போது பட்டயத்தையும் இரும்புச் செங்கோலையும் கொண்டுவருவார் என்றும் அதைக்கொண்டு அவர் இனங்களை அடித்து நொருக்குவார் என்றும் வாசிக்கிறோம்.*

(3) ***கடவுள் இடைப்பட வேண்டும் என்ற உண்மையுள்ளவர்களின் ஜெபம்: வ. 9-16***

*வ. **9-10:** எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் விடுதலைப் பயணம் மேற்கொண்ட போது கடவுள் அவர்கள் நடுவில் செய்த அற்புதங்களை நினைவுகூர்ந்து, கடவுள் தங்களுக்கு உதவி செய்யும்படி உண்மையுள்ள மக்கள் வேண்டிக்கொள்கிறார்கள். "ராகாப்" என்பது எகிப்தைக் குறிக்கும் அடையாளம் ஆகும்: சங். 89:11.*

*வ. **11-15:** தம்முடைய மக்களைத் தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பக் கொண்டு வருவேன் என்று தீர்க்கதரிசியைக் கொண்டு அறிவிப்பதன் மூலமாக அவர்களுடைய ஜெபத்திற்கு கடவுள் பதில்கொடுக்கிறார் (வ. 11). வ. 12 –ல் மனிதர்கள் அழிந்து போகிறவர்களாக இருக்கிற காரணத்தினால் அவர்களுக்குப் பயப்பட வேண்டாம் என்று சொல்கிறார். அதற்கு மாறாக, அவர்களுடைய எதிரிகளைக் கையாளக்கூடிய வானத்தையும் பூமியையும் படைத்த யாவேயையே மக்கள் நம்ப வேண்டும் (வ. 13-15). வசனம் 15-ல் விடுதலைப் பயணக் கருத்து மீண்டும் இடம் பெறுகிறது (ஏற்கனவே வசனம் 10-ல் இடம் பெற்றிருக்கிறது).*

*வ. 16: "என்னுடைய வார்த்தைகளை உன் வாயில் போட்டேன்": மற்ற இனங்களுக்குச் சாட்சியாக இருக்க வேண்டும் என்ற பணியில் இஸ்ரவேல் மக்கள் முழுவதும் தோல்வியடைந்து விட்டார்கள். ரோமர் 9:1-5 –ல் பவுல் இஸ்ரவேல் மக்களுக்குக் கிடைத்த சிறப்புச் சலுகைகளைப் பட்டிய- டுகிறார். ஆயினும், அவர்கள் கடவுளை விட்டு விலகிய காரணத்தினால் கடவுள் அவர்களைச் சிறையிருப்பினால் தண்டித்தார் (கி. மு. 722-ல் அசீரியர்களால் சிறையிருப்பு, கி. மு. 605-ல் பாபிலோனியச் சிறையிருப்பு மற்றும் கி. பி. 70-ல் ரோமர்களினால் உலகம் முழுவதும் சிதறப்படுதல்). பெந்தகொஸ்தே நாளில் இருந்து திருச்சபைதான் கடவுளுடைய வார்த்தையை உலகத்திற்கு எடுத்துச் செல்கிறது. ஏசாயா 66:19 இஸ்ரவேல் மேசியாவின் அரசில் இறுதியாக இந்த அருட்பணியைச் செய்யும் என்பது*

*போல பொருள் தருகிறது. மெக்டொனால்ட் மற்றும் மோட்டியர் போன்றவர்களோடு சேர்ந்து நானும் இந்த பகுதி மேசியாவைக் குறிக்கிறது என்றே கருதுகிறேன்; அவருடைய வாயில்தான் பிதாவாகிய கடவுள் தம்முடைய வார்த்தைகளைப் போடுகிறார் (ஏசாயா 49:1-4; 49:2; 50:4; யோவான் 17:8.14-ஐயும் பார்க்கவும்). இயேசுதான் அண்ட சாரசரங்களைப் படைத்தவர் என்று பு.ஏ. தெளிவாகச் சொல்கிறது: யோவான் 1:3.10; கொலோ. 1:16-17; எபி. 1:2.*

(4) ***கடவுள் தம்முடைய மக்களின் நியாயத்தீர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருகிறார்: வ. 17-23***

*கடவுள் இஸ்ரவேல் மக்களின் நியாயத்தீர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருகிறார் (வ. 17-22). இஸ்ரவேலை ஒடுக்கியவர்களை அவர் இப்போது நியாயந்தீர்ப்பார் (வ. 23; வ. 12-15-ல் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது). தத்தளிப்பின் பாத்திரம் (வ. 22) என்பது நியாயத்தீர்ப்புக்கான உருவகமாகும். அதைக் குடிக்கிறவர்கள் யாராயிருந்தாலும் அது விழும். (வெளி. 16:19; 18:6- ஆகிய வசனங்களுடன் ஒப்பிடவும்).*

## d) *சீயோனுக்கு மீட்பு: அதி. 52:1-12*

(1) ***வரப்போகிற மீட்புக்காக ஆயத்தமாகும்படி எருசலேம் அழைக்கப்படுகிறது: வ. 1-2***

*கடவுளுடைய மக்கள் சிறையிருப்பில் உருவக ரீதியாக நிர்வாணமாயிருக்கிறார்கள், ஆனால் அவர்களைக் கர்த்தர் விடுவிப்பார். இது பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து கிடைக்கவிருக்கும் மீட்பையே குறிப்பதாக புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று வசனம் 1 சிறப்பாகத் தெளிவுபடுத்துகிறது. அவர்கள் சிறையிருப்பில் ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கிற காரணத்தினால் அவர்கள் தூசியைத் தட்டிவிட்டு எழுந்திருக்க வேண்டும். இப்போது அவர்கள் எழுந்திருந்து பண்டிகைக்குரிய மகிமையான ஆடைகளை அணிந்துகொள்ளலாம்.*

(2) ***கடவுள் தம்முடைய மக்களின் மீட்பை நியாயப்படுத்துகிறார்: வ. 3-6***

*1. ஒடுக்கிறவர்கள் இஸ்ரவேலுக்கு எந்த விலையும் செலுத்தவில்லை. ஆகவே கடவுள் அவர்களை பணம் கொடுத்து மீண்டும் வாங்க வேண்டியதில்லை: வ. 3 (இலவசமாக, காசுக்கு அல்ல:* cf. *45:13; 55:1).*
*2. கடவுள் இறந்த காலத்தில் அவர்களை விடுவித்திருக்கிறார் (எகிப்தியர்களிடத்தி- ருந்தும் அசீரியர்களிடத்தி- ருந்தும்; இங்கேயும் நாம் விடுதலைப் பயணக் கருத்தைத் திரும்பப் பார்க்கிறோம்): வ. 4.*
*3. இஸ்ரவேலை ஒடுக்கிய பாபிலோனியர்கள் யாவேயைக் கனப்படுத்தவில்லை: வ. 5.*
*4. இஸ்ரவேல் தன்னுடைய மீட்பின் நிமித்தமாக யாவேயை அங்கீகரிக்கும்: வ. 6.*

(3) ***மீட்கப்பட்ட இஸ்ரவேல் தங்கள் ஓய்வின் மூலம் அவரைத் துதிப்பார்கள்: வ. 7-10***

*வ. 7 "***சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரிகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன***": இயேசு கிறிஸ்துவின் மூலமாக வரும் மீட்பை உலகம் முழுவதும் பிரசித்தப்படுத்த வேண்டும் என்ற அருட்பணிக் கட்டளையைப் பற்றிப் பேசும்போது ரோமர் 10:15-ல் பவுல் இந்த வசனத்தை மேற்கோள் காட்டுகிறார். வ.* 7b-10*: கோரேஸின் அறிவிப்பின் அடிப்படையில் யூதர்கள் தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பி, தேவாலயத்தைக் கட்ட அனுமதி பெற்ற போது இந்த விடுதலையின் செய்தி முத- ல் நிறைவேறியது. கர்த்தர் மீண்டும் திரும்ப உலகத்திற்கு வந்து சீயோனி- ருந்து அரசனாக ஆட்சி செய்யும்போது இந்த வார்த்தைகள் இறுதியாக முழுமையாக நிறைவேறும் (ஏசாயா 2:3; 11:2*ff*; 24:23; சகரியா 14:9*ff*).*

(4) ***பாபிலோனை விட்டுச் செல்லும்படியான அழைப்பு: வ. 11-12***

*முன்பைப் போலவே (48:20-ல் உள்ளது போலவே), கடவுளுடைய மக்கள் இங்கிருந்து செல்லும்படியாக அழைக்கப்படுகிறார்கள். இது பாபிலோனைக் குறிக்கிறது என்பது நிச்சயம் (ஏசாயா 51:6 மற்றும் வெளி. 18:4). "அசுத்தமானதைத் தொடாதிருங்கள்" என்ற கட்டளை எரிகோவின் வீழ்ச்சியின் போது ஆகான் கொள்ளைப் பொருட்கள் சிலவற்றை எடுத்துக்கொண்ட நிகழ்வைப் போன்றது (யோசுவா 6:18 ற்ர் 7:26). பு.ஏ-ல் அப். பவுல் 2இராஜா. 6:17 –ல் இருந்து மேற்கோள் காட்டி அவிசுவாசிகளுடன் சமரசம் செய்வதற்கு எதிராக எச்சரிக்கை விடுகிறார்.*

**e) *பதிலாள் பாடுகளும் யாவேயின் தாசனுடைய வெற்றியும் (*நான்காவதுவது 'ஓபேட் - யாவே – பாடல்கள்') *: அதி. 52:13–53:12***

*மேசியா என்ன செய்வார் என்பதைக் குறித்த துல்லியமான விளக்கம் இந்த பகுதியின் தனிச்சிறப்பாகும். பழைய ஏற்பாட்டின் எந்த பகுதியை விடவும் இந்த இடத்தில்தான் மேசியாவின் பதிலாள் பாடுகள் குறித்து பெருமளவு விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பகுதியை விளக்கப்படுத்துவது அவ்வளவு சுலபமானதல்ல, ஏனெனில் ப.ஏ.-ல் வேறு எந்த இடத்திலும் வராத 26 சொல்லாடல்கள் இந்த பகுதியில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது[66] மூன்று மூன்று வசனங்கள் கொண்ட 5 சரணங்களாக இந்த பகுதியை நாம் பிரிக்கலாம்: இதன் அமைப்பும் ஒரே மையத்தைக் கொண்ட வட்டங்களின் வடிவமும் எதிர்மறை ஒப்பீட்டு முறையும் கொண்டதாக இருக்கிறது: ஒரு மைய வட்டங்களின் வடிவைப் பொறுத்தவரை: யாவேயின் தாசனுடைய மகிமையோடு இந்த பகுதி ஆரம்பிக்கிறது* ***(அ)*** *அவருடைய வெற்றியோடு முடிவடைகிறது* ***(அ¹)****. இரண்டாவது பகுதி மக்களால் வெறுப்பாக நடத்தப்படுவதைப் பற்றிப் பேசுகிறது* ***(ஆ)*** *அதற்குரிய அடுத்த பக்கத்தில்* ***(ஆ²)****, அவருடைய மரணம் பேசப்படுகிறது. வசனங்கள் 4-6* ***(இ)*** *பதிலாள் பாடுகளைக் குறிக்கும் வசனங்கள். எதிர்மறை ஒப்பீட்டைப் பொறுத்தவரை, வெறுப்பு* ***(ஆ)*** *மகிமைக்கு எதிராக வைக்கப்படுகிறது* ***(அ)*** *மரணம்* ***(ஆ¹)*** *வெற்றிக்கு* ***(அ¹) எதிராக வைக்கப்படுகிறது:***

**A** *மகிமை*

  **B** *வெறுப்பு*

    **C** *பாடுகள்*

  **B¹** *மரணம்*

**A¹** *வெற்றி*

(1) ***அவருடைய மகிமை: 52:13-15***

*யாவேயின் தாசனுடைய எதிர்கால மகிமையுடன் தீர்க்கதரிசி ஆரம்பிக்கிறார்; அதன் பிறகு அவர் தாழ்த்தப்படுவதைப் பற்றி பேசுகிறார் (எதிர்மறை ஒப்பீடாக) அடுத்து அவர் உருக்குலைந்து போன போது மக்கள் என்ன செய்தார்கள் என்பதைப் பற்றி பேசுகிறார்.*

(2) ***அவர் வெறுக்கப்படுதல்: 53:1-3***

*அவருடைய தோற்றம் மற்றும் உருக்குலைவு காரணமாக மக்கள் அவரை அசட்டை செய்கிறார்கள் (சந்தேகத்திற்கு இடமின்றி இது சிலுவைப் பாடுகளைக் குறிக்கிறது!).*

(3) ***அவருடைய பாடுகள்: 53:4-6***

[66] This is referred to as ***"hapax legomenon".***

*இந்த வசனங்களில் அவருடைய பதிலாள் பாடுகள் ஏழு முறை கூறப்பட்டுள்ளது.*

(4) ***அவருடைய மரணம்: 53:7-9***

*அவர் பாவமற்றவராக இருந்தார் (2கொரி. 5:21; எபி. 4:15), அவருடைய மரணமே பதிலாள் பாவப் பரிகார பலியாகும்.*

- *வ. 8: அப். 8:32-33 –ல் மேற்கோள் காட்டப்படுகிறது.*
- *வ. 9: 1பேதுரு 2:22 –ல் மேற்கோள் காட்டப்படுகிறது.*

(5) ***அவருடைய வெற்றி: 53:10-12***

*அவருடைய மரணம் பலி மரணமாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவர் பாடுகளை சகிக்க வேண்டும் என்பது கடவுளுடைய சித்தமாக இருந்தது (வ. 10). வசனங்கள் 10-11 அவர் தம்முடைய மனப்பூர்வமான விருப்பத்தின்படியே தம்முடைய உயிரை ஒப்படைத்தார் என்று தெளிவாகச் சொல்கிறது (யோவான் 10:18). ஆனால் அவருடைய மரணம் முடிவல்ல:* ➔ ***"அவர் தம்முடைய சந்ததியைக் கண்டு திருப்தியாவார்…"*** *இது தெளிவாக உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. பல மக்களை நீதிமான்களாக்கி மேசியா வெற்றி பெறுவார் (வ.* 10b.11b.12b). *அவருடைய சந்ததியை அவர் காண்பார், அவரை நம்பி, அவரால் மீட்கப்படுகிறவர்களே அவருடைய சந்ததி.*

### f) *அடைப்புக்குறிக்குள் செய்திகள்: மேசியா*

*ஏசாயா தீர்க்கதரிசன நூ- ன் 60 வசனங்கள் மேசியாவைக் குறித்துப் பேசுகின்றன. அவை தெளிவாகவே ஒரு தீர்க்கதரிசன அற்புதத்தைக் கட்டியமைக்கிறது. இயேசு யார் அவர் நமக்காக என்ன செய்தார் என்பதை ஏசாயாவின் புத்தகம் நமக்குச் சொல்வதால் அதைப் படித்த பிறகு நாம் கடவுளை தொழுதுகொள்ளாமல் இருக்க முடியாது!*

(1) ***மேசியாவைக் குறிக்கும்படி ஏசாயா பயன்படுத்தும் பெயர்கள்***

- ***4:2:*** ***"கர்த்தருடைய கிளை"*** *(எரே. 23:5; 33:15).*
- ***7:14:*** ***"இம்மானுவேல்" (கடவுள் நம்மோடு)*** *(ஏசாயா 8:10; மத். 1:23).*
- ***8:14:*** ***"பரிசுத்த இடம்"*** *(பாதுகாப்பு, கிருபை மற்றும் சமாதானம் ஆகியவற்றைக் கொடுக்கிறவர் என்ற பொருளில் (யோவான் 2:18-22; மத். 26:59-62; மத். 24:1-2) மற்றும்* ***"தடுக்கிறதற்கு ஏதுவான கல்"*** *(1பேதுரு 2:7-8).*
- ***9:5-6:*** ***"ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள கடவுள், நித்தியபிதா, சமாதானபிரபு".***
- ***28:16:*** ***"மூலைக்கல்"*** *(மத். 16:18).*
- ***42:1:*** ***"யாவேயின் தாசன்"*** *(அப். 3:13).*
- ***49:6:*** ***"பிறவினத்தாருக்கு வெளிப்பாட்டின் வெளிச்சம்"*** *(லூக்கா 2:32).*

(2) ***அவருடைய தோற்றம்***

- ***11:1.10:*** *தாவீதின் தந்தையாகிய ஈசாயின் வம்சாவளி*

(3) ***அவருடைய பிறப்பு***

- ***7:14:*** *கன்னிப் பிறப்பு (மத். 1:23; லூக். 1:31-38).*

(4) ***அவருடைய தகுதிகள்***

- ***11:2:*** ***"கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் இருக்கிறார்"*** *(யோவான் 1:32-33; 3:34).*
- ***42:1:*** ***"நான் தெரிந்துகொண்ட தாசன் இவரே, நான் நேசிக்கிறவரும், மகிழ்ந்திருக்கிறவரும் இவரே"*** *(மத். 3:17; மத். 12:18-21).*
- ***49:5:*** ***"கருவில் உருவாக்கப்பட்டவர்"*** *(லூக்கா 1:35).*
- ***50:4-5:*** ***"போதிக்கப்பட்ட நாவு திறக்கப்பட்ட செவி":*** *யோவான் 17:8:* ***"நீர் எனக்குக் கொடுத்த வசனத்தை அவர்களுக்குக் கொடுத்தேன்"*** *(யோவான் 17:16). யோவான் 8:28:* ***"நான் பிதாவினிடத்தில் கண்ட உண்மைகளை நான் உங்களுக்குச் சொல்கிறேன்"*** *(யோவான் 8:38; 12:49; 14:10.24).*
- ***50:6-7:*** *யாவே அவருடைய பாடுகளில் அவருக்கு உதவினார்: லூக்கா 22:43: ஒரு தேவ தூதன் கெத்சமனே தோட்டத்தில் அவருக்கு உதவினான்.*

*மேசியாவைத் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் தமது தந்தையாகிய கடவுளிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்ளும் ஒரு மனிதனாக சித்தரிக்கிறார்.*

(5) ***அவருடைய முதலாவது வருகையில் (மனுவுருவானபோது) அவருடைய சேவை***

- ***9:2:*** *கலிலேயாவில் ஒரு ஒளி தோன்றியிருக்கிறது: மத். 4:14-15.*
- ***35:5-6:*** *குருடருடைய கண்களும் செவிடருடைய காதுகளும் திறக்கப்படும்; முடவன் துள்ளிக் குதித்து ஓடுவான், ஊமையன் பேசுவான்: மத். 11:5 (மத். 4:24).*
- ***40:1-4:*** *அவருடைய முன்னோடி: திருமுழுக்கு யோவான். "வனாந்தரத்தில் கூப்பிடுகிறவனுடைய சத்தம்" என்ற பகுதி நான்கு நற்செய்தி நூல்களிலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.*
- ***61:12a:*** *அவர் குணமாக்குவார், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கர்த்தருடைய அனுக்கிரக வருடத்தையும் அறிவிப்பார்: லூக்கா 4:18-19.*

*இயேசுவின் ஊழியத்தின் ஆரம்பம் அவருடைய ஆளுகையின் ஆரம்பமாக இருந்திருக்க வேண்டும்; மாறாக அது திருச்சபையின் காலத்தின் ஆரம்பமாக குறிக்கப்பட்டுள்ளது. அவருடைய மக்களாகிய இஸ்ரவேலர் அவரைப் புறக்கணித்த காரணத்தினால் (அவருடைய சீடர்களைப் போன்ற சிலரைத் தவிர) இஸ்ரவேல் இனம் தற்காலிகமாக ஒதுக்கி வைக்கப்படும் (மத். 13 மற்றும் ரோமர் 11:11-16.25*ff; *அப். 1:6).*

(6) ***அவருடைய பாடுகள்***

- ***50:6-7:*** *மனப்பூர்வமாக பாடனுபவித்தார்: யோவான் 10:17-18; 18:6.10.12.*
- ***53:4-7:*** *மனப்பூர்வமாக மற்றவர்களுக்கு பதிலாளாக பாடனுபவித்தார்: 2கொரி. 5:21; 1பேதுரு 2:24.*

(7) ***அவருடைய மரணம்***

- ***53:8: "அவர் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்"*** *(தானி. 9:26).*

(8) ***அவருடைய உயிர்த்தெழுதல்***

- ***53:10:*** **"அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்தநாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும்"** *ஆகவே யோவான் 14:19:* "**நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.**" *(* cf. *1கொரி. 15:22).*
- ***25:8:*** **"அவர் மரணத்தை ஜெயமாய் விழுங்குவார்..."** *(1கொரி. 15:54).*

- ***26:19:*** **"மரித்த உம்முடையவர்கள் பிரேதமான என்னுடையவர்களோடேகூட எழுந்திருப்பார்கள்; மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்துக் கெம்பீரியுங்கள்; உம்முடைய பனி பூண்டுகளின்மேல் பெய்யும் பனிபோல் இருக்கும்; மரித்தோரைப் பூமி புறப்படப் பண்ணும்"** *(தானி. 12:2).*

## g) *இஸ்ரவேலின் மீட்டுருவாக்கம்: அதி. 54*

*அதிகாரங்கள் 53-க்கும் 54-க்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன? ஏற்கனவே குறிப்பிட்டபடி 53-ம் அதிகாரம் மேசியாவின் பாடுகள், பதிலாள் மரணம் ஆகியவற்றையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் ஆளுகையையும் குறித்துப் பேசுகிறது. அவருடைய பாடுகளும் மரணமும் துக்கமான நிகழ்வுகள்தான் ஆனால், அவரை நம்புகிறவர்கள் மகிழ்ந்து களிகூரலாம் ஏனெனில் அவர் மீண்டும் உயிர்பெற்றெழுந்து, தம்முடைய சந்ததிகளைக் கண்டு, ஆளுகை செய்வார். தம்முடைய மக்கள் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்படுவதையும் அவருடைய வரப்போகிற அரசையும் 54-ம் அதிகாரம் அறிவிக்கிறது. கீழ்க்காணும் வடிவமைப்பு அதில் காணப்படுகிறது:*

***வ. 1–6:*** *ஏற்றுக்கொள்ளப்படுதலும் பாவமன்னிப்பும்*

***வ. 7–10:*** *தண்டனையும் பாவமன்னிப்பும்*

***வ. 11–17:*** *இறுதி மீட்டுருவாக்கம்*

### (1) ***கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாகிய இஸ்ரவேலைக் கடவுள் மீண்டும் சேர்த்துக்கொள்கிறார்:*** *வ. 1–6*

***வ. 1–3:*** *கைவிடப்பட்ட, குழந்தைகள் அல்ல பெண்ணாக இஸ்ரவேல் சிறை வைக்கப்பட்டிருந்தால். இப்போது அவளுடைய கணவன் (அதாவது கடவுள்) நித்திய அன்போடு மீண்டும் ஏற்றுக்கொள்கிறார். இஸ்ரவேல் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டு, புதிதாக மீட்கப்பட்டவர்களுக்கும் இடமிருக்கும்படியாக அதன் எல்லைகள் விரிவாக்கம் செய்யப்படும்.* ***வ. 4–6:*** *கடந்த கால பாவத்தைக் குறித்து அவர்கள் இனிமேல் வெட்கப்படத் தேவையில்லை, ஏனெனில் கடவுள் (**வ.** 5: "இஸ்ரவே- ன் பரிசுத்தரே உன்னுடைய மீட்பர்") துரோகம் இழைத்த ஒரு மனைவியை கணவன் மீண்டும் சேர்த்துக்கொள்வது போல அவர்களை மீண்டும் சேர்த்துக்கொண்டிருக்கிறார். "கைவிடப்பட்ட பெண்ணை மீண்டும் கணவன் ஏற்றுக்கொள்ளுதல்" என்ற கருத்து மீண்டும் 62:4-6 –ல் இடம்பெறுகிறது, அந்தப் பகுதி இஸ்ரவேலின் மீட்டுருவாக்கும் குறித்து பேசுகிறது. இது எப்படி ஏசாயாவின் புத்தகத்தின் இரண்டாவது பகுதியும் மூன்றாவது பகுதியும் கருத்துரீதியாகவும் எழுத்து நடையிலும் தொடர்புள்ளதாக இருக்கிறது என்பதற்குரிய அடுத்த உதாரணம் ஆகும்.*

### (2) ***தண்டனைக்குப் பிறகு இஸ்ரவேல் நிரந்தரமாக மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது:*** *வ. 7–10*

***வ. 7:*** *"கொஞ்ச காலம் உங்களைக் கைவிட்டேன்": மக்கள் கலகம் செய்து பாவம் செய்த காரணத்தினால் சிறையிருப்பில் தண்டிக்கப்பட்டார்கள். இது வட அரசின் அசீரிய சிறையிருப்புக்கும் (கி. மு. 722) யூதாவின் பாபிலோனிய சிறையிருப்புக்கும் (கி. மு. 605 முதல்) பொருந்தும். ஆகிலும், கடவுள் அவர்களைக் கொஞ்ச காலம் கைவிட்ட பிறகு, அதாவது சிறையிருப்பின் தண்டனையை அவர்கள் அனுபவித்த பிறகு தம்முடைய மக்களை அவர் மீண்டும் ஏற்றுக்கொள்கிறார். ஏசாயா தன்னுடைய வெளிப்பாட்டுப் பகுதியில் (அதி. 24—27) இதே காரியத்தைச் சொல்கிறார்: முதலில் சிறையிருப்பின் மூலம் தண்டனை, அதன் பிறகு மட்டுமே மீட்டுருவாக்கம்: ஏசாயா 27:* ***வ.*** *6: இஸ்ரவேலின் மீட்டுருவாக்கும் மிகுந்த பலனைக் கொடுக்கும்.* ***வ.*** *7-11: ஆகிலும், மக்கள் முதலில் தண்டிக்கப்பட்டு கைவிடப்பட வேண்டும். கிழக்குக் காற்று என்பது பாபிலோனை, அதாவது சிறையிருப்பைக் குறிக்கிறது.* ***வ.12-13:*** *இஸ்ரவேலர் தண்டனை அனுபவித்த பிறகுதான் அவர்கள் எருசலேமில் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.* ***வ. 8–10:*** *தம்முடைய மக்களை இறுதியாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதை கடவுள் நோவாவின் நிகழ்வின் மூலமாக நிறுவுகிறார் (வெள்ளக் கருத்து).*

(3) ***மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட இஸ்ரவேலின் அழகு : வ. 11-17***

*__வ. 11-12:__ வெளி. 21:9ff – ல் வருகின்ற புதிய எருசலேமைப் போல மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட எருசலேம் மகிமையான நகரத்திற்கு ஒப்பிடப்படுகிறது. எபிரெயத்தில் 11-ம் வசனத்தில் வரும்* **"சிறுமைப்பட்டவளே"** *மற்றும்* **"தேற்றரவற்றவளே"** *போன்ற சொற்கள் பெண்பாலில் வருகின்றன. செமித்திய நாகரீகத்தில் நகரங்கள் பெண்ணாக அல்லது மணவாட்டியாக சித்தரிக்கப்படுவது வாடிக்கை. நகரின் அத்திவார சுவர்கள் உயர்த்தப்பட வேண்டும் என்பது பாபிலோனினால் உடைக்கப்பட்ட எருசலேமின் நகர மதில்களைக் குறிப்பதாக இருக்கலாம். __வ. 13-14:__ சிறுவர்களும் வாலிபர்களும் கர்த்தருக்கு உரியவர்களாக இருப்பார்கள், இனிமேல் பயப்பட வேண்டிய தேவையில்லை. ஏன்? __வ. 15-17:__ ஏனெனில் கர்த்தரே தம்முடைய மக்களைக் காத்து அவர்களுடைய எதிரிகளிடமிருந்து அவர்களுக்கு வெற்றி பெற்றுத் தருவார். __வ.__ 15:* **"உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல"**: *இதை ஏசாயா 27:4-5 –உடன் ஒப்பிடவும் (இந்த பகுதி மேசியாவின் அரசில் இஸ்ரவே- ன் பாதுகாப்பைப் பற்றி பேசும் ஏசாயாவின் வெளிப்பாட்டிலுள்ள ஒரு பகுதியாகும்).*

## h. *முழு உலகத்திற்கும் இரக்கம் அருளப்படுகிறது: அதி. 55*

(1) ***இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அழைப்பு: வ. 1-3***

*அழைப்பு* ➔ **"நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும்கொள்ளுங்கள்"** *முதலாம் வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அழைப்பு பசியாகவும் தாகமாகவும் இருக்கின்ற அனைவருக்கும் இலவசமாகக் கொடுக்கப்படும் கிருபையின் அழைப்பாகும். இதே அழைப்பு வேதாகமத்தின் இறுதி நூலிலும் கொடுக்கப்படுகிறது: வெளி. 22:17. ஏசாயா 45:13 –ல் "பணமின்றி பெற்றுக்கொள்ளுங்கள்" என்பதைக் கவனியுங்கள்: கோரேஸின் மூலமாக வந்த விடுதலை பணமின்றி பெறப்பட்ட விடுதலை! வசனம் 3: ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, "நித்திய உடன்படிக்கை" ஏசாயா நூலின் மூன்று பகுதிகளிலும் இடம் பெற்றிருக்கிறது: 24:5; 55:3; 61:8. 2சாமு. 7:11-16 தாவீதுடனான நித்திய உடன்படிக்கையைப் பற்றிப் பேசுகிறது. தாவீது தீவிரமான பாவங்களைப் பிற்காலத்தில் செய்த போதிலும் கடவுள் அந்த உடன்படிக்கையைக் கைவிடவில்லை (2சாமு. 11).*

(2) ***இந்தக் கிருபையின் அழைப்பு அனைத்து (பிற) இனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது: வ. 4-7***

*வ. __4:__* **"இதோ, அவரை ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சியாகவும்… ஏற்படுத்தினேன்"**: *தாவீது அருகி- ருந்து இனங்களின் நடுவில் பிரபலமானவராக இருந்திருக்கலாம், ஆனால், இங்கு "அவரை" என்பது தாவீதின் மைந்தனாகிய மேசியாவைக் குறிக்கிற சொல்லாகும். தாவீதின் சந்ததியில் இயேசு வருகிறார் என்பதற்கு பார்க்க ஏசாயா 11:1; ரோமர் 1:3 மற்றும் 15:12. இங்கே தாவீது குறிப்பிடப்படுவது ஏசாயா 7:14 தாசனுடைய பாடல்கள் வரும் 42:1ff மற்றும் 49:3-6 ஆகிய பகுதிகளோடு தொடர்புடையது. மேசியாவும் மக்களைத் தம்மிடத்தில் இழுத்துக்கொள்வார் அல்லது மக்களுக்கு மீட்பை வழங்குவார், ஏனெனில் அவரே "இனங்களுக்கு வெளிச்சமானவர்" (ஏசாயா 42:6; 49:6; 60:3; 62:1).*

*__வ. 5:__* **"நீ அறியாதிருந்த ஜாதியை வரவழைப்பாய்"**: *இந்த இடத்தில் "நீ" என்பது இஸ்ரவேலைக் குறிக்கலாம், ஏனெனில் மற்ற இனங்கள் மேசியாவைத் தொழுதுகொள்ளும்படி இஸ்ரவே- டத்தில் ஓடிவரும்.*[67]

*__வ. 6-7:__ கடவுளுடைய கிருபை யூதர்களுக்கும் பிற இன மக்கள் அனைவருக்கும் வழங்கப்படுகிறது. மீட்பைத் தேடுகிற அனைவருக்கும் கொடுக்கப்படுகிறது. கடவுள் பயமற்ற*

[67] As for example John A. Martin, op. cit., III, p. 113.

*மக்கள் தங்கள் தீய வழிகளை விட்டுத் திரும்பி கர்த்தரிடத்தில் வரும்படி அழைக்கப்படுகிறார்கள் ஏனெனில் அவரே பாவமன்னிப்பை அருளுகிறவர். ஒப்பிடுக: 1இராஜா, 8:41-43; அப். 13:46-48; 28:28; ரோமர் 5:6-10.*

(3) ***கடவுளுடைய வாக்குறுதிகளின் நிச்சயமான தன்மை: வ. 8-13***

***வ. 8-9:*** *அவருடைய சிந்தனையும் வழிகளும் நம்முடைய சிந்தனையையும் வழிகளையும் விட மிகவும் உயர்ந்தது என்பதற்கு அவருடைய அளவற்ற இரக்கம் அத்தாட்சியாக இருக்கிறது (**வ.** 8-9). இது இரட்சிப்பைத் தேடுகிறவர்கள் தங்கள் சொந்த நற்செயல்களினால் அல்ல அவருடைய கிருபையினால் மட்டுமே அதைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைக் காண்பிப்பதாக இருக்கலாம்.*

***வ. 10-11:*** *கடவுளுடைய வார்த்தையின் சக்தி, இயற்கையின் சக்தியைப் போல மாறாதது, அவருடைய வார்த்தை தன்னுடைய செயலைச் செய்து முடிக்காமல் அவரிடத்தில் வெறுமையாகத் திரும்பாது.*

***வ. 12-13:*** *ஆயிரம் வருட ஆட்சியைக் குறித்த உருவகமாக இது இருக்கலாமா? வசனம் 13 ஒருவேளை ஆதி. 3:18 மற்றும் ரோமர் 8:19-23 ஆகிய பகுதிகளை மறைமுகமாகக் குறிப்பிடுவதாக இருக்கலாம். (இனிமேல் அங்கு முட்செடிகளுக்கும் நெரிஞ்சில்களுக்கும் இடமில்லை!)*

# C. *மனந்திரும்புதல் மூலம் உயர்த்தப்படுதல்: அதி. 56–66*

*நாம் ஏற்கனவே அறிமுகத்தில் குறிப்பிட்டதைப் போல, இந்த பகுதி பெயர் அறியப்படாத, "மூன்றாம்-ஏசாயா" என்று தாங்கள் பேரிட்டுள்ள ஒருவரால் எழுதப்பட்டது என்று விமர்சக வியாக்யானிகள் பலர் கருதுகிறார்கள். ஆகிலும் இந்த பகுதியை ஏசாயா எழுதவில்லை சிறையிருப்பின் காலத்திற்கு பிறகுள்ள காரியங்களைப் பற்றி பேசுவகப் பார்த்தால், இதில் சிலைவழிபாடுகளுக்கு எதிரான போதனைகள் இல்லாமல் எஸ்றா மற்றும் நெகேமியாவைப் போல கலப்புத் திருமணத்திற்கு எதிரான போதனைகளே இருக்கவேண்டும்.*

## *1. பாவமும் மனந்திரும்புதலுக்கான அழைப்பும்: அதி. 56–59*

### a) *மீட்பு அனைவருக்கும் வழங்கப்படுகிறது: அதி. 56:1-8*

***56:1-8:*** *கிருபையின் அழைப்பு ➔ **"என் மீட்பு சமீபமாயிருக்கிறது".** இது அனைவருக்கும் "சலுகை மறுக்கப்பட்டவர்கள்" என்று அழைக்கப்படுகிறவர்களுக்கும் கொடுக்கப்படுகிறது:*

- *அந்நியர்கள்: (வ. 3).*
- *அண்ணகர்கள் (வ. 4).*
- *இவர்களும் நிலைவாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும் (வ. 5; ரோமர்2:11).*
- *இயேசு மேற்கோள் காட்டுகிறார்: மத். 21:13; மாற்கு 11:17; லூக்கா 19:46.*

### b) *சிலைவழிபாடும் இஸ்ரவேலின் பாவமும்: அதி. 56:9–57:21*

*தீர்க்கதரிசி 56:9 முதல் மக்களுடைய பாவங்களை குறிப்பிட்டுப் பேசுகிறார்:*

- *மக்களுடைய தலைவர்கள் **"குருட்டு சாமக்காரர்கள்":** 56:9-12.*
- *தீமையுள்ள மக்கள் மற்றும் சிலைவழிபாடு செய்கிறவர்கள்: 57:1-13:*
    1. *நீதிமான்களுக்கு அநியாயம் செய்யப்படுகிறது: 57:1-2*

2. இஸ்ரவேலர் குறிசொல்கிறார்கள், விபசாரம் செய்கிறார்கள், பொய் பேசுகிறார்கள்: 57:3-4.

3. அவர்கள் மரங்களின் கீழே பலியிடுகிறார்கள் (குழந்தைகளைக் கூட பலியிடுகிறார்கள்; மோவாபியர்கள் மோலேகுக்கு பலியிடுவதைப் போல அல்லது தெற்கு மற்றும் மத்திய அமெரிக்காவில் உள்ள இன்காஸ் மற்றும் அஸ்டக்ஸ்கள் போல) அவர்கள் விபச்சாரம் செய்கிறார்கள்: 57:5-6.

4. அவர்கள் உயர்ந்த மலைகளில் பலியிடுகிறார்கள்: 57:7.

5. இஸ்ரவேல் கர்த்தரை நம்பாமல் அசீரியர்களை நம்பி, எல்லாரோடும் சமரசம் செய்துகொள்கிறார்கள் (ஆகாஸ் அசீரிய மன்னனிடத்திற்கு தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்புகிறான். அதோடு யாவேயின் ப- பீடத்தைத் தள்ளிவிட்டு அசீரியர்களுடைய சிலைவழிபாட்டு பலிபீடத்திற்கு ஒப்பான ஒன்றை எருசலேமில் நிறுவுகிறான்: 2இராஜா. 16:7-18): 57:8-12 (57:11: “இருதயத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை” ஒப்பிடுக: 42:25).

6. ஆகவே, இஸ்ரவேல் மீதான நியாயத்தீர்ப்பு உறுதியானது: 57:13a.

- தங்களைத் தாழ்த்துகிறவர்கள் மீட்கப்படுவார்கள்: 57:13b-19
- ஆனால் தீயவர்களுக்கு மீட்பில்லை: 57:20-21. (வ. 21 “**துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்**” : 48:22)

ஏசாயாவின் புத்தகத்தின் மற்ற பகுதிகளைப் போலவே 55-66 வரையுள்ள பகுதிகளிலும் பல்வேறு பாடப்பொருள்கள் பேசப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் பாவம், நியாயத்தீர்ப்பு என்பதும் மறு பக்கத்தில் சமாதானம் என்பதும் மாறி மாறிப் பேசப்படுகிறது. கீழ்க்காணும் வடிவமே பின்பற்றப்படுகிறது:

மகா

58←பாவம்→59/60←அரசு→62/63←உபத்திரவம்→65:16/65:17←அரசு→65:25/66:1←விவரம்→66:24

## c) பாவமும் நீதியும்: அதி. 58–59

(1) ***தவறான ஆராதனை அல்லது ஓய்வுநாள் நடவடிக்கைகள்: 58:1-5***. ஆராதனையில் இஸ்ரவே- ன் பாவம் வெளிப்படையாகத் தெரிகிறது. மக்கள் உபவாசம் இருந்து சுய ஒறுத்தல்களை மேற்கொண்டாலும் தீய காரியங்களை தங்களுடைய வாழ்வில் செய்துகொண்டிருந்தார்கள். இது போலியான உபவாசம் களியாட்டத்தின் போது பாவ மன்னிப்புக் கோருவதைப் போன்றது. மக்கள் வெளித்தோற்றத்திற்கு மட்டுமே மனந்திரும்புகிறார்கள், பாவ அறிக்கை கூட செய்கிறார்கள், ஆனால் அடுத்த பாவத்தை எப்படிச் செய்வது என்று தங்கள் உள்ளத்தில் திட்டமிடுகிறார்கள்.

(2) ***உண்மையான ஆராதனையும் ஓய்வுநாள் நடவடிக்கைகளும்: 58:6-14. வ. 6-7:*** உண்மையான உபவாசம் என்பது தீமையை விட்டு விலகுவதும் ஏழைகளின் நன்மைக்காக சுய-வெறுப்பின் நடவடிக்கைகளில் ஈடுபடுவதுமாகும்.

***வ. 8-12:*** சமூக நீதியை கடவுள் ஆசீர்வதிக்கிறார்.

***வ. 13-14:*** உண்மையில் ஓய்வு நாளைக் கைக்கொள்கிறவர்களை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். “கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று”,என்பதை பார்க்க. 1:20 மற்றும் 40:5.

(3) ***பாவம் யாவேயிடம் இருந்து நம்மைப் பிரிக்கிறது: 59:1-8***. இஸ்ரவேல் மக்கள் யாவேயிடம் இருந்து பிரிக்கப்படுவது அவருடைய பெலவீனம் அல்ல அவர்களுடைய பாவத்தின் காரணமாகத்தான். 59:2 இந்த வசனம் பாவத்தைக் குறித்த படிப்புக்கும் (Hamartiology) மீட்பைக் குறித்த படிப்புக்கும் (Soteriology) முக்கிய ஆதார வசனமாகும்.

(4) ***இஸ்ரவேல் தன்னுடைய குற்றத்தை அறிந்திருக்கிறது: 59:9-15***. *ஏசாயா பாவத்தை அறிக்கை செய்யும் போது பின்நாட்களில் தானியேல் செய்ததைப் போல (தானி. 9) தன்னுடைய மக்களின் பாவங்களோடு தன்னையும் சேர்த்து அடையாளப்படுத்திக்கொள்கிறார். இறுதியில் மிகவும் மோசமான பாவத்தைக் குறிப்பிடுகிறார், அதாவது தீமைக்கு எதிர்த்து நிற்கிறவர்கள் அநீதிக்கு பலியாகிறார்கள். கர்த்தர் இவை அனைத்தையும் பார்த்து வெறுப்புற்றிருக்கிறார் என்று ஏசாயா சொல்கிறார் (**வ.** 15).*

(5) ***நடுவர்கள் யாரும் இல்லாத காரணத்தினால் யாவேயே தலையிடுகிறார்: 59:16-21. வ. 16-17:*** *பாவமுள்ள மக்களுக்காக தலையிடுவார் யாரும் இல்லை என்ற இந்த முறைப்பாட்டிற்கு பார்க்க. 63:5 மற்றும் எசே. 22:30. இரட்சகர் யாரும் இல்லாத காரணத்தினால் கடவுளே இடைப்படுகிறார். "***அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி***": இங்கு கடவுள் பயன்படுத்தும் மனித மொழி "யாவேயின் புயம்" என்பது ஏசாயாவில் பலமுறை வருகிறது. வசனம் 17: பவுலின் ஆன்மீக ஆயுதங்கள்: எபே. 6:14.17.*

***வ. 18-21:*** *கர்த்தர் இதை எப்படிச் செய்வார்?*

1. *தீயவர்களை நியாயந்தீர்ப்பதன் மூலமாக (**வ.** 18).*
2. *தங்கள் பாவங்களை அறிக்கை செய்கிறவர்களை மீட்பதன் மூலமாக (**வ.** 19-21).*

*இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும். வசனங்கள் 20-21 – ஐ பவுல் ரோமர் **11:26-27 –ல் மேற்கோள் காட்டி** இஸ்ரவேல் மக்களுடைய மனமாற்றமும் மீட்டுருவாக்கமும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நடைபெறும் என்று சொல்கிறார். இதுதான் இஸ்ரவேல் இனத்திற்கான "பெந்தகொஸ்தே" நாளாக இருக்கும். எங்களைப் பொறுத்தவரை இந்த பகுதி மேசியாவின் அரசின் ஆரம்பத்தைக் குறித்து பேசுகிறது.*

## d) *அடைப்புக்குறிச் செய்தி: ஏசாயா 59-ம் அதிகாரத்தில் பாவம்*

(1) ***பாவத்தின் அளவு***

***வ. 3:*** *அநீதி, படுகொலை, பொய், பரியாசம்.*
***வ. 4:*** *முறைகேடு (ஊழல்).*
***வ. 6-7:*** *படுகொலை, தீமையான நாட்டம், அழிவு.*
***வ. 13:*** *துரோகம், மாய்மாலம்.*
***வ. 15:*** *பாவத்தை விட்டு விலகுகிறவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் (1பேதுரு 4:4)!*

(2) ***பாவத்தின் விளைவுகள் (கலா. 6:7)***

***வ. 2:*** *கடவுளை விட்டு பிரிதல்.*
***வ. 5:*** *மரணம்.*
***வ. 8:*** *சமாதானமில்லை.*
***வ. 9:*** *மீட்பில்லை, விடுதலையில்லை.*
***வ. 10-11:*** *இருள்; மீட்பு தூரமானது.*
***வ. 14-15:*** *உண்மையில்லை, உண்மையுள்ளவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள்.*
***வ. 18:*** *கடவுளில் பதில் செயல் (நியாயத்தீர்ப்பு)!*

(3) ***பாவத்திலிருந்து விடுதலை***

***வ. 1:*** *விடுவிக்கக்கூடாதபடி கடவுளின் கரம் குறுகவில்லை.*
***வ. 16-20:*** *சீயோனி- ருந்து மீட்பர் வருவார்.*

(4) ***மீட்பருக்கான தேவை***

- *மனுக்குலம் தன்னைத் தானே மீட்க முடியாது:* ***வ.*** *16 (சங். 49:8ff). திறப்பை அடைக்க யாரும் இல்லை (எசே. 22:20).*
- *கடவுள் எல்லாருக்கும் அவரவருடைய செயல்களுக்குரிய பலனை அழிப்பார் (மீட்பர் இல்லாமல் எல்லாரும் தொலைந்து போனார்கள், ஏனெனில் எல்லாரும் பாவிகளாயிருக்கிறார்கள்: ரோமர் 3:23-24).*
- *மீட்பதற்கு இயேசுவாகிய மீட்பர் வருவார்:* ***வ.*** *20.*

## *2. யாவேவும் எருசலேமில் அவருடைய ஆட்சியும்: அதி. 60–62*

### a. ***சமாதானத்தின் அரசு***

*சமாதானத்தின் அரசு கீழ்வருமாறு விவரிக்கப்பட்டிருக்கிறது:*

- *அதில் பிறவின மக்களின் இடம்: அதிகாரம் 60.*
- *மேசியா: அதிகாரம் 61.*
- *எருசலேம்: அதிகாரம் 62.*

*சமாதானத்தின் அரசில்:*

### b. ***மேசியா***

- *அவர் இரக்கமுள்ளவராக, ஆனால் நீதிபதியாக இருப்பார்: 61:1-2.*[68]
- *அவர் எருசலேமின் வெளிச்சமாயிருப்பார்: 60:19-20. இந்த தீர்க்கதரிசனம் இறுதியில் நித்தியத்தில்தான் நிறைவேறும் (புதிய படைப்பு: வெளி. 21:23). இங்கேயும் தீர்க்கதரிசி 65:17-25-ல் பார்ப்பதைப் போல, ஆயிரம் வருட அரசாட்சியையும் நித்திய வாழ்வையும் ஒரு தொலைநோக்கியைக் கொண்டு பார்ப்பதைப் போல பார்க்கிறார்.*

### c. ***எருசலேம்***

- *யாவேயின் நகரமாக இருக்கும்: 60:14.*
- *அதற்குப் புதிய பெயர் கொடுக்கப்படும்: 62:12 (எசே. 48:35).*
- *திரும்பக் கட்டப்பட்டு மகிமையாக இருக்கும்: 62:7.*

### d. ***இஸ்ரவேல்***

- *பிற இன மக்களுக்கு வெளிச்சமாயிருக்கும்: 60:3.*
- *எல்லாரும் நீதியுள்ளவராயிருப்பார்கள்: 60:21.*
- *அனைவரும் கர்த்தருடைய ஆசாரியராயிருப்பர்: 61:6.*
- *"பரிசுத்த மக்கள்" என்றும் "கர்த்தருடைய மீட்கப்பட்டவர்கள்" என்றும் அழைக்கப்படுவார்கள்: 62:12.*

### e. ***இனங்கள்***

- *எருசலேமுக்கு வருவார்கள், யூதர்களை அவர்கள் நாட்டுக்குக் கொண்டு வருவார்கள்: 60:3-4(ஏசாயா 14:1-2; சகரியா 14:16ff).*

---

[68] Interestingly, Jesus quotes this passage in the synagogue of Nazareth in Luk 4:18-19. But he does not read the last part of Isa 61:2! He pauses in the middle of the sentence. Why? In our view, this also points to a ***Messianic intermediary kingdom*** (Millennium): The grace is for the age of the church; judgment, however, only begins with the Great Tribulation, which ends with the return of Christ and enters into the millennial kingdom.

- யாவேயைத் துதிப்பார்கள்: 60:6.
- எருசலேமின் மதில்களை திரும்ப கட்டுவார்கள்: 60:10.
- இஸ்ரவேலுக்கு சேவை செய்யாதவர்கள் அழிக்கப்படுவார்கள்: 60:12 (cf. சகரி. 14:16-20).
- அவர்கள் எருசலேமிற்கு சேவை செய்வார்கள்: 60:16; 61:6.

### f. தேவாலயம்

ஏசாயா 63:18 மற்றும் 64:11 ஆகிய வசனங்கள் சாலமோனுடைய தேவாலயத்தைக் குறித்துப் பேசுகின்றன, அது சுமார் 120 வருடங்களுக்கு பிறகு (கி. மு. 586) நேபுகாத்நேச்சருடைய தலைமையில் பாபிலோனியர்களால் அழிக்கப்பட்டது. ஆயினும் மேசியாவின் அரசில் ஒரு புதிய தேவாலயம் இருக்கும்.

- அது மகிமையானதாக இருக்கும்: 60:7.13-14.
- அதில் ஒரு ப– பீடம் இருக்கும்: 60:7; 62:9.

### g. நித்திய உடன்படிக்கை

மேசியாவினுடைய அரசிலும் கர்த்தர் இஸ்ரவேல் மக்களோடு நித்திய உடன்படிக்கை செய்துகொள்வார் **(ஏசாயா 61:8,** மகா உபத்திரவத்தில் தப்பித்த மீதியான இஸ்ரவேலரோடு; ரோமர் 11:25-27), அந்த உடன்படிக்கையை இஸ்ரவேலர் மீறிய காரணத்தினால் **(ஏசாயா 24:5),** மகா உபத்திரவ காலத்தில் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் (ஏசாயா 24:1ச்ச்). இன்று மக்கள் எந்த செலவும் இல்லாமல் நித்திய உடன்படிக்கைக்குள் வரமுடியும் **(ஏசாயா 55:1)** அதற்கு அவர்கள் கிறிஸ்துவின் மீட்பின் செயலை ஏற்றுக்கொள்ள வேண்டும் (ஏசாயா 53:10-12). நாம் ஏற்கனவே அறிமுகத்தில் சொன்னபடி ஏசாயா நூலின் மூன்று பகுதிகளிலும் “நித்திய உடன்படிக்கை” என்ற சொல்லாடல் இடம்பெறுகிறது: 24:5; 55:1; 61:8.

## 3. கடவுள் பக்தியற்றவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு: அதி. 63:1 -65:16

### a. ஏதோம் அல்லது உலகத்தின் மீதான நியாயத்தீர்ப்பு: 63:1-6

வசனங்கள் 1-4-ல் கோபத்தின் நாள் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. இதை இயேசு மத். 24:21-லும் யோவான் வெளி. 7:14-லும் “மகா உபத்திரவம்” அல்லது “மிகுந்த உபத்திரவம்” என்று அழைக்கிறார்கள். தம்முடைய மக்களைக் காப்பாற்றும்படி மேசியா இனங்களுக்கு எதிராக சண்டையிடுவார். யோவேல் 3 (சில மொழிபெயர்ப்புகளில் யோவேல் 4); சகரியா 14:1ff மற்றும் வெளி. 19:11-21 ஆகியவை இணை வசனங்களாகும். இந்த பகுதிகள் **“அர்மகெதோன்”** என்று வெளி. 16:16 அழைக்கப்படும் யுத்தத்தைக் குறித்துப் பேசுகின்றன. ➔ **“திராட்சை ஆலை” (**63:2-3) என்பதை வெளி. 14:19-20 உடன் ஒப்பிடட்டும்.

வ. 5-6: “உதவுவதற்கு அங்கு யாருமில்லை...” ஏசாயா 59:16 மற்றும் எசே. 22:30.

### b. பாவமன்னிப்புக்கும் இரக்கத்திற்குமான விண்ணப்பம்: 63:7-19

63:7 - விலிருந்து 64:11 கடவுளின் மக்கள் வேண்டிக்கொள்கிறார்கள். இந்த மக்கள் தங்கள் பாவங்களை உணர்ந்துகொண்ட மீதமுள்ள உண்மையுள்ள மக்கள், அவர்கள் தான் இந்த விண்ணப்பத்தை ஏறெடுக்க வேண்டும் (cf. 59:9-15). இந்த ஜெபத்தில் யாவே கடந்த காலத்தில் குறிப்பாக எகிப்தில் இருந்து விடுதலைப் பயணம் மேற்கொண்ட போது தங்களுக்குச் செய்த உதவிகளை நினைவுகூர்ந்து வேண்டிக்கொள்கிறார்கள் (63:7-19). 63:9 சந்தேகத்திற்கு இடமின்றி யாவே அல்லது இயேசுவைக் குறிக்கிறது.

### c. பாவ அறிக்கையும் கடவுள் இடைப்பட வேண்டும் என்ற விண்ணப்பமும்: 64:1-12

***வ. 1-4:*** *கடவுள் தம்முடைய வல்லமையைக் காண்பிக்கும்படி இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தம்முடைய எதிரிகளைக் குழப்பி இந்தக் காரியத்தில் தலையிட வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறார்கள்.*

***வ. 5-6:*** *தங்கள் பாவங்களை மீண்டும் அறிக்கை செய்கிறார்கள். வசனம் 6 – ஐ 53:6 ("நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பிப் போனோம்…") – உடன் ஒப்பிடுக.*

***வ. 7-11:*** *அவர்கள் மீண்டும் பாவ மன்னிப்புக்காகவும் மீட்டுருவாக்கத்திற்காகவும் வேண்டிக்கொள்கிறார்கள். மனந்திரும்புதல் இல்லாமல் பாவ மன்னிப்போ மீட்போ கிடையாது (நீதி. 28:13).*

### d. கடவுளுடைய பதில்செயல்: 65:1-16

*இஸ்ரவேலிலும் பிற இன மக்கள் நடுவிலும் கடவுளைத் தேடுகிற மக்கள் உண்டு என்பதை அவர் அறிவார், அவர்கள் மீது தான் இரக்கம் காட்டுவேன் என்று அவர் தம்முடைய வேலைக்காரர்களுக்கு வாக்குறுதி கொடுக்கிறார் ("என் ஊழியக்காரர்" இந்த 16 வசனங்களில் 7 முறை இடம்பெறுகிறது: வ. 8.9.13*[3*முறை*] *14). இஸ்ரவேலில் உள்ள சிலைவழிபாட்டுக்காரர் நியாயந்தீர்க்கப்படுவார்கள். ஏசாயா 65:1-2 – ஐ ரோமர் 10:20-22 - ல் மேற்கோள் காட்டி கடவுளைத் தேடாதவர்களால் அவர் கண்டுபிடிக்கப்பட்டார் என்று பவுல் கூறுகிறார். இஸ்ரவேல் உண்மையில்லா, தீய வழிகளில் தொடர்ந்து நிலைத்திருந்ததன் மூலமாக தோல்வியடைந்து விட்டது. வ. 16: "ஒரே உண்மைக் கடவுள்" அல்லது "உண்மையின் கடவுள்" (ஏலோஹிம். ஆமென்) வெளி. 3:7.14 –ல் இயேசுவானவர் "பரிசுத்தமும் உண்மையும் உள்ளவர்" அல்லது "ஆமென்" என்று அழைக்கப்படுகிறார்.*

## 4. நீதிமான்களின் எதிர்கால மகிமையும் கடவுள் நம்பிக்கையற்றவர்களின் நித்திய தண்டனையும்: அதி. 65:17–66:24

### a. ஆயிர வருட அரசாட்சியும் புதிய படைப்பும்: 65:17-25

*கடவுளுடைய அரசிற்குள் நுழைவது அவருடைய இரக்கத்திற்கான சான்றாக இருக்கின்றது. 65:17 சந்தேகத்திற்கு இடமின்றி நித்தியத்தை, புதிய படைப்பைக் குறிக்கிறது:* ***"புதிய வானம்"*** *மற்றும்* ***"புதிய பூமி"*** *2பேதுரு 3:13-14 மற்றும் வெளி. 21:1*ff*: இவ்வாறு ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிறகு இது நடைபெறும். ஏசாயா ஆயிரம் வருட அரசாட்சிக்கும் நித்தியத்திற்கும் இடையில் வித்தியாசத்தைப் பார்ப்பதில்லை, (வெளி. 20:1–22:5). வசனம் 18-லிருந்து ஏசாயா நித்தியத்தைக் குறித்துப் பேசவில்லைப் என்று சிறப்பாக வசனங்கள் 20 மற்றும் 23 ஆகியவை தெளிவாகக் காட்டுகிறது, , ஆனால் ஆயிரம் வருட அரசாட்சியைக் குறித்துதான் இங்கு பேசுகிறார். ஏனெனில் மரணத்தைக் குறித்து இங்கு பேசப்படுகிறது, நித்தியத்தில் மரணத்திற்கு இடமில்லை (வெளி. 21:3-4). ஆயிரம் வருட அரசாட்சி நித்தியத்தைக் குறித்த ஒரு முன்னடையாளம் என்று சொல்லலாம். இந்தப் பகுதியை ஒருவர் ஊன்றிக் கற்றால் "இடைக்கால நிலை" என்பதற்கான அடையாளங்களைக் காணலாம்: 65:17 எபிரெய சொல்லாகிய "காதாஸ்" (*חָדָשׁ *= புதிய) "வானம்" மற்றும் "பூமி" ஆகிய இரண்டு சொற்களிலும் சேர்ந்து வருகிறது, ஆனால் 65:18-19 – ல் எருசலேமைக் குறிக்கும்போது இடம்பெறவில்லை. இதிலிருந்து இங்கு குறிப்பிட்டப்பட்டிருக்கும் எருசலேம் பரலோக எருசலேமைக் குறிக்கவில்லை, மீட்டுருவாக்கம் செய்யப்படும் மேசியாவின் ஆட்சியில் உள்ள எருசலேமைப் பற்றியே இது பேசுகிறது என்பதை அறியலாம். வெளி. 21:1-4, மிகவும் நிச்சயமாக நித்தியத்தைக் குறித்துப் பேசுகிற பகுதியில், "புதிய" என்ற சொல் (கிரேக்கம்:* καινός*:கெய்னோஸ்) வானத்திற்கும் பூமிக்கும் மட்டும் பயன்படுத்தப்படவில்லை, வானத்திலிருந்து பூமிக்கு இறங்கி வரும் "எருசலேம்" –க்கும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.*

*ஏசாயா 65:18-ல் ஆயிரம் வருட அரசாட்சியில் மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட எருசலேமைக் குறித்தே பேசப்படுகிறது. மக்கள் இந்த காலத்தில் மரணமடையக்கூடியவர்களாக இருப்பார்கள். இந்த ஆயிரம் வருட அரசாட்சி இவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது:*

- *முடிவற்ற மகிழ்ச்சி:* ***வ.*** *18.*
- *அழுகையும் இல்லை கண்ணீரும் இல்லை:* ***வ.*** *19.*
- *நீண்ட ஆயுள்: மிகவும் வயதானவர்களும் பாவிகளும் மட்டுமே மரணமடைவார்கள். நூறு வயது கடந்த ஒருவர் வாலிபராகவே கருதப்படுவார்:* ***வ.*** *20.*
- *சிறுவர்கள் இங்கே வாழுவார்கள்; நித்திய நிலையை அடையும் வரை இனப்பெருக்கம் தொடரும்:* ***வ.*** *23 (எசே. 47:22; மத். 22:30).*
- *ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்த வீட்டில் வாழ்வார்கள், வேலைகள் பயன்தரும்:* ***வ.*** *21-22 (*cf. *ஆதி. 3:17-19).*
- *கடவுளுடன் உறவு இருக்கும்; ஜெபங்களுக்கு கடவுள் பதில் கொடுப்பார்:* ***வ.*** *24.*
- *மனிதர்கள் நடுவிலும் பல்வேறு இன விலங்குகள் நடுவிலும் சமாதானம் காணப்படும்:* ***வ.*** *25*a *(ஏசாயா 11:6-8).*
- *அநீதி இருக்காது:* ***வ.*** *25*b.

## b. *அடைப்புக்குறி செய்தி: கர்த்தருடைய நாளும் மகா உபத்திரவமும்*

### (1) ***கர்த்தருடைய (யாவே) நாள்***

***கர்த்தருடைய நாள் என்பது மகா உபத்திரவ காலத்தையும் ஆயிரம் வருட ஆட்சி முடியும் வரையிலான காலத்தையும் உள்ளடக்கியது.*** *கர்த்தருடைய நாள் என்பது ஏசாயா 2:12 உள்ளிட்ட சில இடங்களில் வருகிறது. சூழமைவைப் பார்க்கும்போது இது மகா உபத்திரவ காலத்தைக் குறிக்கிறது என்பது தெளிவாகக் காணப்படுகிறது. 2பேதுரு 3:10, வானமும் பூமியும் அக்கினியால் சுட்டெரிக்கப்படும் நாள்வரை அதாவது பூமியின் முடிவு மற்றும் ஆயிரம் வருட அரசாட்சியின் முடிவுவரை நிலைத்திருக்கும்.*[69]

### (2) ***மகா உபத்திரவ காலம்***

#### *(a) பொதுவான தகவல்*

*வேதாகமம் இறுதிக் கால நிகழ்வுகளில் மகா உபத்திரவ காலத்தைப் பற்றித்தான் அதிகமான காரியங்களைச் சொல்கிறது. இயேசுவும் தம்முடைய ஒலிவமலைச் சொற்பொழிவில் இதைப் பற்றித்தான் பேசுகிறார் (மத். 24). அப்போஸ்லனாகிய பவுலுடைய சில கடிதப் பகுதிகளும் இதைப் பற்றியே பேசுகின்றன (2தெச. 2:3-12) குறிப்பாக வெளி. 6–19!*

*ஏசாயா தீர்க்கதரிசன நூலின் பின்வரும் பகுதிகள் மகா உபத்திரவ காலத்தைப் பற்றிப் பேசுகிறது: அதிகாரங்கள் 2; 3; 13; 24–27; 34 மற்றும் 63. மகா உபத்திரவ காலம் இஸ்ரவேல் மீதும் இனங்கள் மீதும் கடவுளுடைய நியாயத்தீர்ப்பு வரும் காலம் ஆகும். இதோ சில உதாரணங்கள்:*

- *2:19-21: மக்கள் மலைகளிலும் பாறைகளிலும் ஒழிந்துகொள்வார்கள் (வெளி. 6:16).*

---

*[69] வெளி. 20 – 21 நடைபெறும் மாற்றத்தைக் கவனியுங்கள். சாத்தானுடைய சிறை வைப்பின்போது ஆயிரம் வருட அரசாட்சி ஆரம்பமாகிறது (வெளி. 20:1-3). அப்போது நீதிமான்களாகிய இரத்த சாட்சிகள் உயிர்த்தெழுவார்கள் (வெளி. 20:4). இறுதியில் சாத்தானுக்கு தண்டனை வழங்குவதோடும் நகர தண்டனையோடும் அது முடிவடையும் (அக்கினிக் கடல்: வெளி. 20:10). வெளி. 20:11-15 உயிர்த்தெழுதலையும் அநீதி செய்தவர்களுக்கான நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பேசுகிறது. இந்தக் கட்டத்தில் படைப்பு காணாமல் போகும். மீட்கப்பட்டவர்கள் புதிய படைப்பில் நுழைவார்கள் (வெளி. 21:1*ff*); மற்றவர்கள் சாத்தானோடும் விழுந்துபோன் அவனுடைய தூதர்களோடும் நரகத்தில் தள்ளப்படுவார்கள்.*

- *24:1-3: கர்த்தர் பூமியைப் பாழாக்குவார் (பூமியின் மக்கள் தொகையும் பாதிக்கப்படும்:சகரியா 13:8: மூன்றில் இரண்டு பங்கு யூதர்கள் மரணமடைவார்கள். வெளி. 6 மற்றும் 9: பூமியின் கால் பங்கு மக்களும் மூன்றில் ஒரு பங்கு மக்களும் மகா உபத்திர காலத்தில் நடைபெறும் பல்வேறு நியாயத்தீர்ப்புகளில் இரண்டில் மாண்டு போவார்கள்).*
- *26:20-21: இந்த நியாயத்தீர்ப்புகளை கடவுளே ஆரம்பித்து வைப்பார். கர்த்தர் "தம்முடைய இருப்பிடத்தை விட்டு வந்து" மனிதர்களில் துன்மார்க்கரை நியாயந்தீர்ப்பார். அதனால்தான் இது "கர்த்தருடைய நாள்" என்று அழைக்கப்படுகிறது.*

*(b) மகா உபத்திரவத்தின் அளவு*

- *இஸ்ரவேல் பாதிக்கப்படும்: எசாயா 3:8*ff.
- *தலைவர்கள் மற்றும் பெண்களுடைய பாவங்கள் தண்டிக்கப்படும்: 3:14-24.*
- *அனைத்து இனங்களும் பாதிக்கப்படும்: 34:2.*
- *முழு உலகமும் அண்ட சராசரங்களும் பாதிக்கப்படும்: 24:1-5.19-20.*
- *பிசாசுகள் துன்புறுத்தப்படும்: 24:21-22; யூதா 6; 2பேதுரு 2:4.*

*விதிவிலக்குகள்: ஒரு சிலர் மட்டுமே தப்பவிடப்படுவார்கள்: 24:6.13; 25:3; 26:20-21. "சீயோனில் விடப்பட்டவர்கள்", மீதியானவர்கள் தப்பவிடப்படுவார்கள்: 4:3 (வெளி. 7:1-8).*

*(c) மகா உபத்திரவத்தின் கால அளவு*

*மகா உபத்திரவ காலம் எவ்வளவு நாள் நீடிக்கும் என்பதை ஏசாயா நமக்குச் சொல்லவில்லை. ஆகிலும் தானியேலின் புத்தகம் அதை நமக்குச் சொல்கிறது: தானி. 9:27: 70 "வருட வார" காலத்தின் இறுதி அரைப் பகுதி. தானியேல் புத்தகத்தில் ஒரு "வாரம்" அல்லது "வருட வாரம்" என்பது ஏழு ஆண்டுகளைக் குறிக்கும். அப்படிப்பட்ட ஒரு வாரத்தின் அரை என்பது 3 ½ வருடங்கள். இது தானி. 7:25 –ல் வரும் காலக் குறிப்போடு பொருந்தி வருகிறது: "ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும்" =* 3 ½ *வருடங்கள் (தானி. 12:7-13-ஐயும் பார்க்க). இதே "காலமும் காலங்களும் (இரண்டு) அரைக் காலமும்" என்ற சொற்றொடர் வெளி. 12:14 –லும் இடம்பெறுகிறது. "காலங்கள்" என்பது இரட்டை வடிவம் அதாவது இரண்டு முறை என்பதைக் குறிக்கும். தானியேலைப் பொறுத்தவரை "ஒரு முறை" என்பது ஒரு வருடம். தானி. 4:16: நேபுகாத்நேச்சருடைய பெருமையினால் அவருக்குக் கிடைத்த தண்டனை 7 காலங்கள் இருந்தது, அதாவது அவர் ஏழு வருடங்கள் வியாதியை அனுபவித்தார். "ஒரு காலம், காலங்கள் மற்றும் அரைக் காலம் என்பது" வெளி. 12:6 –ல் 1260 நாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யூதர்களுடைய வருடத்தில் 30 நாட்கள் உள்ளன. 1260 நாட்கள் என்பது* 3 ½ *வருடங்கள். வெளி. 11:2-3 –ல் 1260 நாட்கள் மற்றும் 40 மாதங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மிருகமாகிய அந்திக் கிறிஸ்துவின் ஆட்சிக் காலம் 42 மாதங்கள் என்று வெளி. 13:5 வெளிப்படையாகச் சொல்கிறது. ஆகவே, அந்தி கிறிஸ்துவின் ஆட்சி* 3 ½ *வருடங்கள் நிலைத்திருக்கும். வெளி. 6–16 – ல் கூறுப்பட்டுள்ள இயற்கைப் பேரழிவுகள் தானி. 9:27-ல் கூறப்பட்டுள்ள 70-வது வருட வாரத்தின் முதல் பாதியில் ஆரம்பமாகலாம். அதாவது மகா உபத்திரவத்தின் முதல் பாதி, ஆக மொத்தம் உபத்திரவ காலம் 7 வருடங்கள். ஆகிலும் அந்திக் கிறிஸ்துவின் உபத்திரவம் 70-வது வருட வாரத்தின் இரண்டாவது பாதியில்தான் ஆரம்பிக்கும், அதாவது முதல் மூன்றரை வருடங்களுக்குப் பிறகு (*cf. *வெளி. 13:5*ff*).*[70]

## (3) ***சமாதானத்தின் அரசு (ஆயிரம் வருட அரசாட்சி)***

*(a) மிக முக்கியமான பகுதிகள்*

*அதிகாரங்கள் 2; 4; 11–12; 24:21-23; 25:6-8; 27; 32; 35; 60–65.*

---

[70] *70 வாரத்தைக் குறித்து மேலும் அறிய தானி. 9:24-27 –க்கான நம்முடைய விளக்கவுரையையும், இறுதியியல் குறித்த பாடத்தில் மகா உபத்திரம் என்ற அதிகாரத்தையும் பார்க்க.*

(b) ஆட்சியைக் குறித்த மிகத் தெளிவான விளக்கத்திற்கு, பார்க்க ஏசாயா 11-12.

- மேசியா விளக்கப்டுகிறார்: 11:1-2.
- அவரது அரசு விளக்கப்படுகிறது: 11:3–12:6:
  1. நீதி: 11:3-5.
  2. சமாதானம் (நீதியின் விளைவு): 11:6-8:
     α) மனிதர்களுக்குள்ளும் மிருகங்களுக்குள்ளும் சமாதானம்.
     β) மிருகங்களுக்குள் (வீழ்ச்சிக்கு முன்பு போல).
  3. முழு உலகத்தையும் உள்ளடக்கிய ஆட்சி: 11:9.
  4. இஸ்ரவேல் நாட்டுக்கு திரும்புதல்: 11:10-12.
  5. யூதாவும் எப்பிராயீமும் மீண்டும் ஒன்று சேருதல்: 11:13 (எசே. 37:15ச்ச்).
  6. இஸ்ரவேலின் ஆட்சி: 11:14 (மோவாப், ஏதோம், அம்மோன் ஆகிய இனங்கள் இஸ்ரவேலுக்குக் கீழ்ப்பட்டிருக்கும்).
  7. நிலப்பரப்பில் மாற்றம்: 11:15-16.
     α) செங்கடல் வற்றிப்போகும்.
     β) யூப்பிரட்டீசு நதி பிரிக்கப்படும் (வெளி. 16:12).
  8. மீட்கப்பட்ட (மீதியான) இஸ்ரவேலின் பாடல்: 12:1-6; cf. 26:1-4.

(c) விவரங்கள்

- இஸ்ரவேல் திரும்ப வருதல்: 11:11.12; 27:12-13; 35:10. 1914-ல் இஸ்வேலின் மக்கள் தொகை = 85,000 இஸ்ரவேல் நிலப்பரப்பில் இருந்தார்கள். 1973-ல் = 3,240,000 இஸ்ரவேலில் இருந்த யூதர்கள். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் 6 மில்- யன் யூதர்கள் இஸ்ரவேலில் இருந்தார்கள். இன்னும் பெரும் அளவிலான யூதர்கள் உலகமெங்கும் சிதறி வாழ்கிறார்கள். அனைத்து யூதர்களும் திரும்பி வருதல் என்னும் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.
- செழிப்பான நிலம்: 30:23; 32:15; 35:1.7; வெளி. 26:19-20!
- எருசலேம் மீண்டும் கட்டப்படும்: 2:1-4; 60:14-15; 62:7. எருசலேம் உலகத்தின் மையமாக விளங்கும்.
- இராஜா தோன்றுவார்: 9:5.6.7.; 22:22; 24:23; 32:1; 33:17.22; 49:6-10.
- மனந்திரும்புதலும் யூதர்களுடைய மீட்பும்: மேசியா திரும்ப வரும்போது இது நிறைவேறும்: 4:4; 12:1-6; 27:8-9; 32:15; 33:24; 60:21; 61:6; 62:12. இதை உறுதிப்படுத்தும் மற்ற வேத பகுதிகள்: சகரியா 12:10; ரோமர் 11:25-27 முதலிய பகுதிகள். எச்சரிக்கை: அனைத்து யூதர்களும் தானாகவே மீட்கப்பட்டு மேசியாவின் ஆயிரம் வருட அரசாட்சியில் நுழைந்துவிட மாட்டார்கள். விசுவாசிக்கிறவர்கள் மட்டுமே அதில் நுழைவார்கள்: எசே. 20:34-38.

(d) மனந்திரும்புதலும் இனங்களுக்கான மீட்பும்

கீழ்க்காணும் பகுதிகள் இதைக் குறித்துக் குறிப்பாகப் பேசுகின்றன: ஏசாயா 2:3; 18:7; 19:19-25; **25:6-9;** 60:3-16; 61:5-6.

(e) ஆயிரம் வருட ஆட்சியின் இன்னும் சில தன்மைகள்

- ஆரோக்கியமும் நீண்ட ஆயுளும்: 33:24; 35:5-6; 65:20.
- பாவமும் மரணமும் இன்னும் அங்கிருக்கும்: 11:4; 65:20.
- நீதியும் சமாதானமும் இருக்கும்: 2:4; 12:1-3; 32:16-18; 60:11.
- பரிசுத்த ஆவியானவரின் செயல் இருக்கும்: 32:15; 44:3; ஏசாயா 26:19 – உம்முடைய பனி என்பது இதைக் குறிக்கலாம். பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படும்போதுதான் ஆசீர்வாதங்கள் ஆரம்பமாகின்றன. பரிசுத்த ஆவியானவரைக் குறித்த நம்முடைய பாடத்தைப் பார்க்கவும். யோவேல் 2:28-32-ல் உள்ள தீர்க்கதரிசனம் பெந்தகொஸ்தே நாளில் நிறைவேறியது (அப். 2). இது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில்தான் முழுமையாக நிறைவேறும். வசனம் 31- பேசுகிற வானங்களில் காணப்படும் அடையாளங்களும் அப்போது காணப்படும். இந்தக் காலத்தில்தான் தாவீதின் வீட்டாரின்

*மீது மனந்திரும்புதலின் ஆவியை அவர் ஊற்றுவார் (சகரியா 12:10ff), தாங்கள் சிலுவையில் அறைந்த மனுமகனை அவர்கள் மேகத்தில் வரக் காணும்போது இது நிகழும் (வெளி. 1:7).*

## c. *தீர்க்கதரிசனங்களைக் குறித்த முடிவுரை: அதி. 66*

*இந்த புத்தகத்தின் முக்கியமான கருத்துகள் முதல் அதிகாரத்தில் அறிமுகம் செய்யப்பட்டது, இந்தக் கடைசி அதிகாரத்திலும் அவை நினைவூட்டப்படுகின்றன: வசனம் 14 முழு அதிகாரத்தையும் சுருக்கித் தருகிறது: "...***அப்பொழுது கர்த்தருடைய ஊழியக்காரரிடத்தில் அவருடைய கரமும், அவருடைய சத்துருக்களிடத்தில் அவருடைய சினமும் அறியப்படும்.*"*

### (1) *இஸ்ரவேலின் பாவம் நியாயத்தீர்ப்புக்கு இட்டுச் செல்கிறது: வ. 1-6*

*மக்கள் மனந்திரும்பாத இருதயமுள்ளவர்களாக அவருக்குத் தூரமானவர்களாக இருக்கும்போது அவர்களுடைய போ- ஆராதனையை கடவுள் நாடுவதில்லை (ஆமோஸ் 5:21-25; மீகா 6:6-8).*

### (2) *இறுதி காலத்தில் இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதல்: வ. 7-14*

*மேசியாவின் சமாதானத்தின் அரசிற்குள் இஸ்ரவேல் திடீரென மறுபடியும் பிறக்கும். எருசலேம் ஒரு மகனைப் பெற்றெடுக்கும் தாய்க்கு ஒப்பிடப்படுகிறது (வ. 7-8) பெற்ற குழந்தைக்கு அவள் பாலூட்டுகிறாள் (வ. 11). பிரசவ வேதனை என்ற உருவகத்தின் பொருள் (வ. 7-9; மேலும் பார்க்க 13:8 மற்றும் 26:16-18): பிரசவ வேதனைக்குப் பிறகு குழந்தை பிறப்பதைப் போல இஸ்ரவே- ன் உபத்திரவங்களுக்குப் பிறகு அதற்கு இரட்சிப்புக் கிடைக்கிறது. இறுதியில் அனைத்து ஆசீர்வாதங்களும் யாவே தேவனிடத்தில் இருந்துதான் வருகிறது (வ. 12-14ஹ).*

### (3) *பழி தீர்க்கும் நாள் நெருங்குகிறது: வ. 15-24*

*வ. **15-18:** வசனம் 15 வசனங்கள் 24:21 மற்றும் 26:21 ஆகியவற்றிற்கு ஒத்திருக்கிறது: "யாவே தண்டிப்பார்" மற்றும் "யாவே தம்முடைய இருப்பிடத்திலிருந்து வருவார்". வசனம் 16 அனைத்து இனங்களுக்கும் பொதுவானது. வசனம் 17 கலகக்கார்களாகிய இஸ்ரவேலரிடத்தில் சொல்லப்படுகிறது.*

*வ. **19-21:** கர்த்தருடைய மகிமை பூமியெங்கும் அறிவிக்கப்படும், சிறப்பாக அவருடைய பெயர் அறியப்படாத இடங்களிலெல்லாம் அறிவிக்கப்படும். மீட்கப்பட்ட இஸ்ரவேலர் இனங்களிடத்தில் சென்று அவருடைய மகிமையை அறிவிக்கும்படி யாவே அவர்களை அனுப்புவார். பிற இனத்து மக்கள் இஸ்ரவேலரை அவர்களுடைய சொந்த நாட்டிற்குக் கூட்டிக்கொண்டு வருவார்கள் (ஏசாயா 14:1-2). இனங்கள் மேசியாவைத் தொழுதுகொள்ளும்படி எருசலேமிற்குப் புனிதப் பயணம் செல்வார்கள் என்று சகரியா 14:16ff –ல் சொல்லப்படுவது இதைத்தான் என்று நாங்கள் நம்புகிறோம் (ஒலிவ மலையில் நடைபெறும் அவருடைய இரண்டாம் வருகை, பார்க்க: 14:1-6).*

*வ. 22-24: மீட்பும் நியாயத்தீர்ப்பும் நித்தியமானவைகள்! இயேசு வசனம் 24 –ஐ மாற்கு 9:48 –ல் மேற்கோள் காட்டுகிறார்: ➔ **"அவர்களுடைய புழு சாகாது":** இது முடிவில்லாத நித்திய தண்டனையாகிய துன்பத்தைக் குறிக்கும் உருவகமாகும் (வெளி. 14:9-12: யெகோவாவின் சாட்சிகள் அல்லது 7-ம் நாள் ஆசரிப்பு சபையார் சொல்கிறபடி அவர்கள் இல்லாமல் போய்விடுவார்கள் என்று சொல்லப்படவில்லை). கிரேக்க மொழியில் வெளி. 14:11 எழுத்தின்படி சொல்கிறது "காலா காலங்களுக்கும்" (இரண்டு காலங்களும் பன்மையில் வருகிறது!), அதனால்தான் "அணையாத நெருப்பு"என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது!*

**ஏசாயாவின் புத்தகம் மூன்று வகையான விடுதலை அல்லது மீட்பைப் பற்றி பேசுகிறது**

1. பாபிலோனிய சிறையிருப்பி- ருந்து விடுதலை.

2. பாவத்தி- ருந்து விடுதலை.

3. மரணம் நியாயத்தீர்ப்பி- ருந்து நித்திய விடுதலை.

ஆகிலும் இந்த புத்தகம் நியாயத்தீர்ப்பைக் குறித்த கடுமையான எச்சரிக்கையோடு முடிவடைகிறது! நாம் கடவுளுடைய கிருபையையும் இரக்கத்தையும் பற்றி மட்டும் பிரசங்கியாமல், கடவுளுடைய மேசியாவை புறக்கணிப்பவர்கள் மேல் வரும் நியாயத்தீர்ப்பையும் பேசுவது நல்லது, அவரைப் பற்றியே ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்திருக்கிறார்.

**ஆமேன்**

# IV. Bibliography

## 1. Reference works and various

Aebi, Ernst. *Kurze Einführung in die Bibel.* 4th edition. Winterthur/Wuppertal: Verlag Bibellesebund, 1973.

Archer, Gleason L. *Encyclopedia of Bible Difficulties.* Grand Rapids: Zondervan Publishing House, 1982.

Archer, Gleason L. *A Survey of Old Testament Introduction Revised and Expanded.* Chicago: Moody Press, 1994

Bauer, Walter. *Griechisch-Deutsches Wörterbuch zu den Schriften des Neuen Testaments und der übrigen urchristlichen Literatur.* Revised Reprint of the 5th revised and augmented edition. Berlin: Walter de Gruyter, 1971.

Éditions Emmaüs. *Nouveau Dictionnaire Biblique révisé.* Saint-Légier, Suisse: Éditions Emmaüs, 1992.

Gemeren, Willem A. Van. Gen. editor. *New International Dictionary of Old Testament Theology & Exegesis.* 5 volumes. Carlisle: Paternoster Press, 1997.

Gesenius, Wilhelm. *Hebräisches und Aramäisches Handwörterbuch über das Alte Testament.* Reprint of the 17th edition of 1915. Berlin: Springer-Verlag, 1962.

Sander, N. Ph. and I. Trenel. *Dictionnaire Hébreu-Français.* Reprint of the Paris edition, 1859; Geneva: Slatkine Reprints, 1987.

Traduction Œcuménique de la Bible. Edition intégrale. Ancien Testament. Paris: Les Editions du Cerf et Les Bergers et les Mages, 1977.

Unger, Merrill F. *Ungers Grosses Bibelhandbuch.* Translated from English into German and revised by Samuel Külling and Joachim Hoene. Asslar: Schulte + Gerth, 1987.

## 2. Commentaries and articles

Allis, Oswalt T. *The Unity of Isaiah: A Study in Prophecy.* Philadelphia: The Presbyterian and Reformed Publishing Company, 1950.

Blocher, Henri. *La doctrine du péché et de la rédemption.* 3 volumes. Série Fac-étude. Vaux-sur-Seine, France: Faculté Libre de Théologie Evangélique, 1982.

Duhm, Bernhard. *Das Buch Jesaia*. Göttinger Handkommentar zum Alten Testament. Editor W. Nowack. 3rd dept. Die prophetischen Bücher. 1st volume. 4th revised edition. Göttingen: Vandenhoeck & Ruprecht, 1922.

Cheyne, T. K. *Introduction to the Book of Isaiah: with an Appendix Containing the Undoubted Portions of the two Chief Prophetic Writers in a Translation.* Londres: Adam and Charles Black, 1895.

Cheyne, T. K. *The Prophecies of Isaiah: A New Translation with Commentary and Appendices.* Vol. 1. 5th revised edition. London: Kegan Paul, Trench, 1889.

Cheyne, T. K. *The Prophecies of Isaiah: A New Translation with Commentary and Appendices.* Vol. 2. 6ème édition révisée. Londres: Kegan Paul, Trench, Trübner, 1898.

Chisholm, Robert B. Jr., 'Joel' *in The Bible Knowledge Commentary, Old Testament.* Editors John F. Walvoord und Roy B. Zuck. Wheaton, Ill.: Victor Books, 6th edition, 1988.

Delitzsch, Franz. *Commentar über das Buch Jesaia.* Biblischer Commentar über das Alte Testament. Editor Carl Friedr. Keil und Franz Delitzsch. 3rd part: Prophetische Bücher. 1st volume. 4th revised edition. Leipzig: Dörffling & Franke, 1889.

Doederlein, Ioannes Christophorus. *ESAIAS ex recensione Textus Hebraei ad Fidem Codicum Manuscriptorum et Versionum Antiquarum latine vertit notasque varii argumenti.* Editio Tertium Recognita. Norimbergae et Altdorfi: G. P. Monath., [1 1775] 1789.

Eichhorn, Johann Gottfried. *Einleitung in das Alte Testament.* 4th volume. 4th original edition. Göttingen: Carl Eduard Rosenbusch, 1824.

Ellisen, Stanley A. *Von Adam bis Maleachi – Das Alte Testament verstehen.* Translated from English into German. Dillenburg: Christliche Verlagsgesellschaft, 1988.

Godet, Frédéric. *AT 7: Ésaïe, Jérémie, Lamentations.* La Bible Annotée. Par une Société de Théologiens et de Pasteurs sous dir. Frédéric Godet. 2nd edition. St-Légier, Suisse: P.E.R.L.E., bibliothèque de l'Institut Emmaüs, 1981 (1st edition: La Bible Annotée par une Société de théologiens et de pasteurs, Ancien Testament, Les prophètes I. Paris: Sandoz et Fischbacher; Neuchâtel: J. Sandoz; Geneva: Desrogis, n. d. [1881]).

Guthrie, Donald and Alec Motyer. *The New Bible Commentary Revised.* Leicester: Inter-Varsity Press, 1970.

Kaiser, Otto. *Der Prophet Jesaja: Kapitel 13−39.* Das Alte Testament Deutsch. Neues Göttinger Bibelwerk. Editors Otto Kaiser and Lothar Perlitt. Volume 18. 3rd revised edition. Göttingen: Vandenhoeck & Ruprecht, 1983.

Kaiser, Otto. *Einleitung in das Alte Testament: Eine Einführung in ihre Ergebnisse und Probleme.* 5th revised edition. Gütersloh: Gütersloher Verlagshaus Gerd Mohn, 1984.

Kaiser, Walter C. Jr. *Toward an Old Testament Theology.* Grand Rapids: Zondervan Publishing House, 1978.

Keil, C. F. and F. Delitzsch. *Commentary on the Old Testament in ten volumes.* Translated from German. Grand Rapids: William B. Eerdmans Publishing, 1981-1982.

Kleger, Roland. *Restauratio und Resurrectio in der Jesaja-Apokalypse.* Dissertation. Evangelische Theologische Faculteit, Leuven, Belgium, 2001.

Kleger, Roland. *Endzeitliche Wiederherstellung Israels und Auferstehung in der Jesaja-Apokalypse.* Hambourg: Diplomica Verlag, 2008.

Kilian, Rudolf. *Jesaja II: 13−39.* Die Neue Echter Bibel: Kommentar zum Alten Testament mit der Einheitsübersetzung. Würzburg: Echter Verlag, 1994.

Kroeker, Jakob. *Die Propheten oder das Reden Gottes JESAJA, I. Teil: Jesaja 1–39: Immanuel und die Völker, in* Das Lebendige Wort. 4th edition. Giessen: Brunnen-Verlag, 1982.

Liebmann, Ernst. 'Der Text zu Jesaia 24−27.' *Zeitschrift für die alttestamentliche Wissenschaft.* 22. Jahrgang (1902): 285-304.

Liebmann, Ernst. 'Der Text zu Jesaia 24−27.' *Zeitschrift für die alttestamentliche Wissenschaft.* 23. Jahrgang (1903): 209-286.

Liebmann, Ernst. 'Der Text zu Jesaia 24−27.' *Zeitschrift für die alttestamentliche Wissenschaft.* 24. Jahrgang (1904): 51-104.

Lindblom, Joh. *Die Jesaja-Apokalypse: Jes. 24−27.* Lunds Universitets Årsskrift. N. F. Avd. 1. Volume 34. Nr. 3. Lund: C. W. K. Gleerup, 1938.

Martin, John A. 'Isaiah' in *The Bible Knowledge Commentary: An Exposition of the Scripture by Dallas Seminary Faculty*. Old Testament. Editors John F. Walvoord and Roy B. Zuck. Wheaton, Ill.: Victor Books, 1985.

Motyer, J. Alec. *The Prophecy of ISAIAH: An Introduction & Commentary.* Downers Grove, Illinois: InterVarsity Press, 1993.

O'Connell, Robert H. *Concentricity and Continuity: The Literary Structure of Isaiah.* Journal for the Study of the Old Testament Supplement Series 188. Editors David J. A. Clines and Philip R. Davies. Sheffield: Sheffield Academic Press, 1994.

Plöger, Otto. *Theokratie und Eschatologie.* Wissenschaftliche Monographien zum Alten und Neuen Testament. Editors Günther Bornkamm and Gerhard von Rad. 2nd volume. Neukirchen Kreis Moers: Neukirchener Verlag, 1959.

Rudolph, Wilhelm. *Jesaja 24 – 27.* Beiträge zur Wissenschaft vom Alten und Neuen Testament. 4th series. Number 10. Stuttgart: W. Kohlhammer, 1933.

Thiessen, Henry C. *Lectures in Systematic Theology*. Revised by Vernon D. Doerksen. Revised edition. Grand Rapids: William B. Eerdmans Publishing Company, 1979.

Unger, Merrill F. *Bibel Aktuell.* 7 volumes. Translated from English into German. Edited and revised by Samuel Külling. 2nd edition. Wetzlar: Verlag Hermann Schulte, 1970.

Walvoord, John F. and Roy B. Zuck, Hrsg. *The Bible Knowledge Commentary: An Exposition of the Scripture by Dallas Seminary Faculty.* 2 volumes. [Wheaton, Ill.]: Victor Books; Scripture Press Publications, 1985.

Vermeylen, Jacques. *Du Prophète Isaïe à l'Apocalyptique: Isaïe, I - XXXV, miroir d'un demi-millénaire d'expérience religieuse en Israël.* Études Bibliques. 2 volumes. Paris: J. Gabalda, 1977-1978.

Wildberger, Hans. *Jesaja: 1. Teilband: Jesaja 1−12.* Biblischer Kommentar Altes Testament. Editors Siegfried Herrmann and Hans Walter Wolff. Volume X/1. 2nd revised edition. Neukirchen-Vluyn: Neukirchener Verlag, 1980.

Wildberger, Hans. *Jesaja: 2. Teilband: Jesaja 13−27.* Biblischer Kommentar Altes Testament. Editors Siegfried Herrmann and Hans Walter Wolff. Volume X/2. Neukirchen-Vluyn: Neukirchener Verlag, 1978.

Wolff, Hans Walter, *Jesaja 53 im Urchristentum,* 4th edition (reprint of the 3rd revised edition of the Evangelische Verlags-Anstalt, Berlin, 1952). Giessen: Brunnen-Verlag, 1984.

# உள்ளடக்கம்

**I.**தீர்க்கதரிசிகளைப் படிப்பதற்கான அறிமுகம்....02
A. பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளைக் குறிக்கும்படி பயன்படுத்தப்பட்ட சொற்கள்....02
B. தீர்க்கதரிசிகளின் வரலாறு....03
C. தீர்க்கதரிசிகளின் ஊழியங்கள்....04
D. தீர்க்கதரிசிகளின் செய்தி....05
E. உண்மையான தீர்க்கதரிசிகள் மற்றும் உண்மையான தீர்க்கதரிசனங்களின் தன்மைகள்.05
F. தீர்க்கதரிசிகளின் அகத்தூண்டுதல்....06
G. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதல்....06
H. தீர்க்கதரிசன நூல்களுக்கும் மற்ற பழைய ஏற்பாட்டு நூல்களுக்கும், புதிய ஏற்பாட்டு நூல்களுக்கும் இடையில் உள்ள உறவு....07
I. பழைய ஏற்பாட்டு எழுத்துத் தீர்க்கதரிசிகளின் கால அட்டவணை....07
**II**. ஏசாயா தீர்க்கதரிசிக்கான அறிமுகம்....10
A. ஏசாயாவும் அவருடைய காலமும்....10
1. அவருடைய பெயர்....10
2. அவரது தோற்றம்....10
3. அவருடைய காலம்....10
4. அவருடைய குடும்பம்....10
5. ஏசாயாவின் காலத்தில் வாழ்ந்த மற்ற தீர்க்கதரிசிகள்....11
6. அவருடைய மரணம்....11
7. வெளிப்படையாக அவருடைய பெயர் வரும் இடங்கள்....11
8. வரலாற்றுச் சூழமைவு....11
a. ஏசாயாவின் காலத்தில் இஸ்ரவேலின் மீது அதிக தாக்கம் செலுத்திய உலக சக்திகள்....11
(1) அசீரியா....11
(2) எகிப்து....12
b. ஏசாயா மூன்று சகாப்தங்களில் நான்கு அரசர்களின் ஆட்சிக் காலத்தில் தம்முடைய தீர்க்கதரிசனப் பணியைச் செய்தார்....12
(1) உசியா மற்றும் யோதாம்: கி. மு. 792-736 ....12
(2) ஆகாஸின் ஆட்சி: கி. மு. 735–716....12
(3) எசேக்கியா: கி. மு. 716–687....12
c. அக்காலத்தின் அரசியல் சூழ்நிலை குறித்த ஆன்மீகப் பகுப்பாய்வு....13
B. ஏசாயா நூலின் மெய்த்தன்மை....13
1. விமர்சகர்களின் எதிர்ப்புகளும் நம்முடைய பதில்களும்....14
a. ஏசாயா 40-66-ல் உள்ள உள்ளடக்கம் 1-39-ல் உள்ள உள்ளடக்கத்தில் இருந்து வேறுபடுகிறது....14
b. அதிகாரங்கள் 40-66 வரையுள்ள பகுதியின் எழுத்து நடை 1-39 வரையுள்ள எழுத்து நடையி- ருந்து வேறுபடுகிறது....15
c. அதிகாரங்கள் 40-66 பாபிலோனிய சிறையிருப்பின் காலத்தில் அல்லது சிறையிருப்பிற்குப் பிந்திய காலத்தில்தான் எழுதப்பட்டிருக்க வேண்டும்....15
d. பெர்சிய அரசனாகிய கோரேஸின் பெயர் மற்றும் செயல்கள் ஆகியவற்றை ஏசாயா அறிந்திருக்க முடியாது....15
2. ஏசாயாவின் புத்தகத்தின் மெய்த்தன்மைக்கான புறச்சான்றுகள்....16
a. ஏசாயா புத்தகத்தின் மெய்த்தன்மைக்கான வெளி ஆதாரங்கள்....16
(1) ஏசாயா தீர்க்கதரிசனப் புத்தகம் முழுவதையும் எழுதியது ஏசாயாதான் என்று செப்துவஜிந்து கூறுகிறது....16
(2) கோரேஸ் தன்னைக் குறித்த தீர்க்கதரிசனத்தைப் பற்றி அறிந்திருந்தார் என்று யோசீபஸ் என்ற யூத வரலாற்றாசிரியர் கூறுகிறார்....16
(3) கும்ரான் குகைகளில் கண்டுபிடிக்கப்பட்ட ஏசாயாவின் சுருள்கள் விமர்சக அறிஞர்களின் வாதங்களை ஏற்பதில்லை....16
(4) தள்ளுபடி ஆகமங்களில் ஒன்றாகிய இயேசு என்பவர் எழுதிய சீராக் ஆகமமும் ஏசாயா முழுவதும் ஏசாயாவினால் எழுதப்பட்டது என்பதை உறுதி செய்கிறது....17
b. ஏசாயா நூலின் மெய்த்தன்மைக்குரிய அகச்சான்றுகள்....17
(1) பு.ஏ. ஒன்பது மேற்கோள்கள் ஏசாயாவின் இரண்டாம் மூன்றாம் பாகத்தி- ருந்து (40-66) காண்பிக்கப்படுகிறது, அவற்றில் ஏசாயாவின் பெயர் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது....17
(2) இணை ஏசாயாவுக்கும் மூன்றாவது ஏசாயாவுக்கும் இடையில் இருப்பதாக விமர்சகர்கள் சொல்லும் வேறுபாட்டுக்கு அவர்கள் சரியான காரணம் கொடுப்பதில்லை....18
(3) ஏசாயா நூலின் அமைப்பு முறையும் அதன் பொருளொற்றுமையும் அதன் மெய்த்தன்மைக்கு சான்று பகர்கின்றன....18

(4) புத்தகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கும் ஒரே வகையான சொல்லாடல்களும் கருத்துருவங்களும் இந்தப் புத்தகத்தின் மெய்த் தன்மைக்குச் சான்றழிக்கின்றன....22
C. ஏசாயா நூலின் செய்தி....23
III. ஏசாயாவின் புத்தகத்திற்கான விளக்கவுரை....24
A. தங்களைத் தாங்களே உயர்த்துதல்: நியாயத்தீர்ப்பை (சிறையிருப்பு) குறித்த அறிவிப்பு: அதி. 1–39....24
1. இஸ்ரவேலையும் யூதாவையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 1–12....24
a) பாவத்தைக் கண்டித்தலும், நியாயத்தீர்ப்பையும் இஸ்ரவேலின் மீட்டுருவாக்கத்தையும் அறிவித்தலும்: அதி. 1–6....25
(1) புத்தகத்திற்கான அறிமுகம்:ஏசாயாவின் காலத்திலிருந்த மக்களின் சூழ்நிலை: அதி.1....25
(a) இஸ்ரவேலின் பாவம்....25
(b) மாற்றுத் தீர்வுகள்....26
(c) மக்களுக்கான கடவுளுடைய மீட்பின் திட்டம் ....26
(2) நியாயத்தீர்ப்பையும் சமாதானத்தின் அரசையும் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 2–4....26
(a) சமாதானத்தின் அரசினுடைய மகிமை: அதி. 2:1-5....27
(b) தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்த பாவம்: அதி. 2:6-8....27
(c) சமாதானத்தின் அரசுக்கு முதல் வரும் நியாயத்தீர்ப்பு (“கர்த்தருடைய நாள்”): அதி. 2:9- 4:1....27
(d) நியாயத்தீர்ப்பின் விளைவுகள்: இஸ்ரவேல் சுத்திகரிக்கப்படும்: அதி. 4:2-6....27
(3) நியாயத்தீர்ப்புக்கான காரணங்கள்: திராட்சைத் தோட்டத்தைக் குறித்த உவமையும் “ஐயோ” என்பதும் ஆறு முறை திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது: அதி. 5....28
(4) ஏசாயாவுக்குக் கிடைத்த தரிசனமும் அழைப்பும்: அதி. 6....28
b,) மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: இஸ்ரவேலுக்கு வரவிருக்கும் நியாயத்தீர்ப்பும் மேசியாவின் அரசும்: அதி. 7–12....30
(5) இம்மானுவேலைக் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 7....30
(6) மகேர்-ஷலால்-ஹஸ்-பாஸ் –ன் அடையாளம்: அதி. 8....32
(7) மேசியாவின் பிறப்பையும் ஆளுகையையும் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 9:1-7....32
(8) இஸ்ரவேலுக்கு (சமாரியாவுக்கு) எதிரான தீர்க்கதரிசனங்கள்: அதி. 9:8 முதல் 10:4....33
(9) அசீரியாவிற்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்: கடவுள் எதிரிகளை பயன்படுத்தவும் செய்கிறார், நியாயந்தீர்க்கவும் செய்கிறார்: அதி. 10:5-34....33
(10) மேசியாவின் அரசைக் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 11–12....33
2. இனங்களைப் பற்றி நியாயத்தீர்ப்பைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: அதி. 13–23....34
a) பாபிலோன், அசீரியா மற்றும் பெலிஸ்தியாவுக்கு எதிராக: அதி. 13–14....35
(1) பாபிலோனுக்கு எதிராக: அதி. 13–14:23....35
(a) இஸ்ரவேல் தங்கள் நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு மற்ற இனங்கள் வழிவகுக்கும்: 14:1-3....35
(b) ஏசாயா. 14:4-17 (எசே. 28:12-19) –ல் உள்ள அரசன் யார்?....35
(2) அசீரியாவுக்கு எதிராக: அதி. 14:24-27....37
(3) பெலிஸ்தியர்களுக்கு எதிராக: அதி. 14:28-32....37
b.) மோவாபுக்கு எதிராக: அதி. 15–16....37
c.) தமஸ்குவுக்கும் சமாரியாவுக்கும் எதிராக: அதி. 17....37
d.) எத்தியோப்பியாவுக்கு (கூஸ்) எதிராக: அதி. 18....38
e.) எகிப்துக்கு எதிராக: அதி. 19–20....38
f.) பாபிலோன், ஏதோம் மற்றும் அரேபியாவுக்கு எதிராக: அதி. 21....39
(1) பாபிலோனுக்கு எதிராக: வ. 1-10....39
(2) ஏதோமுக்கு எதிராக: வ. 11-12....39
(3) அரேபியா: வ. 13-17....39
g.) எருசலேமுக்கு எதிராக: அதி. 22....39
h.) தீரு சீதோனுக்கு எதிராக: அதி. 23....40
3. ஏசாயாவின் வெளிப்பாடு: உலகத்தின் நியாயத்தீர்ப்பு, உயிர்த்தெழுதல் மற்றும் மேசியாவின் அரசைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்: ஆதி. 24—27....40
a. ஏசாயாவின் முதல் புத்தகத்தில் ஏசாயாவின் வெளிப்பாடு வரும் இடம்....40

b. ஏசாயாவின் வெளிப்பாடு என்ற பகுதியின் வடிவமைப்பு அதன் இணக்கமான தன்மையையும் உண்மைத் தன்மையையும் குறித்து சான்றழிக்கிறது.....41
c. தெளிவுபடுத்தும் நோக்கத்திற்கான ஒரு இறுதியியல் வடிவம்.....43
d. ஏசாயாவின் வெளிப்பாட்டின் நான்கு பகுதிகளுக்குமான விளக்கவுரை.....43
(1) முதல் பகுதி: பூமியின் மீதான நியாயத்தீர்ப்பு: 24:1-20.....43
(a) யாவே பூமி முழுவதையும் தண்டிக்கிறார்: வ. 1-6.....43
(b) அழிக்கப்பட்ட கடவுளுக்கு எதிரான நகரம்: வ. 7-12.....45
(c) ஒலிவ அறுவடை: ஒரு மீதியான கூட்டம் பிழைத்திருக்கும்: வ. 13.....46
(d) தப்பிப் பிழைத்தவர்களின் மகிழ்கொண்டாட்டம்: வ. 14-16a.....46
(e) முழு உலகமும் நியாயத்தீர்ப்பினால் பாதிக்கப்பட்டிருக்கிறது: வ. 16b-20.....46
(2) இரண்டாவது பகுதி: யாவே சீயோனில் ஆளுகிறார்: 24:21–25:12.....47
(a) எதிரிகள் விரட்டப்படுதல் - யாவே சீயோனில் ஆளுதல்: 24:21-23.....48
(b) நன்றியின் பாடல்: எதிரியான நகரம் அழிக்கப்படுகிறது: 25:1-5.....50
(c) சீயோன் மலையில் விருந்து: 25:6-8.....50
(d) மகிழ்ச்சியின் பாடல்: சீயோன் மலையின் மகிழ்ச்சி: 25:9-10a.....51
(e) மோவாபின் உயர்ந்த அரணாக மதில்கள் வீழ்கின்றன: 25:10b-12.....51
(3) மூன்றாவது பகுதி: யாவேயின் வெற்றி: மீட்பும் நியாயத்தீர்ப்பும்: அதி. 26.....51
(a) யூதாவின் நாட்டில் வெற்றியின் பாடல்: 26:1-6.....53
(b) தீர்க்கதரிசியின் விசுவாச ஜெபம்: 26:7-19.....53
(c) அறிவுரை:பாதுகாப்பும் நியாயத்தீர்ப்பும்: 26:20-21.....56
(4) நான்காவது பகுதி: எதிரிகள் அழிக்கப்படுதலும் இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதலும்: அதி. 27.....56
(a) லிவியாதான் (சாத்தான்) நியாயந்தீர்க்கப்பட்டான்: 27:1.....57
(b) திராட்சைத் தோட்டத்தின் பாடல்: இஸ்ரவேலின் மீட்டுருவாக்கம்: 27:2-6.....58
(c) தண்டனையும் நியாயத்தீர்ப்பும்: 27:7-11.....59
(d) இஸ்ரவேல் திரும்ப வருவதும் அதன் மீட்டுருவாக்கமும்: 27:12-13.....59
4. சமாரியாவுக்கும் எருசலேமுக்கும் எச்சரிக்கை: அதி. 28–33.....60
a.) சமாரியாவின் வீழ்ச்சியைக் குறித்தும் எருசலேமுக்கான ஒரு எச்சரிக்கையைக் குறித்தும் தீர்க்கதரிசனம்:அதி. 28.....60
b.) இஸ்ரவே- ன் முற்றுகையும் மீட்பும்: அதி. 29.....61
c.) எகிப்துடனான கூட்டணிக்குக் கண்டணம்: அதி. 30–31.....61
d.) சமாதானத்தின் அரசில் நீதியான ஆளுகை: அதி. 32.....62
e.) அசீரியாவின் அழிவையும் எருசலேமின் மீட்பையும் குறித்த தீர்க்கதரிசனம்: அதி. 33.....62
5. கர்த்தருடைய கோபத்தின் நாளைக் குறித்தும் அவருடைய சமாதானத்தின் அரசைக் குறித்தும் உள்ள தீர்க்கதரிசனங்கள்: அதி. 34–35.....62
6. இடைச்செருகலான வரலாற்று அறிக்கை: அதி. 36–39.....63
B. **தாழ்மை:சிறையிருப்பு மற்றும் மீட்பைக் குறித்த பருந்துப் பார்வை: அதி. 40–55.....65**
1. கோரேஸ் மூலமான மீட்பு: அதி. 40–48.....65
a.) இரட்சிப்பைத் தொடக்குபவராக யாவே: அதி. 40.....65
b.) சிலைகள் அல்ல, யாவேதான் கோரேஸை ஆட்சியாளராக ஏற்படுத்தினார்; இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டு இரட்சிக்கிறவரும் யாவேதான்: அதி. 41.....66
c) யாவேயின் தாசன் (முதலாவது 'ஓபேட் - யாவே – பாடல்கள்'): அதி. 42.....66
d.) யாவே இஸ்ரவேலை மீட்கிறார்: அதி. 43.....67
e.) சிலைகள் அல்ல யாவேயே இஸ்ரவேலை மீட்கிறார்: ஆதி. 44.....67
f.) யாவே கோரேஸின் மூலமாக இஸ்ரவேலை இரட்சிப்பார்: அதி. 45.....67
g.) பாபிலோனிய தெய்வங்களை யாவே எதிர்கொள்ளுதல்: அதி. 46.....68
h.) பாபிலோனின் வீழ்ச்சி: அதி. 47.....69
i.) இஸ்ரவேலுக்கான யாவேயின் அழைப்பு: அதி. 48.....69
(1) மனந்திரும்புவதற்கான அழைப்பு: வ. 1-11.....69
(2) கடவுளின் சர்வ ஏகாதிபத்யத்தை உணர்ந்துகொள்வதற்கான அழைப்பு: வ. 12-19.....70
(3) பாபிலோனை விட்டு வரும்படியான அழைப்பு: வ. 20-22.....70
j.) அடைப்புக்குறிக்குள் உள்ள செய்தி:கடவுளின் ஆட்சி.....70

(4) கடவுள் சாத்தான் மீதும் சர்வ அதிகாரம் உள்ளவர்:அதி. 14:3-24 .......... 70
(5) கடவுள் (சிலைகளாகிய) தெய்வங்களுக்கு மேலாக சர்வ அதிகாமுடையவர் .......... 71
(6) கடவுள் இனங்கள் மீது சர்வ அதிகாரம் உள்ளவர் .......... 71
(a) அசீரியா .......... 71
(b) பாபிலோன் .......... 71
(c) பெர்சியா .......... 71
(d) அனைத்து இனங்கள் .......... 71
(7) கடவுள் சனகரிப்பின் மீது சர்வ அதிகாரம் உள்ளவர்: அதி. 36–37 .......... 72
2. யாவேயின் தாசனாகிய மேசியாவின் மூலம் மீட்பு: அதி. 49–55 .......... 72
a) யாவேயின் தாசனும் மீட்பும் (இரண்டாவது ‘ஓபேட் - யாவே – பாடல்கள்’):அதி. 49 .......... 73
(1) யாவேயின் தாசனும் (அதாவது மேசியா) அவரது ஊழியமும்: வ. 1-13 .......... 73
(2) இஸ்ரவேலை உற்சாகப்படுத்துதல்: வ. 14-26 .......... 73
b) இஸ்ரவேலின் சிறையிருப்பும் யாவேயின் கீழ்ப்படிதலுள்ள தாசனும் (மூன்றாவது ‘ஓபேட் - யாவே – பாடல்கள்’) : அதி. 50 .......... 74
(1) விவாகரத்துச் சீட்டு என்னும் உதாரணம்: வ. 1-3 .......... 74
(2) யாவேயினுடைய தாசனின் (மேசியாவின்) கீழ்ப்படிதலும் உண்மைத் தன்மையும்: வ. 4-11 .......... 74
(3) மேசியாவாகிய கர்த்தருடைய தாசனுக்கு செவிகொடுக்கும்படியான அழைப்பு: வ. 10-11 .......... 74
c) யாவேயின் நீதியும் மீட்பும்: அதி. 51 .......... 74
(1) கடந்த காலத்தில் கடவுளுடைய செயல்பாடுகள் அவருடைய உண்மைத் தன்மைக்கு சான்றாக இருக்கின்றன: வ. 1-3 .......... 75
(2) உண்மையுள்ளவர்கள் மீட்கப்படுவார்கள்: வ. 4-8 .......... 75
(3) கடவுள் இடைப்பட வேண்டும் என்ற உண்மையுள்ளவர்களின் ஜெபம்: வ. 9-16 .......... 75
(4) கடவுள் தம்முடைய மக்களின் நியாயத்தீர்ப்பை முடிவுக்குக் கொண்டுவருகிறார்: வ.17-23 .......... 76
d) சீயோனுக்கு மீட்பு: அதி. 52:1-12 .......... 76
(1) வரப்போகிற மீட்புக்காக ஆயத்தமாகும்படி எருசலேம் அழைக்கப்படுகிறது: வ. 1-2 .......... 76
(2) கடவுள் தம்முடைய மக்களின் மீட்பை நியாயப்படுத்துகிறார்: வ. 3-6 .......... 76
(3) மீட்கப்பட்ட இஸ்ரவேல் தங்கள் ஓய்வின் மூலம் அவரைத் துதிப்பார்கள்: வ. 7-10 .......... 76
(4) பாபிலோனை விட்டுச் செல்லும்படியான அழைப்பு: வ. 11-12 .......... 77
e) பதிலாள் பாடுகளும் யாவேயின் தாசனுடைய வெற்றியும் ( நான்காவது ‘ஓபேட் - யாவே – பாடல்கள்’): அதி. 52:13–53:12 .......... 77
(1) அவருடைய மகிமை: 52:13-15 .......... 77
(2) அவர் வெறுக்கப்படுதல்: 53:1-3 .......... 77
(3) அவருடைய பாடுகள்: 53:4-6 .......... 77
(4) அவருடைய மரணம்: 53:7-9 .......... 78
(5) அவருடைய வெற்றி: 53:10-12 .......... 78
f) அடைப்புக்குறிக்குள் செய்திகள்: மேசியா .......... 78
(1) மேசியாவைக் குறிக்கும்படி ஏசாயா பயன்படுத்தும் பெயர்கள் .......... 78
(2) அவருடைய தோற்றம் .......... 78
(3) அவருடைய பிறப்பு .......... 78
(4) அவருடைய தகுதிகள் .......... 78
(5) அவருடைய முதலாவது வருகையில் (மனுவுருவானபோது) அவருடைய சேவை .......... 79
(6) அவருடைய பாடுகள் .......... 79
(7) அவருடைய மரணம் .......... 79
(8) அவருடைய உயிர்த்தெழுதல் .......... 79
g) இஸ்ரவேலின் மீட்டுருவாக்கம்: அதி. 54 .......... 80
(1) கணவனால் கைவிடப்பட்ட பெண்ணாகிய இஸ்ரவேலைக் கடவுள் மீண்டும் சேர்த்துக்கொள்கிறார்: வ. 1-6 .......... 80
(2) தண்டனைக்குப் பிறகு இஸ்ரவேல் நிரந்தரமாக மீட்டுருவாக்கம் செய்யப்படுகிறது: வ. 7-10 .......... 80
(3) மீட்டுருவாக்கம் செய்யப்பட்ட இஸ்ரவேலின் அழகு: வ. 11-17 .......... 81
h. முழு உலகத்திற்கும் இரக்கம் அருளப்படுகிறது: அதி. 55 .......... 81
(1) இரக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அழைப்பு: வ. 1-3 .......... 81

(2) இந்தக் கிருபையின் அழைப்பு அனைத்து (பிற) இனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது: வ. 4-7 ........ 81
(3) கடவுளுடைய வாக்குறுதிகளின் நிச்சயமான தன்மை: வ. 8-13 ........ 82
**C. மனந்திரும்புதல் மூலம் உயர்த்தப்படுதல்: அதி. 56–66 ........ 82**
1. பாவமும் மனந்திரும்புதலுக்கான அழைப்பும்: அதி. 56–59 ........ 82
a) மீட்பு அனைவருக்கும் வழங்கப்படுகிறது: அதி. 56:1-8 ........ 82
b) சிலைவழிபாடும் இஸ்ரவேலின் பாவமும்: அதி. 56:9–57:21 ........ 82
c) பாவமும் நீதியும்: அதி. 58–59 ........ 83
(1) தவறான ஆராதனை அல்லது ஓய்வுநாள் நடவடிக்கைகள்: 58:1-5 ........ 83
(2) உண்மையான ஆராதனையும் ஓய்வுநாள் நடவடிக்கைகளும்: 58:6-14. வ. 6-7: ........ 83
(3) பாவம் யாவேயிடம் இருந்து நம்மைப் பிரிக்கிறது: 59:1-8 ........ 83
(4) இஸ்ரவேல் தன்னுடைய குற்றத்தை அறிந்திருக்கிறது: 59:9-15 ........ 84
(5) நடுவர்கள் யாரும் இல்லாத காரணத்தினால் யாவேயே தலையிடுகிறார்: 59:16-21. வ. 16-17: ........ 84
d) அடைப்புக்குறிச் செய்தி: ஏசாயா 59-ம் அதிகாரத்தில் பாவம் ........ 84
(1) பாவத்தின் அளவு ........ 84
2) பாவத்தின் விளைவுகள் (கலா. 6:7) ........ 84
(3) பாவத்திலிருந்து விடுதலை ........ 84
(4) மீட்பருக்கான தேவை ........ 84
2. யாவேவும் எருசலேமில் அவருடைய ஆட்சியும்: அதி. 60–62 ........ 85
a. சமாதானத்தின் அரசு ........ 85
b. மேசியா ........ 85
c. எருசலேம் ........ 85
d. இஸ்ரவேல் ........ 85
e. இனங்கள் ........ 85
f. தேவாலயம் ........ 86
g. நித்திய உடன்படிக்கை ........ 86
3. கடவுள் பக்தியற்றவர்கள் மீதான நியாயத்தீர்ப்பு: அதி. 63:1 -65:16 ........ 86
a. ஏதோம் அல்லது உலகத்தின் மீதான நியாயத்தீர்ப்பு: 63:1-6 ........ 86
b. பாவமன்னிப்புக்கும் இரக்கத்திற்குமான விண்ணப்பம்: 63:7-19 ........ 86
c. பாவ அறிக்கையும் கடவுள் இடைப்பட வேண்டும் என்ற விண்ணப்பமும்: 64:1-12 ........ 87
d. கடவுளுடைய பதில்செயல்: 65:1-16 ........ 87
4. நீதிமான்களின் எதிர்கால மகிமையும் கடவுள் நம்பிக்கையற்றவர்களின் நித்திய தண்டனையும்: அதி. 65:17–66:24 ........ 87
a. ஆயிர வருட அரசாட்சியும் புதிய படைப்பும்: 65:17-25 ........ 87
b. அடைப்புக்குறி செய்தி: கர்த்தருடைய நாளும் மகா உபத்திரவமும் ........ 88
(1) கர்த்தருடைய (யாவே) நாள் ........ 88
(2) மகா உபத்திரவ காலம் ........ 88
(a) பொதுவான தகவல் ........ 88
(b) மகா உபத்திரவத்தின் அளவு ........ 89
(c) மகா உபத்திரவத்தின் கால அளவு ........ 89
(3) சமாதானத்தின் அரசு (ஆயிரம் வருட அரசாட்சி) ........ 89
(a) மிக முக்கியமான பகுதிகள் ........ 89
(b) ஆட்சியைக் குறித்த மிகத் தெளிவான விளக்கத்திற்கு, பார்க்க ஏசாயா 11-12 ........ 90
(c) விவரங்கள் ........ 90
(d) மனந்திரும்புதலும் இனங்களுக்கான மீட்பும் ........ 90
(e) ஆயிரம் வருட ஆட்சியின் இன்னும் சில தன்மைகள் ........ 90
c. தீர்க்கதரிசனங்களைக் குறித்த முடிவுரை: அதி. 66 ........ 91
(1) இஸ்ரவேலின் பாவம் நியாயத்தீர்ப்புக்கு இட்டுச் செல்கிறது: வ. 1-6 ........ 91
(2) இறுதி காலத்தில் இஸ்ரவேல் மீண்டும் கட்டப்படுதல்: வ. 7-14 ........ 91
(3) பழி தீர்க்கும் நாள் நெருங்குகிறது: வ. 15-24 ........ 91

**IV.** உசாத்துணை நூல்கள் ........ 93

**I would like to express my heartfelt gratitude to my former Old Testament teacher Doyle Klaassen for his valuable lessons. A significant portion of this brochure is based on his classroom notes. Special thanks are also due to his son Daniel who translated this brochure from German into English.**

முன்னைநாள் எனது பழைய ஏற்பாட்டு ஆசிரியர் டோய்ல் க்ளாசன் (Doyle Klaassen) அவர்களுக்கு எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த பாடக்குறிப்பிலுள்ள குறிப்பிடத்தக்க அளவு பகுதிகள் அவரது வகுப்பறைப் பாடக்குறிப்புகளில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளது. அவரது மகன் டானியேலுக்கு (Daniel) விசேட நன்றிகள். அவரே இந்த எனது பாடக்குறிப்புகளை ஜேர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தார்.

Translated from English to Tamil by Sridaran Calistus.
ஆங்கிலத்திலிந்து தமிழில் மொழி பெயர்த்தவர் திரு. சிறிதரன் கலிஸ்ரஸ்.

***குரூஸ்லின்ஜன், வைகாசி 2022***
**Kreuzlingen, May 2022**

**பதிப்புரிமை ரோலண்ட் கிளகர், இறையியல் கலாநிதி CH-8280 குரூஸ்லின்ஜன் (சுவிற்சர்லாந்து)**

**Copyright © Roland Kleger, Doctor of Theology, CH-8280 Kreuzlingen (Switzerland)**